மலைமேலிருந்து போதனைகள், 2

டேவிட் ரோப்பர்

6. திறப்பதற்கு முன் சிந்தியுங்கள்! (மத்தேயு 5:33-37)
7. நீங்கள் தவறாக நடத்தப்படும் போது (மத்தேயு 5:38-42)
8. "பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்? யார், நானா?" (மத்தேயு 5:43-48)
9. கும்பலின் பாராட்டை நாடுதல் (மத்தேயு 6:1-4)
10. சரியான விஷயத்தைத் தவறான காரணத்திற்காகச் செய்தல் (மத்தேயு 6:5-18)
11. "நீங்கள் ஜெபம்பண்ண வேண்டிய விதமாவது" (மத்தேயு 6:9-15 : லூக்கா 11:1-4)
12. முடிவெடுக்கும் வேளை! (மத்தேயு 6:19-24)
13. கவலைப்படாதிருக்க மூன்று காரணங்கள் (மத்தேயு 6:25-34)
14. கவலைப்படாதிருக்க மேலும் நான்கு காரணங்கள் (மத்தேயு 6:30-34)
15. "தீர்ப்பிடாதிருங்கள்" (மத்தேயு 7:1,2)
16. மற்றவர்களுடன் இணக்கமாக இருத்தல் (மத்தேயு 7:3-12)
17. நீங்கள் தேவன் மீது நம்பிக்கை வைக்க முடியும் (மத்தேயு 7:7-11)
18. நீங்கள் பயணம் செய்யும் வழி எது? (மத்தேயு 7:13-20)
19. கீழ்ப்படிதலுக்குப் பதில் இல்லை (மத்தேயு 7:21-8:1)

6

திறப்பதற்கு முன் சிந்தியுங்கள்!

(மத்தேயு 5:33-37)

நமது நாவுகளைக் காத்துக் கொள்ளுதலுக்கும், நாம் என்ன கூறுகிறோம் என்பதைப் பற்றி எச்சரிக்கையாக இருப்பதற்குமான புத்திமதிகள் வேதாகமத்தில் நிறைந்துள்ளன. நீதிமொழிகளின் புத்தகத்தில், "தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்; தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான்" (13:3); "தன் வார்த்தைகளில் பதறுகிற மனுஷனைக் கண்டாயானால், அவனை நம்புவதைப்பார்க்கிலும் மூடனை நம்பலாம்" (29:20) என்று சாலொமோன் கூறினார். நாவின் வலிவார்ந்த அழிக்கும் திறனைப் பற்றி, யாக்கோபு பின்வரும் வரைவளவான விவரிப்பைக் கூறினார்:

> *பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது! நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது! (யாக்கோபு 3:5ஆ, 6).*

*முந்திய பாடம் ஒன்றில் நாம், "தன் சகோதரனை வீணனென்று **சொல்லுகிறவன்** ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று **சொல்லுகிறவன்** எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்" என்று கற்றறிந்தோம் (மத்தேயு 5:22; என்னால் வலியுறுத்தப்படுகிறது). நமது தற்போதைய பாடத்திற்கான வேதவசனப் பகுதி, நமது வாய்களில் இருந்து வருகிற வார்த்தைகளின் மீது முழு கவனம் செலுத்துகிறது.*

*நமது பேச்சின்மீது வேதாகமம் இவ்வளவு அதிகமான வலியுறுத்தத்தை வைப்பது ஏன் என்று சிலர் வியப்படையலாம். யாரேனும் ஒருவர், "உலகத்தில் தீர்த்து வைக்கப்பட வேண்டிய அதி அவசரமான பிரச்சனைகள் நிறைய உள்ளன. **வார்த்தைகள்** போன்ற சிறு விஷயங்களைக் குறித்துக் கலந்துரையாடுவதில் காலத்தை வீணாகச் செலவிட வேண்டியது ஏன்?" என்று கூறுவதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. நமது வாசகர்களில் பெரும்பான்மையானவர்கள், வார்த்தைகளை ஞானமாகப் பயன்படுத்துதல் இன்றி, முதன்மையான பிரச்சனைகள் சட்டப்படி ஒருக்காலும் தீர்த்து வைக்கப்பட இயலாது என்பதைப் புரிந்து கொள்கின்றனர். இருப்பினும் ஒரு கிறிஸ்தவருக்கு, எவ்வாறு பேசுவது என்பதன் மீதான கலந்துரையாடல் இருமடங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது, ஏனெனில் அவரது பேச்சு, கர்த்தருக்கு அவரது ஒப்புக்கொடுத்தலைப் பிரதிபலிக்காவிட்டால், அவர் ஒருக்காலும் "பூமிக்கு உப்பாக" மற்றும் "உலகத்துக்கு வெளிச்சமாக" இருக்க முடியாது (மத்தேயு 5:13, 14). இந்தப் பாடத்திற்கு நான், "திறப்பதற்கு முன் சிந்தியுங்கள்!" என்று தலைப்பிட்டுள்ளேன்,*

அதாவது நீங்கள் உங்கள் வாயைத் திறப்பதற்கு முன்னர் யோசியுங்கள்.

வேதவசனப் பகுதி

அவர்கள் கேள்விப்பட்டு இருந்தது என்ன

மத்தேயு 5:33-37 என்ற வேதவசனப்பகுதியை ஆராய்வதைக் கொண்டு நாம் நமது படிப்பைத் தொடங்குவோமாக. இவ்வசனங்கள், யூதர்கள் கேள்விப்பட்டு இருந்தவற்றுடன் இயேசு போதித்தவற்றை நேர்மாறாக்குகின்றன. இவ்வசனப்பகுதி, "அன்றியும், பொய்யாணையிடாமல் ... என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்" என்று தொடங்குகிறது (வசனம் 33அ). KJV *வேதாகமத்தில்,* "Thou shalt not forswear thyself" *என்றுள்ளது.* "Forswear" *என்பது பொய்ச் சத்தியத்திற்கு ஒப்புக்கொடுத்தலைக் குறித்தது. அவர்கள் கேள்விப்பட்டிருந்தவற்றை இயேசு தொடர்ந்து கூறினார்: "உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவாயாக" (வசனம் 33ஆ).* KJV *வேதாகமத்தில்* "but shalt perform unto the Lord thine oaths" *என்றுள்ளது.*

இயேசு குறிப்பிட்ட போதனை, பழைய ஏற்பாட்டில் உள்ள வார்த்தைக்குச் சரியான வார்த்தை மேற்கோளாக இருக்கவில்லை, ஆனால் அது பழைய ஏற்பாட்டின் பல வேதவசனப் பகுதிகளின் தொகுப்புரையாக இருந்தது. அவற்றில் இரு மாதிரிகள் கீழே தரப்படுகின்றன:

> *ஒருவன் கர்த்தருக்கு யாதொரு பொருத்தனை பண்ணினாலும், அல்லது யாதொரு காரியத்தைச் செய்யும்படி ஆணையிட்டுத் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக் கொண்டாலும், அவன் சொல் தவறாமல் தன் வாயிலிருந்து புறப்பட்ட வாக்கின்படியெல்லாம் செய்யக்கடவன் (எண்ணாகமம் 30:2).*
>
> *நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணியிருந்தால், அதைச் செலுத்தத் தாமதஞ்செய்யாதே; உன் தேவனாகிய கர்த்தர் அதை நிச்சயமாய் உன் கையில் கேட்பார்; அது உனக்குப் பாவமாகும் (உபாகமம் 23:21; காண்க வசனங்கள் 22, 23).*

ஒரு ஆணையை நிறைவேற்றும் அறிவுறுத்துதல்கள், பத்துக் கற்பனைகளில் மூன்றாவது கற்பனைக்கு நெருங்கிய தொடர்பு உடையவையாக இருந்தன: "உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக" (யாத்திராகமம் 20:7அ). லேவியராகமத்தில் தேவன், "என் நாமத்தைக்கொண்டு பொய்யாணையிடுகிறதினால், உங்கள் தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்காமலும் இருப்பீர்களாக; நான் கர்த்தர்" என்று அறிவித்தார் (19:12). ஒன்பதாவது கற்பனையின் தொடக்க வார்த்தைகளிலும் இதன் பிரதிபலிப்பு ஒன்று இருக்கலாம்: "... பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக" (யாத்திராகமம் 20:16).

எண்ணாகமம் 30:2ம் வசனம் ஒரு "பொருத்தனை" மற்றும் "ஆணை" ஆகிய இரண்டையும் குறிப்பிடுகிறது என்பதைக் கவனியுங்கள். ஒரு பொருத்தனை என்பது "குறிப்பிட்ட ஒரு செயலுக்கு ஒருவரைக் கட்டுப்படுத்துகிற உண்மையான வாக்குறுதி" என்றும், அதே வேளையில் ஆணை என்பது ஒருவர், தாம் கூறுவது

உண்மையாக உள்ளது[1] என்பதற்குத் தேவனைச் "சாட்சியாக"[2] அழைக்கிறார் என்றும் நாம் பொதுவாக நினைக்கிறோம். இருப்பினும் "பொருத்தனைகள் மற்றும் ஆணைகள் ஆகியவற்றிற்கு இடையிலான வரையறைகள் பொதுவாகத் தெளிவாய்க் காத்துக்கொள்ளப் படவில்லை."[3] NASB வேதாகமத்தில் "பொருத்தனைகள்" என்பதற்கான vows என்ற ஆங்கில வார்த்தை, மத்தேயு 5:33ல் பயன்படுத்தப்பட்டிருக்கும் அதே வேளையில், "ஆணை" என்பதற்கான "oath" என்ற ஆங்கிலவார்த்தை 34ம் வசனம் முதல் 36ம் வசனம் வரையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.[4] இந்தப் பாடத்தில் நாம் இந்தச் சொற்றொடர்களை ஒன்றுக்குப் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்துவோம். "மோசேயின் நியாயப்பிரமாணம் பயபக்தியற்ற ஆணைகளை, கர்த்தருடைய நாமத்தை இலேசாகப் பயன்படுத்துதலை [மற்றும்] முறிக்கப்பட்ட பொருத்தனைகளைத் தடைசெய்தது."[5]

இயேசு கூறியது என்ன

பொருத்தனைகளை ஏற்படுத்துதல் பற்றிய பழைய ஏற்பாட்டின் போதனையைத் தொகுத்துரைத்த பின்பு, இயேசு பின்வருமாறு கூறினார்:

> *நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; பரிச்சேதம் சத்தியம்பண்ணவேண்டாம்; வானத்தின் பேரில் சத்தியம்பண்ணவேண்டாம், அது தேவனுடைய சிங்காசனம். பூமியின்பேரிலும் சத்தியம்பண்ணவேண்டாம், அது அவருடைய பாதபடி; எருசலேமின்பேரிலும்[6] சத்தியம் பண்ணவேண்டாம், அது மகாராஜாவினுடைய நகரம். உன் சிரசின்பேரிலும் சத்தியம் பண்ணவேண்டாம், அதின் ஒரு மயிரையாவது வெண்மையாக்கவும் கறுப்பாக்கவும் உன்னால் கூடாதே (மத்தேயு 5:34-36).*

இயேசுவின் வார்த்தைகளைப் புரிந்துகொள்வதற்கு நீங்கள், முதல் நூற்றாண்டில் யூதர்களின் நடைமுறை பற்றி அறிந்திருத்தல் அவசியமாக உள்ளது. யூதப் போதகர்கள், எந்தப் பொருத்தனைகள் கட்டுப்படுத்தின மற்றும் எந்தப் பொருத்தனைகள் கட்டுப்படுத்தாது இருந்தன என்பதைப் பற்றி விரிவான முறைமை ஒன்றை மேம்படுத்தி இருந்தனர். மத்தேயு 23ல் வேதபாரகர் மற்றும் பரிசேயரைக் கடுமையாகக் கண்டனம் பண்ணியதில் இயேசு, இவ்வகையான நியாயப்படுத்துதலைக் குறிப்பிட்டார்:

> *குருடரான வழிகாட்டிகளே! உங்களுக்கு ஐயோ, எவனாகிலும் தேவாலயத்தின்பேரில் சத்தியம்பண்ணினால் அதினால் ஒன்றுமில்லையென்றும், எவனாகிலும் தேவாலயத்தின் பொன்னின்பேரில் சத்தியம்பண்ணினால் அவன் கடனாளியென்றும் சொல்லுகிறீர்கள். மதிகேடரே, குருடரே! எது முக்கியம்? பொன்னோ, பொன்னைப் பரிசுத்தமாக்குகிற தேவாலயமோ? மேலும், எவனாகிலும் பலிபீடத்தின்பேரில் சத்தியம்பண்ணினால் அதினால் ஒன்றுமில்லையென்றும், எவனாகிலும் அதின்மேல் இருக்கிற காணிக்கையின்பேரில் சத்தியம்பண்ணினால், அவன் கடனாளியென்றும் சொல்லுகிறீர்கள். மதிகேடரே, குருடரே! எது முக்கியம்? காணிக்கையோ, காணிக்கையைப் பரிசுத்தமாக்குகிற பலிபீடமோ? ஆகையால் பலிபீடத்தின்பேரில் சத்தியம்பண்ணுகிறவன் அதின்பேரிலும்*

அதின்மேலுள்ள எல்லாவற்றின் பேரிலும் சத்தியம்பண்ணுகிறான். தேவாலயத்தின்பேரில் சத்தியம் பண்ணுகிறவன் அதின்பேரிலும் அதில் வாசமாயிருக்கிறவர்பேரிலும் சத்தியம்பண்ணுகிறான். வானத்தின்பேரில் சத்தியம்பண்ணுகிறவன் தேவனுடைய சிங்காசனத்தின்பேரிலும் அதில் வீற்றிருக்கிறவர்பேரிலும் சத்தியம்பண்ணுகிறான் (வசனங்கள் 16-22).

தேவனுடைய நாமம் நாடிக்கூவப்பட்டதா இல்லையா என்பதே பொருத்தனைகளைக் குறித்து ஏற்படுத்தப்பட்ட திறவுகோல் வித்தியாசமாக இருந்தது. தேவனுடைய நாமம் பயன்படுத்தப்பட்டால், ஒரு பொருத்தனை கட்டுப்படுத்தியது என்று யூதத்துவ ரபீக்கள் போதித்தனர்; ஆனால் அவரது நாமம் பயன்படுத்தப்படாதிருந்தால், அந்தப் பொருத்தனை கட்டுப்படுத்துவதாக இருக்கவில்லை. இதன் விளைவாக அவர்கள், பரலோகம், பூமி, எருசலேம் நகரம் மற்றும் தங்கள் தலையின்மீது கூட (அதாவது தங்கள் உயிரின்மீதும்கூட[7]) சத்தியம் பண்ணத் தயங்கவில்லை. அவ்வகையான பொருத்தனையைக் காக்க ஒருவர் கடமைப்பட்டு இருப்பதில்லை என்று அவர்கள் கூறினர். எனது குழந்தைப் பருவத்தில் நடந்த சில விஷயங்கள் என் நினைவிற்கு வருகின்றன. எனது மனதில் நான், இரு பிள்ளைகளுக்கு இடையில் நடைபெற்ற பின்வரும் உரையாடலைக் கேட்க முடிகிறது:

"நீ இதைச் செய்வதாகக் கூறினாயே!"
"ஆனால் எனது விரல்கள் பிணைக்கப்பட்டிருந்தன."
"எந்த விரல்களும் பிணைக்கப்பட்டிருக்க நான் காணவில்லையே."
"நல்லது, நான் அவற்றை என் முதுகுக்குப் பின்னால் வைத்திருந்தேன்."

ஒருவன் தனது சுட்டு விரலையும் நடுவிரலையும் குருக்காக வைத்துக் கொண்டிருந்தால், அவன் தான் விரும்பிய எதையும் கூறமுடியும் மற்றும் அவ்வாறு கூறப்படும் வார்த்தைகளுக்கு அவன் கணக்கு ஒப்புவிக்கத் தேவையில்லை என்பது பிள்ளைகளிடையே இருந்த பொதுவான நம்பிக்கையாகும்.[8] இந்தக் கருத்து மதியீனமானதாக ஒலிக்கிறது - ஆனால் இது, தேவனுடைய நாமம் பயன்படுத்தப்படாத வகையிலான பொருத்தனை, கட்டுப்படுத்துவது இல்லை என்ற யூதர்களின் கூற்றைக் காட்டிலும் அதிக மதியீனமானதாக இருப்பதில்லை.

சிலர் தங்கள் தலைகளைக் குலுக்கி, "மக்கள் இவ்வளவு மதியீனமாக இருப்பது எப்படி? நாம் இனியும் இவ்வகையான மதியற்ற தனிக்குறிப்புகளை ஏற்படுத்துவதில்லையே" என்று நினைக்கலாம். நாம் இவ்வாறு செய்வதில்லை என்று நீங்கள் உறுதியாகக் கூறமுடியுமா? உண்மையைக் கூறுதல் குறித்து பலர், வாழ்வின் பல்வேறு வட்டாரங்களில் பல்வேறு சட்டங்கள் இருப்பதாக நம்புகின்றனர். அவர்கள், உண்மையாக இருப்பதில் தாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளதாகக் கூறுகின்றனர், இருப்பினும் அவர்கள் - வியாபாரத்தில், அரசியலில் அல்லது மற்ற நாடுகளுடனான விஷயங்களில் - பொய்கூறுதல் சரியானதாக உள்ள சூழ்நிலைகள் இருப்பதாக நினைக்கின்றனர்.

இயேசுவின் நாட்களில் யூதர்கள் ஏற்படுத்திய வித்தியாசப்படுத்துதல் குறித்து அவர், அவர்கள் ஆணையிட்டவற்றில் எதுவும் தேவனை விட்டுப் பிரிக்கப்படக் கூடாதிருந்தது என்று கூறினார். பரலோகம் அவரது அரியணையாக உள்ளது,

பூமி அவரது பாதப்படியாக உள்ளது (காண்க ஏசாயா 66:1). இயேசுவின் நாட்களில் எருசலேம் அவரது தேவனுடைய விசேஷித்த நகராக இருந்தது,[9] அங்கு தேவாலயம் அமைந்திருந்தது. தலைகூடத் தேவனால் படைக்கப்பட்டதாக இருந்தது மற்றும் "அதன் ஒவ்வொரு முடியும் அவரது கைவேலையின் முத்திரையைச் சுமந்திருக்கிறது."[10]

சிலர் தங்கள் முடிகளை வெளுக்கச் செய்தால் (அதை இலேசான நிறம் உள்ளதாக்குவதால்) அல்லது சாயம் பூசிக்கொள்வதால் (அதை இருண்ட நிறமாக்குதலால்), "அதின் ஒரு மயிரையாவது வெண்மையாக்கவும் கறுப்பாக்கவும் உன்னால் கூடாதே" என்று வார்த்தைகள் என்ன என்று சிலர் வியப்படைகின்றனர். பிரிட்டிஷ் வானொலி நிகழ்ச்சி ஒன்றின்படி, முடிக்குச் சாயம் பூசிக்கொள்ளுதல் என்பது "நான்கு ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக" இருந்து வரும் பொதுவான நடைமுறையாக உள்ளது.[11] இயேசு, முடியின் *இயற்கையான* நிறத்தைப் பற்றிப் பேசினார். நான் வயது முதிர்ந்தவன் ஆகியுள்ள வேளையிலும் எனது தலையில் உள்ள முடியானது இன்னும் அடர்ந்த நிறமாக உள்ளது, ஆனால் எனது மைத்துனியின் முடியானது அவள் இளம் பெண்ணாக இருந்தபோதே வெளுமையாகி விட்டது. நம்மில் எவரும் இந்தக் கோட்பாட்டின் மீது கட்டுப்பாடு செலுத்த இயலாது. வாழ்வில் - ஒருவர் தலையில் உள்ள மிகச்சிறிய முடி உட்பட - எந்த விஷயமும், எல்லாவற்றையும் படைத்தவரிடத்தில் இருந்து பிரிக்கப்பட இயலாது என்பதே இயேசுவின் கருத்தாக இருந்தது. ஆகவே தேவனுடைய நாமத்தில் ஏற்படுத்தப்படும் ஒரு ஆணையானது கட்டுப்படுத்துவதாக இருக்கும் வேளையில், தேவனுடைய படைப்பின் பாகத்தில் ஏற்படுத்தப்படும் ஆணையானது கட்டுப்படுத்துவதாக இருப்பதில்லை என்று நினைப்பது மதியீனமான விஷயமாக உள்ளது.

எந்த ஆணைகள் கட்டுப்படுத்தின மற்றும் எந்த ஆணைகள் கட்டுப்படுத்தவில்லை என்று தீர்மானிக்க முயற்சி செய்வதற்குப் பதிலாக, இயேசு "பரிச்சேதம் சத்தியம் பண்ணவேண்டாம்." "உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்" என்று கூறினார் (மத்தேயு 5:37அ). "உள்ளது" அல்லது "இல்லது" என்பதை மறுபடியும் கூறுதலானது, நீங்கள் "ஆம்" அல்லது "இல்லை" என்று கூறும்போது, மறுபடியும் கூறுதலினால் வார்த்தைகளை வலியுறுத்துவதை அனுமதிக்கிறது.[12] அனேகமாக, நீங்கள் "உள்ளது" என்று கூறும்போது நீங்கள் "ஆம்" என்று *அர்த்தப்படுத்த வேண்டும்* மற்றும் நீங்கள் "இல்லது" என்று கூறும்போது நீங்கள் "இல்லை" என்பதை *அர்த்தப்படுத்த வேண்டும்* என்பதும் இங்கு அர்த்தமாக இருக்கலாம். ஒரு ஆணையைக் கொண்டு உங்கள் வார்த்தைகளை மறுவலியூட்டுதல் தேவையற்றதாக இருக்க வேண்டும். யாக்கோபு தமது நிருபத்தில் இதைப்போன்ற ஒரு கூற்றை ஏற்படுத்தினார்: "விசேஷமாய், என் சகோதரரே, வானத்தின்பேரிலாவது, பூமியின்பேரிலாவது, வேறெந்த ஆணையினாலாவது சத்தியம்பண்ணாதிருங்கள்; நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லக்கடவீர்கள்" (யாக்கோபு 5:12).

இயேசு, "இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்" என்று கூறினார் (மத்தேயு 5:37ஆ). "தீமை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*poneros* என்ற) வார்த்தை "பொல்லாங்கனை" (அதாவது, பிசாசை) அல்லது (பொல்லாங்கான இருதயம் போன்ற) "பொல்லாங்கான விஷயத்தை" அர்த்தப்படுத்தக் கூடும்.

இதே போன்ற தெளிவற்ற தன்மையை நாம், மலைப்பிரசங்கத்தில் இன்னும் இருமுறை எதிர்கொள்ளுவோம் (5:39; 6:13), ஆனால் நமது தற்போதய வசனப் பகுதியில் நாம் குறிப்பிடும் அர்த்தம் சிறிதே வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. எவ்வகையிலும், அற்பமான ஆணைகளின் ஆதாரமூலம் தீமையாகவே உள்ளது. மேலும், மதியீனம் நிறைந்துள்ள பொல்லாத உலகத்தில் நாம் வாழ்கிறோம் என்பதே ஆணையிடுதல்கள் அவசியமாக உள்ளன என்பதற்கு ஒரே காரணமாகும் என்பது மறைகருத்தாக இருக்கலாம்.

போதனை

இயேசு எதைப் போதித்துக் கொண்டிருக்கவில்லை

வேதபாட வசனப் பகுதியை நாம் பரிசீலனை செய்துள்ள நிலையில் இப்போது, "இயேசு கூறியவற்றினால் அவர் அர்த்தப்படுத்தியது என்ன?" என்பது அடுத்த கேள்வியாக உள்ளது. முதலில் நாம், இயேசு எதைப் போதிக்கவில்லை என்பதைப் பற்றிக் கலந்துரையாடுவோம்.

இயேசுவின் வார்த்தைகள், ஒருக்காலும், எந்த சூழ்நிலையின் கீழும், ஒரு கிறிஸ்தவர் ஒரு பொருத்தனையை ஏற்படுத்தவோ அல்லது ஆணையிட்டு எதையும் கூறவோ கூடாது என்று அர்த்தப்படுத்துவதாகச் சிலர் எடுத்துக் கொண்டுள்ளனர். சில மதப் பிரிவுகளில் இது, விசுவாசத்தின் ஒரு பிரிவாக உள்ளது மற்றும் இது சில கிறிஸ்தவர்களைப் பொறுத்த மட்டில் தனிப்பட்ட மனச்சான்றிற்குரிய விஷயமாக உள்ளது. நீதிமன்றத்தில் ஆணையிட்டுக் கூறுதல் என்பது சிறப்பான அக்கறைக்குரிய பகுதியாக உள்ளது. மத்தேயு 5:33-37 வசனப் பகுதியை அதில் மாத்திரம் எடுத்துக் கொள்வதாக இருந்தால், தேவனுடைய பிள்ளையாக இருப்பவர் நீதிமன்றத்தில் ஆணையிடக் கூடாது என்று அது போதிப்பதாகவே காணப்படுகிறது என்பது உறுதி. இயேசு அதையே போதித்தார் என்று அது போதிப்பதாகவே காணப்படுகிறது என்பது உறுதி. இயேசு அதையே போதித்தார் என்று நீங்கள் நம்பினால், உங்கள் செயல்கள் உங்கள் நம்பிக்கையான உறுதிப்பாடுகளுடன் சீர்பொருத்தமாக இருக்கட்டும்; உங்கள் மனச்சாட்சியை நீங்கள் மீறாதிருங்கள்.[13] மற்ற நாடுகளைப் பற்றி நான் அறிவதில்லை, ஆனால் அமெரிக்க நீதிமன்றங்களில், சாட்சியளிப்பதற்கு முன்னர் வழக்கமான ஆணையிடுதலை மனச்சாட்சியுடன் மேற்கொள்ள இயலாதவர்களுக்கு விலக்களிப்பு ஒன்றை ஏற்படுத்துகிறது. அவர்கள் உண்மையையே பேசுவார்கள் என்பதை "பொய்ச்சாட்சி கூறுதலுக்கான தண்டனையின் கீழ் உறுதிப்படுத்தும்" கூற்று ஒன்றைக் கூற அனுமதிக்கப்படுகின்றனர்.[14]

இருப்பினும், இயேசு அதைத் தமது சிந்தையில் கொண்டிருக்கவில்லை என்று நான் கருத்துத் தெரிவிக்கிறேன். J. W. மெக்கார்வீ அவர்கள், "அதிகாரத்துவமான உதாரணங்களின் வெளிச்சத்தில் தடைகளை நாம் விளக்கப்படுத்தும்போது" இந்த முடிவை அடையவேண்டும் என்று எழுதினார்.[15] "அதிகாரத்துவமான உதாரணங்கள்" என்பவை யாவை? தேவனுடைய உதாரணத்தைக் கொண்டே நாம் இதைத் தொடங்கலாம். தேவன் ஒரு ஆணையைக் கொண்டு வாக்குத்தத்தம் செய்ததைப்பற்றி, எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் இருமுறை பேசினார்:

ஆபிரகாமுக்குத் தேவன் வாக்குத்தத்தம்பண்ணினபோது, ஆணையிடும்படி தம்மிலும் பெரியவர் ஒருவருமில்லாதபடியினாலே தமதுபேரிலே தானே ஆணையிட்டு: நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றார் (எபிரெயர் 6:13, 14).

... அவர்கள் (லேவிகோத்திரத்து ஆசாரியத்துவத்தினர்) ஆணையில்லாமல் ஆசாரியராக்கப்படுகிறார்கள்; இவரோ: நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார், மனம்மாறாமலும் இருப்பார் என்று தம்முடனே சொன்னவராலே ஆணையோடே ஆசாரியரானார் (எபிரெயர் 7:21).

பின்பு இயேசுவின் உதாரணம் உள்ளது. அவர் சனதெரீன் சங்கத்திற்கு முன்பாக விசாரணையில் இருந்தபோது, அவரிடத்தில் பிரதான ஆசாரியர், "நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்" என்று கூறினார் (மத்தேயு 26:63). "ஆணையிட்டு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (exorkizo என்ற) வார்த்தை, "ஒரு ஆணையினால் வேண்டுகோள் விடுத்தல்" என்று அர்த்தப்படுகிறது.[16] NIV வேதாகமத்தில், ஆணையின்கீழ் "நான் உன்னை விசாரிக்கிறேன்" என்றுள்ளது. ஆணையின் பயபக்தியைக் கவனியுங்கள்: "அது ஜீவனுள்ள தேவன் பேரில்" இருக்கிறது. ஆணையின்கீழ் இடப்படுதலை இயேசு விசுவாசிக்காமல் இருந்திருந்தால், அவர் மௌனமாகவே இருந்திருக்கக் கூடும் - ஆனால் அவர் அவ்வாறு மௌனமாயிருக்கவில்லை. அவர், "நீர் சொன்னபடிதான்" என்று பதில் அளித்தார் (வசனம் 64), அது உறுதிப்பாடான வழியில் பதிலளிப்பதாக இருக்கிறது. NIV வேதாகமத்தில் "ஆம், அது நீர்சொன்னபடியே ஆகும்" என்றுள்ளது.

தாம் கூறியதைப் பற்றிய உண்மைத் தன்மைக்கு அடிக்கடி தேவனைச் சாட்சியாக அழைத்த பவுலின் உதாரணத்தையும் நாம் கொண்டுள்ளோம். எடுத்துக்காட்டாக, பிலிப்பியர் 1:8ல் அவர், "இயேசு கிறிஸ்துவின் உருக்கமான அன்பிலே உங்களெல்லார்மேலும் எவ்வளவோ வாஞ்சையாயிருக்கிறேன் என்பதற்குத் தேவனே எனக்குச் சாட்சி" என்று கூறினார் (மேலும் ரோமர் 1:9; கலாத்தியர் 1:20; 2 கொரிந்தியர் 1:23 ஆகிய வசனங்களையும் காணவும்). இந்த உதாரணங்களில் இருந்து நாம், ஒரு ஆணையிடுதல் அல்லது சத்தியம் செய்தல் தேவைப்படுகிற பரிசுத்தமான தருணங்கள் உள்ளன என்று முடிவு செய்கிறோம்.

இயேசு எதைப் போதித்துக் கொண்டிருந்தார்

ஆணைகள் மற்றும் சத்தியங்களை முற்றிலுமாகத் தடைசெய்தல் என்பது நமது வேத வசனப் பகுதியின் நோக்கமாக இருக்கவில்லை என்றால், அதன் குறிக்கோள் என்னவாக இருந்தது? இயேசுவின் வார்த்தைகளில் இருந்து நாம் எதைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார்? மத்தேயு 5:33-37ல் இருந்து பல கொள்கைகளை உய்த்துணர முடியும்.[17] மூன்று கொள்கைகளை நாம் ஆழ்ந்து சிந்திப்போம்.

(1) அற்பமான ஆணைகளைத் தவிர்த்து விடுங்கள். நமது வேதவசனப் பகுதியானது, நாம் அற்பமான[18] ஆணைகளைத் தவிர்க்க வேண்டும் என்று போதிக்கிறது - இவைகள் பின்வரும் உதாரணங்களில் இருப்பது போன்று, தேவனுடைய நாமத்தையும் தேவனுடன் தொடர்புடைய விஷயங்களையும் சாதாரணமாகப் பயன்படுத்தும் கூற்றுகளாக உள்ளன:[19]

- "தேவனால். ..." ["கடவுள் அறிய"].
- "பரலோகத்தி[ங்களி]ல். ..."
- "பரிசுத்தமான எல்லாவற்றினாலும். ..."

அற்பமான சத்தியங்கள் தவறானவைகளாக மாத்திரமல்ல, ஆனால் அவைகள் பயனற்றவையாகவும் உள்ளன. இவற்றைப் பயன்படுத்தாத நிலையில் ஒரு தனிநபரை நீங்கள் நம்ப இயலாது என்றால், இவற்றை அவர் பயன்படுத்தும்போதும் நீங்கள் அவரை நம்ப இயலாது. யாரோ ஒருவர், "நேர்மையான ஒரு மனிதர், ஆணையின்றியே நம்பப்படுகிறார், ஆனால் நேர்மையற்ற ஒரு மனிதர், ஆயிரக்கணக்கான சத்தியங்களைப் பயன்படுத்தினாலும் நம்பப்படுவதில்லை" என்று கூறியுள்ளார்.

தேவனுடைய நாமத்தையும் பரிசுத்தமான மற்றவற்றையும் தேவதூஷணமாகப் பயன்படுத்துதல் என்பதோடு, அற்பமான ஆணைகள் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. உலகில் நான் வாழும் பகுதியில், பின்வருபவை போன்ற சொல்விளக்கங்கள் சாதாரணமானவையாக உள்ளன:

- மன எழுச்சி கொண்ட ஒருவர், "ஓ என் கடவுளே!" என்று கூறுகிறார்.
- மற்றவரைக் குறித்து எரிச்சல் கொள்ளும் ஒருவர், "தேவனுடைய நாமத்திலே நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்?" என்று கூறுகிறார்.
- கவலைப்படுகிற ஒருவர், "நான் அதை எவ்வாறு கடந்து வருகிறேன் என்பதைத் தேவன் மாத்திரமே அறிவார்" [அல்லது "பரலோகத்திற்கு மாத்திரமே தெரியும்"] என்று கூறுகிறார்.[20]

இயேசுவின் நாமத்தை ஒரு ஆச்சரியக் குறியாகப் பயன்படுத்துதல் போன்ற மற்ற உதாரணங்கள் குறிப்பிடப்பட முடியும்.[21] தெய்வ நிந்தனையுடன் ஆணையிடுபவரால் உறுதிப்படுத்தப்பட்டதைக் காட்டிலும் அதிக பயங்கரமான குற்றம் எதுவும் இருப்பதில்லை என்று ஆல்பர்ட் பேர்னஸ் அவர்கள் கூறினார்,

> ... தேவனுடைய சகிப்புத்தன்மையைப் பற்றித் திகைப்படைவதற்கு, அவர் பழிவாங்குதலில் எழுந்திருந்து தெய்வநிந்தனையுடன் ஆணையிடுபவரை உடனே நரகத்தில் தள்ளுவதில்லை என்பதைக் காட்டிலும் அதிக காரணம் இந்த அண்டத்தில் இருப்பதில்லை. ஒவ்வொரு நாளும் அவரது நாமம் நிந்திக்கப்படும் இதைப்போன்ற உலகத்தில், மற்றும் நேரத்தில், மற்றும் ஆயிரக்கணக்கானவர்களால் இவை போன்றவை கூறப்படும் தருணங்களில், தேவன் கோபிக்கத் தாமதமாக இருப்பதையும் அவரது இரக்கம் எல்லைகள் இன்றி இருப்பதையும் காண்பிக்கிறார்![22]

(2) உண்மை நிறைந்த நபராக இருங்கள். சற்று நேரத்திற்கு முன், நேர்மையான நபருக்கு ஆணையிடுதல்கள் தேவையில்லை என்று குறிப்பிட்டிருந்தேன். நம்மில் ஒவ்வொருவரும் நேர்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும், நம்பப்படுவதற்கு ஒரு ஆணையைப் பயன்படுத்துதல் தேவையற்ற வகையிலான தனிநபராக இருக்க வேண்டும் என்பது நமது வேதபாட வசனப் பகுதியில் இருந்து வருகிற இரண்டாவது பாடமாக உள்ளது.

ஒரு சிறுபையன் தனது இளைய சகோதரனுக்கு, தனது பெற்றோர்களின் பதில்களை எவ்வாறு விளங்கிக்கொள்ள வேண்டும் என்று விளக்கப்படுத்திக் கொண்டிருந்தான். அவன், "அவர்கள் 'ஆம்' என்று சொல்வார்கள் என்றால், அது 'ஒருவேளை' என்று அர்த்தப்படுகிறது. அவர்கள் 'இதைப்பற்றி நான் சிந்திப்பேன்' என்று சொல்வார்கள் என்றால், அது 'இல்லை' என்று அர்த்தப்படுகிறது. அவர்கள் 'இல்லை' என்று சொல்வார்கள் என்றால் அது நீ விரும்புவதைப் பெறும் வரையில் இருமுறை அவர்களுக்கு ஓயாது தொல்லை தர வேண்டும் என்று அர்த்தப்படுகிறது" என்று கூறினான். அந்தப் பையனின் மதிப்பீடு தவறானதாக இருந்தது என்று நான் நம்புகிறேன். அது மிகச்சரியானதாக இருந்தது என்றால், அவனது பெற்றோர் நமது வேதபாட வசனப்பகுதியில் உள்ள பின்வரும் பாடத்தைக் கற்றிருக்க வில்லை என்றாகிறது: "நீங்கள் எதை அர்த்தப்படுத்துகிறீர்களோ அதையே கூறுங்கள் மற்றும் நீங்கள் எதைக் கூறுகிறீர்களோ அதையே அர்த்தப்படுத்துங்கள்."

நீங்களும் நானும் அந்தச் சிறுபையனின் பெற்றோர்களைப் போல் இருக்கலாகாது.[23] நாம் "உள்ளது" என்று கூறுகிறபோது, நாம் "ஆம்" என்று அர்த்தப்படுத்துவது அவசியமாக உள்ளது. நாம் "இல்லது" என்று கூறும்போது, நாம் "இல்லை" என்று அர்த்தப்படுத்துவது அவசியமாக உள்ளது. "பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்" (எபேசியர் 4:25).

நான் ஒரு சிறுபையனாக இருந்தபோது, நாங்கள் "அவர் தமது வார்த்தையின்படி செய்கிற மனிதராக இருக்கிறார்" மற்றும் "அவரது வார்த்தை அவரது கட்டாக உள்ளது" என்பவை போன்ற சொல்விளக்கங்களைக் கொண்டிருந்தோம், இவை ஒரு நபர் உண்மையைக் கூறுகிறார் என்று அர்த்தப்படுத்துகின்றன. பெரும்பான்மையான பேரங்கள் கைகளைக் குலுக்குவதால் முத்திரையிடப்பட்டன. இன்றைய நாட்களில் நாம், வேறுபட்ட ஒரு உலகத்தில் வசிக்கிறோம், இது வழக்கறிஞர்கள் மாத்திரமே புரிந்துகொள்ளக் கூடிய, சட்டப்பூர்வமான உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்களில் மூழ்கியுள்ளது. மக்கள் அதிகம் நேர்மையற்றவர்களாகவும் பாவ இயல்பு உடையவர்களாகவும் ஆகுகையில், சூழ்நிலை மிகவும் மோசமாகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு, நான் என் முதல் இல்லத்தை வாங்கின போது, தேவைப்பட்ட பத்திரப்பதிவுகள் ஒரு சில பக்கங்களைக் கொண்டிருந்தன. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நான் எனது தற்போதைய இல்லத்தை வாங்கியபோது, தேவைப்பட்ட பத்திரப்பதிவுகளின் கனமானது ஏறக்குறைய ஒரு அங்குலமாக இருந்தது.

நீங்களும் நானும், நாட்டின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியவர்களாக இருக்கிறோம் (ரோமர் 13:1), எனவே நமது பரிவர்த்தனைகளின் சட்டப்பூர்வமான தேவைகளில் இருந்து தப்பிக்க இயலாது. இருந்தபோதிலும்,

தனிப்பட்ட வகையில் நம்மில் ஒவ்வொருவரும் நேர்மையாக இருக்கக் கடும் முயற்சி செய்ய வேண்டும் மற்றும் உண்மை பேசுபவர் என்ற நற்பெயரை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.[24]

(3) *உங்கள் வார்த்தையை எப்போதுமே காப்பாற்றுங்கள்.* முந்திய பாடத்துடன் மிகவும் நெருக்கமானதாகப் பின்வரும் பாடம் உள்ளது: உங்கள் வார்த்தையை எப்போதுமே காப்பாற்றுங்கள். இது ஒருவேளை எனது கற்பனையாக இருக்கலாம், ஆனால் அதிகம் அதிகமாக மக்கள், தாங்கள் செய்வதாகக் கூறுவதைச் செய்யத் தவறுபவர்களாக உள்ளனர். வளர்ந்த எண்ணிக்கையிலானவர்கள், ஏதேனும் ஒன்றைப் பெற விரும்புபவர்களிடம் அதைத் தருவதாக வாக்களித்தல் என்பது அவர்களை விரட்டுவதற்கான மிகவிரைவான வழியாக உள்ளது என்று முடிவு செய்துள்ளனர் என்பது உறுதி. அவர்கள், "நிச்சயமாக நான் அதைக் குறித்துக் கவனம் எடுப்பேன்" என்று கூறுகின்றனர் - மற்றும் அதுவே அடிக்கடி அவர்களிடம் இருந்து கேள்விப்பட்ட கடைசி விஷயமாக இருக்கிறது. அவர்கள் வாக்குறுதிகள் ஏற்படுத்துவதை அற்பமானதாக நினைத்து அவற்றைக் காத்துக்கொள்ளும் நோக்கம் எதுவும் இல்லாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவ்விடத்தில் நான், திருமணச் சடங்குகளின்போது ஏற்படுத்தப்படும் வாக்குறுதிகளைப் பற்றி ஒரு வார்த்தை கூறியாக வேண்டும்.[25] திருமணம் பற்றிய இதற்கு முந்திய வசனப்பகுதிக்கும் (மத்தேயு 5:31, 32) இப்போது ஆராய்ச்சி செய்யப்படும் "உள்ளது/இல்லது" வசனப்பகுதிக்கும் இடையில் "ஒரு இயல்பான இணைவு உள்ளது" என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.[26] திருமணச் சடங்குகளின் போது ஏற்படுத்தப்படும் பரிசுத்தமான வாக்குறுதிகள் மாறுபடுகின்றன; ஆனால் அவற்றில் அடிக்கடி, "உடல் நலத்திலும் நோயிலும்," "மற்ற எல்லாரையும் விட்டுவிட்டு" மற்றும் "நாம் இருவரும் உயிரோடு இருக்கும் வரையிலும்" என்பவை போன்ற வார்த்தைகள் உள்ளடங்குகின்றன. இந்த வாக்குறுதிகளை ஏற்படுத்துகின்றவர்கள் தங்களின் வார்த்தைகளைப் புரிந்து கொள்கின்றனரா? அவர்கள் "நான் அதைச் செய்கிறேன்" என்று கூறுகிறபோது, அவர்கள் "அவர் அல்லது அவள் என்னைச் சந்தோஷப்படுத்துகிற வரையில் நான் அதைச் செய்கிறேன்" என்று அர்த்தப்படுத்துகின்றனரா? அவர்களின் "ஆம்" என்பது "ஆம்" என்று அர்த்தப்படுகிறதா அல்லது அது "ஒருவேளை" என்று அர்த்தப்படுகிறதா?

பல ஆண்டுகளுக்கு முன்பு நான், பல இளம் தம்பதிகள் - நான் திருமணச் சடங்கை நிகழ்த்தி இருந்த பல தம்பதிகள் - விவாகரத்துப் பெற்றதைக் குறித்து ஊக்கம் இழந்தவன் ஆனேன். அந்த எண்ணிக்கையைக் குறைக்கும் என்று நான் நம்பிய ஒரு விரிவான திட்டநிகழ்வை நான் தயாரித்தேன். திருமணச் சடங்கிற்கு முன்னர், விரிவான ஆற்றுப்படுத்துதல் மற்றும் சோதித்தல் ஆகியவை எனக்கு தேவையாயிருந்தன. நான் திருமணம் செய்விக்கும் தம்பதியர் தங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டால், விவாகரத்திற்காக வழக்கறிஞர்களை அணுகுவதற்கு முன்னர் என்னை அணுக வேண்டும் என்று கூறுகிற ஒரு ஒப்பந்தப் பத்திரத்தில் அவர்கள் இருவரும் கையொப்பம் இடவேண்டும் என்பது விசேஷித்த கேட்பாக இருந்தது. எனது முன்னெச்சரிக்கைகள் வீணானவையாகக் காணப்பட்டது என்பது எனக்குத் திகைப்பை ஏற்படுத்தியது. நான் ஆற்றுப்படுத்தி இருந்தவர்களில் பலர் அப்பொழுதும் விவாகரத்தைப் பெற்றனர். இதை என்னால் புரிந்துகொள்ள

இயலவில்லை. எனது மனைவியிடத்தில் நான், "ஆனால் அவர்கள் ஒரு விவாகரத்து வழக்கறிஞர்களைத் தொடர்பு கொள்வதற்கு முன்னர் என்னைத் தொடர்பு கொள்வதாக *வாக்களித்து இருந்தனர்!* மற்றும் அவர்கள் அதைச் செய்யவில்லையே!" என்று கூறுவது உண்டு. நிறைவாக, அவர்கள் தேவனுக்கு முன்பாகத் தாங்கள் செய்திருந்த பரிசுத்த உடன்படிக்கையை மீறுவதைப் பற்றிக் கவலைப்படாதிருந்தால், அவர்கள் எனக்கு அளித்த வாக்குறுதியை மீறத் தயங்க மாட்டார்களே என்ற சிந்தனை எனக்கு வந்தது.

எனது முழு பலத்துடன் நான் உங்களைப் பின்வருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ள என்னை அனுமதியுங்கள்: உங்கள் வார்த்தையைக் காப்பாற்றும் நபராக இருங்கள். சிலவற்றை நீங்கள் செய்வதாக *கூறும்போது*, அதைச் *செய்வதில்* உறுதியாயிருங்கள். நீங்கள், "ஆனால் வாக்குறுதியைக் காப்பாற்றுதல் *கடினமாக* இருந்தால் என்ன செய்வது? அதைக் காத்துக்கொள்ளச் சிலவற்றை *விலைகொடுக்க வேண்டியிருந்தால்* என்ன செய்வது?" என்று கேட்கலாம். நீங்கள் ஒரு விஷயத்தைச் செய்வதாகக் *கூறும்போது* அதைச் செய்யுங்கள் - சிலவற்றை விலையாகக் கொடுக்க வேண்டியிருந்தாலும் அதைச் செய்யுங்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் நான், தேவபக்தியுள்ள ஒரு கிறிஸ்த மனிதரின் சவ அடக்கத்திற்குப் பயன்படுத்த நல்ல வசனப் பகுதியொன்றைக் கண்டுபிடித்தேன்: சங்கீதம் 15.[27] தேவபக்தியுள்ள ஒரு நபரைப் பற்றித் தாவீது சித்தரிக்கையில், அவர் 4ம் வசனத்தில் உள்ள பின்வரும் பண்பை உள்ளடக்கினார்: "ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான்." அது, தேவபயமுள்ள ஒரு மனிதர், ஏதேனும் ஒன்றைச் செய்வதாக வாக்களிக்கும்போது, அவர் அதைச் செய்கிறார் - அதைச் செய்வது அவரைப் புண்படுத்தினாலும் அவர் அதைச் செய்கிறார். NIV வேதாகமத்தில், அவர் "தமது ஆணை தம்மைப் புண்படுத்துகிறபோதும் அதை அவர் காப்பாற்றுகிறார்" என்றுள்ளது. பொழிப்புரை ஒன்று பின்வரும் புத்திமதியைக் கொண்டுள்ளது: "உங்கள் வார்த்தைக்கு விலைகொடுக்க வேண்டியிருக்கும் போதும் அதைக் காப்பாற்றுங்கள்."[28] லேரி கேல்வின் அவர்கள் இந்த முக்கியமான கொள்கைக்குப் பின்வரும் விவரிப்பைக் கொடுத்தார்:

> நான் ஏழு வயதுடையவனாக இருந்தபோது எனது தாத்தாவிடம், மாடல் T என்ற கார் இருந்தது, அவர் அதை விற்க முயற்சி செய்துகொண்டிருந்தார். ஒரு நாள் காலையில் ஒரு மனிதர் வந்து, அந்தப்பழைய காருக்கு ஆயிரம் டாலர்கள் கொடுப்பதாக எனது தாத்தாவிடம் கூறினார். எனது தாத்தா அது குறித்து அந்த மனிதரின் கையைப் பற்றிக் குலுக்கினார், இருவரும் அந்த விற்பனையை ஒப்பந்தம் செய்தமைக்கு இந்தக் கைகுலுக்கல் அடையாளமாக இருந்தது. அந்த மனிதர் உடனே பணம் கொடுக்க இயலாது இருந்தது. அவர் "உங்களுக்குச் சம்மதம் என்றால் நான் சற்றுப் பின்பு வந்து பணம் கொடுத்து இந்தக் காரை எடுத்துச் செல்கிறேன்" என்றார். உடனே தாத்தா, "நல்லது, அப்படியே செய்யலாம்" என்று கூறிவிட்டார்.
>
> பிற்பாடு மதிய நேரத்தில் வேறொரு மனிதர் வந்து எனது தாத்தாவிடம் அந்தக் காருக்கு இரண்டாயிரத்து ஐநூறு டாலர்கள் தருவதாகக் கூறினார். அப்போது நடந்த விஷயத்தை நான் ஒருக்காலும் மறக்க மாட்டேன். எனது தாத்தா வயிறு குலுங்கச் சிரித்துவிட்டு அந்த மனிதரிடத்தில், "நீங்கள் இன்று காலையே இங்கு வந்திருக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அந்த இரண்டாயிரத்து ஐந்நூறு டாலர்களை நான் நிச்சயமாகவே பயன்படுத்திக்கொள்ள முடியும். ஆனால் இன்று காலையில் வேறொரு நபருடன் நான் இதை விற்பதாகக் கைகுலுக்கி விட்டேன். இதை நான் ஆயிரம் டாலர்களுக்கு விற்றுவிட்டேன்" என்று கூறினார்.[29]

ஆம், ஒரு வாக்குறுதியைக் காப்பாற்றுவது சாத்தியமற்றதாக இருக்கிற சந்தர்ப்பங்கள் வரும் என்று நான் அறிந்திருக்கிறேன். பிரசங்கிக்கும் பணி ஒன்றிற்கு நான் வாக்குறுதி அளித்துவிட்டு, பின்னர் நான் உடல் சுகவீனமானதால் அந்தப் பணியை நிறைவேற்ற இயலாது போனேன். பெற்றோர் என்ற வகையில் நான், சிந்திக்காமலேயே சில வாக்குறுதிகளை அளித்துவிட்டு, நான் செய்வேன் என்று கூறியதைச் செய்ய இயலாதவனாகி இருந்தேன். (அந்த சந்தர்ப்பங்களை மீண்டும் நினைவுபடுத்திப் பார்த்தல் என்பது இன்னமும் மனதைப் புண்படுத்துகிறது.) இருப்பினும் இவை போன்ற நிகழ்ச்சிகள், விதியாக இருப்பதற்குப் பதிலாக விதிவிலக்குகளாக இருக்க வேண்டும். நாம் இதை அல்லது அதை செய்யப் போவதாகக் கூறுவதற்கு *முன்னர்*, அதற்கு நாம் கொடுக்க வேண்டிய விலையைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தால், அவைகள் நாம் கூறுபவைகள் ஒரு சிலவாகவும் அரிதாகவும் இருக்கும். மீண்டும் நான் உங்களிடம் பின்வருவதை வற்புறுத்தி வேண்டிக் கொள்கிறேன்: ஒருசில வாக்குறுதிகளையை ஏற்படுத்துங்கள், மற்றும் நீங்கள் ஏற்படுத்தும் வாக்குறுதிகளைக் காத்துக் கொள்ளுங்கள்.

முடிவுரை

"நமது கலாச்சாரத்தில் நாம், நேர்மைக்கான இடர்ப்பாடு ஒன்றைக் கொண்டுள்ளோம்" என்று கூறப்பட்டுள்ளது.[30] தேவனுடைய பிள்ளைகள், அந்த மனப்பாங்கை மாற்றுவதில் நடத்துனர்களாக இருக்க வேண்டும் என்பது கட்டாயமாக உள்ளது. நாம் இந்த பூமிக்கு உப்பாகவும் இந்த உலகத்திற்கு வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்றால், நாம் நேர்மையின் மக்களாக இருக்க வேண்டும். கர்த்தரிடம் வருவதற்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் நாம் உதவ வேண்டும் என்றால், நாம் நேர்மையின் மக்களாக இருக்க வேண்டும். அன்றாட வாழ்வின் விஷயங்கள் பற்றி நாம் பேசும்போது, நாம் கூறுபவற்றை மற்றவர்கள் நம்ப இயலாது என்றால், நித்தியமான விஷயங்களைப் பற்றி நாம் பேசும்போது அவற்றை அவர்கள் ஏன் நம்ப வேண்டும்?

மீண்டும் ஒருமுறை இது, சுய பரிசோதனைக்கான வேளையாக உள்ளது. ஒருவேளை சிலர், இதில் கலந்துரையாடப்பட்ட தலைப்புகள் எல்லாவற்றையும் குறித்து "குற்றம் உள்ளவர்களாக" இருப்பதினால் வேண்டுகோள் விட வேண்டியவர்களாக இருக்கலாம்: அற்பமான ஆணைகளை இடுதல், தேவனுடைய நாமத்தைத் தூஷித்தல், உண்மையைக் கூறத் தவறுதல் மற்றும் தங்களின் வார்த்தைகளைக் காப்பாற்றத் தவறுதல். இவர்கள் தங்கள் வாழ்வில் ஒரு புதிய பழக்கத்தை ஏற்படுத்துதல் தேவையாக உள்ளது. தேவனுடைய உதவியுடன் இவர்கள் தங்கள் எண்ணப்போக்கு மற்றும் செயல் ஆகியவற்றில் முற்றிலுமான மாற்றத்தை ஏற்படுத்துதல் அவசியமாக இருக்கிறது. இருப்பினும் நாம் யாவரும் ஏதேனும் ஒரு அளவில் குற்றமுள்ளவர்களாக இருக்கிறோம் என்பது நிச்சயம். நமது குறைவுகளில் இருந்து நாம் யாவரும் மனந்திரும்பி, தேவனுடைய மன்னிப்பைக் கேட்போமாக, பின்பு எதிர்காலத்தில் சிறப்பானவற்றைச் செய்ய

உதவும்படி தேவனிடம் கேட்போமாக. நாம் நமது வாய்களை "திறக்குமுன் சிந்திப்பதற்கு" நம் யாவருக்கும் தேவன் உதவுவாராக.

குறிப்புகள்

[1]ஒரு ஆணை என்பது, ஆணையிடுபவரின் வார்த்தைகள் உண்மையாக இருக்கவில்லை என்றால் அவரைத் தேவன் தண்டிக்கக் கூடும் என்பதையும் மறைமுகமாக உணர்த்துகிறது [2]*The American Heritage Dictinary,* 4th ed. (2001), s.v. "oath." [3]R. T. France, *The Gospel According to Matthew,* Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Inter-Varsity Press, 1985), 124. [4]"பொருத்தனைகள்" மற்றும் "ஆணைகள்" என்பதற்கு நமது வேதபாட வசனப் பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள வேறுபட்ட கிரேக்க வார்த்தைகளுக்கு, இந்தப் பாடத்தின் முடிவில் உள்ள "பிரசங்க மற்றும் போதனைக் குறிப்புகளில்" காணவும். [5]D. A. Carson, "Matthew," *The Expositor's Bible Commentary,* vol. 8 (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1984), 153. [6]எருசலேம் தவிர மற்ற உதாரணங்களுக்கு முன்னால் "ஆல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *en* என்ற முன்னிடைச் சொல் உள்ளது. "எருசலேம்" என்ற வார்த்தைக்கு முன்னால் "நோக்கி" என்று மொழிபெயர்க்கப்படக்கூடிய *eis* என்ற வார்த்தை உள்ளது. "எருசலேமின் பெயரால்" ஏற்படுத்தப்பட்ட பொருத்தனைகள் கட்டுப்படுத்துபவை அல்ல என்று யூதர்கள் கருதினர், அதே வேளையில் அவர்கள் "எருசலேமை நோக்கி" செய்யப்படும் பொருத்தனைகள் கட்டுப்படுத்தின என்று நினைத்தனர் என்ற உண்மைக்கு இவ்விடத்தில் குறிப்பு இருக்கலாம். [7]அவர்கள் கூறியது உண்மையாக இராவிட்டால், அவர்கள் தங்கள் உயிரைத் துறப்பார்கள் என்பது அர்த்தமாக இருக்கலாம். [8]குறுக்கே வைக்கப்பட்ட விரல்கள் உலகத்தின் பல பகுதிகளில் நல் அதிர்ஷ்டத்தின் குறியாக உள்ளன. இந்த மூடநம்பிக்கை, அறியப்படாத தோற்றுவாயைக் கொண்டதாக உள்ளது. [9]இது இனியும் உண்மையாக இருப்பதில்லை (காண்க யோவான் 4:20, 21), ஆனால் இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின்போது இது உண்மையாக இருந்தது. [10]A. Lukyn Williams, "St. Matthew," *The Pulpit Commentary,* vol. 15, ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 165.

[11]"The History of Hair Dye" (http://www.bbc.co.uk/radio4/womanshour/05/2006_31_tue.shtml; Internet; accessed 30 May 2008). [12]இயேசு பிரசங்கத்துவ வலியுறுத்தத்திற்காக மாத்திரம் இவ்வார்த்தைகளை மறுபடியும் கூறியிருக்கவும் சாத்தியக் கூறு உள்ளது. [13]இன்றைக்கான சத்தியத்தின் வெளியீடான, டேவிட் ரோப்பர் அவர்கள் எழுதிய, "ரோமருக்கு எழுதிய நிருபம், 5" என்ற புத்தகத்தில் பக்கங்கள் 85-86ல், ரோமர் 14:23ன் மீதான விளக்கவுரைகளைக் காணவும். [14]Burton Coffman, *Commentary on the Gospel of Matthew* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1968), 67. [15]J. W. McGarvey, *The New Testament Commentary,* vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., 2006), 57. [16]W. E. Vine, Merrill F. Unger, William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 13. [17]இந்தப் பாடத்தைத் தொடர்ந்து வரும் "பிரசங்க மற்றும் போதனைக் குறிப்புகள்" என்ற பகுதியில் மற்ற கருத்துக்களைக் காணவும். [18]இந்த வாக்கியத்தில் "அற்பமான" என்பது "தீவிர கவனத்திற்குத் தகுதியற்ற" என்று அர்த்தப்படுகிறது (*The American Heritage Dictionary,* 4th ed. [2001], s.v. "frivolous"). [19]பிரசங்கத்தின் இந்தப் பகுதியில் நான் தருகிற உதாரணங்கள், நானே சொந்தமாகக் கேள்விப்பட்டு இருப்பவற்றின் அடிப்படையில்

உள்ளன. உலகின் உங்கள் பகுதியில் உள்ள உதாரணங்களை இவ்விடத்தில் பதிலியாகப் பயன்படுத்திக் கொள்ளவும். [20]குறிப்பிட்ட சூழ்நிலைகளில் தேவன் மீது பயபக்தியுடன் எனது உதாரணங்களில் சிலவற்றைப் பேச முடியும். இருப்பினும், அவைகள் சாதாரணமானவையாகும் விதத்திலேயே அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன. அவைகள் தேவனைப் பற்றிய கொஞ்சம் சிந்தனையுடனோ அல்லது தேவனைப் பற்றிய சிந்தனை இல்லாத வகையிலோ தான் பொதுவாகப் பேசப்படுகின்றன.

[21]"Gosh" மற்றும் "Jeez" என்ற வார்த்தைகளும் குறிப்பிடப்படமுடியும். இந்த அமங்கலச் சொற்கள் அல்லது "சுவையூட்டப்பட்ட ஆணைகள்" என்பவை, பரிசுத்த நாமங்களின் சிறிது வேறுபடுத்தப்பட்ட பதிப்புகளாக ("Gosh" என்பது "தேவனையும்" "Jeez" என்பது "இயேசுவையும்" குறிக்கிறது) உள்ளது. பெரும்பான்மையான மக்களுக்கு இவைகள் தீமையற்றவைகளாகக் காணப்படுகின்றன, ஆனால் இவற்றைப் பயன்படுத்த மாட்டேன் என்று நீண்ட நாட்களுக்கு முன்பே நான் முடிவு செய்தேன். [22]Albert Barnes, *Notes on the New Testament: Matthew and Mark*, ed. Robert Frew (Grand Rapids, Mich.: Baker Book House, 1970), 58. [23]இல்லம் என்பது நமது பெற்றோர்களின் போதனை மற்றும் உதாரணம் (மற்றும் நாம் உண்மையைக் கூறாதபோது தக்கவைகையிலான தண்டனை) ஆகியவற்றினால் நாம் உண்மையாக இருக்கக் கற்றுக்கொள்கிற இடமாக உள்ளது என்பதைக் குறிப்பிட நீங்கள் விரும்பலாம். [24]உண்மைநிலையில் அடிக்கடி அற்பமானவர்களாகவும் சிந்தனையற்றவர்களாகவும் இருந்து கொண்டு, "எப்போதும் உண்மையையே பேசுகிறேன்" என்று உரிமைகோரும் சிலரைப் பற்றிய வார்த்தை ஒன்றைக் கூடுதலாக இவ்விடத்தில் கூறுவது உங்களுக்கு அவசியமானதாக இருக்கலாம். உண்மையானது அன்புடன் பேசப்பட வேண்டும் (எபேசியர் 4:15). [25]இந்த பகுதியானது மேற்கத்திய உலகத்தின் சூழ்நிலையைப் பிரதிபலிக்கிறது. நீங்கள் எங்கு வாழ்ந்தாலும், அங்கு ஒருவர் தமது திருமண வாக்குறுதிகளுக்கு உண்மையுள்ளவராக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவதில் மதிப்பு இருக்கும். [26]Larry Calvin, *The Power Zone* (Fort Worth, Tex.: Sweet Publishing, 1995), 84. [27]நீதிமொழிகள் 31ன் கடைசிப் பகுதியானது, தேவபக்தி உள்ள ஒரு பெண்மணியைப் பற்றிய தனிச்சிறந்த விவரிப்பாக உள்ளது. சங்கீதம் 15, தேவபக்தியுள்ள ஒரு மனிதரைப் பற்றிய விவரிப்பாக நினைக்கப்படலாம். [28]Eugene H. Peterson, *The Message* (Colorado Springs, Colo.: NavPress Publishing Group, 1995), 663. [29]Calvin, 89. [30]Ibid., 91.

7

நீங்கள் தவறாக நடத்தப்படும் போது

(மத்தேயு 5:38-42)

மத்தேயு 5:38-42 என்ற வசனப் பகுதியானது மலைப்பிரசங்கத்தில் நமது அடுத்த பாடப் பகுதியாக உள்ளது, இதில் இயேசுவின் உரையைக் கேட்டவர்கள் கேள்விப்பட்டிருந்தவற்றிற்கும் அவர் போதித்தவற்றிற்கும்இடையில் உள்ள நேர்மாறின் கடைசிக்கு முந்திய பகுதி அடங்கியுள்ளது.இந்தநேர்மாறும் கடைசி நேர்மாறும் நெருங்கிய தொடர்புடையவையாக உள்ளன; இவ்விரண்டுமே, நாம் தவறாக நடத்தப் படுகையில் நாம் எவ்வாறு பதில்செயல் செய்ய வேண்டும் என்பதைப் பற்றியவையாக உள்ளன.[1] இந்தப் பாடத்திற்கான வேதவசனப் பகுதியானது மலைப்பிரசங்கத்தின் மற்ற எந்தப்பகுதியையும் போலவே அதிகமான விவாதத்திற்குக்காரணமாகி இருக்கிறது.

> *"கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று, உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம்வரப் பலவந்தம்பண்ணினால், அவனோடு இரண்டுமைல் தூரம் போ. உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே" (மத்தேயு 5:38-42).*

டி. மார்டின் லாயிட்-ஜோன்ஸ் அவர்கள், "தீமையை எதிர்த்து நிற்காதீர்கள் மற்றும் அன்புடனும் மன்னித்தலுடனும் இருங்கள் என்று நமக்குக் கூறுகிற இந்தப் போதனையைப் போன்று, வேத வசனத்தின் வேறு எந்த வசனப் பகுதியும், சாத்தியமான வகையில் அதிகமான எழுச்சியை உண்டாக்கி இருக்கவில்லை" என்று எழுதினார்.[2] இவ்வசனப் பகுதியானது, இயேசுவின் போதனை முட்டாள்தனமானது அல்லது சாத்தியமற்றது என்று கூறுவதற்குக் கிறிஸ்தவத்தின் விரோதிகளால் பயன்படுத்தப் பட்டுள்ளது. இது இயேசுவைப் பின்பற்றப் பிரியமாயிருப்பவர்களைத் திகைக்கச் செய்கிற ஒரு பகுதியாகவும் இருக்கிறது. இது நமது வாழ்வில் மிகச் சரியாக எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படக் கூடும்? கிறிஸ்தவர்களாக விரும்புகிற பலர், ஒன்று இவ்வசனப் பகுதியின் அறிவுறுத்தல்களைக்காணாது விடுகின்றனர் அல்லது அவற்றைப் புறம்பே விளக்கப்படுத்துவதில் முடிகின்றனர். இந்தப் போதனையை

அகற்றிப்போடாமல் நடைமுறைப்படுத்துதல் என்பதே எனது அறைகூவலாக உள்ளது.

இந்தப் பாடத்தை நான், "நீங்கள் தவறாக நடத்தப்படும்போது" என்று அழைக்கிறேன். தேவனுடைய பிள்ளையாக இருப்பவர் மற்றவர்களால் தவறாக நடத்தப்படும்போது எவ்வாறு எதிர்ச் செயல் செய்ய வேண்டும்? இந்தப் பாடத்தில் நாம், அந்தக் கேள்விக்கு இயேசுவின் எதிர்மறையான பதிலை (என்ன செய்யக் *கூடாது* என்பது பற்றிய பதிலை) முதன்மையாகக் காண்போம். அடுத்த பாடத்தில் நாம், அவரது நேர்மறையான பதிலை (என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய பதிலை) படிப்போம்.

அவர்களுக்குப் போதிக்கப்பட்டிருந்தது என்ன (5:38)

முதலில் இயேசு, தமது உரையைக்கேட்டவர்களுக்குப் போதிக்கப் பட்டிருந்தது என்ன என்பதைக் குறிப்பிட்டார்: "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று, உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்" (வசனம் 38). வேதாகமத்தைப் பற்றி நன்கு அறியாதவர்களில் பெரும்பான்மையானவர்களுக்குக் கூட, இந்தப் பழைய ஏற்பாட்டு போதனை நன்கு பழக்கமானதாக இருந்தது. இவ்வார்த்தைகள் பழைய ஏற்பாட்டில் பின்வரும் மூன்று இடங்களில் காணப்படுகின்றன: யாத்திராகமம் 21:22-25; லேவியராகமம் 24:19, 20; மற்றும் உபாகமம் 19:21. உபாகமம் 19:21ல் பின்வருமாறு வாசிக்கப் படுகிறது: "உன் கண் அவனுக்கு இரங்கவேண்டாம்; ஜீவனுக்கு ஜீவன்,கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால் கொடுக்கப்படவேண்டும்."

இந்தக் கட்டளை கொடுக்கப்பட்டது ஏன்?

இவ்வார்த்தைகள், தனிப்பட்ட வகையில் பழிவாங்குதலில் இருந்து குடும்ப விரோதங்கள் மற்றும் குடியுரிமைக் கீழ்ப்படிதல் வரையில் ஒவ்வொன்றிற்கும் சாக்குப் போக்கு சொல்லப் பயன்படுத்தப் பட்டுள்ளன. தேவன் இதற்காகவே இந்தக் கட்டளையைக் கொடுத்தாரா? இல்லவே இல்லை. இந்த அறிவுறுத்துதலைப் பொறுத்த மட்டில், பல உண்மைகள் புரிந்துகொள்ளப்பட வேண்டும். முதலாவதாக,இந்தக் கட்டளை எதிர்த்துத் தாக்குதலை ஊக்குவிக்க அல்ல, ஆனால் (ஜாக்கிரதையாகக் கவனியுங்கள்) *தண்டனையை மட்டுப் படுத்துவதற்காகவே தரப்பட்டது*. இந்த ஆணைக்கு முன்னர், யாரேனும் ஒருவர் (சண்டையில்) ஒரு கண்ணை இழந்தார் என்றால், அவர் பெரும்பாலும் தன்னைத் தாக்கியவரின் இரு கண்களையும் கெடுக்கவோ அல்லது உயிரை வாங்கவோ முயற்சி செய்தார். தனிப்பட்ட வகையில் எதிர்த்துத் தாக்குதல் என்பது அடிக்கடி, முழுக்குடும்பங்களை அல்லது நகரங்களை அல்லது நாடுகளை அழித்தலை உள்ளடக்குதல் என்பதைத் தீவிரப்படுத்தும். கண்ணுக்கு கண் என்ற கட்டளையைப் பற்றி நீங்கள் நினைக்கும்போது, அதைப் பற்றி பின்வருமாறு சிந்தியுங்கள்: "ஒரு கண்ணுக்கு ஒரு கண், மாத்திரமே, மற்றும் ஒரு பல்லுக்கு ஒரு பல் மாத்திரமே - *மற்றும் அதிகமானதல்ல*."

இவ்வசனங்கள் சராசரி யூதர்களை நோக்கி இலக்கு வைக்கப்படவில்லை, ஆனால் அதிகாரம் பெற்ற நியாயாதிபதிகளுக்கு ஒரு வழிகாட்டுதலாக இருத்தலையே நோக்கங் கொண்டிருந்தது. சற்று முன் நாம் உபாகமம் 19:21ஐ வாசித்தோம்.சந்தர்ப்பப் பொருளைக் காண்பதற்குப் பல

வசனங்கள் பின்னால் வாருங்கள். 17ம் வசனமானது, வழக்காடுகிற இரு மனிதர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. அவர்கள் "இருவரும் கர்த்தருடைய சந்நிதியில் அக்காலத்தில் இருக்கும் ஆசாரியர்களுக்கும் நியாயாதிபதிகளுக்கும் முன்பாக வந்து நிற்பார்களாக" என்று கூறப்பட்டனர். 18ம் வசனம் "அப்பொழுது நியாயாதிபதிகள் நன்றாய் விசாரணைசெய்யக்கடவர்கள்" என்று கூறுகிறது. பின்தொடரும் வசனங்கள், அவர்கள் நீதியை எவ்வாறு நிலைநாட்ட வேண்டும் என்பதற்கான அறிவுறுத்துதல்களைக் கொடுக்கிறது. "கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல்" என்பது பற்றிய பொதுக் கட்டளையானது அந்த அறிவுறுத்துதல்களின் ஒரு பகுதியாக உள்ளது. அடிப்படை நீதிசார்ந்த வகையில் எல்லாரும் ஒத்துக்கொள்ளும் மூதுரையே இங்கு கொள்கையாக உள்ளது: தண்டனையானது குற்றத்திற்குப் பொருத்தமானதாக இருக்கட்டும்.

கண்/பல் கட்டளையானது எப்போதாவது நேரடியாகச் செயல்படுத்தப் பட்டதா இல்லையா என்பது பற்றி நமக்கு உறுதியாக எதுவும் தெரிவதில்லை. இயேசுவின் காலத்தில், காயப்பட்டவர்[3] மீது பொதுவாக அப்போதைய மதிப்பீடு இடப்பட்டது (கண்ணா, பல்லா அல்லது வேறு ஏதாவதுமா). இந்தத் தொகையானது (இன்றைய நாட்களில் பெரும்பான்மையான நீதிமன்றங்களில் நடப்பது போலவே) குற்றம் செய்தவரால் செலுத்தப்பட வேண்டியிருந்தது.

இந்தக் கட்டளை எவ்வாறு தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது?

ஆகையால்,கண்ணுக்கு கண் பற்றிய நியாயப்பிரமாணம் "அனுமதிக்கும் விஷயம்என்பதற்கு மாறாக கட்டுப்படுத்தும் விஷயமாகவே" இருந்தது.[4] மோசேயின் நியாயப்பிரமாணம் உண்மையில் தனிப்பட்ட வகையில் பழிவாங்குதலை ஊக்கப்படுத்தவில்லை. நம்மில் பெரும்பான்மையானவர்கள் லேவியராகமம் 19:18ன் பின்வரும் வார்த்தைகளுக்கு நன்கு பழக்கமானவர்களாக இருக்கிறோம்: "பழிக்குப் பழி வாங்காமலும், உன் ஜனப்புத்திரர்மேல் பொறாமை கொள்ளாமலும்," உன்னில் நீ அன்புகூருவது போல் பிறனிலும் அன்புகூருவாயாக; ஆனால் வசனத்தின் முதல் பாகத்தைக் கவனியுங்கள். இருந்தபோதிலும், தனிப்பட்ட வகையில் எதிர்த்துத் தாக்குதலைத் தேவன் அங்கீகரித்தார் என்று கூறுவதற்கு யூதர்கள், கண் - மற்றும் - பல் பற்றிய வசனப் பகுதியைப் பயன்படுத்தினர்.

இவ்வசனப் பகுதியானது இன்றைய நாட்களிலும் இதைப் போன்றே இன்னமும் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. எரியும் கண்கொண்ட வெறியர்கள் மற்றவர்களைத் துன்புறுத்தச் சாய்ந்து, "வேதாகமம் 'கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல்' என்று ஆரவாரம் செய்கின்றனர்."

இயேசு போதித்தது என்ன (5:39-42)

ஒரு சட்டம் (வசனம் 39அ)

பழைய ஏற்பாட்டு வேதவசனப் பகுதி தவறாகப் பயன் படுத்தப்படுதலுக்கு இயேசு பின்வருமாறு பதில்அளித்தார்: "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு[5] எதிர்த்து நிற்க[6] வேண்டாம்" (வசனம் 39). தொடக்கத்தில் இருந்தே நாம் பின்வரும் நேர்மாறு குறித்து வலியுறுத்தப் பட்டவர்களாக இருக்கிறோம்: "பொல்லாத நபர் ஒருவரை எதிர்த்து நிற்கக் கூடாதா? பொல்லாத மனிதர்கள்

தாங்கள் விரும்புகிற எதையும் செய்ய அனுமதிப்பதா? அவர்கள் இந்த உலகத்தில் கொந்தளித்து ஓட அனுமதிப்பதா? அது சரியானதாக ஒலிப்பதில்லையே!" நாம் உடனடியாக இயேசுவின் வார்த்தைகளினால் அவரைப் பலவீனப் படுத்தாமல் தகுதிப்படுத்தும் அச்சுறுத்துகிற பணிப்பொறுப்பினால் எதிர்கொள்ளப் பட்டிருக்கிறோம்.

இயேசு பொதுவாகச் சமூகத்திற்கல்ல ஆனால் தனித்தனி சீஷர்களுக்கு இதை உரைத்துக் கொண்டிருந்தார் என்பது ஒருவேளை நான் கூறத்தேவையான முதல் விஷயமாக இருக்கலாம்.

- அவர் பெற்றோர்களின் பிள்ளைகளைப் பற்றி அவர்களிடத்தில் பேசிக்கொண்டிருக்கவில்லை. பிள்ளைக்குள் இருக்கும் பொல்லாத விஷயம் தீவிரமாக எதிர்த்து நிற்கப்பட வேண்டியதாகஇருக்கிறது. (ஒழுங்குபடுத்துவதன் அவசியம் பற்றி எபிரெயர் 12:8, 11ல் காணவும்.)
- அவர் குடிமை அரசுகளைத் தமது சிந்தையில் கொண்டிருக்கவில்லை. "தீமைசெய்கிறவன் மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி" அரசு அதிகாரிகளுக்குத் தேவன் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார் (ரோமர் 13:4).
- அவர் சபைக்குழுங்களுக்கு அறிவுறுத்துதல்களைக் கூட இவ்விடத்தில் கொடுத்துக் கொண்டிருக்கவில்லை.கள்ளப் போதகர்கள் சகித்துக் கொள்ளப் படக்கூடாதவர்களாக இருந்தனர் (காண்க மத்தேயு 7:15). கள்ளப் போதகர் ஒருவரை ஊக்குவிக்கும் எவரும் அவரது "துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறார்" (2 யோவான் 11). மேலும் பாவத்தில் தொடர்ந்து நிற்கும் உறுப்பினர்கள் சபையினால் - ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் (காண்க மத்தேயு 18:15-18).

இயேசு, பெற்றோர்களுக்கோ, குடிமை அதிகாரிகளுக்கோ அல்லது சபை நடத்துனர்களுக்கோ ஒரு கட்டளையைஇவ்விடத்தில் தரவில்லை என்றால், அவர் யாருக்குப் பேசிக்கொண்டிருந்தார்?அவர், தனிப்பட்ட சீஷர்கள் என்ற வகையில் நம்மிடத்தில் பேசிக்கொண்டிருந்தார். நாம் தனிப்பட்ட வகையில் தவறாக நடத்தப்படும்போது, நாம் எவ்வாறு பதில்செயல் செய்ய வேண்டும் என்பது பற்றி அவர் அக்கறை உடையவராக இருந்தார்.

"தனிப்பட்ட" என்ற வார்த்தையை உங்கள் சிந்தையில் அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள். பொல்லாத நபர் ஒருவர் சட்டத்தை மீறினால் அல்லது அவர் தம்மை அல்லது பிறரைப் புண்படுத்தினால் அவரை நாம் எதிர்த்து நிற்கக் கூடாது என்று இயேசு மறைமுகமாக உணர்த்தவில்லை. எடுத்துக்காட்டாக, யாரேனும் ஒருவர் உங்கள் பிள்ளையைப் புண்படுத்த இருந்தால், நீங்கள் சும்மா அமர்ந்து கொண்டு ஒன்றும் செய்யாமல் இருக்க வேண்டும் என்று இயேசு விரும்பமாட்டார். மற்றவர்களின் உரிமைகள் மற்றும் கொள்கைகளின் விஷயங்கள் தொடர்பானவற்றில் நாம் தீமையை எதிர்த்து நிற்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இயேசு தாமே, தீமையையும் பொல்லா மக்களையும் எதிர்த்து நின்றார். இரு சந்தர்ப்பங்களில் அவர், தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தியவர்களை அங்கிருந்து துரத்தினார் (காண்க யோவான் 2:13-17; மத்தேயு 21:12, 13). அவர்

பொல்லாத மனிதர்களின் மாய்மாலத்தைக் கண்டனம் செய்தார் (மத்தேயு 23). அப்போஸ்தலரான பவுலும் கூட தீமையையும் பொல்லா மனிதர்களையும் எதிர்த்து நின்றார்.[7] ஒரு சந்தர்ப்பத்தில் பேதுரு தவறு செய்தபோது அவரைப் பவுல், "முகமுகமாய் அவனோடே எதிர்த்து நின்றார்" (கலாத்தியர் 2:11). இதில் "எதிர்த்து" என்ற வார்த்தையானது நமது வேதபாட வசனப் பகுதியில் "எதிர்த்து" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே கிரேக்க வார்த்தையில் இருந்துவந்துள்ளது. இருப்பினும், இயேசுவும் பவுலும் தனிப்பட்ட வகையில் தவறாக நடத்தப்பட்டனர் என்ற உண்மையில் அவர்கள் அமைதியற்றுப் போனதால் அல்ல, ஆனால் கொள்கை விஷயமாகவே அவர்கள் தீமையையும் பொல்லாத மனிதர்களையும் எதிர்த்து நின்றனர்.

இயேசு தாமே கொடுத்த உதாரணங்களில், அவர் தமது சிந்தையில் கொண்டிருந்தது என்ன என்பது பற்றிய மிகச்சிறந்த விளக்கம் காணப்படலாம்: மறுகன்னத்தைக் காட்டுதல், அங்கியைக் கொடுத்தல், இரண்டாவது மைல் தூரமும் செல்லுதல்.[8] இந்த உதாரணங்களில் எதுவும் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதாக இருப்பதில்லை - ஆனால் இவையாவும் மிகவும் தனிப்பட்டவையாகவும், நமது "உரிமைகள்" என்று நாம் நினைப்பவற்றை மீறுபவையாகவும் உள்ளன - என்பதைக் கவனியுங்கள்.

நான்கு உதாரணங்கள் (வசனங்கள் 39ஆ-42)

உதாரணங்களைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்கையில், அவற்றிற்குப் பின்னால் உள்ள கொள்கைகளை நாம் தேடுவோம். சிலர், இயேசுவின் அறிவுறுத்துதல்களை, ஒரு கிறிஸ்தவர் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கான சரிபார்ப்புப் பட்டியலில் உள்ள விஷயங்கள் என்பதாக மாத்திரம் எடுத்துக் கொள்கின்றனர். இருப்பினும் அறுபது ஆண்டுகள் ஒரு கிறிஸ்தவனாக வாழ்ந்துள்ள எனது வலது கன்னத்தில் ஒருக்காலும் அறைவாங்கியதில்லை, எவரொருவரும் எனது வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று என்னிடத்தில் வழக்காடியதில்லை மற்றும் எவரொருவரும் என்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணியதில்லை. இந்தக் கட்டளைகளுக்குப் பின்னால் பொதுவான கொள்கை எதுவும் இல்லை என்றால் ,அவைகள் எனது அன்றாட வாழ்வில் கொஞ்சமே நடைமுறைப் பயன்பாடு உள்ளவையாக இருக்கும். இயேசு கொடுத்த உதாரணங்கள் "கண்மூடித்தனமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய" சட்டங்களாக இருப்பதில்லை, ஆனால் அதற்கு மாறாக அவைகள் "எப்போதும் பாதுகாக்கப்பட்ட வேண்டிய" ஒரு கொள்கையை உருவாக்கின்றன என்று பி. டபிள்யு. ஜான்சன் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்.[9] கொள்கை என்ன?

(1) "மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு." 39ம் வசனத்தின் கடைசிப் பகுதியில் முதல் உதாரணம் காணப்படுகிறது: "ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் கொடு." கன்னத்தில் அறைதல் என்பது ஒரு அவமதிப்பாகவே எப்போதும் கருதப்பட்டுள்ளது.[10] நமது வேதபாட வசனப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அறைதல் என்பது இருமடங்கு அவமதித்தலாக உள்ளது, ஏனெனில் அது புறங்கையால் அறைதலாக இருந்தது. (வலது கை பழக்கமுடைய ஒரு மனிதர் ஒருவரை எதிர் கொண்டால், அவர் தமது வலது உள்ளங்கையால் அறைந்தால், அவரை இடது கன்னத்தில் அறைவார். அவரது வலது கன்னத்தில் வலது கையால் அறைதல் என்பது வழக்கமாக அவரது

புறங்கையால் அறைவதை அவசியமாக்கும்.) முகத்தில் அறைதல் என்பதைப் பற்றி நாம் கலந்துரையாடிக் கொண்டிருக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஒரு கடினமான அறை என்பது வேதனை நிறைந்ததாக இருக்கலாம், ஆனால் பெரும்பான்மையான நிகழ்வுகளில் இது உயிருக்கு அச்சுறுத்தலாக இராது.

யாரேனும் ஒருவர் நம்மை அறையும் போது நாம் என்ன செய்ய வேண்டும்? இயேசு, “... அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு” என்று கூறினார். இந்த இடத்தில், விமர்சனம் செய்பவர்கள், கிறிஸ்தவமானது “உண்மையான உலகத்தின்” கருத்தைக் கொண்டிராதது எவ்வாறு என்பதைக் குறித்து ஆரவாரம் செய்யத் தொடங்குகின்றனர். “அந்த ஆணைக்குக் கீழ்ப்படிதல் என்பது, முதுகெலும்பற்ற முட்டாள்களாக, மற்றவர்களால் இன்னும் இழிவாக நடத்தக்கூடும்படி ஊக்குவித்தலை மாத்திரமே விளைவிக்கக் கூடும்” என்று அவர்கள் கூறுகின்றனர். இயேசுவின் அறிவுறுத்தல் இந்த உலகத்தின் தத்துவத்திற்கு எதிராக செல்லுகிறது என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். நன்கு அறியப்பட்ட ஒரு பழமொழியானது, “கனவான் ஒருவர் எந்த விலை கொடுத்தும் தமது மதிப்பை காப்பாற்ற வேண்டும்” என்று உரைக்கிறது. கடந்த காலத்தில், முகத்தில் அறைதல் என்பது மரணம் வரை போரிடும்படி ஒருவரை அழைக்கும் அழைப்பாகவே அடிக்கடி இருந்துள்ளது.

மேலும் நாம், கிறிஸ்தவர்கள் இயேசுவின் இந்த வார்த்தைகளுடன் போராடுகின்றனர் என்பதையும் ஒப்புக்கொண்டாக வேண்டும். மக்கள் நம்மீது நியாயமற்ற அனுகூலத்தை எடுத்துக் கொள்வதை நாம் அனுமதிக்க வேண்டும் என்று அவர் போதித்தாரா? தந்தையர்கள் தங்கள் மகன்கள் அவர்களைத் தற்காத்துக் கொள்ளுதல் குறித்துத் தாங்கள் போதிக்க வேண்டியது என்ன என்று வியப்படைகின்றனர்.[11] சில கிறிஸ்தவர்கள் இயேசுவின் போதனையை நேரடியான கருத்தில் எடுத்துக் கொண்டு வரையறைக்கு உட்பட்ட அணுகுமுறையை மேற்கொள்கின்றனர்.ஒரு மனிதர், “சரி, அவர் எனது இரு கன்னங்களிலும் அறைய நான் அனுமதிப்பேன். ஆனால் அதன் பின்பு, நீங்கள் இந்த நாடு இது வரையில் கண்டுள்ளவற்றில் எல்லாம் பெரிய சண்டை ஒன்றைக் காண்பீர்கள்!” என்று கூறினார். இந்த மனிதர் இயேசு போதித்துக் கொண்டிருந்து என்ன என்பதன் கருத்தைத் தவறவிட்டு விட்டார்.

இந்த உதாரணம் மற்றும் பிற எல்லாவற்றிற்கும் பின்னால் உள்ளதாக நான் நம்பும் கொள்கையை உங்களுக்குக் கூற என்னை அனுமதியுங்கள். ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளபடி, முகத்தில் அறைதல் என்பது *அவமதிப்பாக உள்ளது*. அவமதிப்பு என்பது *தனிப்பட்ட வகையில்* வெளிப்படையாக அவமதித்தலாக உள்ளது. இதன் விளைவாக ஏற்படும் காயம் என்பது ஒருவரின் உடலில் அல்ல, ஆனால் ஒருவரின் சுயமரியாதைக்கு ஏற்பட்ட காயமாக உள்ளது. நீங்கள் அவமதிக்கப்படுவதாக நினைக்கும் போது என்ன நடக்கிறது? எனக்கு என்ன நடக்கிறது என்பதை நான் அறிந்துள்ளேன். எனது நரம்புகளினூடே அட்ரீனலைன் பாய்ந்தோடுகிறது. எனது முகம் சூடாகிறது. ஆதார மூலத்தை அறையும்படி எனக்குள் உந்துதல் ஏற்படுகிறது. ஆண்டுகளினூடே நான், திரும்பவும் எண்ணிப்பார்க்கச் சங்கடமாயிருக்கும் விஷயங்களைக் கூறியிருக்கிறேன் மற்றும் செய்து இருக்கிறேன். நான் ஏன் இவ்விதமாக மறுசெயல் செய்திருக்கிறேன்? ஏனென்றால் ஒரு அவமதிப்பு என்பது தனிப்பட்ட வகையில் வெளிப்படையான அவமதிப்பாக உள்ளது. யாரோ ஒருவர் எனது உணர்வுகளைப் புண்படுத்தியதன்

காரணமாக நான் நிலைகுலைகிறேன்.

ஒரு அவமதிப்பிற்கு எனது பதில் செயல் பற்றிய இந்த விவரிப்பில் "நான்" மற்றும் "எனது" என்பவற்றின் பயன்பாட்டையும் "தனிப்பட்ட" என்ற வார்த்தையின் மீது வலியுறுத்தத்தையும் நீங்கள் கவனித்தீர்களா? இயேசுவின் உதாரணங்களில் உருவேற்றப் பட்டிருப்பதாக நான் நம்புகிற கொள்கை இங்குள்ளது: *உங்களைப் பற்றி அதிகக் கவலை கொள்பவராக இராதீர்கள்,* உங்கள் "உரிமைகள்" என்று அழைக்கப்படுபவற்றைப் பற்றி மட்டுமீறிக் கவலை கொள்ளாதீர்கள். இயேசு, "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், *அவன் தன்னைத் தான் வெறுத்து,* தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்று கூறியபோது (மத்தேயு 16:24; என்னால் வலியுறுத்தப்படுகிறது), அவர் போதித்த அதே கொள்கையைத்தான் இங்கு அவர் போதித்தார்.

இயேசுவின் மரணத்திற்கு முந்திய விசாரணைகளில் அவர் தமது சிந்தையில் கொண்டிருந்த இவ்வகையான ஆவியைச் செயல்விளக்கப்படுத்தினார். மற்ற வகையில் தவறாக நடத்தப்பட்டதுடன் கூடுதலாக, அவர் முகத்தில் அறையப்பட்டார் (காண்க மாற்கு 14:65). ஒரு இடத்தில் கிறிஸ்து அப்படிப் பட்ட நியாயமற்ற செயலுக்கு மறுப்புரை கூறினார் (காண்க யோவான் 18:19-23); ஆனால் அவரால் எதிர்த்துத் தாக்கியிருக்கக் கூடும் என்ற போதிலும் அவர் எதிர்த்துத் தாக்கவில்லை (காண்க மத்தேயு 26:53). பேதுரு பின்வருமாறு எழுதினார்,

> கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும் போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார் (1 பேதுரு 2:21-23).

நான் பின்வருமாறு ஒரு மறுப்புரையைக் கேள்விப்படுகிறேன்: "ஆனால் நான் மறுகன்னத்தைக் காட்டினால், மக்கள் நான் பலவீனமானவன் என்று நினைப்பார்களே." இருக்கலாம் - ஆனால் உங்கள் செயலானது உங்களை அவமதிப்பவர்களின் இருதயங்களைத் தொடவுங்கூடும். பல ஆண்டுகளுக்கு முன்பு நான், மார்ஷல் கீபிள் என்ற மாபெரும் பிரசங்கியாரைப் பற்றிய நிகழ்ச்சி ஒன்றைக் கேள்விப்பட்டேன். இதயத்தை அசைக்கும், ஆனால் தெளிவாகப் பேசப்பட்ட அவரது பிரசங்கங்களில் ஒன்றிற்குப் பின்பு, சகோதரர் கீபிள், அரங்கின் முன் பகுதியில் நின்றுகொண்டு, அழைப்புக்கு பதில் கொடுத்தவர்களை வாழ்த்திக் கொண்டிருந்தார். ஜன்னல்பகுதியில் இருந்து ஒரு மனிதர் விரைவாக வந்தார். சகோதரர் கீபிள் அவர்கள், ஒரு புன்சிரிப்புடன் விரித்த கைகளுடனும், அம்மனிதரை வாழ்த்துவதற்காக முன்னோக்கி அடியெடுத்து வைத்தார். அம்மனிதர் சகோதரர் கீபிள் அவர்களைப் பலமாக அடித்து ஐக்கிய விருந்து மேஜைக்கு முன்பாக அவரைத் தள்ளிவிட்டார். பின்பு அம்மனிதர் அவரது முகத்தில் துப்பினார். அந்த மனிதரை உற்றுப் பார்த்த சகோதரர் கீபிள் அவர்கள், "எனது முகத்தில் நீங்கள் உமிழ்ந்த இந்த எச்சிலை என்னால்

துடைக்க முடிவது போன்றே, உங்கள் இருதயத்தில் இருந்து கோபத்தையும் உங்கள் ஆத்துமாவில் இருந்து பாவத்தையும் என்னால் சுலபமாகத் துடைக்க முடிய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்" என்று கூறினார். அந்த விபரத்தின்படி, அம்மனிதர் கண்ணீருடன் கதறினார். அவரது இருதயமானது சுவிசேஷத்திற்குத் திறக்கப்பட்டது. (ஆனால்) நாம் மறுகன்னத்தைக் காட்டும் எல்லா வேளைகளிலும் இது நடந்துவிடாது. இருப்பினும் ஒரு உண்மை உறுதியானதாக உள்ளது: நமது செயலானது நம்மைத் தவறாக நடத்துபவரைப் பாதித்தாலும் இல்லையென்றாலும், அது நம்மைச் செயல்விளைவுக்கு உட்படுத்தும். அது நம்மை மிகச்சிறந்த மக்களாக்கும்.

(2) "உன் அங்கியையும் விட்டுவிடு."[12] இரண்டாவது உதாரணம் ஒரு நீதிமன்ற அறையின் விவரிப்பாக உள்ளது: "உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றிருக்கிறவனுக்கு உன் அங்கியை விட்டுவிடு." (வசனம் 40). இயேசு கூறியது என்ன என்பதை இருபத்தியோராம் நூற்றாண்டின் வாசகர்கள் புரிந்துகொள்ள உதவியாக, NASB வேதாகமத்தில் "shirt" ("சட்டை") மற்றும் "coat" ("கோட்") என்ற சொற்றொடர்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன,[13] ஆனால் இவைகள் இயேசுவினால் பயன்படுத்தப்பட்ட மிகச்சரியான சொற்றொடர்கள் அல்ல. "சட்டை" என்ற வார்த்தை, உள்ளாடையை (பனியன்) குறித்த (*chiton* என்ற) வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.[14] இது உடலின் தோலுக்கு அடுத்ததாக அணியப்பட்ட மிக நெருக்கமான உடையாக இருந்தது, இது கழுத்திலிருந்து முழங்கால் வரையிலுமான உடல் பாகத்தை மூடியது. சில வேளைகளில் இது "tunic" என்று அழைக்கப்பட்டது. "Coat" என்பதற்கான (*himation* என்ற) வார்த்தை, வெளியில் அணியப்படும் உடையைக் குறித்தது.[15] பெரும்பாலும் "cloak" ("தளருடை" அல்லது "வேட்டி") என்று அழைக்கப்படும், வெளியில் அணியப்படும் இந்த உடை, ஏழைகளினால் இரவு வேளைகளில் போர்வையாகப் பயன்படுத்தப்பட்டது. இந்த தளருடை அடகு வைக்கப்பட்டால்,[16] அது இரவில் அடகு பெற்றவரால் வைத்துக் கொள்ளப்பட இயலாதிருந்தது, ஏனெனில் அது அந்த ஏழை நபரின் மீது ஒரு சிரமத்தைத் திணிப்பதாக இருக்கும் (காண்க யாத்திராகமம் 22:26, 27).

நீங்கள் உங்கள் உள்ளாடைக்காக வேறொருவரால் வழக்குத் தொடுக்கப்பட்ட ஒரு யூதராக இருப்பதாகச் சற்றுநேரம் கற்பனை செய்துகொள்ளுங்கள். நீங்கள் கலக்கம் அடையும் வகையில் உங்கள் எதிராளி அந்த வழக்கில் வெற்றி பெறுகிறார், எனவே நீங்கள் அந்த உடையை அவரிடம் கொடுத்தாக வேண்டியுள்ளது. பின்பு இயேசு செயல்விளைவில் உங்களிடம், "அதைப் பற்றி முறையிடாதீர்கள், ஆனால் உங்கள் மேலாடையையும் கொடுத்து விடுங்கள்" என்று கூறுகிறார். அது எவ்வளவு சினமூட்டுவதாக இருக்கும் என்று உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? இருப்பினும் இந்த விவரிப்பின் விபரங்களின் மீது கவனம் குவித்தலானது, கருத்தைத் தவற விடுவதாக இருக்கும். இயேசு இதைப் பற்றிய ஒரு நேரடியான சூழ்நிலையைத் தமது சிந்தையில் கொண்டிருக்கவில்லை. பெரும்பான்மையான யூதர்கள் மூன்று அல்லது நான்கு வகையான உடைகள் அணிந்தனர். ஒருசிலர், சல்லடம் என்று அழைக்கப்பட்ட வேட்டி போன்ற அல்லது அதற்கு ஒப்பாக ஒரு உடையை அணிந்தனர் (காண்க யாத்திராகமம் 28:42), ஆனால் பலர் இவ்வாறு அணிவதில்லை. ஒரு ஆண் வழக்கமாக தமது

மேலாடைக்குள் ஒரு உள்ளாடையை அணிந்தார். இடுப்பைச் சுற்றி ஒரு கச்சை ("girdle") அணியப்படுதலுடன் புறத்தோற்றம் நிறைவு பெற்றது. இயேசுவின் அறிவுறுத்துதல்களை நாம் நேரடியாக எடுத்துக் கொள்வதென்றால், ஒரு மனிதர் தம்மிடம் வழக்காடியவருக்குத் தமது உள்ளாடையையும் மேலாடையையும் கையளித்துவிட்டு, தமது இடுப்பைச் சுற்றி கச்சையை மாத்திரம் அல்லது சல்லடத்தையும் மாத்திரம் சேர்த்து அணிந்தவராக, நீதிமன்ற அறையை[17] விட்டு வெளியேறுவதைக் கொண்டிருப்போம். அது இயேசு முன்மொழிந்ததாக இருக்கவில்லை.[18]

அவர் எதை முன்மொழிந்து கொண்டிருந்தார்? அடியில் மறைந்து கிடக்கும் கொள்கை, முந்திய உதாரணத்தில் உள்ளது போன்றதாகவே இருக்கிறது: உங்கள் தனிப்பட்ட *உரிமைகளை* வற்புறுத்தாதிருங்கள். இந்த நிகழ்வில், *வழக்காடும்* உரிமையைச் செயல்படுத்துதல் என்பது பிரச்சனையாக உள்ளது. சூழ்நிலை மாறுபட்டதாக உள்ளது, ஆனால் சகோதரருக்குள் வழக்காடுதல் என்ற வழக்கத்தை ஊக்கம் இழக்கச் செய்வதில் பவுல் இதே போன்ற கருத்து ஒன்றைக் கூறினார்: "நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது. அப்படிச் செய்கிறதைவிட நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக்கொள்ளுகிறதில்லை, ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ளுகிறதில்லை?" (1 கொரிந்தியர் 6:7). உலகில் நான் வாழும் பாகத்தில், ஏறக்குறைய எந்த ஒரு போலிப்பகட்டின் மீதும், ஏராளமான பணத்தொகையை நஷ்ட ஈடாகக் கேட்கும் மக்களினால் கொண்டு வரப்பட்ட நியாயமற்ற வழக்குகளினால் நீதிமன்றங்கள் நிறைந்துள்ளன. நாங்கள் அர்க்கன்சாஸின் சியார்சியில் வசித்தபோது, குடியுரிமை வழக்குளில் ஜூரியாக பணியாற்றும்படி அடிக்கடி அழைக்கப்பட்டேன். அப்படி அழைக்கப்பட்ட ஒவ்வொரு வேளையிலும், வாதியின் வக்கீலாக இருந்தவர்,[19] இவைகள் அற்பமான வழக்குகள் என்று நான் நினைத்ததைக் கண்டுபிடித்தபோது நான் அங்கிருந்து வெளியே அனுப்பப்பட்டேன்.

நாம் நமது சட்டப்பூர்வமான உரிமைகளை எந்த சந்தர்ப்பங்களிலும் வலியுறுத்தக் கூடாது என்று நான் கூறவில்லை. பவுல், ஒரு ரோமக்குடிமகன் என்ற தமது சட்டப் பூர்வமான உரிமையைச் சில வேளைகளில் பயன்படுத்தினார் (காண்க நடபடிகள் 16:35-39; 22:24-29). எருசலேமுக்குச் சென்றால், மரணம் காத்திருப்பது உறுதி என்ற நிலையில், அங்கு அனுப்பப் படுவதைத் தவிர்ப்பதற்காக அவர் இராயனுக்கு அபயமிட்டார் (காண்க நடபடிகள் 25:9-12). இது ரோமக்குடிமகன் என்ற வகையில் அவரது உரிமையாக இருந்தது. கிறிஸ்துவின் ஊழியத்தினுடைய நலம் அல்லது நமது குடும்பத்தினுடைய நலம் உள்ளடங்கிய சூழ்நிலைகள் எழும்பலாம்; அப்படிப்பட்ட நிகழ்வுகளில், ஒருவர் தமது சட்டப்பூர்வமான உரிமைகளை வற்புறுத்துதல் என்பது சூழ்நிலைக்கு உகந்ததாக இருக்கலாம். இருப்பினும் நாம் சுயநலம் அல்லது பேராசையினால் தூண்டப்படாது இருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்வோமாக. நாம் நேசிக்கும் கிறிஸ்துவின் மீது எதிர்மறையான கருத்துக்களைப் பிரதிபலிக்கும் வகையில் எதையும் செய்வதைக் காட்டிலும் நீதிமன்ற அறையில் தவறாகத் துன்புறுதல் மேன்மையானதாக இருக்கும்.

(3) "இரண்டு மைல் தூரம் போ." இயேசுவின் மூன்றாவது விவரிப்பு பின்வருமாறு உள்ளது: "ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம்பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ"

(வசனம் 41). முதல் இரண்டு உதாரணங்கள், தற்காலச் சரிநேர்ப்படிவங்களைக் கொண்டுள்ளன, ஆனால் இந்த உதாரணத்திற்கு நம்மில் பலருக்கு விளக்கம் தேவைப்படுகிறது. "பலவந்தம்பண்ணினால்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*angareuo* என்ற) வார்த்தை "பணிசெய்யும்படி வற்புறுத்தப்படுதல்"[20] என்று அர்த்தப்படுகிறது. பெர்சியர்கள் தங்கள் ராஜரீகச் செய்தியாளர்களுக்குக் குடிமக்கள் உதவி செய்யும் பழக்கத்தை அறிமுகப்படுத்தியிருந்தனர். அந்த வழக்கத்தை ரோமர்கள் எடுத்துக்கொண்டு அதை விரிவாக்கினர். பலஸ்தீன நாட்டில் ரோமப் போர்ச்சேவகர்கள் தங்களுக்கு உதவும்படி யூதக் குடிமக்களைச் சட்டபூர்வமாகப் பலவந்தம் செய்ய முடிந்தது. இதே வார்த்தை மத்தேயு சுவிசேஷத்தின் பிற்பகுதியிலும் காணப்படுகிறது: "போகையில், சிரேனே ஊரானாகிய சீமோன் என்னப்பட்ட ஒரு மனுஷனை அவர்கள் கண்டு, அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி ***அவனைப் பலவந்தம் பண்ணினார்கள்***" (27:32; என்னால் வலியுறுத்தப்படுகிறது). நமது வேதபாட வசனப் பகுதியைப் பொறுத்த மட்டில், ரோமப் போர்ச்சேவகர் ஒருவர் தமது கருவிகளை "ஒரு மைல்" தூரம் சுமந்து வரும்படி ஒரு யூதரைப் பலவந்தம் பண்ண முடிந்தது. இது ஆயிரம் அடிவைப்புகள்[21] கொண்ட ஒரு ரோமானிய மைலாக அல்லது ஆயிரம் கெஜம் தூரமாக இருந்தது. (அமெரிக்காவில் ஒரு மைல் என்பது 1760 கெஜங்கள் அல்லது 1600 மீட்டர்களைவிடச் சற்றே அதிகமான தூரமாக உள்ளது.)

நீங்கள் ஒரு யூத விவசாயி என்று கற்பனை செய்துகொள்ளுங்கள். அது ஒரு வெப்பமான வெய்யில் நாளாக உள்ளது, ஆனால் மேற்கில் மேகங்கள் கூடத் தொடங்குகின்றன. வானிலை மாறுவதற்கு முன்னர் நீங்கள் உங்கள் பயிரைப் பெறுவதற்காகக் கடினமாக உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் நெற்றியைத் துடைப்பதற்காக நீங்கள் சற்றே தாமதிக்கிறீர்கள், அப்போது சாலையில் ஒரு ரோமப் போர்ச்சேவகர் வருவதை நீங்கள் காணுகிறீர்கள். அவரைக் கண்ணோக்குதல் என்பது உங்களைப் புண்படுத்துகிறது, தேவனுடைய நாட்டைப் பிடித்துக் கொண்டுள்ள அந்த அவிசுவாசி பரிசுத்தமான மண்ணின் மீது மிதிக்கிறார். போர்வீரர் நெருங்குகையில்,அவர் பல பொட்டலங்களைத் தரையில் போட்டு, "அவற்றைப் பொறுக்கி எடு!" என்று உங்களைப் பார்த்துச் சினத்துடன் கூறுகிறார். நீங்கள் உங்கள் கருவிகளைக் கீழே போட்டுவிட்டு, நடந்து சென்று அவரது பைக்கட்டுகளைப் பொறுக்கி எடுக்கிறீர்கள். நீங்கள் அந்தப் போர்ச்சேவகர்கருக்குப் பின்னால் சிரமத்துடன், கனத்த சுமையின் கீழ் வியர்வை வழிய நடக்கிறீர்கள். நீங்கள் எவ்வாறு உணர்வீர்கள்? கோபம்? மறுப்புணர்வு? கடைசியில் நீங்கள், தேவைப்படுமளவு தூரத்தின் முடிவை அடைந்து பைக்கட்டுகளைக் கீழே வைக்கிறீர்கள். நீங்கள் உங்கள் நிலத்திற்குத் திரும்ப நடந்து வரும்போது, வழிமுழுவதிலும் நீங்கள் முணுமுணுத்துக் கொண்டே வருகிறீர்கள். நீங்கள் வெறுக்கும் சில விஷயங்களை நீங்கள் செய்ய வேண்டியதாக இருந்தது; நீங்கள் அனேகமாக உங்கள் பயிர்களைப் புயல் அடிப்பதற்கு முன்னர் சேகரித்து உள்ளே கொண்டு செல்ல முடியாமல் இருப்பீர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, இப்போது நீங்கள் ஒரு புறஜாதியாரையும் அவரது கருவிகளையும் நெருங்கிய தொடர்பு கொண்டதால், சடங்காச்சார ரீதியாக அசுத்தமாக்கப்பட்டிருக்கிறீர்கள்!

அதுவே காட்சி அமைவாக உள்ளது, பின்பு இயேசு "இரண்டு மைல் தூரம் ..." என்று கூறுகிறார்! உண்மையில் அவர், "[அவனோடு]

இன்னும் இரண்டு மைல் தூரம் ..." என்று கூறியதாகச் சில கையெழுத்துப் பிரதிகள் சுட்டிக்காண்பிக்கின்றன.[22] இயேசு, தமது சீஷர்கள் செய்வதற்குக் கடினமான பணிப்பொறுப்புகளை வைப்பதினால் அவர்களைச் சோதித்தாரா? இந்த இரண்டாவது மைல்கள் (இரண்டாவது மற்றும் மூன்றாவது மைல்கள்) சகித்துக்கொள்ளப்பட வேண்டியவைகளாக மாத்திரம் இருந்தனவா? அவைகள் இருதயத்தில் எப்போதும் வளரும் வெறுப்புணர்வுடன் நடக்கப்பட வேண்டியவையாக இருந்தனவா? இல்லை, இயேசு தமது பின்பற்றாளர்களிடத்தில் ஒரு குறிப்பிட்ட வகையிலான எண்ணப்போக்கை மேம்படுத்த முயற்சித்தார்: ஒருவரிடத்தில் கேட்கப்பட்டதற்கும் அதிகமாக செய்ய மனவிருப்பம் கொண்ட எண்ணப்போக்கு. மேலும் இந்த இரண்டாவது மைல் தூரமானது மனவிருப்பத்துடன் மாத்திரமல்ல ஆனால் உற்சாகத்துடனும் செய்யப்பட வேண்டும் என்று நான் நம்புகிறேன்.[23] இன்றைய நாட்களில் நாம், யாரேனும் ஒருவர் "இரண்டு மைல் தூரம் செல்லுதல்" பற்றிப் பேசுகிறோம். அவர் தம்மிடத்தில் எதிர்பார்க்கப் பட்டதைவிட அதிகமானதை, மிக அதிகமானதைச் செய்தார் என்று நாம் அர்த்தப்படுத்துகிறோம். அதை அவர், நன்மை மாத்திரமே விளையத்தக்க வகையில், ஒரு நேர்மறையான எண்ணப்போக்குடன் செய்தார் என்றும் நாம் அர்த்தப்படுத்துகிறோம்.

பல நடைமுறைப் பயன்பாடுகள் மனதிற்கு வருகின்றன. நாம் நமது திருமணங்களிலும் நமது இல்லங்களிலும் "இரண்டு மைல் தூரம்" செல்வது அவசியமாக உள்ளது. தங்கள் பிள்ளைகளுக்கு அதிகமாகச் செய்ய முடிந்தவர்களாக இருக்கும்போதும், அவர்களுக்கு - உணவு, உடை மற்றும் உறங்குவதற்கு ஒரு இடம் என்ற - மிகவும் அத்தியாவசியமானவற்றை மாத்திரமே அளிக்கிற பெற்றோர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்? உங்களைப் பற்றி எனக்குத் தெரியாது, ஆனால் நான், இரண்டு மைல் தூரமும் - மற்றும் மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது மற்றும் அதற்கு அப்பால் உள்ள மைல்கள் தூரமும் - சென்ற பெற்றோர்களைக் கொண்டிருந்தேன். அதுபோலவே, சபையிலும் நாம் "இரண்டாவது மைல் தூரமும் செல்லுவது" அவசியமாக உள்ளது. சில கிறிஸ்தவர்கள் பரலோகத்திற்குச் செல்வதற்குத் தாங்கள் குறைந்தபட்சம் செய்ய வேண்டியவற்றை அறிய விரும்புகின்றனர். இன்னும் கர்த்தருக்கான தங்களது ஊழியங்களில் "இரண்டாவது மைல் தூரம் செல்பவர்கள்" (இவர்களுக்காகத் தேவனுக்கு நன்றி) இருக்கின்றனர். இதன் நடைமுறைப் பயன்பாட்டை நாம், பள்ளியின் அறைக்கூடங்கள் மற்றும் பணியிடங்கள் ஆகியவற்றிற்கும் விரிவாக்க முடியும். தங்களிடத்தில் கேட்கப் பட்டவற்றை மாத்திரம் செய்கிற, அதற்கு மேல் செய்யாத மாணவர்களும் வேலையாட்களும் உள்ளனர். இன்னும் கேட்கப்பட்டதற்கு அப்பாலும் செய்யச் செல்கிறவர்கள் இருக்கின்றனர் (காண்க கொலோசெயர் 3:23, 24). இதே கொள்கை, குடியுரிமை மற்றும் மற்ற செயல்களின் வட்டாரத்திலும் ஏற்படுத்தப்படுகிறது.

மீண்டுமாக, நாம் நம்மைப் பற்றியும் நமது உரிமைகளைப் பற்றியும் மாத்திரம் நினைப்பவர்களாக இருக்கக் கூடாது என்பதே அடியொற்றியுள்ள கொள்கையாக இருக்கிறது. நாம், நம்மைக் காட்டிலும் மற்றவர்களை முதலிடத்தில் வைத்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் அவ்வாறு செய்தால், அவர்களிடத்தில் நாம் ஒரு நேர்மறையான செல்வாக்கைக்

கொண்டிருக்கலாம். யூத விவசாயி பற்றிய எனது விவரிப்புக்குத் திரும்புகையில், பின்வரும் வரிசை நிகழ்வைக் கற்பனை செய்யுங்கள். கடைசியில் அந்தப் போர்ச்சேவகர் உங்களிடத்தில், "நீ எனது கருவிகளைப் போதிய அளவு தூரம் சுமந்து வந்து விட்டாய். இப்போது நீ உன் வீட்டிற்குச் செல்லலாம்" என்று கூறுகிறார். பின்பு அவரது சுமைகளைத் தரையில் எறிவதற்குப் பதிலாக நீங்கள் புன்சிரிப்புடன், "பரவாயில்லை. இதை நான் நகரத்தின் வாயில் வரையிலும் சந்தோஷமாகச் சுமந்து வருவேன்" என்று கூறுகிறீர்கள். வேறு எதுவும் இல்லை என்றாலும் இந்தக் செயலானது அந்தப் போர்வீரரைத் திகைப்பில் ஆழ்த்தும். அது உங்கள் மதத்தைப் பற்றியும் நீங்கள் ஆராதிக்கும் தேவனைப் பற்றியும் உங்களிடத்தில் கேட்கும்படி அந்தப் போர்வீரரைத் தூண்டுமா? இருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம். இருப்பினும் அது உங்களை மிகச்சிறப்பான நபராக்கும்.

(4) "மற்றவர்களுக்கு உதவுவதில் சுயநலம் இல்லாதவராக இருங்கள்." முதல் பார்வையில் இயேசுவின் நான்காவது விவரிப்பு மற்றவர்களுக்குப் பொருந்துவதாகக் காணப்படுவதில்லை. முதல் மூன்று உதாரணங்கள் எதிர்த்துத் தாக்காதிருத்தல் என்ற ஆய்வுக்கருத்தை மையங்கொண்டுள்ளன: முகத்தில் அறையும்போது. உங்களிடம் வழக்காடப்படும்போது அல்லது நீங்கள் ஒரு மைல் தூரம் வர வேண்டும் என்று பலவந்தம் செய்யப்படும் போது எதிர்த்துத் தாக்காதிருங்கள். இருப்பினும் அடுத்ததாக இயேசு, மற்றவர்களுக்குக் கொடுத்தல் பற்றிய அறிவுறுத்துதல்களைத் தந்தார்: "உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே"[24] (வசனம் 42).

மீண்டும் ஒருமுறை நாம், கிறிஸ்தவத்தை எள்ளிநகையாடவும் சில கிறிஸ்தவர்கள் குழப்பம் அடையவும் பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு கட்டளையைக் கொண்டுள்ளோம். தகுதியற்ற நிலையில் எடுத்துக் கொள்ளப்படும் என்றால் இது, யார் கேட்டாலும் எதற்காகக் கேட்டாலும் அவர்களின் விருப்பங்களுக்கு நீங்கள் இசைந்து கொடுக்க வேண்டும் என்று அர்த்தப்படும்.

- உங்கள் பிள்ளை உங்களிடம் ஒரு விருந்தோம்பலைக் கேட்கிறான் - அவனுக்கு நீங்கள் அதைத் தரவேண்டும்.
- உங்கள் வீட்டைக் கடந்து செல்லும் ஒரு மனிதர் அதன் தோற்றத்தினால் மனம் ஈர்க்கப்படுகிறார். அவர் உங்கள் வீட்டைக் கேட்கிறார் - அவருக்கு நீங்கள் அதைத் தரவேண்டும்
- உங்கள் மனைவி ஒரு மனிதருக்கு வசீகரமாக இருக்கிறார் - அவருக்கு உங்கள் மனைவியை நீங்கள் தரவேண்டும்.

இந்த உதாரணங்கள், இந்தக் கட்டளையை எந்த அளவுக்கு மதியீனமான மிகைமுனைகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட முடியும் என்று காண்பிக்கின்றன. இயேசுவின் வார்த்தைகள் ஏதேனும் ஒரு வழியில் தகுதிப்படுத்தப்பட வேண்டியவைகளாக உள்ளன என்பது தெளிவு.

இயேசுவின் வார்த்தைகளுக்கு அநியாயம் எதுவும் செய்துவிடாமல் அவைகள் தகுதிப்படுத்தப்படலாம் என்பதற்கு நிரூபணம் தேவைப்படுகிறது என்றால் பின்வருவதை ஆழ்ந்து சிந்தியுங்கள். மலைப்பிரசங்கத்தில் சற்றுப் பின்பு

இயேசு, ஜெபம் பற்றிப் பின்வரும் வார்த்தைகளை உரைத்தார்: "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்"; "ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான்" (மத்தேயு 7:7அ, 8அ). இன்னொரு சந்தர்ப்பத்தில் அவர், "என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" என்று கூறினார் (யோவான் 14:14). இந்த வாக்குத்தத்தங்கள், யார் ஜெபித்தாலும் அல்லது அவர் கேட்பது எதுவாக இருந்தாலும், ஒவ்வொரு வேண்டுகோளையும் தேவன் அருளுவார் என்று அர்த்தப்படுகின்றனவா? பவுல் தமது சரீரத்தில் இருந்த முள் நீக்கப்பட வேண்டும் என்று மூன்று முறைகள் கேட்டுக் கொண்டார், ஆனால் அவரது வேண்டுகோளைத் தேவன் அருளவில்லை (2 கொரிந்தியர் 12:7-9). சிலருக்கு யாக்கோபு "நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்" என்று கூறினார் (யாக்கோபு 4:3அ). நமக்குக் கொடுப்பதாகக் கூறும் கர்த்தருடைய வாக்குத்தத்தம் தகுதிப்படுத்தப்படக் கூடுமென்றால், மற்றவர்கள் நம்மிடத்தில் கேட்பவற்றை நாம் கொடுக்க வேண்டும் என்ற அவரது அறிவுறுத்துதல்கள் தகுதிப்படுத்தப்படக் கூடியவையாகவே உள்ளன.

தகுதிகள் என்பது பல வழிகளில் விளக்கப்படுத்தப் படலாம். ஒரு தனிநபர் வேண்டிக் கேட்டுக் கொள்ளும் *ஒவ்வொன்றையும்* அவருக்குத் தரவேண்டும் என்று இயேசு கூறவில்லை என்பதை நாம் கவனிக்கக் கூடும்.[25] யாரேனும் ஒருவர் கேட்கிற எல்லாவற்றையும் அவருக்குக் கொடுத்தல் என்பது அவருக்கு அழிவை ஏற்படுத்துவதாக இருக்கலாம். மற்றவர்கள் விரும்புகிறவற்றை *மிகச்சரியாக* அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் இயேசு கூறவில்லை. ஒரு மனிதர் தமக்கு உணவு அல்லது வேலை என்பது உண்மையில் தேவைப்படும் நிலையில், அவர் பணம் கேட்கலாம்.[26]

தகுதிகளை D. A. கேர்ஸன் அவர்கள் தொகுத்துரைக்கும் பின்வரும் வகையை நான் விரும்புகிறேன். அவர், "அன்பும் வேதவசனங்களும் கட்டளை இடுவது எதுவோ ... அதுவே விசுவாசிகளின் பதில்செயலுக்கு ஒரே வரையறையாக உள்ளது என்று சொன்னார்"[27] அன்பும் வேதவசனங்களும், நமது கொடுத்தலின் மீது வரையறை செய்வது என்ன? அன்பானது, ஒரு மனிதரைத் துன்புறுத்துகிற அல்லது அவருக்கு ஊறுவிளைவிக்கக் கூடிய எதையும் அவருக்கு ஒருக்காலும் நான் கொடுக்க மாட்டேன் என்று கூறுகிறது. (அது நமது பிள்ளைகள் விருந்தோம்பலைக் கேட்கும் எந்த வேளையிலும் அவர்களுக்கு அதைக் கொடுப்பது பற்றிக் கவனம் எடுத்துக்கொள்கிறது.)

மற்ற வேதவசனங்கள் எவற்றை வரையறை செய்கின்றன? வேதாகம விளக்கத்தின் பின்வரும் அடிப்படைக் கொள்கையை மனதில் காத்துக் கொள்ளுங்கள்: "தெளிவற்ற ஒரு வேதவசனப் பகுதியானது வேறொரு இடத்தில் உள்ள தெளிவான போதனைக்கு நேர்மாறாக இருக்கும் வகையில் அதை விளக்கப்படுத்தாதீர்கள்." வேறொரு இடத்தில் உள்ள தெளிவான வசனப் பகுதிகள் மற்றவர்களுக்கு நாம் கொடுத்தலின் மீது சில வரையறைகளை வைக்கின்றன. எடுத்துக்காட்டாக, இன்னொருவருக்கு நாம் கொடுத்தலானது அவரது பகுதியில் சோம்பேறித்தனத்தை ஊக்குவிக்காதபடி நாம் கவனமாக இருக்க வேண்டும்.[28] "ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது ..." (2 தெசலோனிக்கேயர் 3:10). மீண்டுமாக, நமது

சொந்தக் காரியங்களைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளும் கொள்கையானது, நமது குடும்பத்திற்குத் தேவையானவற்றைக் கொடுத்தலை நீக்கிப்போடும். "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" (1 தீமோத்தேயு 5:8).

அது, 42ம் வசனம் எதை அர்த்தப்படுத்துவதில்லை என்பதற்கு போதுமானதாக உள்ளது. இந்த உதாரணம் முந்திய உதாரணங்களுடன் எவ்வாறு பொருந்துகிறது? மீண்டுமாக, நாம் சுயமையம் கொண்டவர்களாக இருக்கக் கூடாது என்பதே கொள்கையாக உள்ளது. நமது உடைமைகளை நாம் இழந்துபோக விட்டுவிடக் கூடாத அளவுக்கு அவற்றின்மீது நாம் அதிகம் பிணைப்புக் கொண்டிருக்கக் கூடாது.[29] தேவையில் உள்ளவர்களுக்குக் கொடுக்க நாம் தயாராக இருக்கவேண்டும்.

இந்த சந்தர்ப்பப் பொருளில் இயேசு, நம்மைத் தவறாக நடத்துபவர்களை நாம் எவ்வாறு நடத்த வேண்டும் என்பதைக் குறிப்பிட்டார். அவர்களுக்கு நாம் செய்ய வேண்டியது என்ன? அவர்களுக்குத் தேவைப்படுவதை நாம் அளிக்க வேண்டும். இந்த உதாரணமானது எதிர்மறையில் இருந்து நேர்மறைக்கு கடந்து செல்கிறது. எதிர்த்துத் தாக்குதல் இன்றி நாம் தவறாக நடத்தப்படுவதைச் சகித்துக் கொள்வது மட்டுமின்றி, நாம் நம்மை எதிர்ப்பவர்களுக்கு உதவ ஒரு வழியைக் கண்டறிய வேண்டியவர்களாக இருக்கிறோம் (காண்க ரோமர் 12:19-21). நம்மைத் தவறாக நடத்துபவர்களை நாம் நேர்மறையாக நடத்துதல் என்பது அடுத்த பாடத்தில் இன்னும் விரிவாகக் கலந்துரையாடப்படும்.

இருப்பினும் நாம், மத்தேயு 5:42ன் நடைமுறைப் பயன்பாட்டை நமது விரோதிகளிடத்தில் மாத்திரம் கொண்டிருக்கத் தேவையில்லை. என்னுடையது என்ன என்பதைப் பற்றிக் கவலையுள்ளவர்களாக இருப்பதற்குப் பதிலாக, நான் பிறருடன் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருத்தல் அவசியமாகிறது, நான் இறுக்கமான கைகளுடன் கஞ்சத்தனமாக இருப்பதற்கு பதிலாக நான் திறந்த மனதுடனும் பெருந்தன்மையுடனும் இருப்பது அவசியமாகிறது. யோவான், "ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி?" என்று கூறினார் (1 யோவான் 3:17). பவுல், "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கு, நன்மைசெய்யக்கடவோம்" என்று எழுதினார் (கலாத்தியர் 6:10) நம்மைக் குறித்துப் பரிதபிக்கிற ஒரு "பிரதான ஆசாரியர்" நமக்கு இருக்கிறார் (எபிரெயர் 4:15); நாமும் மற்றவர்களைக் குறித்துப் பரிதபிப்போமாக.

முடிவுரை

நாம் தவறாக நடத்தப்படும்போது நாம் என்ன செய்ய வேண்டும்? சாத்தியமான குறைந்த பட்சம் மூன்று பதில்களை நாம் கொண்டிருக்கிறோம்:[30]

- *வரையறையற்ற வகையில் எதிர்த்துத் தாக்குதல். அது காட்டுத்தனமான சட்டமாக உள்ளது, அது உலகத்தின் வழியாக உள்ளது.*
- *வரையறைக்கு உட்பட்ட வகையில் எதிர்த்துத் தாக்குதல். அது*

மோசேயின் நியாயப்பிரமாணம் முன்மொழிந்த நீதியின் சட்டமாக உள்ளது.

- வரையறையற்ற வகையில் நல்ல சித்தை. அது கிறிஸ்துவின் வழியாக, அன்பின் பிரமாணமாக உள்ளது.

இந்தப் பாடத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மூன்றாவது பதில்செயல் பற்றி நமது அடுத்த படிப்பில் நாம் விபரமாகக் கலந்துரையாடுவோம்.

இந்த எடுத்துரைப்பில் நாம், மத்தேயு 5:38-42ல் மிகச்சரியாக இயேசு போதித்தது என்ன என்பதைப் புரிந்துணர நாம் போராடியிருக்கிறோம், ஆனால் இவ்வசனங்களுக்குக் கீழ்ப்படிதல் என்பது இவற்றைப் புரிந்து கொள்வதற்குப் பத்து மடங்கு சுலபமான வழியாக உள்ளது. ஒருவேளை என்னைப் போன்றே நீங்களும் உணரலாம்: மத்தேயு 5ல் நான் இன்னும் அதிகமாகச் செல்லச் செல்ல, கிறிஸ்து கேட்டுக் கொள்ளுபவை அதிகம் கடினமாகின்றன மற்றும் தேவனுடைய உதவி இன்னும் அதிகமாக எனக்குத் தேவை என்று நான் உணருகிறேன். நீங்கள் இயேசுவின் மீது விசுவாசம் கொண்டிருந்தும், வசனரீதியான ஞானஸ்நானத்தை இன்னும் பெறாதிருந்தால், தேவனுடைய ஆவியானவர் உங்களைப் பெலப்படுத்தும்படிக்கு அதை நீங்கள் உடனே பெற்றுக் கொள்வது அவசியமாகிறது (நடபடிகள் 2:38; காண்க ரோமர் 8:13, 26). நீங்கள் ஏற்கனவே ஒரு கிறிஸ்தவராக இருந்தால், உங்களை விட்டு விலகாத அல்லது உங்களைக் கைவிடாத அவரைச் சார்ந்திருக்கக் கற்றுக்கொள்ளுங்கள் (எபிரெயர் 13:5ஆ, 6).

குறிப்புகள்

[1]சமனான வெளியில் செய்யப்பட்ட பிரசங்கத்தில் இதைப் போன்றதொரு பகுதி உள்ளது: லூக்கா 6:27-36. அவ்வசனப் பகுதியை நீங்கள் மத்தேயு 5:38-48 உடன் ஒப்பிட விரும்புவீர்கள். ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் குறிப்பிடுங்கள். [2]D. Martyn Lloyd-Jones, *Studies in the Sermon on the Mount,* vol. 1 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 273. [3]பதிலீடு செய்தலின் இவ்வகையான பழைய ஏற்பாட்டு உதாரணம் ஒன்றிற்கு யாத்திராகமம் 21:26, 27ஐக் காணவும். [4]David Hill, *The Gospel of Matthew*, New Century Bible Commentary series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972), 127. [5]கிரேக்க வசனத்தில், பெயர்ச்சொல் எதுவுமின்றி, "தீமை" என்ற பெயர் உரிச்சொல் மாத்திரம் உள்ளது (இதே சூழ்நிலையை நாம் மத்தேயு 5ன் 39ம் வசனத்திலும் கொண்டிருந்தோம்), இவ்வாறாக KJV வேதாகமத்தில் "தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம்" என்றுள்ளது. இருப்பினும் நாம் பொதுவாகத் தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டும். மற்றும் "பொல்லாங்கன்" (இது சாத்தானைக் குறிக்கிறது) இங்கு வேலை செய்வதில்லை (காண்க யாக்கோபு 4:7). சந்தர்ப்பப் பொருளில், "பொல்லாங்கான நபர்" - சீஷர் ஒருவரை அறைகிற, வழக்காடுகிற மற்றும் கட்டாயப்படுத்துகிற ஒருவர் - என்பவரையே இயேசு தமது சிந்தையில் கொண்டிருந்தார். [6]"எதிர்த்து" என்பது "எதிராக அமைதல்" (histemi ["நிற்க"] என்பதற்கு முன்னர் *anti* ["எதிராக"] என்ற சொல்லுள்ளது) என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ள *anthistemi*, என்ற கிரேக்கக் கூட்டுவார்த்தையில் இருந்து வருகிறது (W. E. Vine, Merrill F. Unger, William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* [Nashville: Thomas Nelson Publishers,

1985], 528). [7]*நடபடிகள் 16:35-39; 23:3; 25:9, 10 ஆகிய வசனங்களைக் கவனியுங்கள். இந்த ஒவ்வொரு நிகழ்விலும் பவுல் ஒரு கொள்கைக்காக நின்றார், அதை வெறுமனே தாம் தனிப்பட்ட வகையில் தவறாக நடத்தப்பட்டதன் காரணமாக மாத்திரம் அவர் அவ்வாறு செய்யவில்லை.* [8]*இந்தப் பாடத்தின் பிற்பகுதியில், நாம் (கேட்டவர்களுக்குத் கொடுத்தல் என்ற) நான்காவது விவரிப்பை ஆழ்ந்து சிந்தித்து அது எவ்வாறு முதல் மூன்று உதாரணங்களுடன் பொருந்துகிறது என்பதையும் நிலைநாட்டுவோம்.* [9]B. W. Johnson, *People's New Testament* (St. Louis: Christian Publishing Co., 1891) (http://www.ccel.org/ccel/johnson bw/pnt.pnt0105.html; Internet; accessed 30 May 2008). [10]*1 இராஜாக்கள் 22:24 மற்றும் புலம்பல் 3:30 ஆகியவை கன்னத்தில் அறைதலைக் குறிப்பிடுகிற இரண்டு வசனப் பகுதிகளாக உள்ளன. முகத்தில் அறைதல் பற்றிய குறிப்பு ஒன்று 2 கொரிந்தியர் 11:20ம் வசனத்திலும் உள்ளது.*

[11]*இந்தப் பாடக்கருத்தின்மீது மிகநீண்ட ஒரு கலந்துரையாடலுக்கு இது இடமாக இருப்பதில்லை, ஆனால் சிந்திப்பதற்குச் சில விஷயங்கள் இவ்விடத்தில் உள்ளன: உங்கள் பிள்ளையானவன் தனது கைமுட்டிகளால் வழக்குகளைத் தீர்த்துக் கொள்ளும்படி நீங்கள் போதித்தால், அவன் பெரியவனாகும்போது என்ன செய்வான்?* [12]*மத்தேயு 5ல் உள்ள மற்றொரு நீதிமன்ற அறை விவரிப்பிற்கு, 22 மற்றும் 25 ஆகிய வசனங்களைக் காணவும்.* [13]KJV *வேதாகமம்,* "coat" *மற்றும்* "cloak" *என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தித் தனது வாசகர்களுக்கு இதே விஷயத்தைச் செய்தது.* [14]Vine, 105. [15]Ibid. [16]*இந்த சந்தர்ப்பப் பொருளில், "அடகு" என்பது, ஒரு கடனுக்கான பிணையமாகத் தரப்படுகிற காப்புப் பொருளாக உள்ளது* (*The American Heritage Dictionary*, 4th ed. [2001], s.v. "pledge"). [17]*சிலர் இவ்வார்த்தைகளை, எல்லாச் செயலும் நீதிமன்ற அறைக்குள் செல்வதற்கு முன்பே நடப்பதாக அர்த்தப்படுத்தும் வகையில், "உன்னுடன் வழக்காட விரும்புகிறவனுக்கு" என்று எடுத்துக் கொள்கின்றனர். இருப்பினும் இவ்வசனப் பகுதி, வழக்கில் வெற்றி பெற்றவர் ஒரு உடையை எடுத்துக் கொள்வதாகவும், வழக்கில் தோற்றவர் தமது இரண்டாவது உடையையும் அவருக்குக் கொடுப்பதாகவும் அர்த்தப்படுத்துகிறது என்பதே இயல்பானதாக உள்ளது.* [18]*வேதாகமம் முழுவதிலும், நிர்வாணம் (போதுமான உடையின்றி இருத்தல்) என்பது வெட்கக் கேட்டுடன் இணைவு கொண்டுள்ளது (காண்க ஏசாயா 47:3; வெளிப்படுத்தின விசேஷம் 3:18).* [19]*வாதி என்பவர், இன்னொருவருக்கு எதிராக வழக்குத் தொடுப்பவராக இருக்கிறார் (இவர்* defendant *என்று அழைக்கப்படுகிறார்).* [20]Vine, 117.

[21]*"மைல்" என்பது "ஆயிரம்" என்று அர்த்தப்படுகிற மில்லி என்ற இலத்தீன் வார்த்தையில் இருந்து வருகிறது.* [22]D. A. Carson, "Matthew," *The Expositor's Bible Commentary,* vol. 8 (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1984), 156. [23]*நாம் கொடுக்கிற வழிமுறைக்கு ஒரு ஒப்பீடு ஏற்படுத்தப் படலாம்: மனவிருப்பத்துடனும் உற்சாகத்துடனும் (காண்க 2 கொரிந்தியர் 9:7).* [24]*42ம் வசனம் இரு தனித்தனிக் கட்டளைகளைக் கொண்டுள்ளதாகச் சிலர் நம்புகின்றனர், ஆனால் இங்கு அவைகள், ஒரே கட்டளையின் இரு சொல்விளக்கங்கள் என்ற வகையில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.* [25]Lloyd-Jones, 167. [26]*ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு மனிதர், தமது பரம்பரை உடைமைகளைப் பெறுவதற்கு உதவும்படி இயேசுவிடம் கேட்டார். அம்மனிதரின் வேண்டுகோளை இயேசு நிறைவேற்றவில்லை. அதற்குப்பதிலாக அவர், அம்மனிதருக்கு உண்மையில் தேவையானதைக் கொடுத்தார்: பேராசையின் அபாயங்கள் பற்றிய போதனை (காண்க லூக்கா 12:13-21).* [27]Carson, *157. இந்தக் கூற்றைக்கூறியதில் கேர்சன் அவர்கள் இயேசுவின் நான்கு உதாரணங்களையும் தமது மனதில் கொண்டிருந்தார்.* [28]*இருப்பினும் பின்வரும் பழங்கூற்றை மனதில் கொள்ளுங்கள்: "உதவி தேவைப்படுகிற ஒருவருக்கு உதவத்*

தவறுவதைப் பார்க்கிலும் உதவி தேவைப்படாத பத்து மனிதர்களுக்கு உதவுவது சிறந்தது." [29]*யாரே ஒருவர், "உங்கள் உடைமைகள் யாவற்றையும் இலேசான பிடிமானத்துடன் பற்றிக்கொண்டிருங்கள்" என்று கூறியுள்ளார்.* [30]Adapted from Lloyd-Jones, 171-74.

8

"பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்? யார், நானா?"

[மத்தேயு 5:43-48]

மத்தேயு 5:17-20ல் இயேசு, நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றவே தாம் வந்ததாகக் கூறினார். மற்ற விஷயங்களுக்கு மத்தியில் இது, அவர் நியாயப்பிரமாணத்தின் நோக்கத்தை நிறைவேற்ற வந்தார், தேவன் தமது பிள்ளைகள் எவ்வகைப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று காண்பிக்க வந்தார் என்று அர்த்தப்படுத்தியது. பின்பு இயேசு, தமது சிந்தையில் கொண்டிருந்தது என்ன என்பதற்குப் பல விவரிப்புகளைக் கொடுத்தார். அந்த உதாரணங்களில் இயேசுவினால் அமைக்கப்பட்ட தர அளவையானது, உலகத்தின் தர அளவைக்கு முற்றிலும் நேர்மாறானதாக நிலைத்துள்ளது. அது பரிசேயர் மற்றும் சதுசேயர் ஆகியோரால் பரிந்துரைக்கப்பட்ட தர அளவையைக் காட்டிலும் கூட, மிகவும் மேலானதாக இருந்தது (காண்க வசனம் 20). இயேசுவின் கடைசி உதாரணத்தை நாம் படிப்பதற்கு முன்னர், முந்தினவற்றை மறுகண்ணோட்டம் இடுதல் நல்லதாக இருக்கலாம். எனது சகோதரர் காய் அவர்கள் அவற்றைப் பின்வருவது போன்று தொகுத்துரைத்தார்:[1]

1. உலகம், "சூழ்நிலைகள் மெச்சிக்கொள்ளும் என்றால், மற்றும் அந்த விஷயத்தில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியும் என்றால் கொலை செய்யுங்கள்" என்று கூறுகிறது.
பரிசேயர்கள், "கொலை செய்யாதிருங்கள்" என்று கூறினர்.
இயேசு, "கோபமே கொள்ளாதிருங்கள்" என்று கூறினார்.

2. உலகம், "விபசாரம் செய்வது தவறில்லை" என்று கூறுகிறது.
பரிசேயர்கள், "விபசாரம் செய்யாதீர்கள்" என்று கூறினர்.
இயேசு, "ஒரு பெண்ணை இச்சையோடு பார்க்காதீர்கள்" என்று கூறினார்.

3. உலகம், "எந்தக் காரணத்திற்காவது விவாகரத்துச் செய்வது சரியே," என்று கூறுகிறது.
பரிசேயர்கள், "நீங்கள் உங்கள் மனைவியை விவாகரத்துச் செய்யும்போது, அவளுக்குத் தள்ளுதல் சீட்டைக் கொடுத்து விடுங்கள்" என்று கூறினர்.
இயேசு, "வேசித்தனம் செய்தால் ஒழிய உங்கள் மனைவியை விவாகரத்துச் செய்யாதீர்கள்" என்று கூறினார்.

4. உலகம், "பொய் கூறுதல் சரியே" என்று கூறுகிறது.
   பரிசேயர்கள், "நீங்கள் ஒரு ஆணையிட்டிருக்கும்போது உண்மையைத்தான் கூற வேண்டும்" என்று கூறினர்.
   இயேசு, "எல்லா வேளையிலும் உண்மையைக் கூறுங்கள்" என்று கூறினார்.
5. உலகம், "நீங்கள் முதலில் அடியுங்கள் அல்லது உங்களைப் புண்படுத்தியவர்களை அதைவிட அதிகமாகப் புண்படுத்துங்கள்" என்று கூறுகிறது.
   பரிசேயர்கள், "நீங்கள் பழிவாங்க முடியும், ஆனால் உங்களை எந்த அளவுக்குத் துன்பப்படுத்தினார்களோ அந்த அளவுக்கே பழிவாங்க முடியும்" என்று கூறினர்.
   இயேசு, "நீங்கள் பழிவாங்காதீர்கள்; தனிப்பட்ட வகையில் எதிர்த்துக் தாக்குதல் என்று எதுவும் இருக்கக் கூடாது" என்று கூறினார்.

அது நம்மை, 43ல் இருந்து 48ம் வசனங்கள் வரையிலான பகுதிக்குக் கொண்டுவருகிறது. இவ்வசனப் பகுதியை, காய் அவர்கள் பின்வருமாறு தொகுத்துரைத்தார்:

6. உலகம், "உங்களுக்கு அன்பு தேவையில்லை; அன்பு என்பது பலவீனமானவர்களுக்கு உரியதாகும்" என்று கூறுகிறது.
   பரிசேயர்கள், "உங்கள் அயலகத்தவர்களை அன்புகூர்ந்து, உங்கள் எதிரிகளை வெறுங்கள்" என்று கூறினர்.
   இயேசு, "உங்கள் விரோதிகள் மீது அன்புகூருங்கள்" என்று கூறினார்.

43 முதல் 48 வரையிலான வசனங்கள், முந்திய உதாரனத்திற்கு நெருங்கிய தொடர்பு கொண்டு உள்ளன. இவ்விரண்டுமே, தவறாக நடத்தப்படுதலுக்கு நாம் எவ்வாறு பதில் செயல் செய்ய வேண்டும் என்பதைப் பற்றியவையாக உள்ளன. 38முதல் 42 வரையிலான வசனங்கள், நாம் செய்யக் *கூடாதவை* என்ன என்பதை அடிப்படையாக வலியுறுத்துகின்றன: நாம் எதிர்த்துத் தாக்கக் கூடாது. இருப்பினும் நாம், எதிர்மறையுடன் நிறுத்தத் துணியாதிருப்போமாக. 43 முதல் 48 வரையிலான வசனங்கள், நாம் என்ன செய்ய *வேண்டும்* என்று நமக்குக் கூறுகின்றன: நம்மைத் தவறாக நடத்தியவர்களை நாம் அன்புகூர்ந்து அவர்களுக்கு உதவி செய்வதற்கான வழியொன்றைக் கண்டறிய வேண்டும். அகஸ்டீன் என்பவர், "பலர் மறுகன்னத்தைக் காட்டுவது எவ்வாறு என்று கற்றுள்ளனர், ஆனால் யாரால் அடிக்கப்பட்டார்களோ அவரை அன்புகூருவது எவ்வாறு என்பதை அறியாதிருக்கின்றனர்" என்று எழுதினார்.[2]

நமது வேதபாட வசனப் பகுதியின் முடிவில் நாம், பின்வரும் திகைக்கச் செய்யும் அறைகூவலைக் கொண்டிருக்கிறோம்: "ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" (வசனம் 48). திகைப்பின் கூட்டுப்பாடல் ஒன்றை நான் கேள்விப்படுகிறேனா? "பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்? யார், நானா?" தேவன் பூரண சற்குணராயிருப்பது போன்று நாம் எவ்வாறு பூரண

சற்குணராயிருக்க முடியும்? இந்தக் கேள்விக்கு நாம், இப்பாடத்தை முடிப்பதற்கு முன்னர் பதில் காண நம்பிக்கையாயிருக்கிறோம்.

நிபந்தனை (5:43, 44)

அவர்கள் கேள்விப்பட்டு இருந்தது என்ன? (வசனம் 43)

நமது வேதபாட வசனப்பகுதி, இயேசுவினிடத்தில் இருந்து வந்த பின்வரும் வார்த்தைகளுடன் தொடங்குகிறது: "உனக்கடுத்தவனைச் சிநேகித்து உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்" (வசனம் 43). "உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக" என்ற கட்டளையை நீங்கள் உணர்ந்து அறியலாம். இது லேவியராகமம் 19:18ல் இருந்து ஒரு மேற்கோளாக உள்ளது. இவ்வார்த்தைகளை இயேசு, இரண்டாவது பிரதான கட்டளை என்று அழைத்தார் (மத்தேயு 22:39; காண்க வசனங்கள் 35-40).

சக யூதர்களை அன்புகூருவதற்கான அறிவுறுத்துதலே, லேவியராகமத்தில் இந்தக் கட்டளையின் உடனடி சந்தர்ப்பப் பொருளாக உள்ளது. இதற்கு முன்பு இவ்வசனம், "உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகையாயாக" என்று கூறுகிறது (லேவியராகமம் 19:17அ); மற்றும் 18ம் வசனத்தின் முதல் பகுதி, "பழிக்குப்பழி வாங்காமலும், உன் ஜனப்புத்திரர்மேல் பொறாமை கொள்ளாமலும் …" என்று கூறுகிறது. இந்தக் கட்டளையை, யூதர்கள், இஸ்ரவேல் மக்களை மாத்திரம் அன்புகூர வேண்டும் என்று அர்த்தப்படுத்துவதாக யூதர்கள் எடுத்துக் கொண்டனர்.[3] (அதற்கு நேர்மாறாக, "அயலான்" என்ற சொற்றொடர், நாம் உதவிசெய்யக் கூடிய எவரொருவரையும் உள்ளடக்குகிறது என்பதைப் பிற்பாடு இயேசு தெளிவாக்கினார் [லூக்கா 10:29-37].)

மத்தேயு 5:43ன் இரண்டாவது பாகமான "உன் சத்துருவைப் பகைப்பாயாக" என்பது பழைய ஏற்பாட்டில் காணப்படுவதில்லை. இஸ்ரவேல் மக்களின் விரோதிகளுக்குப் பயங்கரமான காரியங்களைச் செய்யும்படி தேவனை வற்புறுத்தி வேண்டிக்கொள்ளுகிற சங்கீதங்களின்[4] அடிப்படையில் யூதர்கள் இதை நியாயப்படுத்தி இருக்கலாம் (எடுத்துக்காட்டாக, சங்கீதம் 69:22-28ஐக் காணவும்). இஸ்ரவேல் மக்கள் தங்களைச் சுற்றிலும் இருந்த மக்களினங்களில் இருந்து தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்திய வசனப் பகுதிகளையும் அவர்கள் சுட்டிக்காண்பித்து இருக்கலாம் (காண்க ஏசாயா 52:10, 11). மற்ற வசனப் பகுதிகள் அவர்களின் விரோதிகளுக்கு அவர்கள் உதவி செய்ய வேண்டும்[5] என்று அவர்களுக்குக் கூறின என்பது உண்மையே (எடுத்துக்காட்டாக, நீதிமொழிகள் 25:21, 22 [காண்க ரோமர் 12:20]). இருந்தபோதிலும் யூதர்கள், தங்கள் விரோதிகளை வெறுத்தல் என்பது தங்களின் உரிமையாக மற்றும் தங்களின் பொறுப்பாகக் கூட இருந்தது என்று முடிவு செய்தனர். ஒழுக்கக் கட்டுப்பாடு பற்றிய கும்ரான்[6] கையேடு பின்வரும் அறிவுரையைக் கொடுத்தது: "… தேவன் தேர்ந்துகொண்ட ஒவ்வொருவரையும் அன்புகூருதலும், அவர் புறக்கணித்த ஒவ்வொருவரையும் வெறுத்தலும் … இருளின் பிள்ளைகள் யாவரையும் வெறுத்தலும் …"[7]

இயேசு கூறியது என்ன? (வசனம் 44)

தொடர்ந்து இயேசு, "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள்

சத்துருக்களைச் சிநேகியுங்கள்" என்று கூறினார் (வசனம் 44அ). இயேசுவின் உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் பலருக்கு இவ்வார்த்தைகள் எவ்வளவு திகைப்புக்கு உரியவையான, மனதைப் புண்படுத்துபவையாகக் கூட இருந்திருக்கும் என்பதை உணர்ந்து அறிதல் நமக்குக் கடினமானதாக உள்ளது. "சத்துரு" என்ற வார்த்தையை நாம் கேள்விப்படும்போது, நம்மை விரும்பாதவர்களைப் பற்றி, ஒருவேளை நம்மைப் பற்றிச் சிறுமையான வார்த்தைகளைக் கூறியவர்களைப் பற்றிக்கூட நாம் நினைக்கலாம். "சத்துரு" என்ற வார்த்தையை ஒரு யூதர் கேள்விப்பட்டபோது அவர், தமது மக்கள் விருத்தசேதனம் போன்ற பரிசுத்த சடங்குகளைக் கைவிட மறுத்த காரணத்தினால் அவர்களைச் சித்திரவதை செய்திருந்தவர்கள் உட்பட, தமது மக்களை அடக்கி வைத்திருந்தவர்களைப்பற்றி நினைவூட்டப்பட்டார்.[8] இயேசுவின் உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில், ரோமர்களின் இரத்தத்தைச் சிந்தி, வெறுக்கத்தக்க ஆக்கிரமிப்புப் படையைப் பலஸ்தீன நாட்டில் இருந்து துரத்தக் கூடிய நாள் வரும் என்று சந்தேகம் இன்றி நம்பிக் காத்திருந்த மக்கள் இருந்தனர். அவர்களுக்கு, இயேசுவின் கட்டளையானது எவ்வளவு "கடினமான கூற்றாக"[9] இருந்திருக்க வேண்டும்! இயேசுவின் ஆணையானது இன்றைய நாட்களிலும் இன்னமும் சிலருக்கு "கடினமான கூற்றாகவே" உள்ளது. நம்மீது அன்புகூருபவர்களை நாம் அன்புகூருதல் என்பது கடினமாக இருப்பதில்லை, ஆனால் நமது விரோதிகளை அன்புகூர வேண்டும் என்ற அறைகூவல், நமது ஆவிக்குரிய தன்மையின் ஆழத்திற்குச் சோதனை ஒன்றை அளிக்கிறது. யாரோ ஒருவர் இதை, "அன்பின் அமிலச் சோதனை" என்று அழைத்துள்ளார்.

இந்தக் கட்டளை, நமது விரோதிகளைப் பின்னால் சென்று தாக்குவதற்கான ஒரு தந்திரமான வழியாக இந்தக் கட்டளை இருக்க வேண்டும் என்று இயேசு நோக்கங் கொண்டிருக்கவில்லை என்பதை நான் தெளிவாக்க வேண்டி இருக்கலாம். ஆஸ்கர் வைல்ட் என்ற எழுத்தாளர், "உங்கள் விரோதிகள் மீது அன்புகூருங்கள். நீங்கள் எப்படிப்பட்டவர் என்று அறிந்துணர அவர்கள் பைத்தியக்காரத்தனமாக முயற்சி செய்வார்கள்" என்று கூறினார்.[10] இயேசு, நமது விரோதிகள் "பைத்தியமாவதற்கு" நாம் காரணமாக இருக்க வேண்டும் என்று நோக்கங் கொண்டிருக்கவில்லை. நாம் அவர்களை நெருக்கமாகவும் கர்த்தருக்கு நெருக்கமாகவும் - தரவழைக்க வேண்டும் என்றே அவர் நோக்கங் கொண்டார். ஆல்ஃபிரட் பிளம்மர் அவர்கள், "நன்மைக்குத் தீமை செய்தல் பிசாசுக்கு அடுத்ததாக உள்ளது; நன்மைக்கு நன்மை செய்தல் என்பது மனிதத்துவமாக உள்ளது; தீமைக்கு நன்மை செய்தல் என்பது தெய்வீகத்துவமாக உள்ளது" என்று எழுதினார்.[11]

அது நம்மைப் பின்வரும் கேள்வியிடம் கொண்டு வருகிறது: "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்" என்று கூறியபோது இயேசு எதை அர்த்தப்படுத்தினார்? "அன்பு" என்பதற்குப் பல கிரேக்க வார்த்தைகள் உள்ளன. அவற்றில், இதமான பிரியமான - நெருக்கமான நண்பர்களிடத்தில் நாம் கொண்டுள்ள வகையிலான - அன்பைக் குறிப்பிடுகிற *phileo* என்ற வார்த்தையும் ஒன்றாக உள்ளது. அது நமது வேதபாட வசனப் பகுதியில் பயன்படுத்தப்படவில்லை. யாரோ ஒருவர், "நாம் நமது சத்துருக்களை விரும்ப வேண்டும் என்று கட்டளையிடப்படவில்லை, ஆனால் அவர்கள் மீது அன்புகூர வேண்டும் என்றே கட்டளையிடப்பட்டுள்ளது" என்று கூறியுள்ளார். மத்தேயு

5:44ல் agapao என்பதே "அன்பு" என்பதற்கான வார்த்தையாக உள்ளது.[12] Agapao அன்பு மனவிருப்பத்தை உள்ளடக்குகிறது. இது உணர்வெழுச்சியைப் பயன்படுத்தாமல் இருப்பதில்லை, ஆனால் இது உணர்வெழுச்சியைச் சார்ந்து இருப்பதும் இல்லை. ஜான் R. W. ஸ்டாட் அவர்கள், "உண்மையான அன்பு என்பது ஊழியம் செய்வதை விட அதிகமாக உணர்வுவயப்படுவதாக இருப்பதில்லை" என்று கருத்துத் தெரிவித்தார்.[13] Agapao என்பது "அன்புகூரப்படும் ஒருவருக்கு மிகச்சிறந்தவற்றை நாடுதல்" என்று விளக்கப்படுத்தப்பட்டுள்ளது.

ரோமர் 12ல் பவுல், விரோதி ஒருவருக்கு "மிகச்சிறந்தவற்றை நாடுதல்" என்பதில் உள்ளடங்கி இருப்பது என்ன என்பதைப் பற்றி உதாரணங்கள் கொடுத்தார்: "அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங்கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு" (வசனம் 20அ [காண்க நீதிமொழிகள் 25:21]). நமது விரோதியின் தேவைகளை நாம் தீர்மானிக்க முயற்சி செய்து பின்பு அந்தத் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்று அன்பு கூறுகிறது. சமனான இடத்தில் செய்த பிரசங்கத்தில் இயேசு, "உங்கள் விரோதிகளை அன்புகூருங்கள்" என்று கூறியபோது தாம் அர்த்தப்படுத்தியது என்ன என்று விரித்துரைத்தார்:

> *எனக்குச் செவிகொடுக்கிற உங்களுக்கு நான் சொல்லுகிறேன்: உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசிர்வதியுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள். ... உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள்[14] ... (லூக்கா 6:27, 28, 35அ).*

நமது விரோதிகள் நமது உதவியை மறுத்தால் என்ன செய்வது? அவர்களுக்காக ஜெபித்தல் என்பது அவர்கள் மறுக்க இயலாத வகையில் நாம் அவர்களுக்காகச் செய்யும் ஒரு விஷயமாக உள்ளது. இயேசு, "உங்கள் விரோதிகளை அன்புகூருங்கள்" என்று கூறியபின்பு, "உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்" என்று கூறினார் (மத்தேயு 5:44ஆ). சிலுவையில் இயேசு, தம்மைத் துன்புறுத்தியவர்களுக்காக ஜெபித்தார் (லூக்கா 23:34). கிறிஸ்தவத்திற்காகத் தமது உயிரை அர்ப்பணித்தவர்களில் முதல்வரான ஸ்தேவான் தம்மைத் துன்புறுத்தியவர்களுக்காக ஜெபித்தார்: "ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்" (நடபடிகள் 7:60). அன்பும் ஜெபமும் ஒன்றாகச் செல்கின்றன. நீங்கள் யாரேனும் ஒருவர்மீது அன்புகூர்ந்தால் அவருக்காக நீங்கள் ஜெபிப்பீர்கள். பின்பு அவருக்காக நீங்கள் ஜெபித்தால், அவர் மீதுள்ள உங்கள் அன்பு வளரும். ஒரு விரோதிக்காகச் செய்யப்படும் ஊக்கமான ஜெபம் உங்கள் இருதயத்தில் இருந்து வெறுப்புணர்வை நீக்கிப்போடும்.

காரணங்கள் (5:45-47)

தேவனைப் போல் இருக்க (வசனம் 45)

நாம் ஏன் நமது விரோதிகள் மீது அன்புகூர வேண்டும் என்பதற்கு இயேசு இரண்டு காரணங்களைக் கொடுத்தார். முதலாவது, தேவனைப் போல் இருப்பதற்காக என்பதாகும்: "இப்படிச் செய்வதினால் நீங்கள்

பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்" (வசனம் 45அ). "உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்" என்ற சொற்றொடர், "உங்கள் பிதாவின் இயல்பில் பங்கேற்றல்" என்று அர்த்தப்படுகிறது. நாம் தேவனுக்கு விரோதிகளாக இருந்தபோதே, அவர் நம்மீது அன்புகூர்ந்து, நமக்காக மரிக்கும்படி தமது குமாரனை அனுப்பினார் (ரோமர் 5:8, 10). இப்போது நாம் தேவனைப் போல் இருக்கவும் நமது விரோதிகள் மீது அன்புகூரவும் அறைகூவல் விடப்பட்டுள்ளோம். சில வேளைகளில் மக்கள் ஒரு இளம் பையனைப் பார்த்து, "அவன் தனது தந்தையைப் போல் காணப்படுகிறான்" என்று கூறுகின்றனர். மக்கள் நம்மைப் பார்க்கும்போது, அவர்கள் நமது பரலோகபிதாவின் குடும்ப ஒற்றுமைப் பண்பைக் காணுகின்றனரா?

இயேசு, தேவனுடைய விரோதிகள் உட்பட, எல்லா மனிதர்கள் மீதுமான தேவனுடைய அன்பிற்கு இரண்டு உதாரணங்களைக் கொடுத்தார்: "அவர் தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை[15] உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார்" (மத்தேயு 5:45ஆ). சூரிய வெளிச்சமும் மழையும் எளிய விஷயங்களாகவும், வாழ்விற்கு தேவையான அன்றாட அத்தியாவசிய விஷயங்களாகவும் உள்ளன. இவற்றை "தேவனுடைய காட்சி உதவிப்பொருட்கள்" என்று டேல் ஹார்ட்மேன் அவர்கள் அழைத்தார். அவர், "காலையில் சூரியன் உதிக்கும்போது, 'எனது பிதா அதைச் செய்தார்!' என்று சொல்லுங்கள். அடுத்த முறை மழை பெய்யும்போது 'எனது பிதா அதைச் செய்தார்!' என்று சொல்லுங்கள்" என்று கூறினார்.[16]

தேவன் இந்தக் கொடைகளை நல்லவர்களுக்கும் நீதிமான்களுக்கும் மாத்திரம் அருளுவதில்லை என்பது இயேசுவின் கருத்தாக இருந்தது. இவற்றை அவர் பொல்லாதவர்களுக்கும் அநீதிமான்களுக்கும் - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவரது விரோதிகளுக்கும் - கூட அருளுகிறார். அவர், மக்கள் பெறத் தகுதியாயிருப்பவற்றை அல்ல, ஆனால் அவர்களுக்குத் தேவையானவற்றைத் தருகிறார்.[17] ஹார்ட்மேன் அவர்கள், "நமது நற்தன்மையினால் அல்ல, ஆனால் தேவனுடைய நற்தன்மையினால் தான் சூரியன் இன்று உதித்தது" என்று குறிப்பிட்டார்.[18]

அஞ்ஞானிகளைப் போலிராமல் இருத்தல் (வசனங்கள் 46, 47)

நாம் தேவனைப் *போல்* இருக்க வேண்டும் என்பதே, நமது விரோதிகள் மீது நாம் அன்புகூர வேண்டும் என்பதற்கு முதல் காரணமாக உள்ளது. நாம் அஞ்ஞானிகளைப் *போல் இருக்கக் கூடாது* என்பது இரண்டாவது காரணமாக உள்ளது. இயேசு, "உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும்[19] அப்படியே செய்கிறார்கள் அல்லவா? உங்கள் சகோதரரைமாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும்[20] அப்படிச் செய்கிறார்கள் அல்லவா?" என்று கேட்டார் (வசனங்கள் 46, 47).

இயேசு, யூதர்களால் இழிவாகக் கருதப்பட்ட இரு குழுவினரைக் குறிப்பிட்டார்: புறஜாதியார் (யூதர் அல்லாதவர்கள்) மற்றும் ஆயக்காரர்கள் என்பவர்கள் ரோம அரசுக்காக வரிவசூல் செய்த யூதர்களாக இருந்தனர். அவர்களின் சக யூதர்கள் அவர்களைக் காட்டிக் கொடுப்பவர்கள் என்று

கருதினர். சட்டப்படி, அடிமட்டத்தில் உள்ள தனிநபர்களே இந்த வேலையைச் செய்ய மனவிருப்பம் கொண்டிருந்தனர். அவர்களின் தொழிலில் நேர்மையற்ற தன்மை என்பது சாதாரணமானதாக இருந்தது (காண்க லூக்கா 3:12, 13; 19:2). மக்களின் மனங்களில், ஆயக்காரரர்கள் மிகமோசமான - விபசாரிகள் மற்றும் அஞ்ஞானிகளின் மட்டத்தில் இருந்த மனிதர்களாகக் கருதப்பட்டனர் (காண்க மத்தேயு 9:11; 18:17; 21:31).

ஆயக்காரரர்களையும் புறஜாதியார்களையும் இயேசு குறிப்பிட்டார் என்பது, அவர்களைப் பற்றிய அவரது தனிப்பட்ட மதிப்பீட்டைப் பிரதிபலிப்பதில்லை என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். இயேசு எல்லா மக்கள் மீதும் அன்புகூர்ந்தார்; அவர் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே வந்தார் (லூக்கா 19:10). அவர் ஆயக்காரரர்களின் சிநேகிதர் என்று அறியப்பட்டார் (மத்தேயு 11:19). (மத்தேயு சுவிசேஷத்தை எழுதியவர் ஒரு முன்னாள் ஆயக்காரரராக இருந்தார் [காண்க மத்தேயு 9:9-13].) இயேசுவின் அன்பு, புறஜாதியாரையும் கூட உள்ளடக்கிற்று (காண்க மத்தேயு 8:5-11; 28:18-20; லூக்கா 2:25, 32). பின்பு ஏன் அவர் தமது விவரிப்பில் ஆயக்காரரர்களையும் புறஜாதியாரையும் பயன்படுத்தினார்? ஏனென்றால் அவரது உரையைக் *கேட்டவர்களைப்* பொறுத்த மட்டில், ஆயக்காரரர்களும் புறஜாதியார்களும் மனிதத்துவத்தின் மிகத் தாழ்ந்த வடிவங்களாக இருந்தனர்.[21] மத்தேயு 5:20ல் இயேசு தமது சீஷர்களிடத்தில், அவர்களின் நீதியானது, சமூகத்தில் உயர்நிலையில் உள்ளவர்கள் என்று அவர்களால் கருதப்படுபவர்களின் நீதியைக் காட்டிலும் அதிகமாக இருக்க வேண்டும் என்று கூறினார்: வேதபாரகர் மற்றும் பரிசேயர்கள். இப்போது அவர் செயல்விளைவில், “உங்கள் நீதியானது மிகத்தாழ்ந்த நிலையில் உள்ளனர் என்று உங்களால் கருதப்படுபவர்களின் - ஆயக்காரரர்கள் மற்றும் புறஜாதியார் ஆகியோரின் - நீதியைக் காட்டிலும் அதிகமாக உள்ளதா?” என்ற கேட்டார்.

ஆயக்காரரர்களும்கூட தங்களை நேசிப்பவர்களை நேசிக்கின்றனர் என்று இயேசு சுட்டிக் காண்பித்தார். அவர்கள் நிச்சயமாகத் தங்கள் தாய்மார்களை நேசித்தனர், விலக்கி வைக்கப்பட்ட குழு என்ற வகையில் அவர்கள் தங்கள் சக ஆயக்காரரர்களுடன் நெருங்கிய உறவை உணர்ந்தனர் (காண்க மத்தேயு 9:10; மாற்கு 2:15). மற்றும், புறஜாதியாரும்கூட தாங்கள் நெருங்கிய உறவு கொண்டிருந்தவர்களை வாழ்த்தினர். வாழ்த்துதல்கள் என்பவை இடத்திற்கு இடம் வேறுபடுகின்றன. அது ஒரு “ஹலோ” அல்லது “நன்றாக இருக்கிறீர்களா?” என்பதாக இருக்கலாம், அது ஒரு கைகுலுக்குதலாக அல்லது ஒரு தழுவுதலாக இருக்கலாம். அது மரியாதை நிறைந்த வகையில் குனிந்து வணக்கம் செலுத்துவதாக அல்லது கன்னத்தில் கண்ணியமாக முத்தமிடுதலாக இருக்கலாம். எல்லா இடங்களும் தங்கள் சமூக வழக்கங்களை, தங்களுக்கே உரிய தனிப்பட்ட வகையிலான வணக்கம் செலுத்தும் முறைகளைக் கொண்டுள்ளன. நல்லெண்ணத்தின் இந்த வெளிப்பாடுகளை நாம் எல்லாருக்கும் விரிவாக்குகிறோமா அல்லது நமது நண்பர்களின் வட்டாரத்தில் உள்ளவர்களான நமது “சகோதரர்களுக்கு” மாத்திரம் இவற்றைக் கூறுகிறோமா?

47 மற்றும் 48 ஆகிய வசனங்கள் என்னைப் பதட்டம் அடையச் செய்கின்றன. எனது உறவுகளில் பல, இயல்பிலேயே திருப்பிச் செய்யக்கூடியவைகளாக உள்ளன என்பதை நான் ஒப்புக்கொண்டாக வேண்டும். யாரேனும் ஒருவர்

என்னை விரும்புகிறார், நான் அவரை விரும்புகிறேன். யாரேனும் ஒருவர் எனக்கு "ஹலோ" சொல்லுகிறார், நான் பதிலுக்கு "ஹலோ" சொல்லுகிறேன். யாரேனும் ஒருவர் தமது இல்லத்திற்கு என்னை அழைக்கிறார், நான் எனது இல்லத்திற்கு அவரை அழைக்கிறேன். யாரேனும் ஒருவர் எனக்கு ஒரு பரிசு கொடுக்கிறார், பதிலுக்கு நான் அவருக்கு ஒரு பரிசு கொடுக்கிறேன். இயேசுவின் மறக்க இயலாத அச்சமூட்டும் வார்த்தைகளை நான் கேட்கிறேன்: "[அஞ்ஞானிகளும்] அப்படியே செய்கிறார்கள் அல்லவா?"

"மற்றவர்களை விட ... அதிகமாக" என்பது, எனக்கு - மற்றும் உங்களுக்கு - இயேசுவின் அறைகூவலாக உள்ளது. இந்த "அதிகம்" என்பது நம்மைக் கிறிஸ்தவர் அல்லாதவர்களிடம் இருந்து வித்தியாசப்படுத்துகிறது. நம்மீது அன்புகூருபவர்களை நாம் நேசிக்கிறோம் என்பதல்ல, ஆனால் நம்மீது அன்புகூராதவர்களையும் நாம் நேசிக்கிறோம் என்பதே நம்மைப் பிரித்து காட்டுகிறது. நாம் இவ்வாறு செய்யும்போது, நாம் அஞ்ஞானிகளைப் போல் இருப்பது குறைந்து நமது பரலோக பிதாவைப் போல் இருப்பது அதிகரிக்கிறது.

விளைவு (5:48)

அது நம்மை 48ம் வசனத்தின் திகைக்க வைக்கும் வார்த்தைகளிடம் கொண்டு வருகிறது. இவ்வசனத்தை இந்த மாபெரும் பிரசங்கத்தின் திறவுகோல் வசனப்பகுதியாகப் பல எழுத்தாளர்கள் கருதுகின்றனர்: "ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்." முதல் வாசிப்பில் இயேசுவின் அறைகூவல் சாத்தியம் இல்லாததாகக் காணப்படுகிறது. தேவன் பூரணசற்குணராயிருப்பது போன்று நாம் எவ்வாறு சாத்தியமான வகையில் பூரணசற்குணராக இருக்க முடியும்? இவ்வார்த்தைகள் எதை அர்த்தப்படுத்துகின்றன?

இது எதை அர்த்தப்படுத்துவது இல்லை

இயேசுவின் கூற்று, இந்த வாழ்வில் பாவமற்ற பூரணத்துவமான நிலையை அடைதல் சாத்தியம் என்று கருத்துத் தெரிவிக்கிறதா? ஆம் என்று சிலர் நம்புகின்றனர். பல ஆண்டுகளாக பாவமே செய்யவில்லை என்று வலியுறுத்திய மனிதர் ஒருவரை நான் ஒருமுறை சந்தித்தேன். மத்தேயு 5:48ன் இந்தக் கண்ணோக்கு வேறொரு இடத்தில் உள்ள வேதாகமத்தின் தெளிவான போதனைக்கு நேர்மாறாக உள்ளது. 1 யோவான் நிருபத்தில் அப்போஸ்தலர், "நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது" (1:8); "நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரை [தேவனை]ப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது" என்று எழுதினார் (1:10). பாவமற்ற பூரணத்துவமான இந்த நிலையை நீங்கள் அடைந்து விட்டதாக நினைத்தால், நீங்கள் அதை அடையவில்லை என்பதற்கு அதுவே நிச்சயமான நிரூபணமாக உள்ளது.[22] பாவமற்ற நிலையை உரிமை கோரும் ஒருவர், பாவத்திற்கு மறுவிளக்கம் தரும்படியும், "பாவம் என்பது அதன் உண்மை நிலையைக் காட்டிலும் குறைவான தீவிரம் உள்ளதாக இருக்கிறது" என்று மறுவகைப்படுத்தும்படி கட்டாயப்படுத்தப்படுகிறார்.[23]

இது எதை அர்த்தப்படுத்துகிறது

48ம் வசனம், பாவமற்ற பூரணத்துவமான நிலையை அடைதல் சாத்தியமானது என்று அர்த்தப்படுத்துவதில்லை என்றால், இது எதை அர்த்தப்படுத்துகிறது? இவ்வசனத்தில், "பூரணசற்குணர்" (*teleios*) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளுதல் இதற்கு ஒரு திறவுகோலாக உள்ளது. இவ்வார்த்தை, "பூரணத்துவமான, நிறைவான ... ஒரு முடிவை அல்லது நோக்கத்தை அடைதல்" என்று அர்த்தப்படுகிறது.[24] சந்தர்ப்பப் பொருளில், தேவனுடைய அன்பு ஒவ்வொருவர் மீதும் காண்பிக்கப்படுவதால், அது "பூரணமானதாக" அல்லது "நிறைவானதாக" உள்ளது: "தீயோர் மற்றும் நல்லோர்" "நீதியுள்ளவர்கள்" மற்றும் "அநீதியுள்ளவர்கள்" எல்லார் மேலும். நீங்களும் நானும் கூட, நமது அன்பு எல்லார் மீதும் விரிவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தில் "பூரணராக" இருக்கும்படி அறைகூவல் விடப்படுகிறோம். "நாம், நமது நண்பர் அல்லது விரோதி யாராக இருந்தாலும்" யாவருக்கும் "நன்மை செய்யக்கடவோம்" (கலாத்தியர் 6:10).

இது மத்தேயு 5:48ன் முதன்மை வலியுறுத்தமாக உள்ளது, ஆனால் இவ்வசனத்தின் அறைகூவலை இத்துடன் சுருக்கிவிட முடியாது.[25] பழைய மற்றும் புதிய ஏற்பாடு இரண்டிலுமே, தேவனுடைய மக்கள் தங்கள் பிதாவைப் போல் இருக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

> "நான் உங்கள் தேவனாகிய கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால், ... உங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு, பரிசுத்தராயிருப்பீர்களாக. நான் உங்கள் தேவனாயிருக்கும்படி உங்களை எகிப்து தேசத்திருந்து வரப்பண்ணின கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால், நீங்களும் பரிசுத்தராயிருப்பீர்களாக" (லேவியராகமம் 11:44, 45).

> "ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி" (எபேசியர் 5:1).

தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில், நாம் நமது பிதாவைப் போல் இருக்கும்படி வளர வேண்டும் என்பதே நமக்கு விடப்படும் அறைகூவலாக உள்ளது. "பூரண சற்குணர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையின் விளக்கத்தினுடைய முதல் பகுதியைப் பின்னோக்கிக் காணுங்கள்: "பூரணத்துவமான, நிறைவான ... ஒரு முடிவை அல்லது நோக்கத்தை அடைதல்." வாழ்வில் நமது நோக்கம் என்னவாக உள்ளது? நமது பிதாவை மகிமைப்படுத்துதல் என்பதே (காண்க மத்தேயு 5:16). நாம் அவரைப் போல அதிகம் அதிகமாக ஆவதன் மூலமாக அதை நாம் செய்கிறோம். வில்லியம் பார்க்ளே என்பவர், ஒரு திருப்புளியை ஒரு விவரிப்பு என்ற வகையில் கருத்தாகத் தெரிவித்தார்.[26] ஒரு அமரும் நாற்காலியில் ஒரு திருகாணி தளர்ந்து போனதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். நீங்கள் கருவிப்பெட்டியை எடுத்து அதில் உங்களுக்குத் தேவையான ஒரு திருப்புளியைக் கண்டுபிடிக்கிறீர்கள், அந்தக் கருவி புதியதாக இராதிருக்கலாம். அது ஒன்றிரண்டு கீரல்களைக் கொண்டதாகக் கூட இருக்கலாம். இருப்பினும் அதன் கைப்பிடி உங்கள் கைக்குப் பொருந்துகிறது, அதன் முனையானது திருகாணியின் பிளவுக்குள் பொருந்துகிறது. நீங்கள் திருப்புளியைத் திருப்புகிறீர்கள், தளர்ந்திருந்த திருகாணி இறுக்கப்படுகிறது.

வேதாகமரீதியான கருத்தில், அந்தத் திருப்புளி தனது தவறுகளோடுகூட, தனது நோக்கத்தை நிறைவேற்றுவதால் "பூரணப்பட்டதாக" உள்ளது. அவ்வாறே, நமது எல்லாக் குறைவுகளுடனும் நீங்களும் நானும், தேவனைப் போன்று இன்னும் அதிகமாக இருப்பதற்கு கடினமாக முயற்சி செய்கையில், நமது நோக்கத்தை நிறைவேற்றுகிறோம்.

இந்த வாழ்வில் நாம், தேவனைப் போன்று பூரணசற்குணராகுதல் என்ற உன்னதமான இலக்கை ஒருக்காலும் அடைய இயலாதிருக்கலாம், ஆனால் நாம் அவ்வாறு ஆவதற்கு முயற்சி செய்ய வேண்டும். J. W. மெக்கார்வீ அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> இந்தப் பூரணத்தன்மையை அடைதல் என்பது ... மனிதர்களுக்குச் சாத்தியமற்றதாக உள்ளது; இருப்பினும் இதில் குறைவுபடுதல் எதுவும் நாம் எப்படி இருக்க வேண்டுமோ, அப்படி இருப்பதில் குறைவுபடுதலாக உள்ளது. மனிதர் மிக அதிகமாக சாதிக்க இயலாதவராக இருக்கையில் [*sic*], தேவன் குறைவானதை கேட்க இயலாது; ஏனெனில் குறைவாகக் கேட்டல் என்பது பூரணமற்றதாக உள்ளதில் திருப்தி அடைவதை மறைமுகமாக உணர்த்துகிறது, இது தேவனுடைய பண்பிற்குச் சீர்பொருத்தம் இல்லாததாக இருக்கும். இதைக் கேட்டல் என்பது மனிதர் தமது தாழ்நிலையை என்றென்றும் நினைவுபடுத்திக் கொண்டு, அதே வேளையில் தம்மைத் தமது மாதிரிக்கு மிக அருகில் இருக்கும் அணுகுமுறைக்கு என்றென்றும் போராடும்படி காத்துக் கொள்ளுவதாக உள்ளது.[27]

"மனிதர் தமது தாழ்நிலையை என்றென்றும் நினைவுபடுத்திக் கொண்டு" என்ற வார்த்தைகளுடன் நான், "மற்றும் தேவனுடைய கிருபையும் இரக்கமும் தமக்குத் தேவை என்பதைத் தொடர்ந்து நினைவுப்படுத்திக் கொண்டு" என்பதைக் கூட்டுவேன்.

முடிவுரை

வேதாகமம், வசனத்தை நாம் இருக்க வேண்டிய பிரகாரம் இருக்கிறோமா என்று பார்க்கும் ஒரு கண்ணாடிக்கு ஒப்பிடுகிறது (யாக்கோபு 1:23). எனக்குக் கண்ணாடிகளில் விருப்பம் இல்லை. நான் எவ்வளவு வயதானவன் ஆகிறேனோ அவ்வளவுக்கு கண்ணாடியில் என்னைக் காண்பதை நான் குறைவாக விரும்புகிறேன். நான் எனது குளியல் அறையில் உள்ள கண்ணாடியில் என்னைப் பார்த்தல் என்பது என்னைச் சங்கடப்படுத்துகிறது என்றால், வசனம் என்ற கண்ணாடியில் என்னைக் கண்டு, நான் இருக்க வேண்டிய பிரகாரம் இருப்பதில்லை என்று உணர்ந்தறிவது எவ்வளவு அதிகம் சங்கடம் உடையதாக இருக்க வேண்டும்!

> "... உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்" (மத்தேயு 5:44).
>
> "உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன?" (வசனம் 46அ).
>
> "ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண

சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" (வசனம் 48).

"தேவனே, எல்லா மக்களையும், எங்களைத் தவறாக நடத்துபவர்களையும்கூட அன்புகூர எங்களுக்கு உதவும். தேவனே, இன்னும் அதிகமாக உம்மைப் போல் ஆவதற்கு எங்களுக்கு உதவும்!"

குறிப்புகள்

[1]Adapted from Coy Roper, "How to Live in a Sinful World," sermon preached at Trent church of Christ, Trent, Texas, 8 January 2006. [2]Augustine *Our Lord's Sermon on the Mount* 1.19.58. [3]*இருப்பினும் இதே அதிகாரம் "அந்நியர்களுக்கு" (யூதர் அல்லாதவர்களுக்கு) உபகாரம் செய்தலையும் இணைத்துக் கூறுகிறது (லேவியராகமம் 19:33, 34).* [4]*இந்த சங்கீதங்கள் "சாபமிடும் சங்கீதங்கள்" என்று அழைக்கப்படுகின்றன.* [5]*காண்க யாத்திராகமம் 23:4, 5; நீதிமொழிகள் 24:17.* [6]*கும்ரான் சமூகம் என்போர், எஸ்ஸென்ஸ் என்ற பிரிவினரின் பகுதியினராக இருந்தனர். கும்ரான் சமூகத்தின் உறுப்பினர்கள் சவக்கடலுக்கு அருகில் வாழ்ந்தனர். அவர்கள் சவக்கடல் சுருள்கள் நிமித்தம் நன்கு அறியப்படுகின்றனர்.* [7]Scroll 1QS 1.4, 10; quoted in David Hill, *The Gospel of Matthew,* New Century Bible Commentary series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972), 129. [8]*ஒன்று மக்காபேயர் என்ற ஏவுதல் பெற்றிராத புத்தகம், ஏற்பாடுகளின் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது, இது இனரீதியான அடக்கு முறையின் இவ்வகையைப் பற்றிக் கூறுகிறது.* [9]*இந்தச் சொற்றொடர் யோவான் 6:60ல் இருந்து கடனாகப் பெறப்பட்டுள்ளது.* [10]"Pearls Before Pigs: Words of Wisdom and Pleasantry" (http://home.no.net/krrakvag/pearlsf2.htm; Internet; accessed 12 June 2008).

[11]Alfred Plummer, *An Exegetical Commentary on the Gospel According to Matthew* (London: Elliot Stock, 1910), 89. [12]*Agapao என்பது நமது வேதபாட வசனப் பகுதியில், 43 மற்றும் 46ம் வசனங்களிலும் "அன்பு" என்பதற்குரிய வார்த்தையாக உள்ளது.* [13]John R. W. Stott, *The Message of the Sermon on the Mount,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1978), 118. [14]*லூக்கா 6:27, 28ல் உள்ளது போன்ற சொற்றொடராக்கம் மத்தேயு 5:44ல் காணப்படுகிறது. மிகப்பழமையான கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகளில் மத்தேயு 5:44ல் இந்தச் சொற்றொடராக்கம் காணப்படுவதில்லை, ஆனால் லூக்கா சுவிசேஷம், "உங்கள் விரோதிகளை அன்புகூருங்கள்" என்று இயேசு கூறியபோது அவர் தமது சிந்தையில் கொண்டிருந்தது என்ன என்பதைத் தெளிவாக்குகிறது.* [15]*"தமது சூரியனை" என்ற சொற்றொடரைக் கவனியுங்கள். சூரியன் தேவனால் படைக்கப்பட்டது மற்றும் அது அவருக்கு உரியதாக உள்ளது.* [16]Dale Hartman, sermon preached at Eastside church of Christ, Midwest City, Oklahoma, 18 June 2006. [17]*சிலர் 45ம் வசனத்தை, உலகளாவிய இரட்சிப்பு என்பதைப் போதிக்கப் பயன்படுத்த முயற்சி செய்துள்ளனர், ஆனால் மலைப்பிரசங்கம் அந்தப் போதனையை மறுத்துரைக்கிறது (காண்க மத்தேயு 7:13, 14). இறையியல் அறிஞர்கள் (எல்லா மனிதர்களுக்கும் அருளப்படுகிற) தேவனுடைய "பொதுவான கிருபை" மற்றும் (இரட்சிக்கப்பட்டவர்கள் மீது மாத்திரம் அருளப்படுகிற) "இரட்சிக்கும் கிருபை" ஆகியவற்றைப் பற்றிப் பேசுகின்றனர்.* [18]Dale Hartman, sermon preached at Eastside church of Christ, Midwest City, Oklahoma, 25 October 2004. [19]KJV *வேதாகமத்தில் இவ்விடத்தில்* "publican" *என்று உள்ளது.* "Publicans" *என்பது பொது வருமானத்தை வசூல் செய்யும் ஆயக்காரர் ஒருவரைக் குறிக்கும் இலத்தீன் வார்த்தையில்*

இருந்து வருகிறது.

[20]KJV வேதாகமம் இவ்விடத்தில் "publican" என்றும், தமிழில் "ஆயக்காரர்" என்ற வார்த்தையை மறுபடியும் கொண்டுள்ளது, ஆனால் பழைய கையெழுத்துப் பிரதிகளில் "புறஜாதியார்" என்பதற்கான கிரேக்க வார்த்தை உள்ளது. [21]சமனான இடத்தில் செய்த பிரசங்கத்தில் உள்ள இணை வசனங்களில், இயேசு "பாவிகள்" என்று மாத்திரம் குறிப்பிட்டார் (லூக்கா 6:32, 33). [22]Adapted from Harold Fowler, *Matthew I,* Bible Study Textbook Series (Joplin, Mo.: College Press, 1968), 318. [23]Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 51. [24]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 995. [25]மத்தேயு 5:48ம் வசனம் இந்தப் பிரசங்கத்தின் திறவுகோல் என்று பலரால் கருதப்படுகிறது. அவ்வாறு இருக்கும் என்றால் இது, இவ்வசனத்திற்கு முந்திய அறைகூவலுடன் மாத்திரமல்ல, ஆனால் இந்தப் பிரசங்கத்தின் எல்லா அறைகூவல்களுடனும் தொடர்புடையதாக உள்ளது. [26]William Barclay, *The Gospel of Matthew,* vol. 1, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 177-78. தேவையென்றால் உங்கள் பகுதியில் பயன்படுத்தப்படும் பொதுவான கருவியொன்றின் பெயரை இவ்விடத்தில் பதிலியாகப் பயன்படுத்துங்கள். [28]J. W. McGarvey, *The New Testament Commentary,* vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., 2006), 61.

9

கும்பலின் பாராட்டை நாடுதல்

(மத்தேயு 6:1–4)

மத்தேயு 5ஆம் அதிகாரத்தில் இயேசு, தமது சீஷர்களை வழிநடத்த அடிப்படைக் கொள்கைகளைக் கொடுத்துப் பின்பு அவற்றை விவரித்தார். 6ம் மற்றும் 7ம் அதிகாரங்களில், அன்றாட கிறிஸ்தவ வாழ்வு தொடர்பான விஷயங்கள் மீது வலியுறுத்தம் உள்ளது. டி. மார்ட்டின் லாயிட் - ஜோன்ஸ் அவர்கள், இந்த அதிகாரங்கள் "வாழ்வு என்று அழைக்கப்படும் இந்த புனிதப் பயணத்தில், தங்கள் பிதாவுடன் பிள்ளைகள் என்ற உறவு முறையில் உள்ளவர்கள் தங்கள் வழியில் மெல்ல நடக்கும் ஒரு சித்தரிப்பை" முன்வைக்கின்றன என்று எழுதினார்.[1] இந்தப் பாடம், இயேசுவின் சீஷர் என்ற வகையில் எவ்வாறு வாழ்வது என்பதன் மீதான புதிய வலியுறுத்தத்தை அறிமுகப்படுத்தும்.

இந்தப் பாடத்திலும் இதைத் தொடர்ந்து வரும் அடுத்த இரு பாடங்களிலும் நாம், 6ம் அதிகாரத்தின் முதல் பதினெட்டு வசனங்களைப் படிப்போம். இவ்வசனங்கள், மலைப்பிரசங்கத்தின் அடுத்த ஒரு புதிய பிரிவாக உள்ளன, ஆனால் அவற்றை, இயேசு ஏற்கனவே கூறியுள்ளவற்றில் இருந்து பிரிக்க இயலாது. முந்திய பகுதியில் அவர், தவறான செயலைப் போன்றே தவறான எண்ணமும் மோசமானதாக உள்ளது என்று வலியுறுத்தினார் (5:22அ, 28). இவ்வசனங்களில் அவர், இன்னும் ஒரு படி மேலே சென்று, தவறான சிந்தனையானது சரியான செயலைக்கூடத் தவறானதாக்க முடியும் என்று குறிப்பிட்டார். மேலும் நாம் இங்கு, பின்வரும் அறைகூவலைக் கொடுத்த முந்திய பிரிவின்[2] முடிவுடன் ஒரு தொடர்பைக் காணலாம்: "ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" (5:48). ஒருவேளை இயேசு, நீங்கள் அந்தப் பூரணத் தன்மையை எவ்வளவு அடைந்தாலும், "மனிதர்கள் உங்களைக் கண்டு உங்களைப் பாராட்டும் வகையில் அதை [பூரணத்தன்மையை] காட்சிப்படுத்தாதீர்கள்" என்று மறைமுகமாக உணர்த்தி இருக்கலாம்.

குறிப்பாக நாம், 5:20 மற்றும் இந்தப் புதிய பிரிவு ஆகியவற்றிற்கு இடையில் ஒரு உறவைக் காணுகிறோம். 5:20ல் இயேசு, "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்று கூறினார். 5ம் அதிகாரத்தின் அதிகமான பகுதியில், வேதபாரகர் மற்றும் பரிசேயர்களின் நீதியைக் காட்டிலும் அதிகமாக நீதியுள்ளவர்களாக இருப்பதும், தவறான சிந்தனைகள் மற்றும் தவறான செயல்கள் ஆகியவற்றிற்கு எதிராகக் காத்துக் கொள்ளுதலுமே அறைகூவலாக இருந்தது. மத்தேயு 6:1-18ல், சரியான நோக்கங்களைக் கொண்டிருத்தல் என்ற விஷயத்தில், வேதபாரகர் மற்றும் பரியேர்களின்[3] நீதியைக் காட்டிலும் அதிக நீதி உடையவர்களாகத் தம்மைப் பின்பற்றுபவர்கள் இருக்க வேண்டும் என்பதே

அவரது அறைகூவலாக உள்ளது.

இந்தப் பாடமானது மத்தேயு 6ன் முதல் நான்கு வசனங்களின் மீது முதன்மையாக அமையும், ஆனால் இது இந்த முழுப் பகுதிக்கும் (வசனங்கள் 1-18) ஒரு அறிமுகமாகவும் பணியாற்றும். இந்தப் பாடத்தை நான் "கும்பலின் பாராட்டை நாடுதல்" என்று அழைக்கிறேன். இந்தப் பாடம் வளருகையில் இந்தத் தலைப்பிற்கான காரணம் தெளிவாகும்.

ஒரு எச்சரிக்கை (6:1)

தகுதியற்ற ஒரு காரணம்

நமது வேதபாட வசனப்பகுதி ஒரு பொதுவான எச்சரிக்கையுடன் தொடங்குகிறது: "மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்குமுன்பாக உங்கள் தர்மத்தை [நீதியை]ச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை" (வசனம் 1). இவ்விடத்தில், "நீதி" (*dikaiosune*) என்பது 5:20ல் இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்ட வகையிலேயே, சரியானதைச் செய்தல் என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. "சரியானதைச் செய்தல்" என்பதற்கான மூன்று உதாரனங்கள் தரப்படுகின்றன: ஏழைகளுக்குக் கொடுத்தல் (6:2), ஜெபித்தல் (வசனம் 5) மற்றும் உபவாசித்தல் (வசனம் 16).

இயேசு, "மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக" நீதியான செயல்களைச் செய்தலுக்கு எதிராக எச்சரித்தார். இவ்வார்த்தைகளில் சிலர், 5:16ல் அவரது அறிவுறுத்துதல்களுக்கு நேர்மாறு ஒன்றைக் காணுகின்றனர்: "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது." இருப்பினும் மற்றவர்கள் *காணும்படி* ஒரு விஷயத்தைச் செய்வதற்கும் மற்றவர்களால் *காணப்படும்படி* ஒரு விஷயத்தைச் செய்வதற்கும் இடையில் ஒரு வேறுபாடு உள்ளது. உட்கருத்தின் நோக்கம் என்பதே 5:16 மற்றும் 6:1 ஆகியவற்றிற்கு இடையில் உள்ள அடிப்படை வேறுபாடாக உள்ளது: 5:16ல் தேவனை மகிமைப்படுத்துதல் என்பது இலக்காக உள்ளது; 6:1ல் ஒருவர் தமது சுயத்தை மகிமைப்படுத்துதல் என்பது இலக்காக உள்ளது.

ஏற்றுக்கொள்ளப்படாத தேவபக்தி

6:1ஐத் தொடர்ந்துள்ள மூன்று உதாரணங்களில் இயேசு, மனிதர்களால் கவனிக்கப்படும் வகையில் தங்கள் நீதியை நடைமுறைப்படுத்துபவர்களை "மாயக்காரர்" என்ற வார்த்தையால் பெயரிட்டு அழைத்தார் (வசனங்கள் 2, 5, 16). "மாயக்காரர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, முதல் நூற்றாண்டில், மேடையில் தமது முகத்தின் முன்பாக ஒரு முகமூடியைப் பிடித்துக் கொண்டிருந்த ஒரு நடிகரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. ஒருவர் தமது உண்மையான இயல்பை மறைப்பதற்கு ஆவிக்குரிய வகையிலான ஒரு முகமூடியைப் பயன்படுத்துவதைக் குறிப்பிட இந்தச் சொற்றொடரை இயேசு பயன்படுத்தினார்.

ஆவிக்குரிய வகையிலான இந்த மேடை - நடிகர்கள், நற்செயல்கள் செய்வதாகத் தோற்றம் அளித்தார்கள், ஆனால் உண்மையில் அவர்கள் ஒரு

நடிப்பையே கொடுத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் நாடகத்துவமான விஷயத்தில் நுட்பத்திறன் கொண்டிருந்தனர். தாரைகள் ஊதி ஒரு கும்பலை கூட்டிய பின்பு அவர்கள் ஏழைகளுக்குக் கொடுத்தனர் (வசனம் 2). அவர்கள் ஜெபித்தபோது, பொது இடங்களில் அவர்கள் நாடகத்துவமாக நின்று, கைகளையும் முகங்களையும் மேல்நோக்கி உயர்த்தி, நீண்ட மற்றும் உரத்த குரலில் ஜெபித்தனர் (வசனங்கள் 5, 7). அவர்கள் உபவாசித்தபோது, தாங்கள் எவ்வளவு ஆழமான ஒப்புக்கொடுத்தல் உள்ளவர்களாக இருந்தனர் என்பதைக் கொண்டு பிறரின் மனங்களை ஈர்க்கும்படியாக, ஆழ்ந்த துக்கம் கொண்ட நபருக்குரிய உடைகளையும் ஒப்பனையையும் அணிந்துகொண்டனர்.

1ம் வசனத்தில் "காணவேண்டுமென்று" என மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, "theater" என்ற வார்த்தையை நாம் பெற்றுக்கொள்கிற *theatron* என்ற வார்த்தைக்கு உறவுவார்த்தையாக உள்ளது.[4] உலகம் என்பதே மாயக்காரரின் மேடையாக இருந்தது, மற்றும் கும்பலே அவர்களின் கேட்போர் கூட்டமாக இருந்தது. நிகழ்ச்சி நடத்தும் ஒவ்வொருவராலும் நாடப்பட்டதே அவர்களின் இலக்காக இருந்தது: தங்கள் கேட்போர் கூட்டத்திடம் இருந்து மனப்பூர்வமான கைதட்டல். அவர்கள் அதைப் பெற்றுக்கொண்டனர் என்பது உறுதி, ஆனால் இது மாத்திரமே அவர்கள் பெற்றுக்கொள்ளும் எல்லாமுமாக இருந்தது. ஒவ்வொரு உதாரணத்தின் முடிவுக்கு அண்மையிலும் இயேசு, "... அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார் (வசனங்கள் 2, 5, 16). "அவர்கள் ... அடைந்து தீர்ந்ததென்று" என்ற வார்த்தைகள், "தொகையை முழுமையாகப் பெற்றுக்கொண்டு அதற்கு ஒரு வரவுச்சீட்டைக் கொடுத்தல்" என்று அர்த்தப்படுத்திய வர்த்தகரீதியான *apecho* என்ற சொற்றொடரில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.[5] அவர்களின் நிகழ்ச்சி முடிந்து, பூமிக்குரிய வகையில் அவர்கள் பெற்றுக்கொண்ட பாராட்டும் முடிந்து போனதும், அவர்களின் வாழ்வின் பதிவேட்டின்மீது தேவன், "முற்றிலும் செலுத்தப்பட்டாயிற்று" என்று எழுதுவார். அதுவே அவர்கள் பெற்றுக்கொள்ளும் எல்லாமுமாக இருக்கும். இயேசு, "... பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை" என்று கூறினார். என்ன ஒரு கவலைமிகுந்த வார்த்தைகள்! நித்திய பலன்களுக்குப் பதிலாக பூமிக்குரிய பாராட்டுகள் பரிவர்த்தனஞ் செய்யப்பட்டன.

நாம், மனிதகுலம் என்ற காணப்படக்கூடிய கேட்போர் கூட்டத்தையும் "அந்தரங்கத்தில் பார்க்கிற நம் பிதா" என்ற காணப்படாத கேட்பவரையும் கொண்டிருக்கிறோம் (வசனங்கள் 6, 18). முடிவில் தேவனே பொருட்படுத்தப்படக் கூடிய கேட்பாளராக இருக்கிறார். 1ம் வசனத்தை NEB வேதாகமம் பின்வருமாறு தரவழைக்கிறது: "மனிதர்களுக்கு முன்பாக உங்கள் தேவபக்தியைக் காட்சிப்படுத்தாமல் இருக்கும்படி எச்சரிக்கையாயிருங்கள்; அப்படிச் செய்தால், பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதாவின் வீட்டில் உங்களுக்குப் பலன் எதுவும் காத்திருப்பதில்லை."

ஒரு உதாரணம் (6:2-4)

பொதுவான எச்சரிக்கையைக் கொடுத்த பின்பு இயேசு, மூன்று உதாரணங்களைக் கொடுத்தார்: "யூதத்துவ சமயப்பற்றின் மூன்று பிரதான செயல்கள்."[6] இந்த மூன்றும், நமது தேவபக்தி தன்னைத்தானே

வெளிப்படுத்துகிற அடிப்படை வழிகளுடன் தொடர்புடையன என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது: மற்றவர்களிடத்தில் (பரிவிரக்க உதவி), தேவனிடத்தில் (ஜெபம்) மற்றும் தன்னிடத்தில் (சுய மறுப்பு). ஒவ்வொரு உதாரணமும் ஒரே வகையான மாதிரியைப் பின்பற்றுகிறது: எதைச் செய்யக்கூடாது மற்றும் அதன் பின்பு, எதைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு விஷயத்திலும் இயேசு, விவரிக்கப்பட்ட செயல்களுக்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய பலன்கள் என்ன என்பதைக் குறிப்பிட்டார்.

இப்போது நாம், இந்த உதாரணங்களில் முதலாவதைக் காண்போமாக. மற்ற இரண்டும் நமது அடுத்த பாடத்தில் எடுத்துரைக்கப்படும்.[7]

ஏழைகளுக்கு உதவுவதை எவ்வாறு
***செய்யக்கூடாது* (வசனம் 2)**

ஏழைகளுக்குக் கொடுத்தல் என்பது முதல் உதாரணமாக உள்ளது. "யூதர்களுக்கு, தர்மம் பண்ணுதல் என்பது சமயக் கடமைகள் யாவற்றிலும் மிகவும் பரிசுத்தம் வாய்ந்ததாக இருந்தது."[8] இயேசு, "ஆகையால் நீ தர்மஞ்செய்யும்போது, மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே" என்று கூறினார் (வசனம் 2அ). KJV வேதாகமத்திலும் தமிழ் வேதாகமத்திலும் "தர்மஞ்செய்யும்போது" என்றுள்ளது, ஆனால் பிற ஆங்கில மொழிபெயர்ப்புகளில் "ஏழைகளுக்குக் கொடுக்கும்போது" என்றுள்ளது.[9] 2ம் வசனத்தில் உள்ள *eleemosune* என்ற கிரேக்க வார்த்தை "இரக்கம் காண்பித்தல்" என்று அர்த்தப்படுகிறது.[10] இது, ஒரு பொதுவான வழிவகையில் பரிவிரக்கச் செயல்களைக் குறிப்பதற்கும், குறிப்பாக ஏழைகளுக்கு உதவுதலைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது.[11] இந்த உதவி என்பது பணமாக அல்லது பிற உதவியாக இருக்கலாம்; தேவைப்பட்டிருந்த எந்த விஷயத்தையும் இவ்வார்த்தை குறிப்பிட்டது.

பழைய ஏற்பாடு, ஏழைகளுக்கு உதவுதல் மீது மாபெரும் வலியுறுத்தத்தை வைக்கிறது. மோசேயின் மூலமாகத் தேவன், "தேசத்திலே எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை; ஆகையால் உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும் எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறக்கவேண்டும் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்" என்று கூறினார் (உபாகமம் 15:11). சங்கீதங்களின் புத்தகத்தில், கர்த்தருக்குப் பயன்படுகிற மனிதர் பின்வருமாறு விவரிக்கப்படுகிறார்: "வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்" (சங்கீதம் 112:9).

இதே வலியுறுத்தம் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது. செல்வந்தரான இளம் அதிகாரிக்கு இயேசு, "... போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு" என்று கூறினார் (மத்தேயு 19:21). சகேயுவின் வீட்டிற்கு இயேசு வந்தபின்பு, சகேயு, "ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன்" என்று கூறினார் (லூக்கா 19:8). அப்போஸ்தலர்கள், பவுல் மற்றும் பர்னபா ஆகியோரிடத்தில் "தரித்திரரை நினைத்துக்கொள்ளும்படி" கூறினார்கள், அதற்குப் பவுல், தாம் "அப்படிச் செய்யும்படி கருத்துள்ளவனாயிருந்தேன்" என்று கூறினார் (கலாத்தியர் 2:10). மக்கெதோனியா மற்றும் அகாயாவில் இருந்த கிறிஸ்தவர்கள், "எருசலேமிலுள்ள

பரிசுத்தவான்களுக்குள்ளே இருக்கிற தரித்திரருக்காகச் சில பொருள்சகாயம் செய்ய விருப்பங்கொண்டு" இருந்தனர் (ரோமர் 15:26). தானதர்மம் செய்தல் என்பது சபைக்குத் தேவன் தந்துள்ள ஒரு பொறுப்பாக உள்ளது (காண்க கலாத்தியர் 6:10; யாக்கோபு 1:27).

மத்தேயு 6:1-18ல் உள்ள உதாரணங்கள் ஒவ்வொன்றிலும், கலந்துரையாடலின் கீழ் உள்ள செயல்முறையின் தொடர்ச்சியை இயேசு முன்னெதிர் நோக்கினார். ஏழைகளுக்கு உதவுதல் பற்றி அவர், "நீங்கள் தர்மம் *பண்ணினால்*" என்றல்ல ஆனால் "நீ தர்மஞ் *செய்யும்போது*" என்று கூறினார். இருப்பினும் நாம், ஏழைகளுக்குக் கொடுத்தலில், மற்றவர்களுக்கு உதவுதலில், ஒரு சரியான வழியையும் ஒரு தவறான வழியையும் காணுகிறோம். அதைப்பற்றிய ஒரு முன்கொணர்வை ஏற்படுத்துதல் - உருவகமாகப் பேசுவதென்றால், ஒரு தாரையை ஊதுவித்தல் - என்பது தவறான வழியாக உள்ளது.

தாரை பற்றிய குறிப்பு நேர்ப்பொருள் கொண்டதா அல்லது அரைச்சிரிப்பான மிகைக்கூற்றா என்பதைப் பற்றி நாம் நிச்சயமாக எதுவும் கூற இயலாது. தர்மம் பண்ணுதலுக்கு முன் ஒரு தாரையை ஊதுவித்தல் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் எதுவும் இல்லாதிருக்கையில்,[12] இதற்கு ஒப்பீடாகக் கூறக்கூடிய வகையில், பணக்கார மனிதர்கள் ஏழைகளுக்குத் தண்ணீர்த் துருத்திகளை[13] வாங்கும்போது செய்யும் செயல் பற்றிய சூழ்நிலையின் விபரங்களை நாம் கொண்டிருக்கிறோம். தண்ணீரை விற்பவர், ஏழைகள் வந்து பருகும்படி உரத்த குரலில் கூவுவார். தண்ணீருக்காகப் பணம் செலுத்தியவர், பருக வரும் ஏழைகளிடம் இருந்து நன்றி நிறைந்த வாழ்த்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு புறம் நின்றுகொண்டிருப்பார்.[14]

தனிநபர்கள், ஏழைகளுக்கு உதவிசெய்யும்போது, ஒரு தாரையை ஊதுவிப்பதைப் பற்றி நீங்கள் வாசிக்கும்போது, நீங்கள் யாரைப் பற்றி நினைக்கிறீர்கள்? எனது மனமானது, தாங்கள் செய்யும் தர்மம் ஒவ்வொன்றும் அதிகமான விளம்பரத்தைப் பெறுவதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு, விளம்பரம் செய்பவர்களைக் கூலிக்கு அமர்த்திக் கொள்ளும் செல்வந்தர்களான தனிநபர்கள் பற்றி நினைக்கச் செல்வது குறித்து நான் அச்சம் அடைகிறேன். அவர்கள் தங்கள் புகைப்படங்கள் பத்திரிக்கைகளில் வரும்படியும் தாங்கள் மனிதகுலத்திற்குப் பெரிய உபகாரிகள் என்று பாராட்டுதல் பெறும்படியும் செய்து கொள்கின்றனர். அவர்கள் எவ்வளவு பணம் கொண்டிருக்கின்றனர் என்பதைப் பற்றியும் அவர்கள் தங்களின் பெரிய நன்கொடைகளை வரிவிலக்குக்காகக் காண்பிக்க முடியும் என்பதைப் பற்றியும் நான் நினைக்கிறேன். பின்பு நான் எனது தலையைத் தொங்கப் போட்டுக் கொள்கிறேன், ஏனெனில் இயேசு, மற்றவர்களை நியாயந்தீர்ப்பதற்கு அல்ல ஆனால் எனது சொந்த இருதயத்தைப் பரிசோதனை செய்து கொள்ளவே இந்த உதாரணத்தைக் கொடுத்தார். நான் பிறருக்கு உதவிசெய்யும் போது, அவர்களிடத்தில் இருந்து நன்றியை எதிர்பார்க்கிறேனா? அவர்களின் நன்றிகளை நான் பெறாவிட்டால், நான் ஏமாற்றம் அடைகிறேனா? நான் பூமிக்குரிய வகையிலான பாராட்டை எதிர்பார்க்கிறேனா?

1 கொரிந்தியர் 13ல் தவறான நோக்கங்களுடன் ஏழைகளுக்குக் கொடுத்தல் பற்றிப் பவுல் பேசினார்: "எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், ... அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப்

பிரயோஜனம் ஒன்றுமில்லை" (வசனம் 3). தவறான காரணத்திற்காக மற்றவர்களுக்கு உதவுபவர்கள் பற்றி இயேசு, "அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார் (மத்தேயு 6:2ஆ). அவர்கள் செய்வது, உதவியைப் பெற்றுக் கொள்பவர்களுக்குப் பலன் தருகிறது, ஆனால் அது உதவியைக் கொடுப்பவர்களுக்குப் பலன் தருவதில்லை. பிலிப்ஸ் அவர்களின் வேதாகம மொழிபெயர்ப்பில் 2ம் வசனத்தின் முடிவுப் பகுதி, பின்வருவது போன்று தரவழைக்கப்பட்டுள்ளது: "என்னை நம்புங்கள், அவர்கள் தாங்கள் பெறவிருந்த பலன் எல்லாவற்றையும் பெற்றாயிற்று!"

ஏழைகளுக்கு உதவுவதை எவ்வாறு செய்யவேண்டும் (வசனங்கள் 3, 4)

அப்படியென்றால் நாம் ஏழைகளுக்குக் கொடுத்தலை எவ்வாறு செய்ய வேண்டும்? இயேசு, "நீயோ தர்மஞ்செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது" என்று கூறினார் (வசனங்கள் 3, 4).

இது, எல்லாக் கொடுத்தலும் இரகசியமானதாக, வேறு எவரொருவரும் அறியக் கூடாததாக இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுவதாகச் சிலர் எடுத்துக் கொண்டுள்ளனர். கடந்த காலத்தில், சபைக்குழுமங்கள் காணிக்கைப் பைகளைப் பயன்படுத்துதல் என்பது சாதாரண வழக்கமாக இருந்தது. பை ஒவ்வொருவரிடத்திலும் கடந்து செல்லும்போது, உறுப்பினர்கள் தங்களின் மூடிய கைமுட்டிகளைப் பைக்குள் இடுவார்கள். அதன் மூலம், கொடுக்கப்பட்டது என்ன என்பதையோ அல்லது ஏதாவது கொடுக்கப்பட்டதா என்பதையோகூட எவரொருவரும் அறிய இயலாதிருந்தது. மற்றவர்கள், இவ்வசனப் பகுதி, தங்களின் உபகாரச் செயல்கள் யாவையும் பெயரற்ற வகையில் செய்யப்பட வேண்டும் என்று முடிவு செய்துள்ளனர்.[15] தேவனுக்கு மதிப்பு அளிக்கப்படும் வரையில் அதைப் பற்றித் தவறு எதுவும் இல்லை.

இருப்பினும், புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் கொடுக்கப்பட்ட யாவும் இரகசியமானதாக இருந்ததில்லை. ஏழை விதவையின் காணிக்கை பற்றி இயேசு தமது சீஷர்களுக்குக் கூறினார் (மாற்கு 12:41-44). பர்னபாவின் பெருந்தன்மை பற்றி மற்றவர்கள் அறிந்திருந்தனர் (நடபடிகள் 4:34-37). கொரிந்தியர்களை கொடுக்கும்படி ஏவுவதற்குப் பவுல், மக்கெதோனியர்களின் தாராள குணத்தைப் பற்றிய செய்தியைப் பயன்படுத்தினார் (2 கொரிந்தியர் 8:1-5; 9:1-5). கொடையைப் பற்றிப் பிறர் அறிய அனுமதித்தல் பற்றியல்ல, ஆனால் புகழ்ச்சியை விரும்பும் நோக்கத்துடன் கொடுத்தல் பற்றியே இவ்விடத்தில் கவலைக்குரிய அக்கறை உள்ளது. தேவையில் உள்ளவர்களுக்கு உதவிசெய்ய பர்னபா கொடுத்தல் மற்றும் பர்னபா பெற்ற அதே அங்கீகாரத்தைப் பெறுவதற்காக ஒரு முயற்சி என்ற வகையில் அனனியாவும் சப்பீராளும் "கொடுத்தல்" ஆகியவற்றிற்கு இடையில் வேறுபாடு உள்ளது (காண்க நடபடிகள் 4:36-5:8).

அப்படியென்றால், உங்கள் வலது கை செய்வதை உங்கள் இடது கை அறியாதிருக்கட்டும் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? இங்கு நாம் நகைச்சுவையின் தொடுதல் ஒன்றைக் கொண்டிருக்கலாம். கேலிச்சித்திரத் துண்டுப்படங்களை என்னால் கற்பனை செய்துகொள்ள முடிகிறது. முதல்

சட்டகத்தில், வலது கையானது ஒரு ஏழை மனிதருக்கு ஒரு நாணயத்தைக் கொடுத்து, அந்தக் கையானது "இது உதவியாயிருக்கும் என்று நான் நம்புகிறேன்" என்று கூறுகிறது. அடுத்த சட்டகத்தில், இடது கை, "ஏய், வலது கையே, நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்?" என்று கேட்கிறது. ஒரு முக்கியமான குறிப்பிற்குப் பின்வருவதை ஆழ்ந்து சிந்தியுங்கள்: வலது கை என்ன செய்கிறது என்பதை இடது கை எவ்வாறு அறிகிறது? இப்படிப்பட்ட தகவல்கள் யாவும் மூளையில் இருந்து வருகிறது. இயேசு, "நீங்கள் கொடுக்கும்போது, நீங்கள் செய்துள்ள நன்மையை உங்கள் *மனதில்* தங்கவிடாதீர்கள்." "நீங்கள் தாராளமாக இருந்ததற்கோ, அல்லது நல்லது செய்ததற்கோ நீங்கள் உங்களைப் பாராட்டாமலிருக்க 'உங்கள் சிந்தையிலிருந்து அந்த எண்ணங்களை உடனே அகற்றிப் போடுங்கள்' என்று கூற மிகைப்படுத்துதலைப் பயன்படுத்தினார்."

இங்கு நாம் மத்தேயு 6:1-18ன் முதன்மை ஆய்வுகருத்தின் விரிவாக்கம் ஒன்றைக் கொண்டுள்ளோம். இப்போது நாம், பிறரால் காணப்படுவதற்காக நமது நீதியான செயல்களைச் செய்யக்கூடாது என்ற கருத்தினால் மனம் கவரப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும் இந்தச் செயல்களை எவரொருவரும் அறியாத வண்ணம் செய்தலும், அவை நமது சொந்த மனங்களில் தங்கியிருக்கும்படி, அப்படிப்பட்ட நீதியுள்ள தனிநபர்களாக இருத்தலுக்காக, நமது மனங்களை சுயபாராட்டுதல்களினால் நிரப்பிக் கொண்டு செய்வதற்குச் சாத்தியக்கூறு உள்ளது. பை என்று சொல்லக்கூடிய மென்மையான கேக் ஒன்றினுள் விரலை விட்டு ஒரு பிளம் பழத்தை வெளியே எடுத்து, "நான் எவ்வளவு நல்ல பையன்!" என்று கூறிய ஒரு சிறுவனைப் பற்றி, குழந்தைகளுக்கான பாடல் ஒன்று கூறுகிறது. நமது சிந்தனைகளில் நாம், "நாங்கள் எவ்வளவு நல்ல பையன்களாக மற்றும் பெண்களாக இருக்கிறோம்!" என்று கூறக் கூடாதவர்களாக இருக்கிறோம். கிறிஸ்தவ கொடுத்தல் என்பது சுய தியாகத்தினால் மாத்திரமல்ல, ஆனால் சுயத்தை மறக்கிறதினாலும் பண்புபடுத்தப்பட வேண்டியதாக உள்ளது.[16]

நீங்கள் கொடுக்க வேண்டிய பிரகாரம் கொடுக்கும்போது, "அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்" (மத்தேயு 6:4ஆ).[17] தேவன் "அந்தரங்கமாகச் செய்யப்படுகிறதைக் காணுகிறார்" ஏனெனில், "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்" (எபிரெயர் 4:13). "தேவன் மாத்திரமே காணுகிறபகுதியே கிறிஸ்தவரின் வாழ்வில் மிகவும் முக்கியமான பகுதியாக உள்ளது" என்று கூறப்பட்டு இருக்கிறது.[18] நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதையும் ஏன் அதைச் செய்கிறீர்கள் என்பதையும் தேவன் அறிகிறார். நீங்கள் சரியான விஷயங்களைச் சரியான காரணங்களுக்காகச் செய்தால், தேவன் "உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்" என்று இயேசு கூறினார்.

"உனக்கு ... பலனளிப்பார்" என்ற வார்த்தைகள் சிலரது கவலைக்குக் காரணமாகின்றன. "பலன் (மீதான) தூண்டுதல் பெற்ற நோக்கம்" என்று குறைத்து மதிப்பிடுகின்றனர். குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நற்செயல்கள் அல்லது குறிப்பிட்ட தொகையைத் தர்மம் கொடுத்தல் என்பது நமக்குப் பரலோகத்தில் ஒரு இல்லத்தை ஈட்டித்தரும் என்று நாம் ஒருபோதும் நினைக்கக் கூடாது, ஏனெனில் நாம் *கிருபையினால்* இரட்சிக்கப் பட்டிருக்கிறோம் (ரோமர் 6:23; எபேசியர் 2:8). இருந்தபோதிலும், தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள்

தண்டிக்கப்படுகையில் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிபவர்கள் பலன் அளிக்கப்படுவார்கள் என்ற உண்மையைப் பற்றி வேதாகமம் அதிகமாய் கூறுகிறது (எடுத்துக்காட்டாக, மத்தேயு 5:12; 10:42; 25:14-46 ஆகிய வசனங்களைக் காணவும்).

மத்தேயு 6:4ன் "பலன்" என்பது என்னவாக உள்ளது மற்றும் அது எப்போது தரப்படும் என்பவை பற்றி, விளக்கவுரையாளர்கள் கருத்து வேறுபடுகின்றனர். இந்த பலனுக்கு ஒரு உடனடி அம்சம், ஒரு தொடர்ச்சியான அம்சம் மற்றும் ஒரு நிறைவான ஒரு அம்சம் உள்ள சாத்தியக்கூற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். நமது வேதபாட வசனப்பகுதியில் உள்ள <u>உடனடியான அம்சம் பற்றி</u>, இந்த பலன் என்பது மனிதர்களால் அங்கீகரிக்கப்படுவதற்கு நேர்மாறானதாக உள்ளது, எனவே இது தேவனால் அங்கீகரிக்கப்படுவதாக இருக்கும். (அரங்கத்தின் ஒப்புவமைக்குத் திரும்பிச் சென்று, இதைத் தேவனுடைய <u>பாராட்டுதல்</u> என்ற வகையில் சிந்தித்துப்பாருங்கள்.) இந்த பலனின் <u>தொடர்ச்சியான அம்சம்</u> என்பது, நாம் தேவனிடத்தில் நெருக்கமாக மற்றும் இன்னும் நெருக்கமாகக் கிட்டிச் சேர்ந்து, அவரைப் போல் ஆகிறோம் (மத்தேயு 5:48). நாம் அவரது பலத்தின் மீது கிட்டிச்சேருகையில், நாம் அவரது அன்பைப் பற்றி அதிகமாய் அறிகிறோம். நித்திய ஜீவன் என்பது இந்த பலனின் <u>நிறைவான அம்சமாக</u> உள்ளது, அது பிதாவுடன் முடிவற்ற காலம் நாம் வாழும் வாழ்வாக உள்ளது. மத்தேயு 25ன் நியாயத்தீர்ப்பு காட்சியில் நாம் பின்வருமாறு வாசிக்கிறோம் (தேவையில் உள்ளவர்களுக்கு உதவுதல் மற்றும் அதன் விளைவு மீது வலியுறுத்தம் உள்ளதைக் கவனியுங்கள்):

> "அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயுத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்; வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள்" என்பார் (வசனங்கள் 34-36).

முடிவுரை

மத்தேயு 6ன் முதல் பகுதியை, யூஜீன் பீட்டர்ஸன் அவர்கள் பின்வருமாறு பொழிப்புரை செய்தார்:

> "நீங்கள் நல்லவர்களாக இருக்க முயற்சி செய்யும்போது, அதைக் குறித்துக் காட்சிப்படுத்துதலை ஏற்படுத்தாமல் இருக்கும்படி விசேஷித்த கவனத்துடன் இருங்கள். அது ஒரு நல்ல அரங்கமாக இருக்கலாம், ஆனால் உங்களைப் படைத்த தேவன் பாராட்டமாட்டார்.
>
> வேறுயாருக்காகவேனும் நீங்கள் சிலவற்றைச் செய்யும்போது, உங்களை நோக்கி பிறரின் கவனத்தை ஈர்க்காதீர்கள். அவர்கள் செயலில் இருப்பதை நீங்கள் கண்டிருக்கிறீர்கள் மற்றும் ஜெபக் கூட்டத்தை இவ்விதமாக

நடத்துதல், தெருமுனையை ஒருமேடையைப் போலாக்குதல், யாரேனும் ஒருவர் கவனிக்கும் வரையிலும் இரக்கம் உள்ளவராக நடித்தல், கும்பலில் நடித்தல் ஆகிய இவை யாவற்றையும் செய்பவர்களைகுறித்து - 'நாடக நடிகர்கள்' என்று அவர்களை நான் அழைக்கிறேன் - நான் நிச்சயப்படுத்தியிருக்கிறேன். அவர்கள் பாராட்டுதல்களைப் பெறுகின்றனர் என்பது உண்மையே, ஆனால் அது மாத்திரமே அவர்கள் பெறுகிற எல்லாமுமாக இருக்கும். நீங்கள் யாருக்கேனும் உதவி செய்யும் போது, அது எவ்விதமாகக் காணப்படுகிறது என்பதைப் பற்றிச் சிந்திக்காதீர்கள். அதை - அமைதியாகவும் தன்னடக்கமாகவும் செய்யுங்கள் ..." (MSG).

பவுல் கலாத்தியருக்கு எழுதியபோது, அவர் "இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப்பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே" என்று கூறினார் (கலாத்தியர் 1:10). பவுலின் வார்த்தைகளைத் தழுவியமைத்துக் கொள்வதென்றால், நம்மில் ஒவ்வொருவரும், "நான் கும்பலின் பாராட்டை நாடுகிறேனா அல்லது தேவனுடைய பாராட்டை நாடுகிறேனா?" என்று கேட்டுக் கொள்வது அவசியமாகும். ஒரு எழுத்தாளர் பின்வருமாறு கூறினார்:

... மனந்திரும்புதலினாலும் துறத்தலினாலும் புறம்பே களைந்து போடப்பட்ட பழைய மனிதன் திரும்பவும் வந்து பழைய சுயத்தைச் சேவிக்கப் புதிய வடிவங்களை மேற்கொள்ளுதல் என்பது தேவபக்திக்கு உள்ள மாபெரும் அபாயமாக இருக்கிறது. அது பழைய மனிதனாக உள்ளது; அது இப்போது தேவபக்தியுடன் உள்ளது என்பதே ஒரே வேறுபாடாக இருக்கிறது.[19]

நீங்கள் என்னைப்போல் இருந்தால், மற்றவர்களிடம் இருந்து வரும் பாராட்டுக்காக இன்னும் ஏங்குகிற "பழைய மனிதனுடன்" நீங்கள் போராடுகிறீர்கள். தேவன் மீது நமது சிந்தனைகளை மையப்படுத்தவும் அவரது அங்கீகாரத்தைப் பற்றி மாத்திரமே அக்கறையாக இருக்கவும் தேவன் நமக்கு உதவுவாராக.

குறிப்புகள்

[1]D. Martyn Lloyd-Jones, *Studies in the Sermon on the Mount,* vol. 2 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 9. [2]சில பழங்காலக் கையெழுத்துப் பிரதிகள் "ஆனால்" என்பதற்கான கிரேக்க வார்த்தையுடன் மத்தேயு 6:1ஐத் தொடங்குகின்றன, இது 5:48ல் உள்ள சிந்தனையின் தொடர்ச்சி என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. [3]6:1-18ல் இயேசு, வேதபாரகர் மற்றும் பரிசேயர்கள் ஆகியோரைக் குறிப்பிடவில்லை, ஆனால் அவர், "மாயக்காரர்" பற்றிப் பேசினார் (வசனங்கள் 2, 5, 16). மத்தேயு 23ல் இயேசு, வேதபாரகர் மற்றும் பரிசேயர்கள் ஆகியோரின் இதேபோன்ற பாவங்களைப் பற்றிக் கலந்துரையாடியபோது, அவர்களை அவர் "மாயக்காரர்" என்று பெயரிட்டார். [4]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, Ltd., 1971), 191. [5]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 4th ed., rev. and aug. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago Press, 1957),

84. [6]D. A. Carson, "Matthew," *The Expositor's Bible Commentary,* vol. 8 (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1984), 162. [7]*அந்தப் பாடம் "தவறான காரணத்திற்காக சரியானதைச் செய்தல் (மத்தேயு 6:5-18)" என்று தலைப்பிடப்பட்டுள்ளது.* [8]William Barclay, *The Gospel of Matthew,* vol. 1, The Daily Study Bible Series (Edinburgh: Saint Andrew Press, 1956), 186. [9]*"தர்மம்" என்ற பழைய ஆங்கில வார்த்தை, இலத்தீன் மொழியில் இருந்து தரவழைக்கப்பட்டது, அது கிரேக்க மொழியில் இருந்து தரவழைக்கப்பட்டதாக இருந்தது. பல நூற்றாண்டுகளினூடே, eleemosune என்பது* "alms" *என்று மருவியுள்ளது.* [10]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 23.

[11]Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament,* abr., ed. Gerhard Kittel and Gerhard Friedrich; trans. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 223. [12]*மத்தேயு 6:2ஐ, உபவாசங்கள் மற்றும் பிற பரிசுத்த வேளைகளுக்கு முன்னர் எக்காளம் ஊதப்படுதலுடன் பிணைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; ஆனால் மத்தேயு 6:2ல் உள்ள தாரை என்பது சில பொது நிகழ்வுகளை அறிவிப்பவர்களால் அல்ல ஆனால் தர்மம் செய்பவரால் ஊதப்படும் தாரையாக இருந்தது.* [13]*தண்ணீர் என்பது பாலஸ்தீன தேசத்தில் ஏராளமாக இருந்ததில்லை. பஞ்சகாலத்தின்போது, அது தெருக்களில் விற்கப்பட்டது. இந்தத் தண்ணீரைச் சேகரித்து வைக்க, மிருகங்களின் தோல்களால் ஆன துருத்திகள் பயன்படுத்தப்பட்டன. உலகத்தின் சிலபாகங்களில் இன்றைய நாட்களிலும் தோல் துருத்திகள் இவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன.* [14]Ralph Sweet, *Moments on the Mount,* Living Word series (Austin, Tex.: R. B. Sweet Co., 1963), 42. [15]*லாயிட் டக்ளஸ் அவர்களால் தரப்பட்ட உன்னதமான ஆட்படுத்திக் கொள்ளுதல் என்பது இவ்வகையான இலக்கைக் கொண்டிருத்தலுக்கு ஒரு விவரிப்பாகப் பயன்படுத்தப்பட முடியும்.* [16]John R. W. Stott, *The Message of the Sermon on the Mount,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1978), 131. [17]KJV *வேதாகமத்தில் இந்த வாக்கியத்தின் முடிவில்* "openly" *என்றுள்ளது. மிகப்பழைய கையெழுத்துப் பிரதிகளில், இவ்விடத்தில்* "openly" *என்பதற்கான கிரேக்க வார்த்தை இருப்பதில்லை.* [18]Anonymous; quoted in Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 27. [19]Rudolf Eucken; quoted in E. Stanley Jones, *The Christ of the Mount* (New York: Abingdon Press, 1931), 202.

10

சரியான விஷயத்தைத் தவறான காரணத்திற்காகச் செய்தல்

[மத்தேயு 6:5-18]

கவிஞரும் நாடக ஆசிரியருமான T. S. எலியட் என்பவர், "கடைசிச் சோதனை மாபெரும் சூழ்ச்சியாக உள்ளது - சரியான செயலை மிகவும் தவறான காரணத்திற்காகச் செய்தல்," என்று எழுதினார்.[1] *"சரியான செயலை மிகவும் தவறான காரணத்திற்காகச் செய்த"* மக்களை வேதாகமத்தில் கண்டறிதல் என்பது கடினமானதாக இருப்பதில்லை. ஏரோது, இயேசுவைக் கண்ணோக்குதல் என்ற பாராட்டத்தக்க செயலைச் செய்யும்படி ஞானிகளிடம் கூறினான், ஆனால் அவன் அந்தப் பிள்ளையைக் கண்டறிந்து அதைக்கொலை செய்ய விரும்பியதால் அவர்கள் அதைத் தேடும்படி கூறினான் (மத்தேயு 2:7, 8, 16). யூதாஸ், பிரியத்தின் அடையாளமான ஒரு முத்தத்துடன் இயேசுவை வாழ்த்தினான்; ஆனால் இதை அவன் கும்பலுக்கு இயேசுவை அடையாளப்படுத்துவதற்காகச் செய்தான் (மத்தேயு 26:48, 49). அனனியாவும் சப்பீராளும் தங்களைக் காட்டிலும் பொருட்குறைவு கொண்டிருந்த சகோதர சகோதரிகளுக்கு உதவுவதற்காகப் பணத்தைக் கொண்டுவந்து அப்போஸ்தலர்களின் பாதங்களில் வைத்தனர் (நடபடிகள் 5:1-11). அவர்கள் அதை ஒரு தவறான காரணத்திற்காகச் செய்தனர் என்பது கவலைக்குறிய உண்மையாக உள்ளது: மற்ற கிறிஸ்தவர்களின் பாராட்டை நாடுதல்.

மத்தேயு 6ம் அதிகாரம், பின்வரும் எச்சரிக்கையுடன் தொடங்குகிறது: "மனுஷர் காண வேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" (வசனம் 1அ). "உங்கள் தர்மத்தைச் செய்தல்" என்பது செய்யச் சரியான விஷயமாக உள்ளது. அதை "மனுஷர் காணவேண்டுமென்று" செய்தல் "மிகவும் தவறான காரணமாக" உள்ளது. மத்தேயு 6:2-18ல் இயேசு, தவறான காரணத்திற்காகச் சரியான விஷயத்தைச் செய்தல் பற்றி மூன்று உதாரணங்களைக் கொடுத்தார். நமது முந்திய பாடத்தில் நாம், அவற்றில் முதல் உதாரணத்தைப்பற்றிக் கலந்துரையாடினோம், அது கும்பலின் பாராட்டை நாடுதல் என்பதாக இருந்தது, இந்தப் பாடத்தில் நாம் கடைசி இரண்டு உதாரணங்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்போம்.

ஜெபித்தல் (6:5-15)

எவ்வாறு ஜெபிக்கக் கூடாது (1) (வசனம் 5)

தவறான காரணத்திற்காகச் சரியான விஷயத்தை செய்தல் என்பதற்கு, ஜெபம் செய்தல் என்பது இயேசுவின் இரண்டாவது உதாரணமாக இருந்தது. நமது ஜெபவாழ்வில் நாம் பரிசேயர்களைப் போல் இருக்கக் கூடாது என்று அவர் முதலாவதாகச் சுட்டிக் காண்பித்தார்: "அன்றியும் நீ ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும்[2] வீதிகளிலும் சந்திகளிலும் நின்று[3] ஜெபம்பண்ண விரும்புகிறார்கள்" (வசனம் 5அ).

யூதர்கள் குறிப்பிட்ட நேரங்களில் ஜெபித்தனர். ஜெபம் என்பது காலையில் அவர்களின் முதல் செயலாகவும் இரவில் அவர்களின் கடைசிச் செயலாகவும் இருந்தது.[4] பகல் பொழுதில் அவர்கள் ஜெபிக்க, மூன்று வேளைகளை நியமித்திருந்தனர் (காண்க தானியேல் 6:10): மூன்றாம் மணி வேளை (காலை சுமார் 9.00 மணி), ஆறாம் மணிவேளை (ஏறக்குறைய நண்பகல்) மற்றும் ஒன்பதாம் மணிவேளை[5] (மாலை சுமார் 3.00 மணி). அவர்களால் முடிந்ததென்றால், அந்த வேளைகளில், தேவபக்தியுள்ள யூதர்கள் ஜெபிப்பதற்கு தேவாலயத்திற்குச் சென்றனர் (காண்க நடபடிகள் 3:1). தேவாலயத்திற்குச் செல்ல முடியாதவர்கள் நியமிக்கப்பட்ட அவ்வேளைகளில், தாங்கள் இருக்கும் இடத்தில் தங்கள் வேலைகளை நிறுத்திவிட்டு, ஜெபிக்கும்படி உற்சாகப்படுத்தப்பட்டனர். சில யூதர்கள், ஜெப வேளை வரும்போது தாங்கள் சுலபமாகக் கவனிக்கப்படும் ஓரிடத்தில் - ஒரு பொதுச்சதுக்கம் அல்லது மக்கள் நிறைந்திருக்கும் ஒரு தெருமூலை போன்ற இடத்தில் - தாங்கள் இருக்கும்படி தங்கள் பணி அட்டவணைகளை அமைத்துக் கொண்டனர் என்பது உறுதி. அப்போது அவர்கள், "மனுஷரால் காணப்படும்படி" தங்கள் ஜெபம் செய்யும் செயலை முன் நிறுத்தமுடிந்தது.

இயேசு, "அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார் (6:5ஆ) அவர்கள், பிற மனிதர்களின் பாராட்டுதல்களை ஆதாயப்படுத்திக் கொண்டனர், ஆனால் அவர்களுக்குக் கிடைத்தது அது மட்டுமே. முந்தியபாடத்தில் குறிப்பிட்டபடி, அவர்கள் தேவனிடத்திலிருந்து பலன் ஒன்றையும் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்களின் வாழ்வை "முழுவதும் செலுத்தப்பட்டது" என்று அவர் (தேவன்) குறித்துவிட்டார். தற்காலிகமான பாராட்டுதல்களைப் பற்றியிழுத்துக் கொள்வதற்காக நித்தியமான பலன்களைத் தளர விட்டுவிடுகிற தனிநபர் எவ்வளவு மதியீனமானவராக இருக்கிறார்!

எவ்வாறு ஜெபிக்க வேண்டும் (1) (வசனம் 6)

"நீயோ ஜெபம் பண்ணும் போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்" என்று இயேசு கூறினார் (மத்தேயு 6). KJV வேதாகமத்தில், "நீ ஜெபம் பண்ணும்போது உன் இரகசிய அறைக்குள் பிரவேசித்து" என்றுள்ளது. நான் ஒரு சிறுபையனாக இருந்த போது "இரகசிய அறை" என்ற வார்த்தை என்னைக்

குழப்பியது. எங்கள் வீட்டில் இருந்த மூடிய அறைகளில், உடைகள், காலணிகள் மற்றும் பிற தட்டுமுட்டுப் பொருட்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்தன மற்றும் அவையாவற்றிலும் அந்துருண்டைகளின் வாசம் வீசிற்று.[6] நான் ஜெபிக்கும் போது, வாடைவீசும் இறுக்கமான அந்த மூடிய அறையினுள் நுழைந்து அதன் கதவுகளை இறுக சார்த்திக் கொள்ளவேண்டும் என்று எனக்கு கூறப்பட்டதா? "Inner room" அல்லது "closet" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*tameion* என்ற) கிரேக்க வார்த்தை, பெரும்பாலும் ஒரு சேமிப்பு அறையைக் குறித்தது. இது பல வீடுகளில் கதவுள்ள ஒரே ஒரு அறையாகவும் ஒரு வேளை பூட்டப்படக் கூடிய ஒரே ஒரு அறையாகவும் இருந்தது. இச்சொற்றோடர் பொதுவாக, வீட்டில் உள்ள "எந்த ஒரு தனியறையையும்" குறிக்கவும் பயன்படுத்தப்பட முடிந்தது.[7]

"அந்தரங்கத்தில்" ஜெபிக்கத் தனிப்பட்ட ஒரு இடத்திற்கு செல்லுதல் பற்றிய, இயேசுவின் அறிவுறுத்துதல், பல கேள்விகளை எழுப்புகிறது. அது, வெளிப்படையான ஜெபங்களை நீக்கிப்போடுதலுக்கான இயேசுவின் நோக்கமாயிருந்ததா? அவர், ஒரு கிறிஸ்தவருடன் இன்னொரு கிறிஸ்தவர் இணைந்து ஜெபித்தலை ஊக்கங்குறையச் செய்யும் நோக்கம் கொண்டிருந்தாரா? இவ்விரு கேள்விகளுக்குமே, "இல்லை" என்பதே பதிலாக உள்ளது. இந்தப்பகுதியில் இயேசு, "பரலோகத்தில் இருக்கிற நமது (எங்கள்) பிதாவிடம்" - "*எனது* பிதா" அல்ல, ஆனால் "*எங்கள்* பிதா" - ஜெபிப்பதைப்பற்றித் தமது சீஷர்களுக்குப் போதித்தார், இது ஒன்று சேர்ந்து ஜெபித்தலை மறைமுகமாகக் குறிப்பிட்டது. மத்தேயு 18:19, 20ல் இரண்டு அல்லது மூன்று பேர் தேவனிடத்தில் வேண்டிக் கொள்வதைப்பற்றிப் பேசினார். நடபடிகள் புத்தகம், கிறிஸ்துவைப் பின்பற்றியவர்கள் ஒன்று கூடி ஜெபித்ததற்கான உதாரணங்களால் நிரம்பியுள்ளது (1:24; 4:24; 12:12).

ஆராதிப்பதற்காக சபையார் ஒன்றுகூடியுள்ளபோது, உரத்த குரலில் ஜெபிப்பது சரியே என்று சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆனால் நமது வேதபாட வசனப்பகுதி, பொது இடத்தில் - எடுத்துக்காட்டாக, ஒரு பொது உணவகத்தில் உணவு உண்பதற்கு முன்னதாக உரத்த குரலில் ஜெபிப்பதை தடை செய்கிறது. இந்தக் குறிப்பிட்ட விஷயத்தின் மீது, ஒவ்வொருவரும் "தன் தன் மனதிலே முழுநிச்சயத்தை உடையவர்களாய்" இருக்கக் கடவோமாக (ரோமர் 14:5). நான் எங்கிருந்தாலும், எனது குடும்பத்தார் மற்றும் நண்பர்களுடன் உணவு உண்பதற்கு முன்னர் ஜெபித்தல் என்பது எனது நடைமுறை வழக்கமாக உள்ளது - ஆனால் இதை கூடிய வரையிலும் அமைதியாக மற்றும் பிறருக்கு இடையூறு இல்லாத வகையில் செய்தலே எனது வழக்கமாகும்.

இயேசுவின் வார்த்தைகளில் இருந்து நாம் யாவரும் கற்றுக் கொள்ளக்கூடிய பாடங்கள் யாவை? நாம் தேவனுடன் தனித்திருக்க, அமைதியான மற்றும் தனிப்பட்ட இடம் ஒன்றைக் கொண்டிருத்தலில் மதிப்பு உள்ளது என்பது ஒரு பாடமாக இருக்கலாம். இயேசு கூட, ஜெபிப்பதற்கு "வனாந்தரமான ஒரிடத்திற்கு" (மாற்கு 1:35) செல்லுதலின் அவசியத்தை உணர்ந்திருந்தார். அந்த நடைமுறைப்பயன்பாட்டுடன் கூடுதலாக, நாம் எங்கு, எப்போது ஜெபித்தாலும் நடைமுறைப்படக்கூடிய பொதுவான கொள்கைகள் இயேசுவின் உபதேசத்தில் உள்ளன:

- தேவனிடத்தில் கவனத்தை ஈர்ப்பதற்குப்பதிலாக நம்மிடத்தில் கவனத்தை

ஈர்க்கும் வகையில் நாம் ஜெபிக்கக் கூடாது.

- நாம் மக்களைப் பற்றி குறைவான உணர்வுடனும் தேவனைப்பற்றி அதிகமான உணர்வுடனும் இருக்கப் பிரயாசப்பட வேண்டும்.
- மக்களை வெளியே வைத்து மூடவும், தேவனை உள்ளே வைத்து மூடவும் நாம் முயற்சி செய்வது அவசியமாக உள்ளது.[8]

ஜெபிப்பதற்கு ஒரு அமைதியான இடத்திற்கு நாம் செல்ல முடியுமென்றால், ஒரு சில கவனச்சிதறல்களையே நாம் கொண்டிருப்போம், ஆனால் அது எப்போதுமே சாத்தியமானதாக இருப்பதில்லை, அல்லவா? நாம் எங்கிருந்தாலும், நாம் என்ன செய்து கொண்டிருந்தாலும் நாம் நமது இருதயங்களின் "அறைவீட்டிற்குள்" சென்று, தேவனிடத்தில் பேசமுடியும். இதை நாம், ஒரு காரை ஓட்டுகையில், தரையைக் கூட்டுகையில் அல்லது மளிகை சாமான் வாங்குவதற்காக வரிசையில் நிற்கையில் செய்யமுடியும்.[9]

மக்களை வெளியே வைத்து மூடுதலுக்கான தேவையானது, பொது ஜெபங்களை வழிநடத்தும் மனிதர்களுக்கு ஒரு விசேஷித்த அறைகூவலை முன்வைக்கிறது. வந்திருப்பவர்களின் மனங்களை வழிநடத்துதல் என்பதே அவர்களின் நோக்கமாக உள்ளது. எனவே அவர்கள், பிறரைக்குறித்தும் பிறரின் தேவைகளைக் குறித்தும் அறிந்திருக்க வேண்டும். அதே வேளையில் ஜெபத்தை நடத்துபவர்கள், மற்ற ஆராதனையாளர்களின் மனதை ஈர்க்கச் செய்தல் என்பது தங்கள் குறிக்கோளாக இராதபடிக்குக் கவனம் மேற்கொள்ள வேண்டும். டி. மார்ட்டின் லாயிட் - ஜோன்ஸ் அவர்கள், "சபைக்குழுமத்தை ஜெபம் என்ற பொதுவான செயலில் வழிநடத்துபவர், தேவனிடத்தில் எடுத்துரைப்பதற்கு பதிலாக சபைக்குழுமத்திடம் ஜெபத்தை எடுத்துரைக்கக் கூடும் என்பதே, சபைக்குழுமத்தைப் பொது ஜெபத்தில் வழி நடத்துபவர் கொண்டுள்ள உண்மையான அபாயமாக உள்ளது" என்று எழுதினார்.[10] ஹரோல்டு ஃபவ்லர் அவர்கள், "வெளியரங்கமாக ஜெபிப்பவர்கள், மனிதகவனிப்பாளர்களின் தடைக்கு பயன்படுவதோ அல்லது அவர்களின் புகழ்ச்சியை நாடுவதோ இல்லை என்ற *அளவுக்காவது* அவர்களைப்பற்றிய விழிப்புணர்வைத் தங்கள் சிந்தைக்கு வெளியே வைத்துப்பூட்டக் கற்றுக் கொள்ள வேண்டும்" என்று கூறினார்.[11]

எவ்வாறு ஜெபிக்கக் *கூடாது* (2) (வசனங்கள் 7, 8)

எவ்வாறு ஜெபிக்கக் கூடாது என்பதற்கான கூடுதல் அறிவுறுத்துதல் களை, 7 மற்றும் 8ம் வசனங்களில் இயேசு கொடுத்தார். அவர் முன்னதாக, தகுதியற்ற வகையிலான ஜெபத்திற்கு மாய்மாலக்கார யூதர்களை உதாரணமாகப் பயன்படுத்தியிருந்தார் (வசனம் 5). இப்போது ஒரு மோசமான உதாரணம் என்ற வகையில் அவிசுவாசிகளான யூதரல்லாதவர்களை அவர் பயன்படுத்தினார்: "அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும் போது, அஞ்ஞானிகளைப்போல[12] வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படும் என்று நினைக்கிறார்கள்" (வசனம் 7).

ஜெபங்கள் ஒருக்காலும் நீண்டவையாக இருக்கக்கூடாது என்று இயேசு கூறவில்லை. அவர் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களைத் தேர்வு செய்வதற்கு முன், இரவு முழுதும் ஜெபித்தார் (லூக்கா 6:12-16). அவர், தம்மைப் பின்பற்றுபவர்கள் சோர்ந்து போகாமல் எப்போதும் ஜெபிக்க வேண்டும்

என்று உற்சாகப்படுத்தினார் (லூக்கா 18:1-7). அதே போல, இயேசு திரும்பத் திரும்பச் செய்யப்படும் எல்லா ஜெபங்களையும் பழித்துரைக்க வில்லை. அவர் கெத்செமெனே தோட்டத்தில் ஒரே ஜெபத்தைத் திரும்பத் திரும்ப மூன்றுமுறை ஏறெடுத்தார் (காண்க மத்தேயு 26:44). பவுல் தமது "மாம்சத்தில் இருந்த முள்ளை" நீக்கிப் போடும்படி தேவனிடத்தில் மூன்று முறை கேட்டுக்கொண்டார் (காண்க 2 கொரிந்தியர் 12:7, 8). நம்மில் பெரும்பான்மையானவர்கள், துக்கத்தினால், வேதனையினால் அல்லது கவலையினால் நாம் மேற்கொள்ளப்பட்டிருந்த வேளைகளை நினைவுக்குக் கொண்டுவர முடியும்; அப்படிப்பட்ட வேளைகளில் நாம், தேவனுடைய உதவி மற்றும் பலத்திற்காக ஒரே ஜெபத்தை மீண்டும் மீண்டும் ஏறெடுத்திருப்போம். நமக்கு மிகவும் பிரியமான ஒருவரின் தீவிர சுகவீனம் என்பது அப்படிப்பட்ட வேளைகளில் ஒன்றாக உள்ளது. இருதயப்பூர்வமான உணரப்பட்ட அவ்வகையான வேண்டுகோளைக் கர்த்தர் ஊக்கம் குலையச் செய்வதில்லை.

"அர்த்தமற்ற திரும்பத்திரும்பக் கூறும் வகையையே" இயேசு இவ்விடத்தில் பழித்து உரைத்தார்:[13] மந்திரம் ஒன்றை உச்சரிப்பதுபோல இயந்திரத் தனமாக ஜெபித்தல். "வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*battalogeo* என்ற) கிரேக்க வார்த்தை தனிவகைப்பட்டதாக உள்ளது.[14] இவ்வசனத்தின் மேற்கோள்கள் தவிர வேறு எவ்விடத்திலும் இவ்வார்த்தையின் பயன்பாடு காணப்படுவதில்லை. பொதுவாக இவ்வார்த்தை, "சிந்திக்காமலே பேசுதல்"[15] அல்லது அதைப் போன்ற வேறுவகையில் விளக்கப்படுகிறது. NEB வேதாகமத்தில் "அஞ்ஞானிகளைப் போல உளறிக்கொண்டிராதீர்கள்" என்றுள்ளது. RSV வேதாகமத்தில், "வெறுமையான சொற்றொடர்களைக் குவிக்காதீர்கள்" என்றுள்ளது.

அஞ்ஞானிகள், தங்களை அன்புகூருகிற மற்றும் தங்களுக்கு என்ன நடந்தது என்பதைப் பற்றி அக்கறை கொள்ளுகிற தனிப்பட்ட தேவன் என்ற கருத்தைக் கொண்டிருக்க வில்லை. அவர்களால் தேவர்கள் என்று அழைக்கப்பட்டவர்கள், வெகு தொலைவில் இருந்தவர்களாக, சுய மையம் கொண்டவர்களாக, அடிக்கடி இதயமற்றவர்களாகக் கண்ணோக்கப்பட்டனர். அஞ்ஞானிகள் தங்கள் தேவர்கள் (தங்கள்) வேண்டுதல்களைக் கவனிக்கவும் பதில் அளிக்கவும் அவர்களைத் தூண்டுவதற்குப் பலவகையான நுட்பங்களைக் கண்டுபிடித்து வைத்திருந்தனர். அவர்கள், சரியான நோக்கத்தைக் கொண்டிருத்தலைக் காட்டிலும், சரியான வார்த்தைகளைக் கூறுதல் என்பது அதிக முக்கியமானதாக இருந்த மந்திர உச்சாடனங்களைக் கொண்டிருந்தனர். அவர்கள், "தெய்வீகப் பெயர்களின் நீண்டபட்டியல்களை மேம்படுத்தி, அவற்றை முடிவின்றி உச்சரித்தலானது, உண்மைக் கடவுளின் நாமத்தை ஏதோ ஒருவகையில் தூண்டியெழுப்பி தாங்கள் விரும்பியவற்றைப் பெற வழிவகுக்கும் என்று நம்பினர்."[16] அவர்கள் அவற்றை எவ்வளவு அதிகமாக உச்சரித்தார்களோ, அவ்வளவு அதிகமாகத் தாங்கள் கேட்கப்படச்சாத்தியக்கூறு இருந்ததாகக் கற்பனை செய்து கொண்டனர்.[17] எலியா, பாகாலின் தீர்க்கதரிசிகளை எதிர்த்து நின்றபோது, அவர்கள், "பாகாலே, எங்களுக்கு உத்தரவு அருளும் என்று காலை தொடங்கி மத்தியான மட்டும் பாகாலின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டார்கள்; ஆனாலும் ஒரு சத்தமும் பிறக்கவில்லை, மறு உத்தரவு கொடுப்பாரும் இல்லை" (1 இராஜாக்கள் 18:26). செயல்விளைவில் இயேசு, "அஞ்ஞானிகளின் மூடநம்பிக்கையினுடைய

மட்டத்தில் உங்கள் ஜெபித்தல் மூழ்க அனுமதித்து விடாதீர்கள்" என்று கூறினார்.

ஜெபத்தில், "வீண் வார்த்தைகளை அலப்புதல்" குறித்து இன்றைய நாட்களில் நாம் ஏற்படுத்தக்கூடிய நடைமுறைப் பயன்பாடு என்ன? நாம், பிறமதக் குழுக்களின் (பெயர்க்குழுக் கூட்டங்களில்) செயல்முறைகள்/நடைமுறைகள் மீது கவனம் குவிக்கும்படி சோதிக்கப்படுகிறோம். ஒருவேளை நாம், முன்னமைவு செய்யப்பட்ட ஜெபத்தைத் திரும்பத் திரும்பக்கூறி மணிகளை எண்ணுவதால் அவை கூறப்பட்ட எண்ணிக்கையைக் கணக்குப் பார்த்தல் என்ற வழக்கத்தைப் பற்றி நினைக்கலாம். ஒருவேளை நாம், ஏறக்குறைய எல்லா ஆராதனைகளிலும் (திருபலிகளிலும்) ஒரே வகையான வார்த்தைகளில் ஒரே வகையான ஜெபங்கள் திரும்பத்திரும்பக் கூறப்படுதல் பற்றி நினைவூட்டப்படலாம். இருப்பினும், நமக்கு நாமே நேர்மையானவர்களாயிருந்தால், நாமும் கூட இவ்விஷயத்தில் குற்றப்பட்டிருப்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். உணவு மேஜையில் அல்லது படுக்கும்வேளையில் ஜெபிப்பதற்கு, நன்றி கூறுதலின் ஒருவகையை நாம் முன்னமைத்து மேம்படுத்தியிருக்கக்கூடும். ஆராதனை ஊழியத்தில் நாம் ஒரு ஜெபத்தில் (பிறரை) வழிநடத்தும்போது, பிரியமான சொற்றொடர்களைப் பயன்படுத்துதலும், மார்க்க ரீதியான கோஷங்களில் இடறுதலும் சுலபமாக உள்ளது. "நமது பல வார்த்தைகளுக்காக நாம் கேட்கப்படுவோம்" என்று நினைக்கும் குற்றம் செய்யாதவர்களாயிருக்கவும் சாத்தியக்கூறு உள்ளது.

"ஆம், அதைச் செய்கிற யாரோ ஒருவரை நான் அறிந்துள்ளேன்" என்று கூறாமல் இருக்க நாம் கவனத்தை மேற்கொள்வோமாக. மற்றவர்களைத் தீர்ப்பிடுதல் மீதான வல்லமை நிறைந்த வசனப்பகுதி ஒன்றை அடுத்தபாடம் கொண்டிருக்கும் (மத்தேயு 7:1-5). நம்மில் ஒவ்வொருவரும் தம்மைத்தாமே பரிசோதனை செய்து, "*என் இதயம் பற்றிய விஷயம் என்ன? அர்த்தமற்ற வகையில்* (வார்த்தைகளை) திரும்பத்திரும்பக் கூறுவதைப் பயன்படுத்தியவகையில் *நான்* குற்றப்பட்டிருக்கிறேனா? *நான்* எப்போதாவது, சிந்திக்காமலேயே ஜெபித்திருக்கிறேனா?" என்று கேட்க வேண்டியது அவசியமாக உள்ளது.

இயேசு, "அவர்களைப் போல நீங்கள் செய்யாதிருங்கள்" என்று கூறினார் (6:8அ) - அதாவது "அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிற" அஞ்ஞானிகளைப் போல் நீங்கள் இருக்க வேண்டாம் என்று கூறினார் (வசனம் 7ஆ). "... உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அறிந்திருக்கிறார்" (வசனம் 8). இங்கு இடம் அனுமதிக்குமென்றால், "உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அறிந்திருக்கிறார்" என்ற அற்புதமான வார்த்தைகளில் நாம் சற்றே தங்கியிருக்கமுடியும். தேவன் நமது தந்தையாக இருக்கிறார்! அவர் நம்மை அறிந்திருக்கிறார்! அவர் நமது தேவைகளை அறிந்திருக்கிறார்! இருப்பினும் நாம், இயேசு கொண்டு வந்த கருத்தின் மீது கவனம் குவிக்கவேண்டும். நாம் ஜெபிக்கும் போது, நாம் மேலும் மேலும் தொடர்ந்து கொண்டே இருக்கத் தேவையில்லை. தேவன் ஒரு அன்பான தகப்பனாக இருக்கிறார்; மற்றும் நமக்கு என்ன தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்.

"ஆனால், நமக்கு என்ன தேவை என்று தேவன் அறிந்திருக்கிறார் என்றால் ஜெபித்தல் பற்றி நாம் ஏன் அக்கறை/கவலை கொள்ளவேண்டும்?" என்று சிலர்

கேட்டுள்ளனர். அந்தக் கேள்விக்குப் பல பதில்கள் உள்ளன. இரு பதில்களை (மட்டும்) குறிப்பிட என்னை அனுமதியுங்கள். முதலாவது, நமது தேவைகளை நிறைவேற்றும்படி கேட்குதல் என்பது மாத்திரமே ஜெபத்திற்கான ஒரே காரணமாயிருப்பதில்லை. நமது தேவைகளை அவர் அறிந்திருப்பினும், ஜெபத்தில் அவரைத் துதிப்பதற்கும் அவரது ஆசீர்வாதங்களுக்காக நன்றி செலுத்துவதற்கும் நாம் செல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம். இரண்டாவதாக, நமது தேவைகளைப் பற்றி அவர் அறிந்திருப்பினும், அவற்றைப் பற்றி நாம் ஜெபிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார். நமது ஆசீர்வாதங்களின் ஆதாரமூலம் பற்றி *நாம்* அறிந்து இருக்க வேண்டுமென்றும், அவைகள் நமக்கு தானாகவே அருளப்படும் என்று ஒருக்காலும் நினையாமல் இருக்க வேண்டுமென்றும் தேவன் விரும்புகிறார். ஒரு தந்தை தமது பிள்ளைகளின் தேவைகள் பற்றி அறிந்திருக்கலாம், ஆனால் அவர்கள் அவரிடம் வந்து (அவற்றைப் பற்றி) பேச வேண்டும் என்று அவர் இன்னமும் விரும்புகிறார்.

எவ்வாறு ஜெபிக்க வேண்டும் (2) (வசனங்கள் 9-15)

"அஞ்ஞானிகள் ஜெபிப்பது" போன்று நாம் ஜெபிக்கக் கூடாதென்றால், நாம் எவ்வாறு ஜெபிக்க வேண்டும்? அந்தக் கேள்விக்கு இயேசு, "கர்த்தர் கற்பித்த ஜெபம்" என்ற அழைக்கப்படும் ஜெபத்தைக் கொடுத்ததன் மூலம் பதில் அளித்தார். "சீஷர்களின் ஜெபம்" அல்லது "மாதிரி ஜெபம்" என்பது இன்னும் சிறப்பான குறிப்புப் பெயர்களாக இருக்கலாம். இதன் வார்த்தைகள் பெரும்பான்மையானவர்களுக்கு நன்கு பழக்கமானவைகளாக உள்ளன:

> *நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது:*
> *பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே*
> *உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.*
> *உம்முடைய ராஜ்யம் வருவதாக;*
> *உம்முடைய சித்தம்*
> *பரமண்டத்திலே செய்யப்படுகிறது போலப்*
> *பூமியிலேயும் செய்யப்படுவதாக.*
> *எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று*
> *எங்களுக்குத் தாரும்.*
> *எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல*
> *எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.*
> *எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல்,*
> *தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்,*
> *[ராஜ்யமும் வல்லமையும் மகிமையும்*
> *என்றென்றைக்கும் உம்முடையவைகளே,] ஆமேன்.*
> *மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால்,*
> *உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்,*
> *மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால்,*
> *உங்கள் பிதா, உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார் (வசனங்கள் 9-15).*

அடுத்த பாடத்தில் நாம் 9 முதல் 15 வரையிலான வசனங்களைப் படிப்போம். இப்போதைய வேளைக்கு, அஞ்ஞானிகளின் நீண்ட, இயந்திரத்தனமான ஜெபங்களைப் போலின்றி - இந்த ஜெபம் சுருக்கமானதாக, ஆழ்ந்த வகையில் தனிப்பட்டதாக உள்ளது என்பதை மட்டும் குறித்துக் கொள்ளுங்கள்.

உபவாசித்தல் (6:16-18)

***எவ்வாறு உபவாசிக்கக் கூடாது* (வசனம் 16)**

அது நம்மை, மனிதர்களால் காணப்படும்படி நீதியான செயல்களைச் செய்தல் பற்றிய, இயேசுவின் மூன்றாவது உதாரணத்திடம் கொண்டு வருகிறது. அவர், "நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப்போல முகவாடலாய் இராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும் பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப் பண்ணுகிறார்கள்" என்று கூறினார் (வசனம் 16அ). "உபவாசிக்கும்" என்று மொழிபெயர்க்கப்பட்ட (*nesteuo* என்ற) வார்த்தை, உணவு உட்கொள்ளாது இருத்தலைக் குறிக்கிறது.[18] நான்காயிரம் பேருக்கு உணவளித்தது பற்றிய வரலாற்றில், நாள் முழுவதும் இயேசுவின் போதனைகளைக் கேட்டுக் கொண்டிருந்தபின்பு, பசியோடு இருந்த மக்களைக் குறிக்க, இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது (காண்க மத்தேயு 15:32; KJV மற்றும் NASB வேதாகமங்களை ஒப்பிடவும்).[19] உலகின் சில பகுதி களில், ஒரு நாளில் முதல் வேளை உணவு "breakfast" ("break [the] fast") என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் முந்திய இரவு முழுவதிலும் உணவு எதுவும் எடுத்துக்கொள்ளப்படாதிருந்தது.

உபவாசித்தல் என்பது யூதர்களால், ஆவிக்குரிய வகையில் முக்கியமான பயிற்சியாகக் கருதப்பட்டது. "உபவாசித்தல் என்பதை மோசேயின் நியாயப்பிரமாணம் ஒருக்காலும் நேரடியாகப் பரிந்துரைப்பதில்லை"[20]; ஆனால் யூதர்கள், பாவநிவர்த்தி செய்யும் நாளில் தங்களைத் தாழ்த்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தனர் (லேவியராகமம் 16:29-34; 31ம் வசனத்தைக் கவனிக்கவும்).[21] தங்களைத் தாழ்த்துதல் என்பது உபவாசத்தை உள்ளடக்கியது என்ற வகையில் விளக்கம் தரப்பட்டு இருந்தது. சங்கீதங்கள் 35:13ல் தாவீது, "நான் உபவாசத்தால் என் ஆத்துமாவை உபத்திரப்படுத்தினேன்" என்று எழுதினார். காலப்போக்கில், புதிய ஆண்டின் தொடக்கம் மற்றும் யூத வரலாற்றில் குறிப்பிடத் தக்க பெருந்துன்பங்களின் ஆண்டு நிறைவுகள் போன்ற தேசீய உபவாசத்தின் மற்ற நாட்களையும் யூதர்கள் இத்துடன் கூட்டிக் கொண்டனர்.[22] விசேஷித்த சூழ்நிலைகளின்கீழ், தேசீய நாள் ஒன்றில், உபவாசம் இருக்கும்படி அழைப்பு விடுக்கப்படும் (காண்க 1 சாமுவேல் 7:5, 6). மேலும் தனிநபர்கள் தனிப்பட்ட உபவாசங்களில் ஈடுபட்டிருந்தனர் (எடுத்துக்காட்டாக 2 சாமுவேல் 1:12; 12:16; நெகேமியா 1:4 ஆகிய வசனங்களைக் காணவும்). பழைய ஏற்பாட்டில் உபவாசம் என்பது பொதுவாக, தாழ்மை, மனம்வருந்துதல் அல்லது துக்கம் என்பதன் வெளிப்பாடாக இருந்தது.

இயேசுவின் காலத்திற்குள் பரிசேயர்கள், ஒவ்வொரு வாரத்திலும் மேலும் இரு நாட்களைக் கூட்டி இருந்தனர் (காண்க லூக்கா 18:12). இந்த உபவாசங்கள் சூரிய உதயத்தில் இருந்து சூரிய மறைவு வரை நீடித்தன.[23] செவ்வாய் மற்றும் வியாழன் என்று நாம் அழைக்கும் தினங்களே அந்த இரண்டு நாட்களாக

இருந்தன என்று வரலாற்று ஆதாரங்கள் நமக்குக் கூறுகின்றன. இவை இரண்டும் யூதர்களுக்குச் சந்தை நாட்களாக இருந்தன, அந்த நாட்களில் நகரத்திற்குப் பல மக்கள் வருவார்கள். இது உபவாசத்தை "வெளிப்படையாகக் காண்பிக்க" யூதர்களுக்கு பெரிய மக்கள் கூட்டத்தை அளித்தது.

இந்த மாய்மாலக்காரர்கள் உபவாசிக்கும்போது, அவர்கள் "முகவாடலாய்"[24] இருந்தனர் மற்றும் தங்கள் தோற்றத்தை [காத்துக்கொள்ளுதலை] புறக்கணித்தனர். அவர்கள் தங்கள் முகங்களைக் கழுவாமலும் தங்கள் தலைமுடிகளை வாராமலும் இருந்தனர். அவர்கள் அழுக்கானவர்களாக, மடங்கிச் சுருங்கிய உடைகளை அணிந்தவர்களாக மற்றும் வேதனை நிறைந்த முகபாவங்களை உடையவர்களாக இருந்தனர். ஒருவேளை அவர்கள், பிறரால் காணக்கூடும்படிக்குத் தங்கள் தலைகளில் சாம்பலைப் போட்டு இரட்டு உடை அணிந்து இருக்கலாம். அவர்கள் ஆவிக்குரிய வகையில் எவ்வளவு ஆழமானவர்களாக இருந்தனர் என்பதைக் குறித்துக் கவனத்தை ஈர்ப்பதற்காகவே இவை யாவும் செய்யப்பட்டன.

மீண்டுமாக இயேசு, அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று, "மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார் (மத்தேயு 6:16ஆ). "அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்" (யோவான் 12:43), மற்றும் மனிதர்களின் அங்கீகாரத்தை மாத்திரமே அவர்கள் எப்போதும் பெறுவார்கள்.

உபவாசிப்பது எவ்வாறு (வசனங்கள் 17, 18).

இயேசு, தம்மைப் பின்பற்றுபவர்களிடத்தில், இப்படிப்பட்ட மாய்மாலமான காட்சிப்படுத்துதல் இருக்கக் கூடாது என்று கூறினார்:

> நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு. அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார் (வசனங்கள் 17, 18).

தலையில் எண்ணெய் பூசுதல் மற்றும் முகத்தைக் கழுவுதல் ஆகியவை யூதர்களின் வழக்கமான அழகுபடுத்தும் செயல்களாக இருந்தன. இயேசு, "நீங்கள் உபவாசிக்கும்போது, வழக்கமான நடக்கையை பின்பற்றுங்கள். நீங்கள் உபவாசிக்கும் உண்மையை நோக்கிக் கவனத்தை ஈர்க்கும்படியாக எந்தச் செயலையும் செய்யாதீர்கள்" என்று கூறினார்.[25] இன்றைய நாட்களில் இயேசு, "உங்கள் காலைக் கடன்களை வழக்கமாகச் செய்யுங்கள். உங்கள் முகத்தைக் கழுவுங்கள், உங்கள் பற்களைத் துலக்குங்கள், உங்கள் தலைமுடியை வாருங்கள்" என்று கூறலாம்.[26]

அதைக் கூறியுள்ள நிலையில் நாம், உபவாசம் பற்றிய கேள்விகளுடனும், இயேசுவின் அறிவுறுத்துதல்கள், கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமது வாழ்வில் எவ்விதத்தில் செயல்விளைவுகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் இன்னமும் பதில்தரப்படாமல் விட்டுவிடப் பட்டிருக்கிறோம். இயேசு, "நீ *உபவாசித்தால்*" என்றல்ல, ஆனால் "நீங்கள் *உபவாசிக்கும்போது*" என்று கூறினார் என்பதைக் கவனியுங்கள். அவரைப் பின்பற்றுபவர்கள் உபவாசிப்பார்கள் என்று யூகிக்கப்பட்டது. உபவாசித்தல் என்பது மறைந்துபோன

கிறிஸ்தவ நடைமுறை என்று சிலர் நம்புகின்றனர். அவர்கள், தொடக்க நூற்றாண்டுகளில் உபவாசத்தில் அதிக நேரத்தைச் செலவிட்ட பக்தியுள்ள தனிநபர்களைச் சுட்டிக் காண்பித்து, அதையே நாம் இன்றைய நாட்களிலும் செய்ய வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கின்றனர்.

உபவாசத்தைப் பற்றிப் புதிய ஏற்பாடு கூறுவது என்ன? அவ்வளவு அதிகமாக கூறுவதில்லை.[27] மாற்கு 2:18-20 என்பது மிக நீண்ட குறிப்பாக உள்ளது (காண்க மத்தேயு 9:14, 15; லூக்கா 5:33-35).

> யோவானுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் உபவாசம்பண்ணிவந்தார்கள். அவர்கள் அவரிடத்தில் வந்து: "யோவானுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் உபவாசிக்கிறார்களே, உம்முடைய சீஷர் உபவாசியாமலிருக்கிறதென்னவென்று கேட்டார்கள். அதற்கு இயேசு: மணவாளன் தங்களோடிருக்கையில் மணவாளனுடைய தோழர் உபவாசிப்பார்களா? மணவாளன் தங்களுடனே இருக்கும்வரைக்கும் உபவாசிக்கமாட்டார்களே. மணவாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள் வரும், அந்த நாட்களிலே உபவாசிப்பார்கள்."

இதிலிருந்து நாம், யோவானின் சீஷர்கள் உபவாசித்தனர் ஆனால் இயேசுவின் சீஷர்கள் உபவாசிக்கவில்லை என்று அறிகிறோம். மீண்டும் ஒருமுறை நாம், இயேசுவின் பகுதியில் அவரைப் பின்பற்றுபவர்கள் அவர் சென்றபின் உபவாசிப்பார்கள் என்ற யூகத்தைக் கொண்டுள்ளோம். இயேசுவின் "கூற்றானது, கிறிஸ்தவ வாழ்வில் உபவாசத்தை ஒரு கடமையாக இல்லாவிட்டாலும் ஒரு சட்டப்பூர்வமான பணிப்பொறுப்பாக்குதல் என்ற வகையில் விளக்கப்படுத்தப்பட்டுள்ளது."[28]

இயேசு பரலோகத்திற்குத் திரும்பிச் சென்ற பின்பு அவரது சீஷர்கள் உபவாசித்தனரா? தனிப்பட்ட நபர் என்ற வகையில் கிறிஸ்தவர்கள் யாராவது தனிப்பட்ட வகையில் உபவாசித்தது பற்றிப் புதிய ஏற்பாட்டின் பதிவு எதையாவது நாம் கொண்டிருக்கிறோமா என்று நான் அறிவதில்லை.[29] சபைக்குழுமமாக உபவாசித்தது பற்றி நாம் இரண்டு உதாரணங்களைக் கொண்டிருக்கிறோம். பர்னபாவையும் சவுலையும் ஊழியக்காரர்களாக அனுப்புவதற்கு முன்னர், அந்தியோகியா சபையார் "உபவாசித்து ஜெபம்பண்ணி"னர் (நடபடிகள் 13:3; காண்க வசனங்கள் 1-3). சபைக்குழுமங்களில் மூப்பர்கள் நியமிக்கப்பட்டபோது, அவர்கள் "உபவாசித்து ஜெபம் பண்ணி"னர் (நடபடிகள் 14:23). இருப்பினும் இந்த சபைக்குழுமங்களின் உபவாசித்தல்களைப் பற்றிய விபரங்கள் எதுவும் நமக்குத் தரப்படவில்லை. அவர்கள் எவ்வளவு நாள் உணவின்றி இருந்தனர் என்று நாம் அறிவதில்லை. உபவாசித்தலுக்கும் ஜெபித்தலுக்கும் விசேஷத்த நேரம் ஒன்று நியமிக்கப்பட்டதா அல்லது சபைக்குழுமத்தின் ஜெபக்கூட்டத்தின் போது உபவாசம் இயல்பாக நடைபெற்றதா என்று நாம் அறிவதில்லை.

உபவாசம் என்ற பாடக்கருத்தைப் புரிந்துகொள்ள நாம் போராடும்போது, தகவல்களில் குறைவுபடுதல் என்பது நாம் எதிர்கொள்ளுகிற ஒரு பிரச்சனையாக உள்ளது. ஏழைகளுக்கு உதவுதல் பற்றிய கட்டளைகள் மற்றும் அறிவுறுத்துதல்கள் ஆகிய இரண்டையுமே நாம் கொண்டுள்ளோம் (காண்க 2 கொரிந்தியர் 8; 9). ஜெபத்தைப் பொறுத்த மட்டில், நாம் பல கட்டளைகளையும் அதிகமான அறிவுறுத்துதலையும் கொண்டுள்ளோம் (எடுத்துக்காட்டாக மத்தேயு

7:7-11; 1 தெசலோனிக்கேயர் 5:17; எபேசியர் 6:18 ஆகியவற்றைக் காணவும்). இருப்பினும் உபவாசித்தல் என்ற தலைப்பின்மீது நாம், கட்டளைகள் எதையும் கொண்டிருப்பதில்லை - நமது வேதபாட வசனப்பகுதியில் உள்ள அறிவுறுத்துதல்கள் மாத்திரமே நம்மீது கவனத்தை ஈர்ப்பவையாக இருக்கக் கூடாது என்று கூறுகின்றன.

உபவாசத்தைச் செயல்படுத்துபவர்கள், மனதின் சுத்தத்தன்மையை அதிகரித்தல் என்பதில் இருந்து ஆழமாக்கப்பட்ட ஆவிக்குரிய தன்மை வரையில் எல்லைகளைக் கொண்ட, உடலுக்குரிய மற்றும் ஆவிக்குரிய பல்வகைப் பலன்களைக் குறிப்பிடுகின்றனர். இருப்பினும் வளர்சிதை மாற்றத்திலும் ஆளுமைத் தன்மையிலும் மக்கள் வேறுபடுவதால், ஆவிக்குரிய வகையிலான பயிற்சி என்ற வகையில் உபவாசிக்க முயற்சி செய்யும் யாவரும் நேர்மறையான விளைவுகளை அனுபவிப்பதில்லை. மற்றும், கிறிஸ்தவரல்லாத குழுக்கள் தங்களின் சுயநிர்ப்பந்தமான உபவாசங்களில் இதேபோன்ற விளைவுகளை உரிமைகோருகின்றனர்,[30] எனவே அறிக்கை செய்யப்பட்ட விளைவுகளில் கிறிஸ்தவரின் தனித்தன்மை என்று எதுவும் இருப்பதில்லை. அவைகள் உள்ளாகக் கட்டப்பட்டிருந்தால், உபவாசித்தலில் இருந்து ஆவிக்குரிய பலன்கள் தாமாகவே தரவழைக்கப்பட வேண்டியதாக இருக்கும், இயேசு தமது சீஷர்களுடன் இருந்தபோது, அவர்கள் உபவாசிக்கும்படி அவர் வற்புறுத்தாதது ஏன் என்பதைப் புரிந்து கொள்ளுதல் கடினமாக உள்ளது.

உபவாசித்தல் என்பது சுய - கட்டுப்பாட்டின் வடிவமாக உள்ளது என்று அடிக்கடி கூறப்படுகிறது. உணவு விஷயத்திற்கு வருகிறபோது, நம்மில் சிலர் அதிகம் சுயகட்டுப்பாடு தேவைப்படுபவர்களாக இருக்கிறோம் என்பது நிச்சயமாகவே உண்மையாக உள்ளது. இருப்பினும் சுய கட்டுப்பாடு என்பது எல்லா வேளைக்குமான, அன்றாடத் தேவையாக உள்ளது, அதேவேளையில் உபவாசம் பற்றிப் புதிய ஏற்பாட்டில் நாம் கொண்டுள்ள கொஞ்சத் தகவல், அது சாதாரண நிகழ்வுகளுக்கு வெளியே இருப்பதற்கானது என்று கருத்துத் தெரிவிக்கிறது. ஜான் R. W. ஸ்டாட் அவர்கள் பின்வருமாறு கருத்துத் தெரிவித்தார்,

> [உபவாசம்] என்பது அதிகளவில் வழக்கமான நடைமுறையாக இருப்பதில்லை, ... குறிப்பிட்ட சில திசைகாட்டுதல் அல்லது ஆசீர்வாதத்திற்காகத் தேவனை நாம் நாடுதல் அவசியமாக இருக்கும் போது, [இது] அவ்வப்போதான மற்றும் விசேஷித்த ஏற்பாடாக உள்ளது, நாம் அதைச் செய்வதற்கு உணவையும் மற்ற கவனவிலக்குதல்களையும் புறம்பே ஒதுக்குகிறோம்.[31]

புதிய ஏற்பாட்டு சபையில் உபவாசித்தல் என்பது, *சுய கட்டுப்பாடு* என்பதைக் காட்டிலும் *சுயத்தை மறுத்தல்* என்பதன் வெளிப்பாடாக இருந்தது. அது முன்னுரிமைகள் பற்றிய விஷயமாக, இவ்வதிகாரத்தின் முடிவில் ஆணையின் நடைமுறைச் செயல்விளக்கமாக இருந்தது: "முதலாவதாக தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்" (மத்தேயு 6:33). குறிப்பிட்ட சில வேளைகளில் கிறிஸ்தவர்கள், கர்த்தருக்கென்று தாங்கள் செய்வது மிக முக்கியமானதாக இருந்ததால், தங்களுக்கு உணவையும் சட்டப்பூர்வமான பிற சந்தோஷங்களையும் மறுத்தனர்.[32]

இன்றைய நாளில் பல விவரிப்புகள் சிந்தைக்கு வருகின்றன.[33] கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்துப் பிறருக்குப் போதிக்க வாய்ப்புக் கொண்டிருக்கும்போது, உணவு வேளையைப் பற்றி அக்கறை கொள்ளாது இருப்பவர்களைப் பற்றி நான் நினைக்கிறேன். தேவையில் உள்ளவர்களுக்கு ஊழியம் செய்கையில் உணவு அல்லது செலவிடப்பட்ட நேரம் அல்லது விலை ஆகியவற்றைப் பற்றிய எண்ணம் இல்லாமல் சிலர் உள்ளனர். மற்றவர்கள் அதே முன்னுரிமைகளைக் கொண்டிருப்பதில்லை என்று கவலையுடன் கூறுகிறேன். பரிசுத்தவான்களுடன் கூடிவருதல் பற்றி (எபிரெயர் 10:25) கூறுவதென்றால், அவர்கள் தேவனை ஆராதித்தல் அல்லது மகிமைப்படுத்துதல் என்பதைக் காட்டிலும் அதிகமாக, தூங்குதல் அல்லது உண்ணுதல் அல்லது பொழுதுபோக்குதல் ஆகியவற்றில் அக்கறை கொண்டுள்ளனர்.

நமது முன்னுரிமைகளின்படி செயல்படுதல் என்பதைத் தவிர்த்து, உபவாசித்தல் மீதான இயேசுவின் அறிவுறுத்துதல்கள் உங்கள் வாழ்வில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்த வேண்டும்? அந்தக் கேள்விக்கு நான் உங்களுக்காகப் பதில் அளிக்க இயலாது. அது உங்கள் மீது கொண்டுள்ள நேர்மறையான செயல் விளைவுகள் யாவை என்று காண நீங்கள் விரும்பலாம். ஒரு சபைக்குழுமம் இடர்ப்பாட்டை எதிர்கொள்கிறது என்றால், அதன் நடத்துனர்கள் உபவாசம் மற்றும் ஜெபம் ஆகியவற்றிற்கான வேளை ஒன்றை அறிவிக்கலாம். இருப்பினும் இயேசு கூறியதை மறந்து விட வேண்டாம். நீங்கள் உபவாசிக்கும்போது, அதைப் பிறர் காணவேண்டும் என்று விரும்பி மற்றவர்களின் கவனத்தை உங்களிடமாய் ஈர்க்காதிருங்கள். அப்போது, "அந்த உபவாசம் ... அந்தரங்கத்தில் இருக்கிற உங்கள் பிதாவால் காணப்படும், அந்தரங்கத்தில் பார்க்கிற உங்கள் பிதா உங்களுக்கு பலனளிப்பார்."

முடிவுரை

பின்வரும் அடிப்படைச் செய்தியின் தடத்தை இழந்துவிடும் அளவுக்கு நாம் இயேசுவின் உதாரணங்களைப் புரிந்துகொள்ள முயல்வதில் ஈடுபட வில்லை என்று நான் நம்புகிறேன்: சரியான விஷயத்தைத் தவறான காரணத்திற்காகச் செய்யாதிருக்கும்படி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அந்தச் செய்தி என்னைக் கவலைப்படுத்துகிறது. நான் போதித்த அல்லது பிரசங்கித்த பின்பு, எனது உரையைக் கேட்பவர்கள் எனக்கு அந்தப் பாடத்திற்காக நன்றி செலுத்துவதை நான் விரும்புகிறேன். எனது எழுத்துக்களைப் பற்றி, அது மக்களுக்கு உதவுகிறது என்று அவர்கள் கூறுவதைக் கேட்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். எனது முயற்சிகளை எவரொருவரும் பாராட்டாவிட்டால், சில வேளைகளில் நான் ஏமாற்றம் அடைகிறேன். ஆகவே என்னையே நான், "கர்த்தருக்கென்று நான் செய்வதை ஏன் செய்கிறேன்? எனது நோக்கங்கள் தூய்மையானவையாக இருக்கின்றனவா?" என்று கேட்டாக வேண்டும். இந்தக் கேள்விகளுடன் நான் தொடர்ந்து போராடுகிறேன்.

இயேசு, தாம் கண்டனம் செய்தவர்களை "மாயக்காரர்" என்று அழைத்தார் (வசனங்கள் 2, 5, 16). மாயக்காரர் என்பவர்கள் தங்களிடம் இராத ஒன்றை இருப்பது போன்று நடிப்பவர்கள் என்று நாம் பொதுவாக நினைக்கிறோம். இருப்பினும் இயேசு குறிப்பிட்டவர்கள், அனேகமாக தங்கள் தேவனுடைய சித்தத்தைச் செய்பவர்களாக இருந்ததாக உண்மையுடன் நம்பி இருக்கலாம்

(காண்க லூக்கா 18:11, 12). அவர்கள் மாயக்காரரின் மிகப் பரிதாபமான வகையாக இருந்தனர்: சுயவஞ்சனையானமாயக்காரர். நாம் சுய வஞ்சனையான மாயக்காரராக இராதபடிக்குத் தேவன் நமக்கு உதவுவாராக. நாம் சரியான விஷயங்களைச் செய்வதற்கு மாத்திரமல்ல, ஆனால் அவற்றைச் சரியான காரணத்திற்காகச் செய்வதற்கும் அவர் நமக்கு உதவுவராக.

குறிப்புகள்

[1]T. S. Eliot, *Murder in the Cathedral;* quoted in Harold Hazelip, *Discipleship*, The 20th Century Sermons Series (Abilene, Tex.: Biblical Research Press, 1977), 59. [2]*ஜெப ஆலயத்தில் ஜெபத்தை வழிநடத்துபவர் முன்பாக, பொதுவாகப் பரிசுத்த சுருள்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு முன்பாக நின்றிருப்பார்.* [3]*ஜெபிக்க எழுந்து நிற்குதலில் தவறு ஒன்றுமில்லை (காண்க லூக்கா 18:10-14). உடல்நிலை அமைவு எந்த நிலையிலும் வைத்து தேவனால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வகையில் ஒருவர் ஜெபிக்க முடியும்.* [4]*மேலும் யூதர்கள், ஏறக்குறைய ஒவ்வொரு சந்தர்ப்பம் அல்லது சூழ்நிலைக்கும் குறிக்கப்பட்ட ஜெபங்களையும் கொண்டிருந்தனர்.* [5]*ஒன்பதாம் மணிவேளை குறித்து நடபடிகள் 3:1ல் காணவும்.* [6]*அந்துருண்டைகள் சிறிய, வெள்ளை நிறத்தில் கோலிக்குண்டு அளவுள்ளவையாகும், அவைகள் (கற்பூரம் போன்ற) பூச்சிகளை எதிர்க்கும் பொருளால் செய்யப்பட்டவையாகும்.* [7]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 95. [8]Frank L. Cox, *Sermon Notes on the Sermon on the Mount* (Nashville: Gospel Advocate Co., 1955), 15. [9]*நீங்கள் வாழும் இடத்தில் சாராசரி நபரின் அன்றாடச் செயல்களுக்குப் பொருந்துமாறு இவ்வாக்கியத்தைத் தழுவியமைத்துக் கொள்ளுங்கள்.* [10]D. Martyn Lloyd-Jones, *Studies in the Sermon on the Mount,* vol. 2 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 46.

[11]Harold Fowler, *Matthew I,* Bible Study Textbook Series (Joplin, Mo.: College Press, 1968), 337. (Emphasis added.) [12]KJV *வேதாகமத்தில் இங்கு* "heathen" *என்றுள்ளது, இதுவே தமிழில் "அஞ்ஞானிகள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* (NASB *வேதாகமத்தில் உள்ளபடி) இயேசு இவ்விடத்தில்* "the Gentiles" *என்று குறிப்பிட்ட புறஜாதியார் உண்மையான தேவன் மீது விசுவாசம் கொண்டிருக்கவில்லை என்ற கருத்தில் "அஞ்ஞானிகளாக" இருந்தனர்.* [13]KJV *வேதாகமத்தில்* "vain repetitions" *என்று இங்குள்ளது. இவ்வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளபடி* "vain" *என்ற வார்த்தை "வெறுமையான, பயனற்ற" என்று அர்த்தப்படுகிறது.* [14]*இது ஒரு ஒலிக் குறிப்புச் சொல்விளக்கமாக உள்ளது என்று சிலர் நினைக்கின்றனர்: இவ்வார்த்தையின் ஒலியே இதன் அர்த்தத்தைக் கருத்தாக வெளிப்படுத்துகிறது. இது அர்த்தமற்ற வகையில் ஒருவர் பேசுதல் என்பதைக் குறிக்க ஒலிக்கும்* "babble" *என்ற வார்த்தையைப் போன்றுள்ளது.* [15]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 4th ed., rev. and aug. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago Press, 1957), 137. [16]Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 55. [17]NEB *வேதாகமத்தில், "அஞ்ஞானிகள் ... தாங்கள் அதிகம் கூறினால் தாங்கள் அதிகமாய் கேட்கப்பட வாய்ப்புள்ளது என்று கற்பனை செய்கின்றனர்" என்றுள்ளது (வசனம் 7).* [18]Vine, 228. [19]*இதனுடன் தொடர்புடைய astia என்ற வார்த்தை நடபடிகள் 27:21, 33ல் பயன்படுத்தப்பட்டுள்ளது. Astia மற்றும் nesteuo என்ற இரு வார்த்தைகளுமே,* "eat" *என்பதற்கான (esthio என்ற) வார்த்தைக்கு முன்பு எதிர்மறை*

முன்குறிச்சொல் இடப்படுவதினால் வடிவமைக்கப்பட்டுள்ளன. (Ibid., 227-28.) [20]Fowler, 358.

[21]*மேலும் லேவியராகமம் 23:26-32; எண்ணாகமம் 29:7 ஆகிய வசனப்பகுதிகளையும் காணவும். புதிய ஏற்பாட்டில் பாவநிவாரண நாள், நடபடிகள் 27:9ல் "உபவாசநாள்" என்று அழைக்கப்பட்டுள்ளது.* [22]*அந்த நிகழ்வுகளின் சில தேதிகள், 2 இராஜாக்கள் 25:1, 3, 25 மற்றும் எரேமியா 52:12, 13ஆகிய வசனங்களில் கண்டறியப்பட முடியும்.* [23]*சூரிய உதயத்திற்கு முன்னரும் சூரியன் மறைவுக்குப் பின்னரும் உணவு உட்கொள்ளப் பட முடிந்தது. நாள் முழுவதுமான உபவாசங்களின் பழைய ஏற்பாட்டு உதாரணங்களுக்கு, நியாயாதிபதிகள் 20:26; 1 சாமுவேல் 14:24; மற்றும் 2 சாமுவேல் 1:12; 3:35ஆகிய வசனங்களைக் காணவும்.* [24]*"முகவாடலாய் இருத்தல்" என்பது, "உணர்ந்தறியப்படாத நிலையை ... தரவழைத்தல்" என்று அர்த்தப்படுகிற aphanizo என்ற வார்த்தையில் இருந்து வருகிறது* (Arndt and Gingrich, 124). [25]*சிலர், தலைக்கு எண்ணெய் பூசுதல் என்பது கொண்டாட்டத்தைக் குறிக்கிறது என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். இருப்பினும் இதுவும் ஒருவர் கவனத்தை ஈர்ப்பதாக இருக்கும். தலைக்கு எண்ணெய் பூசுதல் என்பது காலை வேளையில் செய்யும் வழக்கமான அலங்காரத்தின் ஒரு பகுதி என்று நினைப்பது சிறந்ததாக இருக்கும்.* [26]*உலகில் நீங்கள் வாழும்பகுதியில் வழக்கமானதாக உள்ள காலை அலங்காரச் செயல்களுக்குப் பொருத்தமான வகையில் இந்த வாக்கியத்தைத் தழுவியமைத்துக் கொள்ளுங்கள்.* [27]*லூக்கா 2:37 மற்றும் மத்தேயு 4:2 ஆகியவை உபவாசம் பற்றிய சிறுகுறிப்புடைய வசனப் பகுதிகள் ஆகும்.* KJV *வேதாகமத்தில், மத்தேயு 17:21; மாற்கு 9:29; நடபடிகள் 10:30 மற்றும் 1 கொரிந்தியர் 7:5 ஆகிய வசனங்களில் "உபவாசம்" என்ற வார்த்தை உள்ளது. இருப்பினும், தொடக்க காலக் கைப்பிரதிகளில், அந்த வசனங்களில், "உபவாசம்" என்பதற்கான கிரேக்க வார்த்தை காணப்படுவதில்லை.* [28]R. K. Harrison, "Fast," *The International Standard Bible Encyclopedia,* rev., ed. Geoffrey Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 2:284. [29]*இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஏவுதல் பெற்றிராத எழுத்துக்களில், கிறிஸ்தவர்கள் உபவாசித்தல் பற்றிப் பல குறிப்புகள் உள்ளன, ஆனால் புதிய ஏற்பாட்டில் இதற்கு இணையான குறிப்புகள் எதுவும் இருப்பதில்லை. "உபவாசங்களிலும்" மற்றும் "அநேகமுறை உபவாசங்களிலும்" (இவை இரண்டும்* NASB *வேதாகமத்தில்* "in hunger" *என்று தரவழைக்கப்பட்டுள்ளன) என்ற பவுலின் வார்த்தைகளை (2 கொரிந்தியர் 6:5; 11:27), அவர் ஆவிக்குரிய பயிற்சி என்ற வகையில் அடிக்கடி உபவாசித்தார் என்பதற்கு நிரூபணம் என்ற வகையில் எடுத்துக் கொண்டுள்ளனர் (இவ்விரு வசனப் பகுதிகளும் "உபவாசித்தல்" என்பதற்கான கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்துகின்றன). இருப்பினும் இவ்விரு வசனப்பகுதிகளுக்கு, பவுல் உணவின்றி இருந்ததை, கிறிஸ்துவினிமித்தம் அவர் சகித்துக் கொண்டிருக்க வேண்டியிருந்த விஷயம் என்ற வகையில் எதிர்மறைச் சந்தர்ப்பப் பொருளில் இடுகின்றன.* [30]*கிறிஸ்தவரல்லாதவர்களின் உபவாசம் பற்றிய வேதாகமரீதியான உதாரணங்களுக்குப் பின்வரும் வேதவசனப் பகுதிகளைக் காணவும்: தானியேல் 6:18 (பாபிலோன் இராஜா), யோனா 3:5 (நினிவே நகர மக்கள்) மற்றும் நடபடிகள் 23:12, 14 (சபை நிலைநாட்டப்பட்ட பின்பு யூதர்கள்).*

[31]John R. W. Stott, *The Message of the Sermon on the Mount,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1978), 137. [32]*கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய நோக்கத்திற்காகத் தங்களுக்குச் சட்டப்பூர்வமான சந்தோஷங்களை மறுத்தலுக்கான இன்னொரு உதாரணத்திற்கு, ஜெபத்தில் தங்களை ஒப்புக்கொடுப்பதற்காகக் கிறிஸ்தவத் தம்பதிகள் பாலுறவில் இருந்து விலகி இருத்தலைக் குறிப்பிடும் 1 கொரிந்தியர் 7:5ஐக்*

காணவும். [33]இந்தப் பத்தியை, நீங்கள் ஊழியம் செய்யும் இடத்தின் சூழ்நிலைக்குத் தக்கவாறு தழுவி அமைத்துக் கொள்ளவும்.

11

"நீங்கள் ஜெபம்பண்ண வேண்டிய விதமாவது"

(மத்தேயு 6:9–15; லூக்கா 11:1–4)

மத்தேயு 6ம் அதிகாரத்தில் இயேசு, "மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக" நீதியான செயல்களைச் செய்தலுக்கு எதிராக எச்சரித்து (வசனம் 1) மூன்று உதாரணங்களைக் கொடுத்தார்: ஏழைகளுக்குக் கொடுத்தல் (வசனங்கள் 2-4), ஜெபித்தல் (வசனங்கள் 5-15) மற்றும் உபவாசித்தல் (வசனங்கள் 16-18). ஜெபத்தின் மீதான பகுதியில் நாம், "கர்த்தரின் ஜெபம்" என்று அழைக்கப்பட்டுள்ள ஜெபத்தைக் கொண்டுள்ளோம் (வசனங்கள் 9-15). இவ்வசனப்பகுதிக்கு ஒரு முழுப்பாடத்தை அர்ப்பணிக்கும் அளவுக்கு இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை அதிகமாக உள்ளன. நம்மில் பலருக்கு இதன் வார்த்தைகள் நன்கு பழக்கமானவையாக உள்ளன:

> Then [எனவே][1]
> *நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது:*
> *பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே*
> *உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.*
> *உம்முடைய ராஜ்யம் வருவதாக;*
> *உம்முடைய சித்தம் பரமண்டத்திலே செய்யப்படுகிறதுபோலப்*
> *பூமியிலேயும் செய்யப்படுவதாக.*
> *எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.*
> *எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல*
> *எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்*
> *எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல்,*
> *தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்,*
> *ராஜ்யமும் வல்லமையும் மகிமையும்*
> *என்றென்றைக்கும் உம்முடையவைகளே ஆமேன், என்பதே (வசனங்கள் 9-13).*

பிந்திய ஒரு சந்தர்ப்பத்தில், "அவர் ஒரு இடத்தில் ஜெபம்பண்ணி முடித்தபின்பு, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும் என்றான்" (லூக்கா 11:1). அதற்கு இயேசு இந்த ஜெபத்தின் சிறுவடிவத்தைக் கொண்டு பதில் அளித்தார்:

> *... நீங்கள் ஜெபம்பண்ணும்போது:*

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே
உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.
உம்முடைய ராஜ்யம் வருவதாக;
உம்முடைய சித்தம் பரமண்டத்திலே செய்யப்படுகிறதுபோலப்
பூமியிலேயும் செய்யப்படுவதாக:
எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்றும் எங்களுக்குத் தாரும்;
எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்;
நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே;
எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல்,
தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், என்று சொல்லுங்கள் ...
(லூக்கா 11:2-4).

நமது படிப்பு, இந்த ஜெபத்திற்கு மத்தேயு 6ம் அதிகாரத்தில் தரப்பட்டுள்ள வடிவத்தின் மீது மையங்கொண்டிருக்கும், ஆனால் அவ்வப்போது நான் லூக்கா 11ல் உள்ளதைக் குறிப்பிடுவேன். நாம் இந்த ஜெபத்தை ஆராய்வதற்கு முன்னர், சில விஷயங்களைக் குறிப்பிட என்னை அனுமதியுங்கள். முதலாவது, மத்தேயு 6ம் அதிகாரத்தில் உள்ள இந்த ஜெபமானது சடங்காச்சாரமான ஜெபமாக இருக்க வேண்டும் என்ற நோக்கங் கொண்டதல்ல. மத்தேயு 6:9-15க்கு முந்திய வசனங்களில் இயேசு, "அதிக வசனிப்பு"க்கு எதிராக எச்சரித்தார் (வசனம் 7). மற்றும் கர்த்தர் "நீங்கள் இவ்வாறு ஜெபியுங்கள்" (வசனம் 9அ) அல்லது "நீங்கள் ஜெபம்பண்ண வேண்டிய விதமாவது" (KJV) என்றே கூறினார், அவர் "இதே வார்த்தைகளை மிகச்சரியாகப் பயன்படுத்தி ஜெபியுங்கள்" என்று கூறவில்லை. LB பொழிப்புரை வேதாகமத்தில், "இந்த வரிகளின் துணையுடன் ஜெபியுங்கள்" என்றுள்ளது. இயேசு இந்த ஜெபத்தைப் பிற்பாடு மீண்டும் உரைத்தபோது (லூக்கா 11), அவர்தாமே இதே வார்த்தைகளைப் பயன்படுத்தவில்லை. மத்தேயு 6ல்[2] அவர் நாற்பத்தி ஐந்து வார்த்தைகளைப் பயன்படுத்தினார், மற்றும் லூக்கா 11ல்[3] அவர் முப்பத்து எட்டு வார்த்தைகளையே பயன்படுத்தினார்.

இரண்டாவதாக, "கர்த்தரின் ஜெபம்" என்ற நன்கு பழக்கமான தலைப்பானது மிகச்சிறந்த குறிப்புப் பெயராக இருப்பதில்லை என்று கருத்துத் தெரிவிக்க என்னை அனுமதியுங்கள். இதற்கு இந்தத் தலைப்பானது, அறியப்படாத ஒரு கல்வியாளரால் இருண்ட யுகத்தில் தரப்பட்டது, மற்றும் இந்தச் சொற்றொடர் அப்படியே இதனுடன் நிலைத்து விட்டது. இருப்பினும் இயேசு தாமே இந்த ஜெபத்தை எப்போதாவது செய்திருந்தார் என்பதற்கான பதிவு எதுவும் இருப்பதில்லை.[4] "சீஷர்களின் ஜெபம்" என்பதே மிகச்சிறந்த சொல்விளக்கமாக இருக்கும். "மாதிரி ஜெபம்" என்பது எனக்குப் பிரியமான குறிப்புப் பெயராக உள்ளது.

இந்த ஜெபமானது பல அம்சங்களில் மாதிரியாக உள்ளது. *பரப்பெல்லையில்* இது மாதிரியாக உள்ளது. இது தேவனுடைய மாபெரும் தன்மையை ஒப்புக்கொள்ளுதலைக் கொண்டுள்ளது. இது இராஜ்யம் பற்றிய அக்கறையையும் உலகத்தில் உள்ளவர்கள் எல்லாரையும் பற்றிய அக்கறையையும் வெளிப்படுத்துகிறது. இது தனிப்பட்ட தேவைகளைக்கூடத் தொடுகிறது. மற்றும் இந்த ஜெபமானது *செறிவு* மற்றும் *எளிமை* ஆகியவற்றில் மாதிரியாக உள்ளது. மத்தேயு சுவிசேஷத்தில் இது ஐந்து வசனங்களில் கூறி முடிக்கப்படுகிறது மற்றும்

லூக்கா சுவிசேஷத்தில் இது மூன்று வசனங்களில் கூறி முடிக்கப்படுகிறது. இதன் நீண்ட பதிப்பை உரக்க வாசித்து முடிக்க இருபது வினாடிகளே ஆகிறது. இது மற்ற வழிகளிலும் மாதிரியாக உள்ளது.

இதன் நோக்குதலில் மாதிரி (6:9)

எடுத்துக்காட்டாக இந்த ஜெபம் இதன் நோக்குதலில் மாதிரியாக உள்ளது. முதலாவதாக இது *தேவனை* நோக்கி ஏறெடுக்கப்படுகிறது: “பரமண்டலங்களிலிருக்கிற *எங்கள் பிதாவே*” (வசனம் 9ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). நாம் - மரியாளை நோக்கியோ அல்லது பரிசுத்தர் என்னப்படும் ஒருவரை நோக்கியோ அல்ல ஆனால் - தேவனை நோக்கி ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம், “நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய *தேவனை* ஸ்தோத்திரிக்க” வேண்டும் என்று பவுல் கூறினார் (எபேசியர் 5:20; என்னால் வலியுறுத்தப்படுகிறது). மீண்டுமாக நாம், நமது *பிதாவாக* இருக்கிற தேவனை நோக்கி ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அவர் ஒரு நபர்த்துவமற்ற தேவனாக அல்ல, ஆனால் அக்கறை கொள்கிற மற்றும் தேவையானவற்றை அருளுகிற பிதாவாக இருக்கிறார். மற்றும் நாம் *நமது* பிதாவாக உள்ள தேவனை நோக்கி ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அது ஒரு துறவியின் ஜெபமாக இருப்பதில்லை; அது ஒரே ஒரு பிள்ளையின் ஜெபமாக இருப்பதில்லை. “எங்கள் பிதாவே” என்ற சொற்றொடர், நமது பொதுவான சகோதரத்துவத்தை ஒப்புக்கொள்வதாக உள்ளது. நாம் “நமது பிதாவை” நோக்கி ஜெபிக்கும்போது, நாம் குடும்ப விஷயங்களைக் கலந்துரையாட ஒன்று கூடியுள்ளதை சுட்டிக்காண்பிக்கிறோம்.

இந்த ஜெபமானது தனது நோக்குதலில் *பரலோகத்தை* நோக்கி ஏறெடுக்கப்படுவதாலும் இது, மாதிரியாக உள்ளது: “*பரமண்டலங்களிலிருக்கிற* எங்கள் பிதாவே.” இந்த உலகமானது தேவனுடைய படைப்பாகவும் உடைமை யாகவும் உள்ளது, ஆனால் இது அவரது இல்லமாக இருப்பதில்லை. நமது தேவபக்தியானது பரலோகத்தை மையங்கொண்ட தேவபக்தியாக உள்ளது. இயேசு பரலோகத்தில் இருந்து வந்தார், அவர் மீண்டும் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றார். இப்போது அவர் பரலோகத்தில் தேவனுடைய வலதுபுறத்தில் இருந்து, நமக்காக வேண்டுதல் செய்து கொண்டு இருக்கிறார். ஒருநாளிலே அவர், தமக்குச் சொந்தமானவர்களைக் கூட்டிச்சேர்க்கப் பரலோகத்தில் இருந்து வருவார். பின்பு அவர்கள் அவருடன் பரலோகத்தில் நித்தியகாலத்தையும் செலவிடுவார்கள். பவுல், “நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது” என்று எழுதினார் (பிலிப்பியர் 3:20). இயேசு, தமது சீஷர்களிடத்தில் “உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்” என்று கூறினார் (லூக்கா 10:20) மற்றும் “பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்” என்று அவர்களுக்கு அறைகூவல் விடுத்தார் (மத்தேயு 6:20).

இதன் பயபக்தியில் மாதிரி (6:9)

இந்த ஜெபமானது தனது பயபக்தியிலும் மாதிரியாக உள்ளது. தேவன் ஒரு தற்செயலான நண்பராக இருப்பதில்லை; அவர் நமது பிதாவாக இருக்கிறார் -

மற்றும் அவரது நாமம் பரிசுத்தமானதாக உள்ளது. இந்த ஜெபம் பின்வருமாறு தொடருகிறது: "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" (வசனம் 9இ; காண்க லூக்கா 11:2ஆ). "பரிசுத்தப்படுவதாக" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*hagiazo* என்ற) வார்த்தை, "பரிசுத்தம்" என்பதற்கான (*hagios* என்ற) கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது, இது "பரிசுத்தமானது என்ற வகையில் மதித்தல் அல்லது பயபக்தி செலுத்துதல்" என்று அர்த்தப்படுகிறது.[5] பழைய ஏற்பாட்டில் சங்கீதக்காரர், "அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது" என்று எழுதினார் (சங்கீதம் 111:9). அது போலவே மோசே, "உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக" என்று கட்டளையிட்டார் (யாத்திராகமம் 20:7அ).

தேவனுடைய நாமம் அவரது இருப்பு யாவற்றிற்குமாக நிலைநிற்கிறது. டி மார்ட்டின் லாயிட் - ஜோன்ஸ் அவர்கள், "நாம் தேவனுடைய நாமத்தை வழங்கும் போதெல்லாம் நமது கால்களில் இருந்து நமது காலணிகளைக் கழற்றிவிட வேண்டும் என்பதில் ஒரு கருத்து உள்ளது" என்று எழுதினார்.[6] மாதிரி ஜெபமானது, புதிய ஏற்பாட்டின்கீழ் நாம் இன்னமும், கர்த்தருக்கு முன்பாகப் பய உணர்வின் ஆழ்ந்தறிவான கருத்துடன் வரவேண்டும் என்பதைத் தெளிவாக்குகிறது.

இதன் வலியுறுத்தத்தில் மாதிரி (6:10)

இப்போது குறிப்பிடப்பட்ட பயபக்தியானது, இந்த ஜெபத்தில் உள்ள வேண்டுகோள்களுக்கு நாம் வருகையில், அவற்றிற்கேற்ற தொனியை அமைக்கிறது. சுயத்தின் மீதல்ல ஆனால் தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் மீதே தொடக்க அக்கறை வெளிப்படுத்தப்படுகிறது: "உம்முடைய ராஜ்யம் வருவதாக" (வசனம் 10அ; காண்க லூக்கா 11:2இ). "இராஜ்யம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட (*basileia* என்ற) வார்த்தை, "இராஜரீகம், இராஜரீக அதிகாரம், ஆளுகை" என்பதைக் குறிக்கிறது. பேச்சு உருவகம் என்ற வகையில் இது, "ஒரு அரசர் ஆளுகை செய்யும் எல்லை அல்லது மக்கள்" என்பதைக் குறிக்கிறது.[7] தேவனுடைய இராஜ்யம் என்பது தேவனுடைய ஆளுகையைக் குறிக்கிறது. "உம்முடைய ராஜ்யம் வருவதாக" என்ற வார்த்தைகள் "இன்னும் அதிகம் அதிகமான மக்கள், தங்கள் இருதயங்களில் தேவனைத் தங்கள் அரசராகக் கிரீடம் சூட்டுவார்களாக" என்று அர்த்தப்பட முடியும். இந்தக் கருத்தில் இது, இந்த ஜெபத்தின் அடுத்த வேண்டுகோளைப் போன்றதாகவே உள்ளது. "உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" (வசனம் 10ஆ).

இருப்பினும், மலைப்பிரசங்கத்தின் சந்தர்ப்பப் பொருளை மறந்துவிட வேண்டாம். அந்தப் பிரசங்கத்தை இயேசு பிரசங்கிப்பதற்குச் சற்று முன்னர், அவர் "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று பிரசங்கித்தபடி கலிலேயா முழுவதிலும் பயணம் செய்திருந்தார் (4:17). "இராஜ்யம்" என்பது, யூதர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மேசியாத்துவ இராஜ்யமாக இருந்தது. அந்த இராஜ்யமானது, கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு பின் வந்த, யூதர்களின் முதல் பெந்தெகொஸ்தே நாளில் நிலைநாட்டப்பட இருந்தது. இதை "சபை" என்று நிருபங்கள் வழக்கமாக அழைக்கின்றன. மேசியாத்துவ இராஜ்யம் மீதான சில திறவுகோல் வசனங்களை

- ரோமப் பேரரசின் நாட்களில் மேசியாத்துவ இராஜ்யம் வரும் என்று தானியேல் வாக்களித்திருந்தார் (காண்க தானியேல் 2:44).[8]
- ரோமர்கள் உலகத்தை ஆண்டபோது, யோவான் ஸ்நானனும் பின்பு இயேசுவும் வந்து, "பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று பிரசங்கித்தனர் (மத்தேயு 3:2; 4:17).
- செசரியாவில் இருந்த பிலிப்பி நகரில் இயேசு, தமது இராஜ்யத்தை நிலைநாட்டுதல் பற்றிப் பேசி, அதைத் தமது சபை என்று குறிப்பிட்டார் (மத்யேு 16:18, 19).
- இராஜ்யமானது கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலர்களின் வாழ்நாள் காலத்திலேயே வரும் என்றும் அது "பலத்தோடே வரும்" (மாற்கு 9:1) என்றும் அவர்களிடம் கிறிஸ்து கூறினார். பிற்பாடு அவர், பரிசுத்த ஆவியானவர் வரும்போது அந்த பலம் வரும் என்று கூறினார் (நடபடிகள் 1:6-8).
- பரிசுத்த ஆவியானவர், இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப் பின்வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் வந்தார் (நடபடிகள் 2:1-4). வல்லமை வந்தது மற்றும் இராஜ்யம்/சபை நிலைநாட்டப்பட்டது.

பெந்தெகொஸ்தே நாளில் இருந்து, இராஜ்யம்/சபை இருந்து வந்ததாகப் பேசப்பட்டது. மக்கள் இரட்சிக்கப்பட்டபோது, தேவன் அவர்களை "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு" உட்படுத்தி (கொலோசெயர் 1:13), அவர்களைத் தேவன் தமது சபைக்குள் சேர்த்தார் (காண்க நடபடிகள் 2:47). கிறிஸ்தவர்கள் ஒரு அசைவில்லாத இராஜ்யமாகிய (எபிரெயர் 12:28), பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்ள முடியாத சபைக்குள் (மத்தேயு 16:18) இருக்கின்றனர்!

இயேசு, தமது சீஷர்கள் "உம்முடைய ராஜ்யம் வருவதாக" என்று ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டபோது, அவர் தமது சீஷர்களை, சபை உள்ளடங்கிய தேவனுடைய மாபெரும் நித்திய வடிவமைப்பில் பங்கேற்பவர்களாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார் (காண்க எபேசியர் 3:10, 11).

[கர்த்தருடைய] ஜெபத்தின் இந்தப் பகுதியை நாம் இன்றைய நாட்களில் ஜெபிக்க வேண்டுமா? J. W. மெக்கார்வீ அவர்கள், "நாம், 'உம்முடைய ராஜ்யம் வருவதாக' என்ற வேண்டுகோளை விட்டுவிட வேண்டும்; ஏனெனில், இராஜ்யம் ஏற்கனவே வந்துள்ளது என்ற நிலையில் இந்த வேண்டுகோளின் கருத்து ஏற்பில்லாததாகவும், இவ்வார்த்தைகளை இன்னமும் அப்படியே தக்கவைத்திருப்பது தக்கது அல்லாததாகவும் உள்ளது, இருப்பினும் இவற்றை இயேசு பயன்படுத்திய கருத்திலிருந்து சற்று மாறுபட்ட கருத்தில் இணைப்பது ஏற்புடையதல்ல" என்று எழுதினார்.[9] இருப்பினும் இவ்வார்த்தைகளை ஏதேனும் ஒரு வகையில் தகுதிப்படுத்துவது சாத்தியமாக உள்ளது. நாம், "உம்முடைய இராஜ்யம் உலகம் முழுவதிலும் வருவதாக" என்று, அல்லது "உம்முடைய இராஜ்யம் எல்லா மனிதர்களின் இருதயங்களிலும் வருவதாக" என்று கூறலாம்.

இந்த வேண்டுகோளை நாம் நமக்கு உரியதாக்கி, "உமது ஆளுகையானது எனது இருதயத்தில் இன்னும் முழுமையாக நிலைநாட்டப்படுவதாக" என்று கூறலாம். இவ்விஷயத்தை எச்சரிக்கையாகக் கவனியுங்கள், ஏனெனில் இவ்வார்த்தைகளை நாம் எந்தத் தகுதிப்படுத்துதலும் இன்றிப் பயன்படுத்தினால், கிறிஸ்துவின் இராஜ்யம் இன்னும் நிலைநாட்டப்படவில்லை என்று நம்புகிற, ஆயிரமாண்டு முன்னரசாட்சிக் கொள்கைக்காரர்களுக்கு நாம் நற்சான்று கொடுத்தவர்களாகக் காணப்படுவோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்களும் நானும் இராஜ்யத்தை/சபையைப் பற்றி *அக்கறை கொண்டு* இருக்க வேண்டும் - மற்றும் அதன் நலத்தை நமது ஜெபங்களில் உள்ளடக்க வேண்டும் - என்று இயேசுவின் மாதிரி ஜெபம் போதிக்கிறது. நாம், நமது சமூகத்திலும் உலகம் முழுவதிலும் உள்ள சபைக்காக ஜெபிக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் நாம் *இன்னமும்* தேவன், "கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே" "அவருடைய அந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக" என்ற அவரது "அநாதி தீர்மானம்" என்ற தேவனுடைய மாபெரும் திட்டத்தில் பங்கேற்பவர்களாக இருக்க முடியும் (எபேசியர் 3:10, 11)!

இதன் அக்கறையில் மாதிரி (6:10)

அடுத்த வேண்டுகோள், ஆவிக்குரிய விஷயத்தில் வலியுறுத்தத்தைத் தொடர்கிறது: "உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக'' (வசனம் 10ஆ). பூமியில் உள்ள ஒவ்வொருவரும் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற விருப்பம் வெளிப்படுத்தப்படுகிறது. இப்படிப்பட்ட சாத்தியக்கூற்றினை ஆழ்ந்து சிந்திப்பதுகூட நம்மைத் தள்ளாடச் செய்கிறது. தேவனுடைய அரியணைக்கு முன்பாகத் தூதர்களும் பிரதான தூதர்களும் நிற்பதைச் சித்தரித்துப் பாருங்கள். அவர்கள் அவரது கட்டளைகளைக் கேள்விப்படவும் அவற்றிற்குக் கீழ்ப்படிய உணர்வுடன் தயாராக இருக்கவும் பேரார்வம் கொண்டிருப்பதைக் காணுங்கள். தேவனுடைய சித்தமானது இவ்வாறே பூமி முழுவதிலும் கீழ்ப்படியப்பட்டால், அது அற்புதமானதாக இராதா? தேவனுடைய சித்தமானது அவரது வசனத்தில் அடிப்படையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது; ஆகவே, ஜெபத்தின் இந்தப் பகுதி பதில் அளிக்கப்படுவதற்கு, நாம் வசனத்தைப் பூமி முழுவதற்கும் எடுத்துச் செல்ல வேண்டும் (மத்தேயு 28:18-20; மாற்கு 16:15, 16). பின்பு நாம், கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி எங்குமுள்ள மக்கள் யாவரையும் ஊக்கப்படுத்த வேண்டும்.

இருப்பினும் ஜெபத்தின் இப்பகுதியினுடைய முதன்மை மதிப்பானது, தேவனுடைய சித்தம் பற்றிய நமது சொந்த எண்ணப்போக்குகளைப் பரிசீலனை செய்யும்படி நம்மைக் கட்டாயப்படுத்துவதாக உள்ளது. சிலர் தங்கள் வாழ்விற்கான தேவனுடைய சித்தம் பற்றிச் சந்தோஷம் கொள்வதில்லை. வாழ்வு என்ற பெரிய நாடகம் பற்றி, "மனிதர்கள் தங்களுக்கு, பரலோகத்தின் அரசரால் கையளிக்கப்பட்ட பாத்திரப்படைப்புகளை விரும்புவதில்லை'' என்று கூறப்பட்டுள்ளது. செயல்விளைவில் சிலர், "பூமியில் *எனது* சித்தம் செய்யப்படுவதாக" என்று ஜெபிக்கின்றனர். வில்லியம் பார்க்ளே அவர்கள், "ஜெபம் என்பது நமது விருப்பங்களுக்குத் தேவனுடைய சித்தத்தை

வளைக்கும் முயற்சியாக ஒருக்காலும் இருக்கக் கூடாது; ஜெபம் என்பது எப்போதுமே, நமது சொந்த விருப்பங்களைத் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியச் செய்யும் முயற்சியாக இருக்க வேண்டும்" என்று எழுதினார்.[10]

இதன் வரையறையில் மாதிரி (6:11)

இந்த ஜெபத்தின் பாதிப்பகுதி வரையிலும் நாம் பார்த்திருக்கிறோம், இது வரையிலும் தனிப்பட்ட வேண்டுகோள் எதுவும் இருக்கவில்லை. இது நமது ஜெபங்களில் இருக்க வேண்டிய வலியுறுத்தம் என்ன என்பதைப் பற்றி நமக்குக் கூறவேண்டும். இருப்பினும் நமது இருதயங்கள் தனிப்பட்ட வேண்டுகோள்களுக்குத் தயாராக இருக்க வேண்டும். அடுத்ததாக நாம், "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று[11] எங்களுக்குத் தாரும்" என்று வாசிக்கிறோம் (வசனம் 11). லூக்கா சுவிசேஷத்தில், "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை *அன்றன்றும்* எங்களுக்குத் தாரும்" என்றுள்ளது (லூக்கா 11:3; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இந்த ஜெபத்தில் உள்ள *வரையறையைக்* கவனியுங்கள்: இது ஒரு கேக் அல்லது விரும்பத்தக்க இனிப்புக்கான வேண்டுகோளாக இருப்பதில்லை,[12] ஆனால் அப்பத்திற்கான வேண்டுகோளாக இருக்கிறது. இது ஒரு மாதத்திற்குத் தேவையான அப்பத்திற்கான வேண்டுகோளாக இருப்பதில்லை, ஆனால் அந்த நாளுக்குப் போதுமான அப்பத்திற்கான வேண்டுகோளாக இருக்கிறது. "இந்த ஜெபமானது நமது பேராசைகளுக்கானதாக இராமல், நமது தேவைகளுக்கானதாக உள்ளது."[13]

நாம், வாழ்வின் அத்தியாவசியத் தேவைகளில் சந்தோஷம் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பது, ஜெபத்தின் இந்தப் பகுதியில் உள்ள பாடங்களில் ஒன்றாக உள்ளது. உணவு என்பது நாம் கொண்டிருக்க வேண்டிய ஒரு சில விஷயங்களில் ஒன்றாக உள்ளது. மற்ற விஷயங்களைக் கேட்பதில் தவறில்லை, ஆனால் நமது சந்தோஷமானது பொருட்களைச் சேர்த்துக் குவிப்பதை சார்ந்திருக்கக் கூடாது. பவுல், "உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்" என்று எழுதினார் (1 தீமோத்தேயு 6:8).

ஜெபத்தின் இந்தப் பகுதியில் நாம் மற்ற பாடங்களைக் காணுகிறோம். எடுத்துக்காட்டாக, தேவன் நமது ஆசீர்வாதங்களின் ஆதாரமூலமாக இருக்கிறார் என்று நமக்கு நினைவூட்டப்படுகிறது: நமது அன்றாட உணவு போன்ற எளிய மற்றும் அடிப்படையான விஷயத்திற்கு நாம் அவரிடத்தில் ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் "நான் என்ன செய்தேன் பாருங்கள்" என்றல்ல, ஆனால் அதற்கு மாறாக, "தேவன் எனக்கு என்ன செய்திருக்கிறார் என்று பாருங்கள்" எனக் கூற வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் கொண்டுள்ள ஒவ்வொன்றும் வழியில் நாம் பொறுக்கி எடுத்துக் கொண்டதாகவே உள்ளது, ஆனால் பொறுக்கி எடுத்துக்கொள்ளும்படி அதை அங்கே போட்டவர் தேவனாக இருக்கிறார். நாம் நமது அன்றாட உணவிற்காக உழைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் (காண்க 2 தெசலோனிக்கேயர் 3:10), ஆனால் அந்த ஆசீர்வாதத்தின் நிறைவான ஆதாரமூலத்தை நாம் அங்கீகரிக்க வேண்டியவர்களாக இன்னமும் இருக்கிறோம்:

> ஒரு முழு ரொட்டிக்குப் பின்னால் பனிபோன்ற மாவு உள்ளது

மாவுக்குப் பின்னால் மாவாலை உள்ளது;
மாவாலைக்குப் பின்னால் கோதுமையும்
சாரல் மழையும்
சூரியனும் பிதாவின் சித்தமும் உள்ளது.[14]

மேலும், சுயநலமற்று இருக்க வேண்டியதன் அவசியத்தையும் 11ம் வசனம் மறைமுகமாக உணர்த்துகிறது. நாம், "*எனது* அன்றாட உணவிற்காக" என்றல்ல ஆனால் "*எங்கள்* அன்றாட உணவிற்காக" என்று ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த ஜெபம் முழுவதிலும், கிறிஸ்தவர்களின் சமூகத்தின்மீதான வலியுறுத்தம் ஒன்று உள்ளது. இந்த ஜெபத்தைத் திரும்பவும் வாசியுங்கள். "நான்" என்ற தன்மைப் பெயர்ச்சொல் இதில் காணப்படுவதில்லை. இந்த ஜெபம், பிறருக்கான அக்கறை பெருமளவு நிரம்பியதாக உள்ளது.

இதன் தாழ்மையில் மாதிரி (6:12)

இன்னொரு தனிப்பட்ட வேண்டுதல் இந்த ஜெபத்தில் அடுத்து உள்ளது: "எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" (வசனம் 12ஆ). "கடன்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*opheilema* என்ற) கிரேக்க வார்த்தை, கடன்பட்டுள்ளதைக் குறிக்கிறது; இருப்பினும் இங்கு நிதிநிலை சார்ந்த கடன் என்று அல்ல, ஆனால் ஆவிக்குரிய கடன் ஒன்றே குறிப்பாக உள்ளது - இது நாம் ஒருக்காலும் திருப்பிச் செலுத்த இயலாத கடனாக உள்ளது. புதிய ஏற்பாட்டில் இந்த கிரேக்க வார்த்தை ஒருமையில் பயன்படுத்தப்படும்போது, இது ஒரு "குற்றம், தவறு, பாவம்" என்பதைக் குறிக்கப் பயன்படுகிறது.[15] லூக்கா சுவிசேஷத்தில் "எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்" என்றுள்ளது (லூக்கா 11:4அ).[16] பரிசுத்தமான தேவனுக்கு முன்பாக நாம் நின்று, நாம் பாவிகளாக இருக்கிறோம் என்று ஒப்புக்கொண்டு நம்மை மன்னிக்கும்படி தேவனிடத்தில் வேண்டிக் கேட்கிறோம். இது நமது பெருமை உணர்வின் இருதயம் போன்ற மையப் பகுதியில் பலமாகத் தாக்குகிறது.

இந்த வேண்டுகோளின் முந்திய பகுதியானது நமது பெருமை உணர்வை இன்னும் கூர்மையாகத் தாக்குகிறது: "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல" (வசனம் 12அ).[17] மன்னித்தல் என்பது அவ்வளவு கடினமானதாக இருக்கக் கூடும்! C. S. லூயிஸ் என்பவர், "ஒவ்வொருவருமே, மன்னிப்பதற்கு ஏதேனும் விஷயத்தைத் தாம் கொண்டிராத வரையில், மன்னித்தல் என்பது அற்புதமான ஒரு கருத்து என்று கூறுகின்றனர்" என்று கூறினார்.[18] மீறுதல் எவ்வளவு பெரிதாக உள்ளதோ, அவ்வளவுக்கு மன்னித்தல் என்பது கடினமானதாக உள்ளது. யாரேனும் ஒருவர் நமது மனதைப் புண்படுத்தும்போது, நமது தன்முனைப்பும் பெருமை உணர்வும் காயப்படுத்தப்படுகின்றன. நாம், "என்னால் அவரை (அல்லது அவளை) ஒருக்காலும் மன்னிக்க முடியாது!" என்று நினைக்கச் சாயலாம். செயல்விளைவில், "இது முக்கியமானதே அல்ல. இது என்னை விட்டுக் கடந்து செல்ல நான் அனுமதிக்க வேண்டும்!" என்று கூறுதல் எவ்வளவு கடினமானதாக உள்ளது!

சிலவேளைகளில் என்னிடத்தில், "ஒருவர் மனந்திரும்பி மன்னிப்புக் கேட்காதிருந்தால் அவரை நான் மன்னிக்க முடியுமா?" என்று கேட்கப்பட்டுள்ளது. சிலர் லூக்கா 17:3ஐ சுட்டிக்காண்பித்து, அத்துடன்,

நாம் மனந்திரும்பாத வரையில் தேவன் நம்மை மன்னிப்பதில்லை என்ற உண்மையையும் சுட்டிக்காண்பிக்கின்றனர். இருப்பினும் நான், நமது இருதயங்களின் *எண்ணப்போக்குப்* பற்றிப் பேசுவதைக் காட்டிலும் அதிகமாக, ஐக்கியத்தை மீளக்கட்டுவித்தல் பற்றிப் பேசுவதில்லை. இயேசு சிலுவையின் மீது இருந்த வேளையில் கூட, "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று ஜெபித்தார் (லூக்கா 23:34). அவர் இந்த ஜெபத்தை ஏறெடுத்தாலும், அவர்கள் மனந்திரும்பாத வரையிலும் அவர்களின் பாவங்களினுடைய குற்றமானது அவர்களின் ஆத்துமாக்களின் மீது நிலைத்திருந்தது (காண்க நடபடிகள் 2:36-38). இயேசு தமது இருதயத்தில் *விரோத உணர்வு* எதையும் கொண்டிருக்கவில்லை என்பதே கருத்தாக உள்ளது. யாரேனும் ஒருவர் எனக்கு துன்பம் விளைவித்தால், அவர் தவறு செய்ததாக ஒப்புக்கொள்ளும் வரையில், அவருடனான எனது உறவுமுறை அனேகமாக மனப்பூர்வமற்றதாகவே இருக்கும், ஆனால் *எனது* இருதயத்திற்குள் (அவரைப் பற்றிய) தீய சிந்தை எதுவும் இராதிருப்பதை நிச்சயப்படுத்திக்கொள்வதே எனது மாபெரும் அக்கறையாக இருக்க வேண்டும். "கசப்பான வேர் முளைத்தெழும்பி" (எபிரெயர் 12:15), *எனது* இருதயத்தை நிரப்பி நான் மற்றவர்கள் மீது கொண்டிருக்க வேண்டிய அன்பை விகாரமாக்கி விடாதபடிக்கு நான் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஜெபத்தின் இப்பகுதி பற்றிய லூக்கா சுவிசேஷ விபரமானது, பின்வரும் நேர்மறையான குறிப்பைக் கொண்டுள்ளது: "நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே" (லூக்கா 11:4ஆ).

நாம் மன்னிக்க மனவிருப்பம் இல்லாதிருந்தால் என்னவாகும்? முதலாவது, அது நமது தற்போதய சந்தோஷத்தை அழிக்கக் கூடும். லேரி கல்வின் என்ற ஆலோசனையாளர், "கசப்புணர்வு நமது ஆவியை அரிக்கிறது, நமது பலத்தை உறிஞ்சுகிறது, நமது பசியை அழிக்கிறது, நமது உறக்கத்தைத் தொந்தரவு செய்கிறது மற்றும் நமது உடல் நலத்தைச் சிதைக்கிறது. மனதில் கசப்புணர்வைக் கொண்டிருத்தல் நமது முகங்களில் சுருக்கங்களை ஏற்படுத்துகிறது, நமது தோள்களை வளைத்துச் சீர்கெடுக்கிறது, நமது வயிறுகளைக் குடல்புண்களால் எரியச் செய்கிறது மற்றும் நமது உதடுகளில் சுளிப்பை வரவழைக்கிறது" என்று எழுதினார்.[19]

இரண்டாவதாக - மற்றும் மிக முக்கியமாக - மன்னிக்க மனவிருப்பமற்று இருத்தல் என்பது நமது நித்திய சந்தோஷத்தை இடர்ப்பாட்டிற்கு உள்ளாக்கக் கூடும் என்ற உண்மை உள்ளது. மாதிரி ஜெபத்தைத் தொடர்ந்து வருகிற, சிந்தனையைத் தூண்டும் இயேசுவின் பின்வரும் வார்த்தைகள் மீது கவனம் செலுத்துங்கள்: "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" (மத்தேயு 6:14, 15). மன்னிக்க மனவிருப்பம் இல்லாத மனிதர், தாம் கடந்து செல்ல வேண்டிய பாலத்தை அழிக்கிறார் என்று கூறப்பட்டுள்ளது.

இதன் உட்கண்ணோக்கில் மாதிரி (6:13அ)

இந்த ஜெபம் தொடர்ந்து, "எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" என்று கூறுகிறது (வசனம் 13அ;

காண்க லூக்கா 11:4இ). "சோதனை" என்று மொழிபெயர்க்கப்பட்ட (*peirasmos* என்ற) கிரேக்க வார்த்தை பல்வேறு அர்த்தங்களைக் கொண்டிருக்க முடியும், ஆனால் இந்த வசனத்தில் இது "தீமை" என்ற வார்த்தையுடன் ஒன்றுக்குப் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த சந்தர்ப்பப் பொருளில் இது, "தவறு செய்வதற்கான சோதனை" என்பதைக் குறிக்கிறது. இயேசு தமது சீஷர்களுக்குப் போதிக்கப் பயன்படுத்திய ஜெபமானது அதன் உட்கண்ணோக்கில் மாதிரியாக உள்ளது, ஏனெனில் இது பாவங்களை மன்னித்தல் என்பதைப் பற்றிக் கவனம் செலுத்துவதோடு கூட, பாவத்தை உண்டாக்கும் விஷயங்களில் இருந்து புறம்பே இருத்தல் பற்றியும் கவனம் செலுத்துகிறது.

கிரேக்க வசனத்தில், "தீமை" என்ற வார்த்தைக்கு முன்னதாக, திட்டவட்டச் சுட்டுச்சொல் உள்ளது; நேரடி அர்த்தத்தில் இது, "*the* evil" என்று கூறுகிறது. "The evil [thing]" (தீமையான ஏதொன்றும்) அல்லது "the evil [one]" (பிசாசானவன்) என்பது இதன் அர்த்தமாக இருக்கக் கூடும்.[20] தீமை யாவற்றிற்கும் (அதாவது, பாவம் நிறைந்த ஒவ்வொரு விஷயத்திற்கும்) பிசாசானவனே பொறுப்பாளியாக இருப்பதால், இவ்விரு அர்த்தங்களும் ஒரு அடிப்படைச் சிந்தனையையே கொண்டு வருகின்றன.

இந்த ஜெபமானது, சோதனையில் இருந்து விலகி இருக்க,[21] நமது வழியில் வரும் சோதனைகளைச் சந்திப்பதில் உதவி செய்ய, மற்றும் சாத்தானைத் தோல்வியடையச் செய்வதில் உதவிசெய்யத் தேவனுடைய உதவியைக் கேட்கும்படி நமக்குப் போதிக்கிறது. இது நம்மீது பொறுப்பை வைப்பதாகவும் உள்ளது. மிக அடிக்கடி நாம், நமது கண்களை அகலத் திறந்து வைத்துக் கொண்டே, சோதனை நிறைந்த சூழ்நிலை ஒன்றில் அடியெடுத்து நடந்து சென்றுள்ள பின்பு, அந்த இடர்பாட்டில் இருந்து தேவன் நம்மைக் காப்பாற்ற வேண்டும் என்று விரும்புகிறோம். நாம் "எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல் ..." என்று ஜெபித்துவிட்டு, பின்பு நாம் சோதிக்கப்படுவோம் என்று அறிகிற இடத்திற்கு வேண்டுமென்றே செல்லக் கூடாது.

இதன் துதியில் மாதிரி (6:13ஆ)

மாதிரி ஜெபத்தின் நிறைவு வார்த்தைகள் வேதாகமத்தில் அடைப்புக் குறிகளுக்குள் உள்ளன: [ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்] (வசனம் 13ஆ). தொடக்ககாலக் கையெழுத்துப் பிரதிகளில் இந்த முடிவு வார்த்தைகள் காணப்படுவதில்லை. இருப்பினும் சபையின் தொடக்க நூற்றாண்டுகளில் இவ்வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டதற்கான சான்று உள்ளது, இவைகள் பெரும்பான்மையான மொழிபெயர்ப்பு வேதாகமங்களில் ஏதேனும் ஒரு இடத்தில் - அடிக்குறிப்புகளில் அல்லது பக்க ஓரக்குறிப்புகளில் - உள்ளன. இவைகள் இந்த ஜெபத்தை முடிப்பதற்குப் பொருத்தமான வார்த்தைகளாக உள்ளன. இவைகள் சகல நன்மைக்கும் ஊற்றான தேவனை நோக்கித் திரும்புகின்றன:

- "இராஜ்யம்" அவருடையதாக உள்ளது. இராஜ்யம் அவருக்கு உரியதாக உள்ளது. அவர் எல்லாவற்றிற்கும் மேலானவராக இருக்கிறார் - இதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.
- "வல்லமை" அவருடையதாக உள்ளது. தேவனுடைய வல்லமையோடு

ஒப்பிடுகையில், மனிதர் கொண்டிருக்கக் கூடிய எந்த வல்லமையும் அற்பமானதாக உள்ளது - இதை நாம் உணர்ந்தறிய வேண்டும்.

- "மகிமை" அவருடையதாக உள்ளது - இதை நாம் அறிவிக்க வேண்டும்.
- இவை யாவும் "என்றென்றைக்கும்" உண்மையாக இருக்கும். "ஆமென்."

முடிவுரை

அதுவே மாதிரி ஜெபமாக உள்ளது. இது ஜெபத்தைப் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டிய எல்லாவற்றையும் நமக்குப் போதிக்கிறதா? இல்லை. எடுத்துக்காட்டாக, இது இயேசுவின் நாமத்தில் ஏறெடுக்கப்படவில்லை. மோசேயின் பிரமாணம் அமலில் இருந்த வேளையில், மாதிரி ஜெபம் உரைக்கப்பட்டது, மற்றும் இது இன்றைய நாட்களின் மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்ட எந்த யூதராலும் ஜெபிக்கப்படக் கூடும். புதிய உடன்படிக்கையின்கீழ் நாம், "*நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே*[22] எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரிக்க வேண்டும்" (எபேசியர் 5:20 [என்னால் வலியுறுத்தப்படுகிறது]; மேலும் காண்க யோவான் 16:24 மற்றும் கொலோசெயர் 3:17). மற்றும், மாதிரி ஜெபத்தில் உள்ள வேண்டுகோள் தனது இயல்பில் பொதுவானதாக உள்ளது. பொதுவான ஜெபங்களுக்கான காலமும் இடமும் உள்ளன, ஆனால் நமது ஜெபங்கள் குறிப்பானவையாக இருக்க வேண்டும் என்பது விதியாக உள்ளது, நாம் குறிப்பிட்ட ஆசீர்வாதங்களுக்காக நன்றி செலுத்துவது அவசியமாக உள்ளது. நாம் குறிப்பிட்ட பாவங்களை அறிக்கை செய்வது அவசியமாக உள்ளது. நாம் குறிப்பிட்ட மக்களுக்காக ஜெபிப்பது அவசியமாக உள்ளது. (காண்க கொலோசெயர் 1:3; 1 தெசலோனிக்கேயர் 1:2, 3; 2 தெசலோனிக்கேயர் 2:13; யாக்கோபு 5:16.) இருந்த போதிலும், மாதிரி ஜெபத்தில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் அதிகமாக உள்ளன. ஏற்கனவே குறிப்பிட்டபடி, இது நோக்குதலில், பயபக்தியில், வலியுறுத்தத்தில், அக்கறையில், வரையறையில், தாழ்மையில், உட்கண்ணோக்கில் மற்றும் துதியில் மாதிரியாக உள்ளது.

நாம் இப்பாடத்தை முடிக்கும் இவ்வேளையில், இந்த ஜெபம் "பரமண்டலங்களிலிருக்கிற *எங்கள் பிதாவே*" என்று தொடங்குகிறது என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன் (வசனம் 9அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). தேவன் உங்கள் பிதாவாக இராத வரையிலும் நீங்கள் சட்டப்பூர்வமாக இந்த ஜெபத்தை ஜெபிக்க இயலாது. அவர் உங்கள் பிதாவாக *இருக்கிறாரா?* நீங்கள் அவருடைய பிள்ளையாக *இருக்கிறீர்களா?* நீங்கள் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவற்றினால் தேவனுடைய குடும்பத்திற்குள் பிறந்திருக்கிறீர்களா? பவுல், "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் *பற்றும் விசுவாசத்தினால்* தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் *கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள்* எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே" என்று எழுதினார் (கலாத்தியர் 3:26, 27; என்னால் வலியுறுத்தப்படுகிறது). மனம்வருந்திய விசுவாசி என்ற வகையில் நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருந்தால், தேவனுடைய பிள்ளை என்ற வகையில் நீங்கள் *நடந்திருக்கிறீர்களா* - அல்லது சபையாகிய அவருடைய

குடும்பத்திற்கு நீங்கள் கெட்டபெயரைக் கொண்டு வந்திருக்கிறீர்களா (1 தீமோத்தேயு 3:15)? நீங்கள் ஞானஸ்நானம் பெறவேண்டியிருந்தால் அல்லது மீளக்கட்டுவிக்கப் படவேண்டியிருந்தால் (காண்க கலாத்தியர் 6:1; நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16), அதை நீங்கள் இன்றே செய்ய வேண்டும் என்பதற்காக நான் ஜெபிக்கிறேன்.

குறிப்புகள்

[1]*"Then" என்ற வார்த்தை, இந்த ஜெபத்தை முந்திய போதனையுடன் பிணைக்கிறது. நாம் அர்த்தமற்ற வகையில் வார்த்தைகளைக் கூறிக் கொண்டிருக்கக் கூடாது (மத்தேயு 6:7). மாறாக நாம் "இவ்வாறு" ஜெபிக்க வேண்டியுள்ளது.* [2]*இது தமிழ் வேதாகமத்தில் 68 வார்த்தைகள் உள்ளதைக் குறிக்கிறது. 13ம் வசனத்தின் கடைசிப் பகுதியும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக இது யூகிக்கிறது (இந்தப் பாடத்தின் பிற்பகுதியில் இதன் மீதான குறிப்புகளைக் காணவும்).* KJV *வேதாகமத்தில், மத்தேயுவின் சுவிசேஷத்தில் 66 வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிரேக்க வசனத்தில், மத்தேயு சுவிசேஷ விபரத்தில் 58 வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டுள்ளன, இதில் 13ம் வசனத்தின் கடைசிப் பகுதி எண்ணப்படவில்லை.* [3]*இது தமிழ் வேதாகமத்தின்படியானதாகும்.* KJV *வேதாகமத்தில், லூக்கா சுவிசேஷத்தில் 58 வார்த்தைகள் உள்ளது. கிரேக்க வசனத்தில் லூக்கா சுவிசேஷத்தில் 38 வார்த்தைகள் உள்ளன.* [4]*உண்மையான "கர்த்தரின் ஜெபம்" யோவான் 17ல் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது.* [5]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons, Ltd., 1971), 3. [6]D. Martyn Lloyd-Jones, *Studies in the Sermon on the Mount,* vol. 2 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 60. *லாயிட் - ஜோன்ஸ், யாத்திராகமம் 3:5ல் மோசே தமது காலணிகளை அகற்றியதை மறைவாகக் குறிப்பிட்டார்.* [7]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 344. [8]*வரலாற்றில் இருந்து ரோமப்பேரரசு என்று நாம் அறியும் நான்காவது ஆட்சிவகையின்போது இராஜ்யம் நிலைநாட்டப்படும் என்று தானியேல் தீர்க்கதரிசனம் கூறியிருந்தார்.* [9]J. W. McGarvey, *The New Testament Commentary,* vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., 2006), 64-65. [10]William Barclay, *The Gospel of Matthew,* vol. 1, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 198-99.

[11]*"அன்றாடம்" அல்லது "அநுதினம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையைப் பற்றி விளக்கவுரையாளர்கள் அதிகம் கூறுகின்றனர். மிகவும் சாத்தியமான அர்த்தமானது மத்தேயு 6:11ல் உள்ள "இன்று" என்ற சொற்றொடருடன் தொடர்புடையதாக உள்ளது. "நாளை" என்பது சாத்தியமான இன்னொரு அர்த்தமாக உள்ளது. எவ்வகையிலும், உடனடி எதிர்காலத்திற்குத் தேவையானவற்றைக் கேட்கும்படியாகவே நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம்.* [12]*நீங்கள் வாழும் இடத்திற்கு ஏற்றாற்போன்று இதைத் தழுவியமைத்துக் கொள்ளுங்கள்.* [13]D. A. Carson, "Matthew," *The Expositor's Bible Commentary,* vol. 8 (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1984), 171. [14]Maltbie Davenport Babcock, "Give Us This Day Our Daily Bread," *Bartlett's Familiar Quotations,* 12th ed. (Boston: Little, Brown and Company, 1948), 731. [15]*The Analytical Greek Lexicon,* 296. *இந்த ஜெபத்தின் நன்கு அறியப்பட்ட பதிப்பு ஒன்று, "மீறுதல்கள்" ("பாவம்" என்ற அர்த்தப்படக்கூடிய ஒரு வார்த்தை)*

என்ற வார்த்தையைக் கொண்டுள்ளது: "எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் பொறுப்பது போல எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்." (John Wallace Suter, *The Book of Common Prayer and Administration of the Sacraments and Other Rites and Ceremonies of the Church* [New York: The Church Pension Fund, 1945], 67.) [16]லூக்கா, "பாவங்கள்" மற்றும் "கடன்கள்" என்ற வார்த்தைகளை ஒன்றுக்குப் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தினார். [17]இவ்வசனத்தை மத்தேயு 18:23-35 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். [18]"English Literature: C. S. Lewis" (http://www.anglik.net/lewis.htm; Internet; accessed 13 June 2008). [19]Larry Calvin, *The Power Zone* (Fort Worth: Sweet Publishing, 1995), 95. [20]NKJV வேதாகமத்தில் "the evil one" என்றுள்ளது.

[21]தேவன் யாரையும் சோதிப்பதில்லையென்பதால் (யாக்கோபு 1:13), "எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல்" என்ற சொற்றொடர், "சோதனைக்குள் வழிநடத்தப்பட்டுவிடாமல் இருக்க எங்களுக்கு உதவி செய்யும்" என்பதைப்போன்று அர்த்தப்பட வேண்டும். [22]"இயேசுவின் நாமத்தினாலே" என்பது நாம் சொல்லும் வார்த்தைகளை மாத்திரம் கொண்டிருப்பதில்லை; இயேசு இப்போது நமது மத்தியஸ்தராயிருக்கிறார் (1 தீமோத்தேயு 2:5) என்ற நமது புரிந்து கொள்ளுதலை அங்கீகரிப்பதாக இருக்கிறது.

12

முடிவெடுக்கும் வேளை!

(மத்தேயு 6:19-24)

பெருங்குவியலான உருளைக் கிழங்குகளைத் தோல் உரிக்கும் வேலை தரப்பட்ட ஒரு மனிதரைப் பற்றிய பழைய கதை ஒன்றுள்ளது. அவரைக் கூலிக்கு அமர்த்தியவர், நீங்கள் அவற்றைத் தோல் உரித்த பின்னர், "அவற்றின் அளவுக்குத் தக்காற்போன்று மூன்று குவியல்களாக வகைப்படுத்துங்கள்: சிறியவை, நடுத்தரமானவை மற்றும் பெரியவை." ஏறக்குறைய ஒரு மணி நேரத்திற்குப் பின்பு, அவர் களைப்படைந்திருப்பதை, அவரை வேலைக்கு அமர்த்தியவர் பரிசோதித்துக் கண்டறிந்தார். "உருளைக் கிழங்கு உரித்தல் இவ்வளவு கடினமான வேலையாயிருக்கும் என்று நான் ஒருக்காலும் உணர்ந்ததில்லை" என்று வேலைக்கு அமர்த்தியவர் கூறினார். அதற்கு அம்மனிதர், "உருளைக் கிழங்குகளை உரித்தல் என்பது அவ்வளவு கடினமானதல்ல. (அவற்றின் அளவு பற்றிய) அந்த முடிவுகளை எடுத்தலே என்னைக் களைப்படையச் செய்வதாக உள்ளது!" என்று பதில் அளித்தார்.

இது ஒரு பழைய கதையாக இருக்கலாம், ஆனால் நம்மில் பலர், உருளைக்கிழங்குகளை வகைப்படுத்துதலில் நம்மை அடையாளம் காண்கிறோம்; முடிவுகளை எடுப்பதை நாம் விரும்புவதில்லை. இருந்தபோதிலும் நாம், தினந்தோறும் முடிவுகளை எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அவற்றில் சில, காலை உணவிற்கு எதை உண்பது அல்லது இன்றைய நாளில் எதை உடுத்துவது என்பவை போன்ற, சார்பளவில் முக்கியத்துவம் அற்றவைகளாக உள்ளன.[1] மற்றவைகள், ஒருவர் தாம் செய்யவிருக்கும் வேலை அல்லது யாரைத் திருமணம் செய்துகொள்வது என்பதைப் பற்றிய முடிவுகள் போன்ற, மிகவும் அதிகம் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கலாம். இந்த முடிவுகள் நமது வாழ்வில் செயல் தாக்கத்தைக் கொண்டுள்ளன. இருப்பினும் கர்த்தருக்கு ஊழியம் செய்தல் என்று முடிவு செய்தலைக் காட்டிலும் அதிகம் முக்கியத்துவமான முடிவு வேறு எதுவும் இருப்பதில்லை. அந்த முடிவானது இப்போது மாத்திரம் செயல்தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருப்பதில்லை, ஆனால் அது நமது நித்தியத்தின் மீதும் செயல்தாக்கத்தை ஏற்படுத்தும்.

நமது பாடத்திற்கான வேதவசனப் பகுதியானது - வாழ்வை மாற்றும், *நித்தியத்தை மாற்றும்* - முடிவுகளைப் பற்றியதாக உள்ளது. நாம் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டிய மூன்று தெரிவுகளை இவ்வசனப் பகுதியில் நாம் கண்டறிகிறோம்.

பூமியா அல்லது பரலோகமா? (6:19-21)

பூமியிலே அல்ல

முதல் தெரிவு 19 முதல் 21 வரையுள்ள வசனங்களில் காணப்படுகிறது:

பூமி அல்லது பரலோகம் ஆகிய இரண்டில் ஒன்றை நாம் தெரிவுசெய்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இவ்வசனப் பகுதி, பின்வரும் வார்த்தைகளுடன் தொடங்குகிறது: "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களை சேர்த்துவைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்" (வசனம் 19).

இவ்வார்த்தைகள் எல்லா உடைமைகள் மீதும் ஒரு தடை என்ற வகையில் இருக்க நோக்கங் கொண்டிருக்கவில்லை. பவுல், "... நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் ..." என்று எழுதினார் (1 தீமோத்தேயு 6:17; மேலும் காண்க 4:4). அதேபோன்று இவ்வசனப் பகுதியானது எதிர்காலத்திற்கான அளிப்பைத் தடை செய்வதற்காகத் தரப்படவும் இல்லை. குளிர்காலத்திற்கென்று உணவைச் சேமித்துவைக்கும் எறும்பை, சாலொமோன் புகழ்ந்தார் (நீதிமொழிகள் 6:6-8). அப்படியென்றால் இயேசுவின் அக்கறை எதுவாக இருந்தது? அந்தக் கேள்விக்குப் பதிலானது "உங்களுக்கு" என்ற வார்த்தைகளில் காணப்படுகிறது: "பூமியிலே *உங்களுக்குப்* பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம்." ஜான் ஸ்டாட் அவர்கள், இயேசு பழித்துரைத்தது என்ன என்பதைப் பற்றிப் பின்வரும் தொகுப்புரையைக் கொடுத்தார்:

> பொருட்களைச் *சுயநலத்துடன்* சேர்த்துக் குவித்தலை, ... மிதமிஞ்சிய ஆடம்பரமான மற்றும் வசதிமிக்க வாழ்வு ... உலகத்தில் உள்ள வசதிக்குறைவான மக்களின் அத்தியாவசியத் தேவைகளை உணராத இருதயக் கடினம் ... ஒரு நபரின் வாழ்வு என்பது அவரது ஏராளமான உடைமைகளிலேயே அடங்கியுள்ளது என்ற மதியீனமான பகற்கனவு (லூக்கா 12:15) ... மற்றும் நமது இருதயங்களை இந்தப் பூமியுடன் பிணைத்து வைக்கும் பொருள்முதல் வாதக் கொள்கை ஆகியவற்றை இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு, தடைசெய்கிறார்.[2]

யாரேனும் ஒருவர், "இதைப் பிரசங்கியுங்கள்! எல்லாப் பொக்கிஷங்களையும் கொண்டுள்ள பணக்காரர்களுக்கு அந்தச் செய்தி தேவைப்படுகிறது! ஆனால் இவ்வசனப்பகுதி நிச்சயமாக எனக்கு நடைமுறைப்படுவதில்லை. என்னிடத்தில் பொக்கிஷங்கள் இல்லை. நான் அன்றாடம் வாழ்வதற்கு தேவையானவற்றைச் சம்பாதிப்பதே சிரமமாக உள்ளது" என்று நினைக்கிறாரா? நமது வேதவசனப் பகுதியில் பூமிக்குரிய பொக்கிஷங்கள் மீது வலியுறுத்தம் உள்ளது என்பது உண்மையே, ஆனால் இதற்கான நடைமுறைப் பயன்பாடு ஒவ்வொருவருக்கும் ஏற்படுத்தப்பட முடியும், நாம் எல்லாருமே, "பொக்கிஷமாக" சிலவற்றை, நமக்கு முக்கியமாக உள்ள சிலவற்றைக் கொண்டிருக்கிறோம். அது குடும்ப உறுப்பினர்களாக இருக்கலாம், ஒரு இல்லமாக, ஒரு வேலையாக, ஒரு திறமையாக, உடல்ரீதியான பலமாக, ஒரு நல்ல பெயராக அல்லது ஏறக்குறைய எந்த விஷயமாகவும் இருக்கலாம். குளோவிஸ் சேப்பல் அவர்கள், "நாம் மிகச்சிறப்பாக நேசிக்கக் கூடிய சில விஷயங்கள்/நபர்கள்/ பொருட்கள் என்பவை நமக்குப் பொக்கிஷமாக உள்ளது. அது நம்முடையதாக இராதிருந்தால், அதை உடைமையாகக் கொண்டிருக்க நாம் மிகவும் முயற்சி செய்வோம். நாம் ஏற்கனவே அதை உடைமையாகக் கொண்டிருந்தால்,

அதை இழந்து போவதைக் குறித்து நாம் மிகவும் அச்சம் அடைவோம்" என்று எழுதினார்.[3] மேலே பட்டியலிடப்பட்ட பொருட்களின் வகைகளை மதித்தலும் அவற்றை மகிழ்வுடன் அனுபவிப்பதும் தவறல்ல, ஆனால் இவைகள் நமக்கு மிக முக்கியமானவைகளாக - நமது பிரியங்கள் இந்த பூமியின் மீது மையங்கொண்டிருந்தால் - அது மிகவும் தவறானதாக உள்ளது.

நமது வேதபாட வசனப்பகுதியில் இயேசு, பூமியின்மீது நாம் செல்வங்களைச் சேர்த்து வைக்கக் கூடாது என்பதற்குப் பல காரணங்களைக் கொடுத்தார். அவரது முதல் வேண்டுகோள் மனதிற்கானதாக, பொது அறிவை நோக்கியதாக உள்ளது: "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்" (வசனம் 19).

உலகத்தில் நான் வாழும் பகுதியில், பூமிக்குரிய பொக்கிஷங்கள் என்பவை பெரும்பாலும் வங்கிக் கணக்குகளாகவே உள்ளன, ஆனால் உலகின் பிற பாகங்களில் விஷயம் அப்படி இருப்பதில்லை. பழங்கால உலகத்தில் விஷயம் அவ்வாறு இருந்ததில்லை என்பது நிச்சயம். ஞானிகள், குழந்தை இயேசுவுக்கு முன்பாக "தங்கள் பொக்கிஷங்களைத்" திறந்தபோது, அவர்கள் ஒரு காசோலையையோ அல்லது பணத்தையோ இயேசுவுக்குக் கொடுக்கவில்லை. அவர்களின் பொக்கிஷங்களில், பொன், தூபவர்க்கம் மற்றும் வெள்ளைப்போளம் ஆகியவை இருந்தன (மத்தேயு 2:11). (இவைகள் மதிப்பு மிக்கவையாக இருந்த போதிலும், இவைகள் சிறியவையாக, சுலபமாக எடுத்துச் செல்லக் கூடியவையாக மற்றும் மேற்கு நோக்கிய அவர்களின் நீண்ட பயணத்தில் சுலபமாக மறைத்துக் காக்கப்படக் கூடியவையாக இருந்ததால் இவைகள் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கலாம்.)

இயேசுவின் நாட்களில், ஒரு மனிதரின் செல்வமானது, உடைகள்,[4] தானியம்,[5] விலையுயர்ந்த உலோகங்கள் மற்றும் ஆபரணங்கள் உட்படப் பலவகையான பொருட்களில் முதலீடு செய்யப்படும் நிலை இருந்தது. இவை யாவையும் அழிக்கப்பட அல்லது களவாடப்படக் கூடியவையாக இருந்தன மற்றும் இருக்கின்றன. *பூச்சி என்பது இயேசுவினால் முதலில் பட்டியலிடப்பட்ட அழிக்கும் கருவியாக இருந்தது.* முதல் நூற்றாண்டில் மிக விலையுயர்ந்த ஆடம்பரமான உடைகளைப் பூச்சிகள் அழித்துப் போட முடிந்திருந்தது. சேர்த்து வைக்கப்பட்ட உடைகளின் மீது, பூச்சிகள் தங்கள் முட்டைகளை இட்டன, அந்த முட்டைகள் உடைகளைத் தின்னும் கூட்டுப் புழுக்களாக ஆயின. சற்றுக்காலம் சேமிப்பில் வைக்கப்பட்ட உங்களுக்குப் பிரியமான உடையின் மீது சிறு சிறு துளைகள் இருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்த அனுபவம் உங்களுக்கு இருக்கும் என்றால், நான் எதை அர்த்தப்படுத்துகிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

NASB மற்றும் பிற மொழிபெயர்ப்புகளில் "துரு" என்று அழைக்கப்படுவது இரண்டாவது அழிக்கும் கருவியாக இருக்கிறது. "துரு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*brosis* என்ற) வார்த்தை "உண்ணுதல்" என்று அர்த்தப்படுகிறது.[6] இது "உண்பவர்" என்ற வகையில் நினைக்கப்படலாம். இவ்வார்த்தை, இரும்பைக் கொண்டுள்ள எந்தப் பொருளையும் உண்ணுகிற துருவை அல்லது விலையுயர்ந்த உலோகங்களில் மதிப்பைக் குறைக்கும் அரிமானத்தைக் குறிக்கக்கூடும். இந்தச் சொற்றொடர், சேமித்து வைக்கப்பட்ட தானியத்தை வீணாக்கும் சுண்டெலிகள் மற்றும் பிற சுரண்டி வாழும் சிறு

விலங்குகளையும் உள்ளடக்க முடியும். இது வளரும் பயிர்களை அழிக்கும் புழுக்களைக் கூடக் குறிக்க முடியும்.

"கன்னமிட்டுத் திருடும்" திருடர்கள் என்போர், இயேசு குறிப்பிட்ட மூன்றாவது அழிக்கும் கருவியாக இருந்தனர். பலஸ்தீன நாட்டில் உள்ள பெரும்பான்மையான வீடுகள், உலர்ந்த, வெய்யிலில் காயவைக்கப்பட்ட செங்கற்களினால் கட்டப்பட்டிருந்தன. கதவுகள் பூட்டப்பட்டு அல்லது தடையிடப்பட்டு இருந்தாலும், திருட வேண்டும் என்பதில் தீர்மானமாயிருக்கும் திருடன், சுவர்களில் கன்னம் வைத்து உள்ளே நுழைந்து, அந்தக் குடியிருப்பில் வைக்கப்பட்டிருக்கும் விலையுயர்ந்த பொருட்களைக் களவாடிச் சென்று விடுவான். பழங்கால உலகத்தில் எதுவும் பாதுகாப்பாக இருந்ததில்லை.

"அது என் விஷயமாக இராதது பற்றி நான் நன்றி செலுத்துகிறேன். நான் பூச்சிகளுக்கு மருந்து தெளிக்கிறேன், சிறு விலங்குகள் வராதபடி பொறி வைக்கிறேன், மற்றும் திருடர்கள் குறுக்கிடுவதற்கு எதிராக நவீனப் பாதுகாப்பு முறையைக் கொண்டிருக்கிறேன்" என்று சிலர் பதில் அளிக்கலாம்.[7] இருப்பினும் நீங்கள், சாத்தியமான ஒவ்வொரு முன்பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மேற்கொண்ட பின்னும்கூட, சாலொமோன் கூறியபடி, நாம் சொந்தமாகக் கொண்டுள்ள பொருட்கள் தங்களுக்குச் சிறகுகளை ஏற்படுத்திக் கொண்டு பறந்து போய்விட முடியும் (காண்க நீதிமொழிகள் 23:5). செல்வங்களை அழிக்கும் வல்லமையுள்ளவை பற்றிய பட்டியலானது ஏறக்குறைய முடிவே இல்லாததாக உள்ளது:

தீவிரமான சுகவீனம்
வியாபாரத்தில் தோல்வி
வேலையை இழத்தல்
பொருளாதாரச் சீர்குலைவு
நிதிகளைத் தவறாகக் கையாளுதல்
இயற்கைப் பேரழிவுகள்
போர்கள்

உங்கள் வாழ்நாள் முழுவதிலும் உங்கள் உடைமைகளை உங்களால் வைத்துக் கொண்டிருக்க முடிந்தாலும், ஒருநாளில் நீங்கள் இறந்து போவீர்கள் (எபிரெயர் 9:27) மற்றும் அப்போது நீங்கள் அவற்றைப் பின்வைத்துப் போக வேண்டியிருக்கும். மரணம் அணுகுகையில் ஒரு மனிதர், தனது செல்வங்கள் எல்லாவற்றையும் வைரங்களாகவும் தங்க நாணயங்களாவும் மாற்றினார். அவர் அந்த வைரங்களை விழுங்கி, தங்க நாணயங்களைத் தனது சவ அடக்க உடையின் ஓரங்களில் தைத்துக் கொண்டார்.[8] அவரது செல்வம் அவருடன் கல்லறைக்குச் சென்றது, ஆனால் இனிவரும் உலகத்திற்குள் அவை செல்வதில்லை. இந்தக் கருத்திற்கு யோபுவின் வார்த்தைகள் ஏற்புடையவையாகக் காணப்படுகின்றன: "நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்" (யோபு 1:21).

யோவான், "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்" என்று எழுதினார் (1 யோவான் 2:17அ). ஒருவர் தம்மைச் சுற்றிக் கவனித்துப் பார்த்தால், இது - உலகப் பொருள்களுக்கு மாத்திரமல்ல ஆனால் பூமியின் மீது மக்கள் பொக்கிஷமாகக் கொண்டிருக்கும் எல்லாப் பொருட்களுக்குமே - உண்மை

என்பதைக் காண முடியும். உடல்நலம் கடந்து செல்கிறது. அழகு தேய்கிறது. பலம் தோல்வியடைகிறது. திறமைகள் குறைகின்றன. மற்றும் நாம் இழந்து போகாதிருப்பவைகள் அடிக்கடி தங்கள் பிரியமான தோற்றத்தை இழந்து போகின்றன அல்லது நம்மைத் திருப்திப்படுத்துவதை விட்டொழிக்கின்றன. ஆகவே இயேசு, "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம்" என்று கட்டளையிட்டார், ஏனென்றால் அந்தப் பொக்கிஷங்கள் மறைந்து போகும்.

ஆனால் "பரலோகத்திலே"

தொடர்ந்து இயேசு, "பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை" என்று கூறினார் (வசனம் 20). பரலோகத்தில் "பூச்சிகளோ அல்லது சுண்டெலிகளோ அல்லது கொள்ளைக் காரர்களோ இருப்பதில்லை."[9] "பரலோக வங்கியில்" உள்ள "சேமிப்புகள்" யாவும் பாதுகாப்பாக உள்ளன. பேதுரு, "பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிற ... மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்தைப்" பற்றி எழுதினார் (1 பேதுரு 1:4, 5).

நாம், "பரலோகத்திலே ... பொக்கிஷங்களைச் சேர்த்து" வைப்பது எப்படி? நமது பூமிக்குரிய ஆசீர்வாதங்களைத் தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்குப் பயன்படுத்துதல் என்பதே இந்த வேதபாட வசனப் பகுதியில் வலியுறுத்தப்படுகிறது. பணக்கார இளைஞனான அதிகாரி ஒருவரிடத்தில் இயேசு, "போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, *அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்*" என்று கூறினார் (மத்தேயு 19:21; என்னால் வலியுறுத்தப்படுகிறது). தீமோத்தேயுவுக்குப் பவுல் பின்வருமாறு எழுதினார்,

> இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மைசெய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி *வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும்* அவர்களுக்குக் கட்டளையிடு (1 தீமோத்தேயு 6:17-19; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

"நாம் அதை நம்முடன் எடுத்துச் செல்ல முடியாது, ஆனால் நமக்கு முன்பாக அதை நம்மால் அனுப்பி வைக்க முடியும்" என்று கூறப்பட்டுள்ளது. இதே போன்ற ஒரு சத்தியம் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது: "நாம் எதை வைத்துக் கொள்கிறோமோ, அதை இழந்து போகிறோம்; ஆனால் நாம் எதைக் கொடுக்கிறோமோ, அதைக் கொண்டிருக்கிறோம்."

இருப்பினும், பரலோகத்திலே பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தலின் கொள்கையானது, பொருளாதார ஆசீர்வாதங்களைத் தக்க வகையில் பயன்படுத்துதல் என்பதோடு மாத்திரம் மட்டுப் படுத்தப்படுவதில்லை. நாம்

செய்கிற எல்லாவற்றிலும் தேவனை முதலாவதாக நாம் வைக்கையில் (மத்தேயு 6:33), நாம் பரலோகத்திலே பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பவர்களாக இருக்கிறோம். மலைப்பிரசங்கத்தில் விவரிக்கப்பட்டுள்ள வகையிலான வாழ்வை நாம் வாழுகையில், நாம் பரலோகத்திலே பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பவர்களாக இருக்கிறோம்.

பரலோகத்திலே பொக்கிஷங்களைச் சேர்த்து வைத்தல் முக்கியமானதாக உள்ளது ஏன்? நாம் குறிப்பிட்டுள்ளபடி, இயேசுவின் முதல் வேண்டுகோள் *மனதிற்கானதாக* உள்ளது: பூமியின்மீதுள்ள பொக்கிஷங்கள் தற்காலிகமானவையாக உள்ளன. அவரது இரண்டாவது வேண்டுகோள் *இருதயத்திற்கு*, உணர்வுகளுக்கானதாக உள்ளது. 21ம் வசனத்தில் அவர், "உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயம் இருக்கும்" என்று கூறினார்.

இயேசு, "உங்கள் இருதயம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் பொக்கிஷமும் இருக்கும்" என்று கூறியிருக்க முடியும். நாம் பொக்கிஷமாகக் கருதுபவற்றிற்காக நாம், நேரத்தையும் பணத்தையும் சக்தியையும் செலவிடுகிறோம். இருப்பினும் இயேசு, சற்றே மாறுபட்ட கருத்தை - தொடர்புடைய, ஆனால் மாறுபாடான கருத்தை - ஏற்படுத்தினார். நாம் பூமியின்மீது அதிகமான பொக்கிஷத்தைக் கொண்டிருந்தால், அங்கே நமது இருதயங்களும் இருக்கும். நாம் பரலோகத்தில் அதிகமான பொக்கிஷத்தைக் கொண்டிருந்தால், நமது இருதயமும் அங்கே இருக்கும். "சூரியகாந்திப் பூ சூரியனைப் பின்தொடர்வது போன்று இருதயமும் பொக்கிஷத்தைப் பின்தொடருகிறது."[10]

சில நாட்களுக்கு முன்பு நான், மெல் ஸ்டின்னெட் அவர்களால் போதிக்கப்பட்ட வகுப்பில் அமர்ந்திருந்தேன். அவர், முப்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்கு (1840-1873), ஆப்பிரிக்காவில் ஊழியராகப் பணியாற்றிய டேவிட் லிவிங்ஸ்டோன் என்பவரைப் பற்றிக் கூறினார். முனைவர். லிவிங்ஸ்டோன் மரித்தபோது, அவரது உடல் இங்கிலாந்திற்குத் திரும்பக் கொண்டுவரப்பட்டது, ஆனால் அவரது இருதயம், அவர் மரித்த இடமான ஆப்பிரிக்காவில் இருந்த ஒரு மரத்தின் அடியிலேயே புதைக்கப்பட்டது. வகுப்பில் இருந்த எங்களிடத்தில், சகோதரர் ஸ்டின்னெட், "வேறொரு நாட்டில் உள்ள மக்கள் உங்களை ஒரு ஆண்டவளவாகப் பின்தொடர்ந்தனர் என்றால், உங்கள் இருதயத்தை அவர்கள் எங்கே புதைப்பார்கள்? உங்கள் வங்கியிலா, உங்கள் வீட்டிலா, உங்கள் வியாபார இடத்திலா அல்லது வேறு எங்கே புதைப்பார்கள்?" என்று கேட்டார்.[11]

நமது இருதயங்கள் எங்கே உள்ளன? நமக்கு மிக முக்கியமானதாக உள்ளது எது? பவுல், "நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்" என்று எழுதினார் (கொலோசெயர் 3:1, 2).

இருளா அல்லது வெளிச்சமா? (6:22, 23)

இருள் மற்றும் வெளிச்சம் ஆகிய இரண்டில் ஒன்று என்பது, நமது வேதபாட வசனப் பகுதியில் உள்ள இரண்டாவது தெரிவாக உள்ளது. இந்தத் தெரிவைப்

பற்றிப் பேசுகையில் இயேசு, தமது நாட்களில் அனேகமாகப் பொதுவானதும்,[12] அதினால் தம் உரையைக் கேட்பவர்களால் சுலபமாகப் புரிந்துகொள்ளக் கூடியதுமான ஒரு ஒப்புவமையைப் பயன்படுத்தினார். இருப்பினும் இது இன்றைய நாட்களில் பொதுவான பயன்பாட்டில் இருப்பதில்லை, எனவே இது நம்மைக் குழப்பம் அடையச் செய்கிறது. இயேசு கூறியது பின்வருமாறு:

> கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்! (வசனங்கள் 22, 23).

உருவகம்

விரிவாக்கப்பட்ட ஒரு உருவகத்தை இயேசு பயன்படுத்தினார்.[13] ஒரு உருவகத்தைப் புரிந்து கொள்வதற்கு ஒருவர், முதலில் அந்த உருவகம் எந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த விஷயத்தில், இது உடலுடன் கண்ணுக்கு உள்ள உறவு என்பதாக உள்ளது.

“கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது”: அதாவது, கண்ணானது உடலுக்கு வெளிச்சம் மற்றும் பார்வை ஆகியவற்றை அளிக்கிறது. உருவகங்களின் ஒளிக்கதிர்கள் கண்ணுக்குள் நுழைந்து, ஒளிநரம்புகளால் மூளைக்குப் கடத்தப்படுகின்றன. பின்பு மூளையானது அந்தத் தகவலைப் பயன்படுத்தி உடலைக் கட்டுப்படுத்துகிறது. கண் நல்லதாக (“தெளிவானதாக”) இருந்தால், அது மிகச் சரியான தகவல்களை மூளைக்கு அளிக்கிறது. இருப்பினும் கண் “மோசமானதாக” - அதில் புரை, குளுக்கோமா அல்லது பிற பார்வைக் குறைபாடுகள் - இருந்தால், அது மூளைக்கு அனுப்புகிற தகவல்கள் தெளிவற்றவையாக இருக்கும். கண் காணக்கூடாதபடி குருடாக்கப்பட்டிருந்தால், மூளைக்கு எந்தவிதமான செய்தியும் அனுப்பப்படாது. கண் என்பது உடலுக்கு வெளிச்சம் கொண்டுவரும்படி வடிவமைக்கப்பட்ட ஒரே ஒரு உறுப்பாக உள்ளது; ஆகையால், அது இருளாக இருந்தது என்றால், “இருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!”

செய்தி?

கண்ணுக்கு உடலுடன் உள்ள உறவுமுறை, புரிந்துகொள்ளக் கடினமாக இருப்பதில்லை, ஆனால் அந்த உறவுமுறையைக் குறிப்பிடுவதன் மூலம் இயேசு கூற நோக்கம் கொண்டுள்ள சத்தியம் என்ன? சந்தர்ப்பப் பொருளைச் சிந்தையில் காத்துக்கொள்ளுதலே இயேசுவின் செய்தியைப் புரிந்து கொள்வதற்கான திறவுகோலாக உள்ளது. இதற்கு முன்புள்ள வசனங்கள் (வசனங்கள் 19-21), பூமியின் மீது பொருள் உடைமைகளைச் சேர்த்துக் குவித்து வைத்தலுக்கு எதிராக எச்சரிக்கின்றன. பின்தொடரும் வசனம் (வசனம் 24), பொருள் உடைமைகளுக்கு மேலாகத் தேவனைத் தேர்ந்து கொள்ளுதல் பற்றியதாக உள்ளது. எனவே 22 மற்றும் 23ம் வசனங்கள் அடிப்படையில், நாம் பொருள் உடைமைகளை எவ்வாறு கண்ணோக்குகிறோம் என்பதைப் பற்றியதாக உள்ளன என்று முடிவு செய்தல் பகுத்தறிவிற்குப் பொருத்தமானதாக உள்ளது.

"தெளிவு" மற்றும் "கெட்டது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைகளுக்கு இடையில் உள்ள வேறுபாட்டு ஒப்பீட்டைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தலானது நமது புரிந்து கொள்ளுதலைக் கூர்மைப்படுத்தலாம். "தெளிவு" என்பது *haplous* என்ற சொல்லில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. *Haplous* என்ற சொல்லை உடலில் உள்ள கண்ணுக்குப் பயன்படுத்தும்போது, இது "தெளிவான, பலமான, ஆரோக்கியமான" என்று அர்த்தப்படுகிறது.[14] இருப்பினும் "ஒருமைத்தன்மை" என்பதே இவ்வார்த்தையின் அடிப்படை அர்த்தமாக உள்ளது. *Haplous* என்பது இந்தக் கருத்திலேயே எபேசியர் 6:5 மற்றும் கொலோசெயர் 3:22 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது மற்றும் இவ்விரு சந்தர்ப்பப் பொருள்களிலும் இது "உண்மைத்தன்மை" ("கபடற்ற" மற்றும் "கபடமில்லாத") என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வசனங்களில், NASB வேதாகமத்தில் "இருதயத்தின் உண்மைத்தன்மையோடு" என்றிருக்கையில், KJV வேதாகமத்தில் "இருதயத்தின் ஒருமைத்தன்மையோடு" என்றுள்ளது. நமது வேதபாட வசனப்பகுதிக்கு இதை நடைமுறைப்படுத்துகையில், போதகர்களும் பிரசங்கியார்களும் அடிக்கடி ("இருமனம்" கொண்டவர்களாக [காண்க யாக்கோபு 1:8] இருத்தலுக்குப் பதிலாக) "ஒருமைத்தன்மையுள்ள சிந்தை" கொண்டிருத்தலின் அவசியம் பற்றிப் பேசுகின்றனர். இந்த விளக்கமானது இந்த ஒப்புவமையை 24ம் வசனத்தில் உள்ள சிந்தனையுடன் தொடர்புபடுத்துகிறது: எவரொருவரும் (இருமனம் கொண்ட தனிநபர்கள் செய்ய முயற்சிப்பது போன்று) இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய இயலாது. *Haplous* என்ற வார்த்தை "பெருந்தன்மை" என்ற சொற்பொருளையும் கொண்டிருக்க முடியும். இவ்வார்த்தையின் ஒரு வடிவமானது ரோமர் 12:8 மற்றும் 2 கொரிந்தியர் 8:2 ஆகிய வசனங்களில் "தாராளமாக" என்று அர்த்தப்படும் வகையில் முறையே, "வஞ்சனையில்லாமல்" மற்றும் "மிகுந்த உதாரத்துவமாய்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

"கெட்டது" என்பது "பொல்லாத" என்பதற்கான *poneros* என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[15] இவ்வார்த்தையைக் கண்ணுக்குப் பயன்படுத்தும்போது, இது "மோசமான நிலை, நோய்வாய்ப்பட்டிருத்தல்" என்று அர்த்தப்படுகிறது. பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பான (செப்துவஜிந்த் அல்லது LXX என்ற) வேதாகமத்தில், "வன்கண்" என்பது சில வேளைகளில் கஞ்சத்தனத்தை விவரிக்கப் பயன்படுத்தப்பட்டது என்ற உண்மை நமது கலந்துரையாடலுக்கு ஏற்புடையதாக உள்ளது. உதாரணமாக, பின்வரும் வாக்கியத்தைப் பயன்படுத்தும் உபாகமம் 15:9ஐக் கவனியுங்கள்: "... உன் ஏழைச் சகோதரனுக்குக் கொடாமல் மறுத்து, அவன்மேல் வன்கண் வைக்காதபடிக்கும், ..." நாம் இந்த அர்த்தத்தை நமது வேதபாட வசனப்பகுதிக்குப் பயன்படுத்தினால், "பெருந்தன்மையான கண்" கொண்டிருத்தல் அல்லது "வன்கண்" கொண்டிருத்தல் என்பவற்றிற்கு இடையில் வேறுபாடு உண்டாயிருக்கும்.

"தெளிவு" மற்றும் "கெட்ட" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைகளின் சாத்தியமான அர்த்தங்களின் மத்தியில் தேர்வு செய்தல் அவசியமற்றதாக உள்ளது. நாம் உடைமைகள் *மீது ஆரோக்கியமற்ற எண்ணப்போக்கையல்ல ஆனால் ஆரோக்கியமான எண்ணப்போக்கைக்* கொண்டிருக்க வேண்டும் என்று தான் தேவன் விரும்புகிறார். தேவனுடைய விஷயங்கள் பற்றி நாம் *தனித்தன்மை வாய்ந்த சிந்தை* கொண்டிருக்க

வேண்டும், எப்போதுமே அவரது இராஜ்யத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டும் (வசனம் 33). விஷயம் அப்படி இருக்கும்போது, பிறருக்கு உதவுவதில் நாம் *கஞ்சத்தனமாக* இருக்க மாட்டோம், ஆனால் *பெருந்தன்மை* நம் குணமாயிருக்கும்.

இன்றைய நாட்களில், நாம் "கண்" என்ற சொற்றொடராக்கத்தைப் பயன்படுத்துகிற வார்த்தைகளையும் சொற்றொடர்களையும் இன்னமும் கொண்டிருக்கிறோம். "I see" என்று நாம் கூறுகிறோம், இது "நான் புரிந்துகொள்கிறேன்" என்று அர்த்தப்படுகிறது. "உட்கண்ணோக்கு" என்பதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் வாழ்வின் மீது "சரியான வெளிக்கண்ணோக்கு" கொண்டிருத்தல் எவ்வளவு வலிவார்ந்ததாக உள்ளது என்பதைப் பற்றியும் நாம் பேசுகிறோம். இதை அல்லது அதை "சரியான வெளிச்சத்தில் கண்ணோக்குதலின்" அவசியத்தை நாம் குறிப்பிடுகிறோம். 22 மற்றும் 23ம் வசனங்களை நாம் பயன்படுத்துகையில், இவ்வசனப் பகுதியில் உள்ள "கண்" என்பதைப் பற்றி, வாழ்வை நாம் கண்ணோக்கும் வழி என்ற வகையிலும் "உடல்" என்பதைப் பற்றி, நாம் யாராக இருக்கிறோம் மற்றும் நமது வாழ்வைச் சுற்றிச் சூழ்ந்துள்ள யாவையும் என்பதைப் பற்றி நினைக்கலாம்.

வாழ்வின் மீது நமது வெளிக்கண்ணோக்கானது நமது முழு இருப்பின் மீதும் செயல் விளைவை ஏற்படுத்துகிறது. நாம், கண்ணோட்டத்தின் ஆரோக்கியமான கருத்தைக் கொண்டிருந்தால் - நம்மைப் பிறர் மீது பெருந்தன்மை உள்ளவர்கள் ஆக்குகிற, தேவனுக்கான அர்ப்பணிப்பில் ஒரே சிந்தையை நாம் கொண்டிருந்தால் - நமது முழு சுயமும் வெளிச்சம் நிரம்பியதாக உள்ளது. இதற்கு மறு புறத்தில், நாம் கண்ணோட்டத்தின் ஆரோக்கியமற்ற கருத்தைக் கொண்டிருந்தால் - முரண்படுகிற நோக்கங்களையும் பற்றிக்கொள்ளுதல் மற்றும் கஞ்சத்தனமாயிருத்தல் ஆகிய குணங்களை உடையவர்களாக்கும் நிலைப்பாட்டையும் நாம் கொண்டிருந்தால் - அது நமது முழு இருப்பும் இருளால் நிறைந்திருத்தல் போன்றதாக இருக்கும். நம்மை வெளிச்சத்தினால் நிரப்பும் (ஒரு தகுதியான கண்ணோக்கக் கருத்து என்ற) விஷயமானது தன்னிலேயே இருளாக்கப் பட்டிருந்தால், நமது ஆத்துமாக்களின் இருள் எவ்வளவு பெரியதாக இருக்கும்!

(இந்தக் கூற்றைக் கூறும்போது) இயேசுவின் சிந்தையில் இருந்தவர்கள் வேதபாரகரும் பரிசேயர்களும் ஆவர். அவர்கள், தாங்கள் ஒளியில் இருந்ததாக நினைத்தனர். இருந்தபோதிலும் இயேசு, அவர்கள் இருளில் இருந்ததாக உரைத்தார். இன்றைய நாட்களில் பலர், தங்களை "ஒளியூட்டப்பட்டு" இருப்பதாகக் குறிப்பிடுகின்றனர். அவர்கள், தாங்கள் "தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி, உன்னதமானவருடைய ஆலோசனையை அசட்டைபண்ணி (யதால்), அந்தகாரத்திலும் மரண இருளிலும் வைக்கப்பட்டிருந் (தனர்)" (சங்கீதம் 107:10, 11) என்பதை உணர்ந்து அறிவதில்லை. "இருள் என்னவாக உள்ளது என்பதை உணர்ந்தறியத் தவறுதலே இருளின் மிகவும் பரிதபிக்கப்படத் தக்க விஷயமாக உள்ளது."[16]

செல்வமா அல்லது தேவனா? (6:24)

செல்வம் மற்றும் தேவன் ஆகிய இரண்டில் ஒன்றைத் தேர்ந்து கொள்ளுதல் என்பது நமது வேதபாட வசனப்பகுதியில் உள்ள நிறைவான தெரிவாக

உள்ளது. உண்மை நிலையில் இதுவே எல்லாத் தெரிவுகளுமாக இருந்துள்ளது. நீங்கள் பூமியின் மீது செல்வங்களைச் சேர்த்து வைத்தலில் முதன்மை அக்கறை கொண்டிருக்கிறீர்களா? அப்படி என்றால் நீங்கள் செல்வத்தைத் தேர்ந்து கொள்கிறீர்கள் என்றாகிறது. நீங்கள் பரலோகத்தில் செல்வங்களைச் சேர்த்து வைத்தலில் அதிக அக்கறை கொண்டிருக்கிறீர்களா? அப்படி என்றால் நீங்கள் தேவனைத் தேர்ந்து கொள்கிறீர்கள் என்றாகிறது. எது முக்கியமானது என்பதைப் பற்றிய உங்கள் புரிந்து கொள்ளுதல் இருளாக்கப்பட்டு இருக்கிறதா? அது நீங்கள் செல்வத்தைத் தேர்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதற்கான ஒரு கூட்டுக் குறிப்பாக உள்ளது. நீங்கள் முன்னுரிமை கொண்டுள்ள விஷயங்கள் ஒழியாது இருக்கின்றனவா? அது நீங்கள் தேவனைத் தேர்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்றும் வெளிச்சத்தினால் நிரப்பப்பட்டு இருக்கிறீர்கள் என்றும் காண்பிக்கிறது.

தேர்ந்து கொள்வதற்கான அவசியம்

தேவன் அல்லது செல்வம் ஆகிய இரண்டில் ஒன்றைத் தேர்ந்து கொள்ளுதல் ஏன் அவசியமாக உள்ளது என்பதை முதலில் இயேசு வலியுறுத்தினார். 24ம் வசனத்தின் அவரது முதல் வார்த்தைகள், "மிகவும் நினைவுகூரத்தக்க இயேசுவின் கூற்றுக்களில் ஒன்று" என்று அழைக்கப்பட்டுள்ளது.[17] "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து[18], மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்" (வசனம் 24அ, ஆ).

சிலர், "ஆனால் ஒரு மனிதர் இரு வேலைகளைக் கொண்டிருந்து இரு முதலாளிகளுக்குப் பணி செய்யக் கூடுமே" என்று கூறி மறுப்புத் தெரிவிக்கலாம். இயேசு வேலையாட்களை அல்ல, ஆனால் அடிமைகளையே இங்கு குறிப்பிட்டார். "ஊழியம்செய்ய" என்று இவ்விடத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*douleuo* என்ற) வார்த்தையானது "ஒரு அடிமை (*doulos*) என்ற வகையில் ஊழியம் செய்தல்" என்று அர்த்தப்படுகிறது.[19] மெக்நெய்ல் அவர்கள், "மனிதர்கள் இரு முதலாளிகளிடத்தில் பணியாற்ற முடியும், ஆனால் எந்த ஒரு அடிமையும் இரு எஜமானர்களின் உடைமையாக இருக்க இயலாது" என்று குறிப்பிட்டார்.[20] டஸ்கர் அவர்கள், "ஒருவரே உரிமையுடையவராக இருத்தல் மற்றும் முழுநேரமும் ஊழியம் செய்தல் ஆகியவை அடிமைத்தனத்தின் சாராம்சங்களாக உள்ளன" என்று உற்றுக்கவனித்தார்.[21]

சிலர் இரு எஜமானர்களுக்கு ஊழியம் செய்ய முயற்சித்துள்ளனர். குறிப்பிட்ட "ஜாதிகள் கர்த்தருக்குப் பயந்தும், தங்கள் விக்கிரகங்களைச் சேவித்தும் வந்தார்கள்" (2 இராஜாக்கள் 17:41; காண்க வசனங்கள் 24-41) என்று பழைய ஏற்பாடு கூறுகிறது. இன்றைய நாட்களில் சிலர், ஞாயிற்றுக் கிழமைகளில் கர்த்தரை சேவிக்க முயற்சி செய்துகொண்டு, அதே வேளையில் வாரத்தின் எஞ்சிய நாட்களில் தங்களை முற்றிலும் இந்த உலகத்திற்கு அர்ப்பணித்து இருக்கின்றனர். இருப்பினும் இயேசு, இவ்விஷயம் பற்றித் தெளிவாகப் பேசினார்: "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது."

இரண்டு தெரிவுகள்

இயேசு தமது சிந்தையில் கொண்டிருந்த இரண்டு எஜமானர்கள் யார்? ஏற்கனவே குறிப்பிட்டபடி அவர், தேவன் அல்லது செல்வம் என்ற இரண்டில்

ஒன்றைத் தேர்ந்து கொள்ளுதல் பற்றிப் பேசினார். 24ம் வசனத்தின் கடைசிப் பகுதியில் இயேசு, "தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது" என்று கூறினார்.

"உலகப்பொருள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*mamonas* என்ற) வார்த்தை, KJV வேதாகமத்தில் "mammon" என்று தரவழைக்கப்பட்டுள்ளது. "mammon" என்பது, செல்வம் என்பதற்கான அரமாயிக் வார்த்தையின் கிரேக்க ஒலிபெயர்ப்பாக உள்ளது.[22] இவ்வசனத்தில் *mammon*/செல்வம்[23] என்பது அடிமையின் உரிமையாளராக நபர்த்துவப்படுத்தப்[24] பட்டுள்ளது. ஜேக் பி.லூயிஸ் அவர்கள், "மனிதர்களில் பலர் தாங்கள் எதற்கு எஜமானராக இருப்பதாக நினைக்கிறார்களோ, அதுவே அவர்களின் எஜமானராக உள்ளது" என்று குறிப்பிட்டார்.[25] பணம் என்பது நல்ல ஊழியக்காரனாகவும் அதே வேளையில் ஒரு கடுமையான எஜமானராகவும் உள்ளது என்று கூறப்பட்டிருக்கிறது. ஒரு வேளை, தமது செயல்கள் ஒவ்வொன்றும் பணத்தினாலும் அது வாங்குவது என்ன என்பதினாலும் கட்டுப்படுத்தப்படும் ஒரு நபரை நீங்கள் இவ்விடத்தில் நினைவிற்கு கொண்டுவரலாம். இருப்பினும் நமக்கு நாமே இவ்விடத்தில் நடைமுறைப் பயன்பாட்டை மேற்கொள்வோமாக. நம்மில் பெரும்பான்மையானவர்கள், பணம் நமது வாழ்வைக் கட்டுப்படுத்துதல் என்பதை - ஒருவேளை அவ்வாறு செய்வதை உணர்ந்தறியாத நிலையிலும் கூட ஓரளவிற்கு அனுமதித்த குற்றம் உடையவர்களாக இருந்திருக்கிறோம்.

நாம் தேவனுக்கும் செல்வத்திற்கும் ஒரே வேளையில் ஊழியம் *செய்யக் கூடாது* என்றல்ல ஆனால் தேவனுக்கும் செல்வத்திற்கும் ஒரே வேளையில் ஊழியம் *செய்ய முடியாது* என்றே இயேசு கூறினார் என்பதைக் கவனியுங்கள். இது ஒரு "இரண்டில் ஒன்று/அல்லது" என்ற சூழ்நிலையாக உள்ளது: "ஒன்று ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; *அல்லது* ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்" (வசனம் 24ஆ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இவ்விரு எஜமான்களுக்கும் அர்ப்பணிப்புடன் இருக்க முயற்சி செய்தலில் அடங்கியுள்ள போராட்டத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்:

> இவர்களின் கட்டளைகள் முற்றிலும் நேரெதிரானவையாக உள்ளன. ஒருவர், நீங்கள் விசுவாசத்தில் நடந்துகொள்ள வேண்டும் என்று கட்டளையிடுகிறார், மற்றவர் தரிசித்து நடந்துகொள்ள வேண்டும் என்று கட்டளையிடுகிறார்; ஒருவர் தாழ்மையாயிருக்கும்படி கட்டளையிடுகிறார், மற்றவர் மேட்டிமை கொண்டிருக்கும்படி கட்டளையிடுகிறார், ஒருவர் உங்கள் விருப்பங்களை மேல் உள்ள விஷயங்கள் மீது வைக்கும்படி கட்டளையிடுகிறார், மற்றவர் அவரைப் பூமியில் உள்ள விஷயங்கள் மீது வைக்கும்படி கட்டளையிடுகிறார்; ஒருவர் காணப்படாத மற்றும் நித்தியமான விஷயங்களைக் கண்ணோக்கும்படி கட்டளையிடுகிறார், மற்றவர் காணப்படக்கூடிய மற்றும் தற்காலிகமான விஷயங்களைக் கண்ணோக்கும்படி கட்டளையிடுகிறார்; ஒருவர் உங்கள் [குடியிருப்பை] பரலோகத்தில் கொண்டிருக்கும்படி கட்டளையிடுகிறார், மற்றவர் மண்ணுடன் இசைந்திருக்கும்படி கட்டளையிடுகிறார்; ஒருவர் ஒன்றுக்கும் கவலைப்படாதிருக்கும்படி கட்டளையிடுகிறார், மற்றவர் எல்லா

> ஏக்கமும் கொண்டிருக்கும்படி கட்டளையிடுகிறார்; ஒருவர் நீங்கள் கொண்டிருப்பவை போன்றவற்றில் மனதிருப்தி கொள்ளும்படி கட்டளையிடுகிறார், மற்றவர் உங்கள் விருப்பங்களை நரகத்தைப் போன்று பெருக்கிக் கொள்ளும்படி கட்டளையிடுகிறார்; ஒருவர் கொடுக்கத் தயாராயிருக்கும்படி கட்டளையிடுகிறார், மற்றவர் பற்றிப் பிடித்துக் கொள்ளும்படி கட்டளையிடுகிறார். ஒருவர் மற்றவர்களின் காரியங்களைக் கண்ணோக்க வேண்டும் என்கிறார், மற்றவர் தமது சொந்த விஷயங்களை மாத்திரம் கண்ணோக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறார்; ஒருவர் படைத்தவரில் சந்தோஷத்தை நாடும்படி கட்டளையிடுகிறார். மற்றவர் படைக்கப்பட்டவற்றில் சந்தோஷத்தை நாடும்படி கட்டளையிடுகிறார். இப்படிப்பட்ட இரு எஜமானர்களுக்கு ஊழியம் செய்பவர் ஒருவரும் இல்லை என்பது தெளிவாக இருப்பதில்லையா?[26]

பிசாசானவன் தனது தீயநோக்கங்களுக்குச் செல்வத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறான், மற்றும் அவன் பிரிவுபட்ட இருதயத்தைப் பற்றிக் கவலை கொள்வதில்லை. இது, தேவனுக்கும் செல்வத்திற்கும் ஊழியம் செய்ய முயற்சி செய்கிற ஒருவர், உண்மையில் தேவனைப் புறக்கணித்திருக்கிறார் என்பதால் இவ்வாறு உள்ளது. பிரிவுபட்ட இருதயத்தைத் தேவன் சகித்துக் கொள்ள மாட்டார். அவர், "நான் கர்த்தர், இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்" என்று கூறியிருக்கிறார் (ஏசாயா 42:8அ).

இ. ஸ்டேன்லி ஜோன்ஸ் அவர்கள், "பொருளாதாயச் சூழ்நிலையின் நடுவில் ஆவிக்குரிய வாழ்வை வாழக்கூடியவர்களாக இருத்தல் என்பது தேவபக்தியில் நிரந்தரமான பிரச்சனையாக இருந்துள்ளது மற்றும் இருக்கிறது" என்று குறிப்பிட்டார்.[27] உலகத்தில் வாழ்ந்து கொண்டே உலகத்தை ஜெயிக்கக் கூடியவர்களாக இருத்தல் என்பது, கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமக்குள்ள அறைகூவல்களில் ஒன்றாக உள்ளது (1 யோவான் 5:4). சிலர் தங்களை உலகத்தில் இருந்து தொலைவுபடுத்திக் கொள்வதன் மூலம், தனிமையில் வாழ்வதன் மூலம் இந்தப் பிரச்சனையைத் தீர்க்க முயற்சி செய்துள்ளனர். அது தேவன் விரும்புகிற முடிவாக இருப்பதில்லை. நாம் "உலகத்தில்" இருக்க வேண்டும் ஆனால் "உலகத்தாராக" இருக்கக் கூடாது - உலகத்து விஷயங்களைத் தேர்ந்து கொள்வதற்குப் பதிலாகத் தேவனைத் தேர்ந்துகொள்ள வேண்டும் - என்பதே நமக்காக அவர் கொண்டுள்ள விருப்பமாக உள்ளது (யோவான் 17:11, 16). அப்போது, அப்போது மாத்திரமே நாம், "பூமிக்கு உப்பாக" மற்றும் "உலகத்திற்கு வெளிச்சமாக" இருக்க முடியும் (மத்தேயு 5:13, 14).

முடிவுரை

தீர்மானங்கள், தீர்மானங்கள், தீர்மானங்கள் - நம்மில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளிலும் நாள் முழுவதிலும் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். அவற்றில் சில, சார்பளவில் முக்கியத்துவம் அற்றவைகளாக உள்ளன, அதே வேளையில் மற்றவை மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக உள்ளன. சில தீர்மானங்கள் சிறிதளவே சிந்தனையுடன் மேற்கொள்ளப்படுகின்றன, ஆனால் மற்றவற்றிற்கு நாம் கொண்டிருக்கக் கூடிய

மனவள ஆதாரங்கள் யாவும் தேவைப்படுகின்றன. நாம் மேற்கொள்ளும் எல்லா முடிவுகளிலும், பின்வருபவற்றைக் காட்டிலும் முக்கியமானவையாக வேறு எதுவும் இருப்பதில்லை:

- பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பதா அல்லது பூமியில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பதா.
- முற்றிலும் வெளிச்சம் நிரம்பிய புதிய வாழ்வின் கண்ணோக்கைக் கொண்டிருப்பதா அல்லது முற்றிலும் இருள் நிரம்பிய வாழ்வின் கண்ணோக்கைக் கொண்டிருப்பதா.
- தேவனுக்கு ஊழியம் செய்வதைத் தேர்ந்து கொள்வதா அல்லது செல்வத்திற்கு ஊழியம் செய்வதைத் தேர்ந்து கொள்வதா.

மத்தேயு 6:19-24ன் செய்தியை நாம் புரிந்து கொண்டிருந்தால், இந்த தீர்மானங்களை மேற்கொள்ளுதல் நமக்குக் கடினமாக இராது. அளவிட இயலாத மதிப்பு மிக்கவற்றைப் பெற்றுக் கொள்வதற்காகத் தகுதியற்வைகளை யார் தான் புறக்கணியாதிருப்பார்கள்? வெளிச்சத்தில் வாழ்வதற்காக இருளைத் தவிர்க்க யார் தான் விருப்பம் கொள்ளாதிருப்பார்கள்? மரித்துக் கொண்டிருக்கும் இந்த உலகத்தின் அழியும் விஷயங்களுக்கு ஊழியம் செய்வதற்கு மாறாக, அன்புகூருகிற நித்திய பிதாவின் முன்பாகப் பணிந்து கொள்வதை யார் தான் தேர்ந்து கொள்ளாதிருப்பார்கள்?

நமது வேதபாட வசனப்பகுதியின் வெளிச்சத்தில், இந்த தீர்மானங்கள் கடினமானவையாகக் காணப்படுவதில்லை. இருந்த போதிலும் உலகம் முழுவதிலும், இந்த வாழ்வைக் குறித்தும் இனிவரும் வாழ்வைக் குறித்தும், மக்கள் தினமும் தவறான தீர்மானங்களையே மேற்கொள்கின்றனர். உங்களைப் பற்றிய விஷயம் என்ன? நீங்கள் எதை முடிவு செய்வீர்கள்? இது முடிவெடுக்கும் வேளையாக உள்ளது!

குறிப்புகள்

[1]நீங்கள் வாழும் சமூகத்தில் ஏற்படுத்தப்படக் கூடிய தனிவகைப்பட்ட முடிவுகளைப் பிரதிபலிக்கும் வகையில் இந்தப் பத்தியைத் தழுவி அமைத்துக் கொள்ளுங்கள். [2]John R. W. Stott, *The Message of the Sermon on the Mount,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1978), 155. [3]Clovis G. Chappell, *The Sermon on the Mount* (Nashville: Abingdon-Cokesbury Press, 1930), 179. [4]எலியாவுக்குக் கொடுப்பதற்கென்று நாகமான் கொண்டுவந்த கொடையில் ஒரு பகுதி, உடையாக இருந்தது (காண்க 2 இராஜாக்கள் 5:5). [5]லூக்கா 12:16-19ஐக் காணவும். [6]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 541. [7]நீங்கள் வாழும் இடத்திற்கு ஏற்றவாறு இந்த நடைமுறைப் பயன்பாட்டைத் தழுவியமைத்துக் கொள்ளுங்கள். [8]Adapted from David F. Burgess, comp., *Encyclopedia of Sermon Illustrations* (St. Louis, Mo.: Concordia Publishing House, 1988), 95. [9]Stott, 156. [10]Author unknown; quoted in Frank L. Cox, *Sermon Notes on the Sermon on the Mount* (Nashville: Gospel Advocate Co., 1955), 17.

[11]Mel Stinnett, "Choosing Your Master," lesson taught at Eastside church of Christ, Midwest City, Oklahoma, 10 August 2005. [12]குறைந்த பட்சம் இன்னும் ஒரு வேளையில்

இயேசு இதே போன்ற ஒப்புவமையைப் பயன்படுத்தினார் (காண்க லூக்கா 11:33-36). [13]*உருவகம் என்பது ("போன்ற" அல்லது "என்ற" என்பவற்றைப் போன்ற) ஒப்பீட்டுச் சொற்றொடர்களைப் பயன்படுத்தாமல் உள்ள பேச்சு உருவகமாகும். டன்கன் என்பவரின் கூற்றுப்படி, விரிவாக்கப்பட்ட அல்லது விரித்துரைக்கப்பட்ட உருவகமானது ஒரு உருவகக் கதையாக உள்ளது* (*Hermeneutics* [Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.], 258-260). [14]Haplous *என்ற வார்த்தையின் மீதான இந்தத் தகவல், வால்ட்டர் பாவர் அவர்கள் எழுதிய A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 4th ed., rev. and aug. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago Press, 1957), 85. *என்ற புத்தகத்தில் இருந்து பெறப்பட்டுள்ளது.* [15]*Poneros என்பதன் மீதான இந்தத் தகவல்* Arndt and Gingrich *எழுதிய நூலின் 697ம் பக்கத்தில் இருந்து தரவழைக்கப்பட்டுள்ளது.* [16]D. A. Carson, "Matthew," *The Expositor's Bible Commentary,* vol. 8 (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1984), 178. [17]Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 60. [18]*"பகைத்து" மற்றும் "அசட்டைபண்ணு" என்பவை நேரெதிர் ஒப்பீடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரு முதலாளிகளுக்கு ஒருவர் ஒரே அளவு அர்ப்பணிப்பு உடையவராக இருக்க இயலாது என்று மாத்திரமே இயேசு கூறினார்.* [19]Vine, 562-63. *புதிய ஏற்பாட்டில் doulos என்ற வார்த்தை, அடிமைத்தளையின் மறைமுகக் கருத்தைக் கொண்டிருப்பதில்லை; ஆனால் மத்தேயு 6:24ல் இயேசு, எஜமானர்/அடிமை உறவு பற்றிப் பேசினார்.* [20]Quoted in Stott, 158.

[21]Ibid. [22]Jack P. Lewis, *The Gospel According to Matthew, Part I,* The Living Word Commentary series (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 107. [23]*பூமியின் மீது நாம் பொக்கிஷமாக நினைக்கும் எதையும் குறிக்கவும் இதை நடைமுறைப்படுத்த முடியும் (இந்தப் பாடத்தில் முந்திய பகுதியில் "பொக்கிஷங்கள்" பற்றிய பட்டியலில் காணவும்).* [24]*ஏதேனும் ஒன்றை "நபர்த்துவப்படுத்துதல்" என்பது, அதை ஒருநபர் என்ற வகையில் உருவகித்துப் பேசுதல் என்று அர்த்தப்படுகிறது.* [25]Lewis, 107. [26]"Jay," quoted in Arthur W. Pink, *An Exposition of the Sermon on the Mount* (Grand Rapids, Mich.: Baker Book House, 1950), 215-16. [27]E. Stanley Jones, *The Christ of the Mount* (New York: Abingdon Press, 1931), 220.

13

கவலைப்படாதிருக்க மூன்று காரணங்கள்

(மத்தேயு 6:25-34)

மலைப் பிரசங்கத்தின் எந்த ஒரு பகுதியாவது இன்றைய நாட்களின் உலகத்திற்கு எழுதப்பட்டிருந்தது என்றால், நிச்சயமாக அது மத்தேயு 6:19-34 ஆகத் தான் இருக்கிறது எனலாம். நமது முந்திய பாடத்தில் நாம், அவ்வசனப் பகுதியின் முதல் பிரிவைப் படித்தோம். நாம் சுயநலம் கொண்டவர்களாக இருக்கக் கூடாது என்றும் பூமியில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கக் கூடாது என்றும், உண்மையில் முக்கியமானது எது என்பதைப் பற்றித் தகுதியான கண்ணோக்கக் கருத்து நமக்குத் தேவை என்றும் நாம் கற்றோம். 19 முதல் 24 வரையுள்ள வசனங்களைப் படித்தபின்பு, ஒருவேளை நீங்கள் இந்த உலகப் பொருட்களைச் சேவிப்பதற்குப் பதிலாகத் தேவனை சேவிக்கத் தீர்மானம் செய்திருக்கலாம். விஷயம் அவ்வாறு இருக்கிறது என்றால், நீங்கள் பாராட்டப்பட வேண்டியவர்களாக இருக்கிறீர்கள். இருப்பினும் இது, நீங்கள் உங்கள் இருதயத்திலிருந்து பொருளாதாரக் கொள்கையை அகற்றியிருக்கிறீர்கள் என்பதை உத்தரவாதப்படுத்துவதில்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் பூமியில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்காதிருக்கலாம், ஆனால் நீங்கள் பூமிக்குரிய விஷயங்கள் பற்றிக் *கவலைப்படுகிறீர்களா?* விஷயம் அவ்வாறு இருக்கிறது என்றால், உங்கள் மனம் இன்னும் தேவன்மீது மையங்கொண்டிருப்பதற்குப் பதிலாக இந்த வாழ்வின்மீது மையங்கொண்டுள்ளது என்றே அர்த்தமாகிறது. டி. மார்டின் லாயிட் - ஜோன்ஸ் அவர்கள் பின்வருமாறு எழுதினார்,

> மக்களில் சிலர், உலக உடைமைகளை அளவுக்கு மீறிக் குவித்துச் சேர்த்து வைக்க விரும்புகின்றனர் என்ற கருத்தில் அவற்றினால் ஆளுகை செய்யப்பட்டிருக்கும்படி தூண்டப்படுகின்றனர். மற்றவர்கள் அவற்றைக் குறித்துக் கவலைப்படுகின்றனர் என்ற கருத்தில் அவற்றினால் தொந்தரவு அடைகின்றனர். ... ஆனால் நமது கர்த்தருடைய கூற்றின்படி, இவையிரண்டும் சாராம்சத்தில் ஒரே பிரச்சனையாகவே உள்ளன, அது இந்த உலகத்தின் பொருட்கள் மற்றும் இந்த வாழ்வு ஆகியவற்றுடன் நமது தொடர்பின் பிரச்சனை என்பதாகும்.[1]

6ம் அதிகாரத்தின் கடைசிப் பகுதியில் (வசனங்கள் 25-34) இயேசு, கவலைப்படுதல் என்ற பிரச்சனை பற்றி எடுத்துரைத்தார். அந்த வசனப் பகுதியை நாம் படிக்கையில், நான் அதிலிருந்து "கவலைப்படாதிருக்க ஏழு காரணங்களை" இழுத்தெடுக்க விரும்புகிறேன். அவற்றில் நாம் மூன்று காரணங்களை இந்தப் பாடத்திலும், நான்கு காரணங்களைப் பின்தொடரும்

பாடத்திலும் கலந்துரையாடுவோம். இந்த ஏழு காரணங்கள் ஒன்றின் மீது ஒன்று கவிந்திருக்கும். சாராம்சத்தில் சில காரணங்கள், முந்திய காரணத்தின் மறுகூற்றாக இருக்கும், ஆனால் இவை ஒவ்வொன்றும் தன்னில் தானே குறிப்பிடத் தகுதியானதாக உள்ளது.

கவலைப்படுதல் என்பது தகுதியற்றதாக உள்ளது! (6:25, 31, 34)

தடை

கவலைப்படுதல் என்பது இயேசுவைப் பின்பற்றுபவருக்கு *சாக்குப்போக்குக் கூற இயலாத விஷயமாக* உள்ளது - ஏனெனில் கவலைப்படாதிருங்கள் என்று அவர் நமக்குக் கூறினார்: "ஆகையால், ... கவலைப்படாதிருங்கள் ..." (வசனம் 25அ); "ஆகையால், ... கவலைப்படாதிருங்கள் ..." (வசனம் 31அ); "ஆகையால், ... கவலைப்படாதிருங்கள் ..." (வசனம் 34அ). இது நாம் எடுத்துக் கொள்ளக்கூடிய அல்லது விட்டு விடக்கூடிய நல்லதொரு அறிவுரையாக மாத்திரம் இருப்பதில்லை. இது ஒரு ஆலோசனையல்ல, ஆனால் ஒரு கட்டளையாக உள்ளது. இந்தப் பிரசங்கத்தின் முடிவில் இயேசு, "நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்" என்று கூறினார் (7:26). கவலைப்படாதிருக்கும்படி இயேசு நமக்குக் கூறினார் என்ற உண்மையானது, அவருடைய சீஷராயிருக்கும்படி எவரொருவரும் விரும்புவதற்குப் போதிய காரணமாக இருக்க வேண்டும். மீண்டுமாக நான், கவலைப்படுதல் என்பது இயேசுவைப் பின்பற்றும்படி தம்மை ஒப்புக்கொடுக்கும் ஒருவருக்கு சாக்குப்போக்குக் கூற இயலாத விஷயமாக உள்ளது என்று கூறுகிறேன்.

இருப்பினும், கவலைப்படுதல் என்பது தேவனுடைய பிள்ளைக்குத் *தகுதியற்றதாக உள்ளது* என்பது நான் வலியுறுத்த விரும்புகிற முதல் காரணமாக உள்ளது. நமது வேதபாட வசனப்பகுதி, "ஆகையால், ... உங்கள் ஜீவனுக்காகவும் ... கவலைப்படாதிருங்கள்" என்று தொடங்குகிறது. எந்தக் காரணத்திற்காக? 19 முதல் 24 வரையுள்ள வசனங்களில் இயேசு கூறியுள்ளவற்றிற்காக. ஒருவர் பூமியில் பொக்கிஷத்தைக் சேர்த்து வைக்காதிருக்கவும் செல்வத்திற்கு ஊழியம் செய்யாதிருக்கவும் தீர்மானம் மேற்கொண்டிருக்கும்போது, இந்த வாழ்வின் விஷயங்களைக் குறித்துக் கவலைப்படுதல் என்பது முற்றிலும் தகுதியற்றதாக உள்ளது.

தெளிவுபடுத்துதல்

கவலைப்படாதிருங்கள் என்று கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டபோது அவர் அர்த்தப்படுத்தியது என்ன என்பதை நான் தெளிவுபடுத்த வேண்டியிருக்கலாம். கிறிஸ்தவர் ஒருவர் எதிர்காலத்தைப் பற்றிய எந்த சிந்தனைக்கும் இடம் கொடுத்தல் தவறானதாக உள்ளது என்று கர்த்தர் போதித்ததாகச் சிலர் வலியுறுத்துகின்றனர். அவர்கள், "எதிர்காலத்திற்கென்று சிலவற்றை வைத்துக்கொள்ளுதல் என்பது, நாம் விசுவாசத்தினால் வாழவில்லை என்பதை, நாம் விஷயங்களைத்

தேவனுடைய கரங்களில் விட்டுவிட மனவிருப்பம் இல்லாதிருப்பதைக் காண்பிக்கிறது" என்று கூறுகின்றனர். இந்த முடிவு, மத்தேயு 6:25-34ன் KJV வேதாகமத்தின் சொற்றொடராக்கத்தினால் விளைந்ததாக இருக்கலாம்: "Take no thought" (வசனங்கள் 25, 31; காண்க வசனம் 34). 1611ல் KJV வேதாகமம் மொழிபெயர்க்கப்பட்ட வேளையில், "பழைய ஆங்கில வார்த்தையான 'thought' என்பது ஆவல் அல்லது கவலை என்று அர்த்தப்பட்டது."[2]

கவலைப்படுதலுக்கு எதிரான இயேசுவின் தடையானது, நமக்கும் மற்றவர்களுக்குமான சட்டப் பூர்வமான தேவைகள் பற்றிய அக்கறை மற்றும் அளிப்பு என்ற பொறுப்பை நீக்கிப்போடுவதில்லை. நாம் வேலை செய்து (2 தெசலோனிக்கேயர் 3:10) நமது பொறுப்பில் உள்ளவர்களுக்குத் தேவையானவற்றை அளிக்க வேண்டும் (1 தீமோத்தேயு 5:8) என்று வேதாகமம் கூறுகிறது.[3] எறும்பு எதிர்காலத்திற்கென்று ஆயத்தம் செய்கிறது என்பதற்காக அதைப் பழைய ஏற்பாட்டில் சாலொமோன் புகழ்ந்தார் (நீதிமொழிகள் 6:6-8). புதிய ஏற்பாட்டில், ஞானமற்ற வகையில் கட்டிடம் கட்டுபவரைப்பற்றிய விவரிப்பில் இயேசு, முன்னதாகத் திட்டமிடத் தவறுதலின் மதியீனத்தைச் சுட்டிக்காண்பித்தார் (லூக்கா 14:28-30).

அக்கறை மற்றும் முன்னதாகத் திட்டமிடுதல் ஆகியவற்றை இயேசு பழித்துரைக்காது இருந்தார் என்றால், அவர் எதைப் பழித்துரைத்தார்? அவர், "வாழ்வின் எல்லா சந்தோஷத்தையும் எடுத்துப் போட்டு விடுகிறவகையிலான, கவலையை அணிந்துகொண்ட, கவலையுடன் கூடிய பயத்தைத் தடைசெய்தார்."[4] மத்தேயு 6:25ல் AB மொழிபெயர்ப்பு வேதாகமத்தில், "நிரந்தரமாக ஆறுதலற்ற (ஏக்கம் மற்றும் கவலையான) நிலையில் இருப்பதை நிறுத்திவிடுங்கள்" என்றுள்ளது.

"கவலைப்படாதிருத்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*merimnao* என்ற) கிரேக்க வார்த்தை, "வெவ்வேறு திசைகளில் இழுக்கப்படுதல்"[5] என்று அர்த்தப்படுகிற *merizo*[6] என்ற வார்த்தையில் இருந்து வந்துள்ளது. கவலை என்பது மனதை இங்கும் அங்கும் அலைக்கழித்து இழுக்கிறது. இயேசு தமக்கு விருந்தளித்த பெண்ணிடம், "மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக் *கவலைப்பட்டுக் கலங்குகிறாய்*" என்று கூறியபோது இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார் (லூக்கா 10:41; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இயேசுவுக்கும் மற்றவர்களுக்கும் உணவு தயாரிக்கையில், மார்த்தாளின் மனம் பலவகையான திசைகளில் பறந்துகொண்டிருந்தது என்பது தெளிவு. அவளது சிந்தனையைப் பற்றி என்னால் கற்பனை செய்ய முடிகிறது: "நான் இயேசு கூறுவதைக் கவனிக்க விரும்புகிறேன் ... ஆனால் யாரேனும் ஒருவர் சமையல் செய்தாக வேண்டுமே. ... இயேசு இப்போது என்ன கூறிக்கொண்டிருக்கிறார் என்பது பற்றி நான் வியப்படைகிறேன்? ... எனக்கு உதவி செய்ய மரியாள் ஏன் வரவில்லை? ... ஓ, இல்லை, இதோ நெருப்பு அணையப்போகிறதே!" அக்கறை மற்றும் கவலை ஆகியவற்றிற்கு இடையில் வேறுபாடு உள்ளது. நமக்கு நாமே நேர்மை உள்ளவர்களாக இருந்தால், இதுவே விஷயமாக உள்ளது என்று நாம் அறிந்திருப்போம். மேலும் நாம், மார்த்தாளைப் போன்று, "பல காரியங்களைக் குறித்துக் கவலைப்படுவதையும்" அறிந்திருப்போம்.

தேவனுடைய பிள்ளைகள் என்ற வகையில் நாம், மிகைமுனைகளைத் தவிர்க்க வேண்டும். ஒருபுறம் நாம், அக்கறை கொள்ளாது இருப்பதைத் தவிர்க்க

வேண்டும்; மறுபுறம் நாம், அதிகமான அக்கறை கொண்டிராமல் இருக்க வேண்டும். செய்வதற்கு இது மிகவும் கடினமானதாக உள்ளது, ஆனால் இது, தேவனைத் தமது தந்தை என்று உரிமைகோரும் ஒருவருக்கு, கவலைப்படுதல் என்பது தகுதியற்றதாக உள்ளது என்பதைப் புரிந்து கொள்ள உதவலாம்.

கவலைப்படுதல் என்பது சீர்பொருத்தமற்றது! (6:25, 26, 28-30)

நாம் கவலைப்படாதிருக்க வேண்டும் என்பதற்கான இரண்டாவது காரணம், மேற்கூறப்பட்ட காரணத்துடன் நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது: கவலைப்படுதல் சீர்பொருத்தமற்றது - அதாவது, தேவனுடைய பிள்ளையாக இருத்தலுடன் சீர்பொருத்தமற்றது - என்ற காரணம் ஆகும். நமது வேதபாட வசனப்பகுதியில் நாம் இன்னும் சற்றே பயணம் செய்வோமாக. கவலைப்படாதிருங்கள் என்று நமக்குக் கூறியபின்பு இயேசு, நம்மைக் கவலைப்பட நாம் அனுமதிக்கக் கூடாத பல விஷயங்களைக் குறிப்பிட்டார். அவர், “என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள்” என்று கூறினார் (வசனம் 25அ).

இவ்வசனப் பகுதியில் “ஜீவன்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*psuche* என்ற) வார்த்தை, உடல்ரீதியான, பௌதீக வாழ்வைக் குறிக்கிறது.[7] இந்த வாழ்வு, நாம் எதை உண்ணுகிறோம் மற்றும் எதைப் பானம்பண்ணுகிறோம் என்பதைக் கொண்டு தாங்கப்படுகிறது. அதுபோன்றே, உடலானது நாம் அணியும் உடைகளினால் வெம்மை மற்றும் குளிர் ஆகியவற்றில் இருந்து பாதுகாக்கப்படுகிறது. உணவு, பானம் மற்றும் உடை ஆகியவை உலகம் முழுவதிலும் அடிப்படைத் தேவைகளாக உள்ளன. இவைகள் ஏராளமாகக் காணப்படுகிற இடங்களில், கூட, இவைகள் அளவுக்கு மீறிய கவனத்தைக் கைப்பற்றுகின்றன. உலகின் சில பாகங்களில் முழு வெளியீடுகளும், உணவு பானம் மற்றும் உடை என்ற காரியங்களுக்காக அர்ப்பணிக்கப்படுகின்றன.

நாம் ஏன் வாழ்வைப் பற்றியும் உடல்களைப் பற்றியும் கவலைப்படக் கூடாது? அந்தக் கேள்விக்கு இயேசு ஒரு கேள்வியைக் கொண்டு பதில் அளித்தார். (நமது வேதபாட வசனப்பகுதியை மேம்போக்காகப்பாருங்கள், அப்போது அது கேள்விகளால் நிறைந்துள்ளதை நீங்கள் காண்பீர்கள். இயேசு தமது உரையைக் கேட்டவர்கள் தங்கள் சிந்தைகளைப் பயன்படுத்த வேண்டும் என்று விரும்பினார்.) இயேசு, “ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?” என்று கேட்டார் (வசனம் 25ஆ). அந்தக் கேள்வியில் மறைமுகமாக உள்ள விவாதத்தை மதிப்பதற்கு நாம், “வரிகளுக்கு இடையில் வாசித்தல்” என்பதைச் சற்றுச் செய்தல் அவசியமாக உள்ளது. மனிதனை உண்டாக்கி, நீங்கள் உங்கள் சரீரங்களைக் கொண்டிருக்கப் பொறுப்பாளியாக இருப்பது யார்? தேவன் தானே. யார் உங்கள் சரீரத்தை வாழ்வால் நிரப்பியது? தேவன்தான். இங்கு மறைமுகமாய் உள்ள விவாதம் பின்வருமாறு: தேவன் உங்களுக்கு ஒரு உடலையும் வாழ்வையும் கொடுத்தார் என்றால், அவற்றை ஆதரிக்கத் தேவையானவற்றையும் அவர் கொடுக்கமாட்டாரா? (தர்க்கவியலில் இது, பெரியவற்றில் இருந்து சிறியவற்றைப்

பகுத்துணருதல் என்று அழைக்கப்படுகிறது.)

உணவைப் பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்?

அந்தக் கேள்வியைக் கேட்டபின்பு இயேசு, உணவு மற்றும் உடை மீதான தமது சிந்தனையை விரிவாக்கினார், முதலில் அவர் உணவு பற்றிய விஷயத்தைக் குறிப்பிட்டார்: "ஆகாயத்துப்பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்" (வசனம் 26அ). மலைப்பிரசங்கம், இயற்கையான வெளிப்புறக் காட்சியமைவில் பிரசங்கிக்கப் பட்டதால், "ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்" என்று இயேசு கூறியபோது, அவர் தலைக்குமேல் சுற்றிப் பறந்த பறவைகளை சுட்டிக்காண்பித்ததை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. "கவனித்துப்பாருங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (emblepo[8] என்ற) வார்த்தை "ஊக்கத்துடன் கவனியுங்கள்" என்று அர்த்தப்படுகிறது. இயேசுவின் சீஷர்கள், பறவைகளிடத்தில் இருந்து கற்றுக்கொள்வதற்கு அவற்றை "ஊக்கத்துடன் கவனிக்க" வேண்டும் என்று இயேசு விரும்பினார்.[9]

பறவைகளிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது என்ன? இயேசு, "... அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை; அவைகளையும் (நமது) பரமபிதா பிழைப்பூட்டுகிறார்" என்று கூறினார் (வசனம் 26). நாம் விதைக்கவோ அல்லது அறுக்கவோ அல்லது நமது விளைச்சலைக் களஞ்சியங்களில் சேர்த்துவைக்கவோ கூடாது என்று இயேசு போதித்தாரா? நாம் பிழைப்பதற்கு வேலை செய்ய வேண்டியது இல்லை, என்று நாம் முடிவு செய்யவேண்டும் என்று அவர் நோக்கம் கொண்டாரா? இல்லை, இல்லை. பறவைகள் கடினமாக உழைக்கின்றன. பறவைகள் மரக்கிளையின் மீது ஓய்வாக அமர்ந்து கொண்டு, அலகுகளைத் திறந்து வைத்துக் கொண்டு, புழுக்களையோ அல்லது பூச்சிகளையோ அல்லது விதைகளையோ தேவன் தங்கள் வாய்க்குள் போடுவார் என்று காத்துக் கொண்டிருப்பதில்லை. மாறாக அவைகள் செய்யும்படி தேவன் வடிவமைத்துள்ளவற்றை அவைகள் செய்கின்றன: அவைகள் உணவைத் தேடித் தீவிரமாக அலைகின்றன. பறவைகளின் குறிப்பிட்ட சில இனங்கள், தங்கள் வாழ்வை நிலைநிறுத்திக் கொள்ளத் தங்கள் உடல் எடைக்குச் சமமான அளவு பூச்சிகளை ஒவ்வொரு நாளும் உண்ண வேண்டியவைகளாக உள்ளன. அப்படியென்றால் பறவைகளுக்குத் தேவன் உணவளிக்கிறார் என்பது எந்தக் கருத்திலானது? அவைகள் உயிர்வாழத் தேவையானவற்றை அவர் இயற்கையில் அளித்துள்ளார்.

பறவைகள் பணிமும்முரமாக உள்ளன, ஆனால் (இயேசு இவ்விடத்தில் சுட்டிக்காண்பித்துள்ளபடி) அவைகள் கவலைப்படுவதில்லை. வேலை செய்வதை இயேசு ஊக்கம் குலைக்கவில்லை, கவலைப்படுதலையே அவர் பழித்துரைத்தார்.[10] ஒரு பறவையானது வேலிக்கால் ஒன்றின் மீது அமர்ந்துகொண்டு, "ஓ, எனது அடுத்த வேளை உணவு எங்கிருந்து வரும் என்று நான் திகைப்படைகிறேன். ... நான் போதிய உணவைக் கண்டறியாவிட்டால், நான் உதிரத் (molt[11]) தொடங்கிவிடுவேன், மற்றும் இந்தக் குளிர்காலத்தில் நான் உறைந்து விடுவேன். முதலில் நான் பட்டினியால் சாகாதிருந்தாலும் அதாவது

... உண்பதற்கு நான் சிலவற்றைக் கண்டறிந்தாலும், அது நான் விரும்பியதாக இராதிருக்கலாம், மற்றும் எனக்கு வயிற்றுவலி ஏற்படலாம். ... ஒருவேளை நான் பட்டினியால் சாவதற்கு முன்பே வயிற்றுவலியால் செத்துவிடலாம்! ... ஓ, எனக்கு ஐயோ!" என்று கவலைப்படுவதாகக் கற்பனை செய்து பார்க்க முயற்சித்தேன். விரைவிலேயே நான் அந்த முயற்சியைக் கைவிட்டேன். ஒரு பறவை இதுபோன்ற சிந்தனைகளைக் கொண்டிருப்பதாகக் கற்பனை செய்தல் சாத்தியமற்றதாக உள்ளது, அல்லவா? இருப்பினும், மக்கள் இதுபோன்ற சிந்தனையைக் கொண்டிருப்பதாகக் கற்பனை செய்தல் கடினமாக இருக்காது, அல்லவா? பர்ட்டன் காஃப்மேன் அவர்கள், "பூச்சிகளில் இருந்து காட்டில் உள்ள பெரிய மிருகங்கள் வரையிலான தேவனுடைய படைப்புகள், எல்லாவற்றிலும் மனிதன் மாத்திரமே இந்தக் கிரகத்தின் மீது தனது பிழைத்திருத்தல் பற்றித் தொடர்ந்து மன உலைச்சல் கொண்டவனாக இருக்கிறான்" என்று குறிப்பிட்டார்.[12]

பறவைகள் தேவனுக்கு முக்கியமானவையாக உள்ளன. வேறொரு இடத்தில் இயேசு, அவற்றில் ஒன்றும் தேவன் அறியாமல் தரையில் விழமாட்டாது என்று கூறினார் (காண்க மத்தேயு 10:29). இதைப் புரிந்து கொண்டு, இயேசுவின் முடிவைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்: "அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?" (6:26ஆ). இப்போது இயேசுவின் விவாதம், சிறியதில் இருந்து பெரியதற்கு செல்வதாக உள்ளது: தேவன் சிறியவற்றைக் (பறவைகளைக்) கவனித்துக் கொள்கிறார் என்றால், அவர் பெரியவற்றையும் (உங்களையும்) கவனித்துக் கொள்ள மாட்டாரா? பின்வரும் சிறு பாடலை நீங்கள் ஒருவேளை கேள்விப்பட்டிருக்கலாம்:

> பாடும் பறவை சிட்டுக் குருவியிடம்,
> "ஏக்கம் கொண்ட மனிதப்பிறவிகள்
> ஏன் இப்படி அவசரமும் கவலையும்
> கொண்டு திரிகின்றனர் என்பது பற்றி
> அறிவதற்கு நான் உண்மையிலேயே
> விருப்பம் கொண்டுள்ளேன்" என்றது.
>
> சிட்டுக்குருவி பாடும் பறவையிடம்,
> "நண்பனே, உன்னையும் என்னையும்
> கவனித்துக் கொள்ளும் பரமபிதா
> போன்ற ஒருவர் அவர்களுக்கு இல்லை
> என்றே நான் நினைக்கிறேன்" என்றது.[13]

இந்தப் பாடலில் இறையியல் கருத்தானது இலக்கின்மீது 100 சதவிகிதமானதாக இருப்பதில்லை. நமது வேதபாட வசனப்பகுதியானது, "அவற்றின் [பறவைகளின்] பரமபிதா" என்றல்ல, ஆனால் "உங்கள் பரமபிதா" என்றே கூறுகிறது. பறவைகள் தேவனுடைய படைப்புகளாக இருக்கின்றன, அதே வேளையில் நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறீர்கள். இருந்தபோதிலும், இந்தப் பாடலின் செய்தி மதிப்பு மிக்கதாக உள்ளது: தேவன் தமது பௌதீகரீதியான படைப்பின் மீது கவனம் கொள்வார் என்றால், அவரது பிள்ளைகள் "அலைந்து திரிந்து கவலைப்படுதல்" என்பது எவ்வளவு

மதியீனமானதாக இருக்கிறது!

உடையைப் பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்?

28 மற்றும் 29ம் வசனங்களில் இயேசு, உடை பற்றிய பாடக்கருத்திற்குத் திரும்பினார். அவர் ஒரு உற்றுநோக்குதலைத் தொடர்ந்து ஒரு கேள்வியைக் கேட்டார்: "உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் '[lilies of the field]' *எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை" (வசனம் 28). மீண்டுமாக, அந்த மலைப்பகுதியைச் சுற்றிலும் இருந்த நிலத்தை நோக்கி, காட்டு மலர்கள் மலர்ந்துசெழித்திருந்த பகுதிகளை நோக்கி இயேசு தமது கரங்களை நீட்டிக் காண்பித்ததைக் கற்பனை செய்வது கடினமாக இருப்பதில்லை. "கவனித்துப்பாருங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (katamanthano[14]) வார்த்தை, "மிகச்சரியாகக் கவனியுங்கள், நன்கு ஆழ்ந்து சிந்தியுங்கள்" என்று அர்த்தப்படுகிறது.[15]*

"Lilies" *என்ற வார்த்தையை நான் கேள்விப்படும்போது, வெள்ளையான, பெரிய, எக்காள வடிவத்தில் உள்ள விவசாயம் செய்து வளர்க்கப்படும் லில்லி மலர்களைப் பற்றி நான் நினைக்கிறேன். இருப்பினும் இயேசு, வளர்க்கப்படும் லில்லி மலர்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கவில்லை, ஆனால் "வயல் வெளியில் தானாகவே வளரும்" லில்லிகளைப் பற்றிப் பேசினார். 30ம் வசனத்தில் இந்த மலர்கள் "காட்டுப் புல்லுடன்" இணைவுபடுத்தப்பட்டுள்ளன. இயேசு அனேகமாக, பொதுவாகக் காட்டில் உள்ள மலர்களையே தமது சிந்தையில் கொண்டிருந்திருப்பார். (தமிழ் வேதாகமத்தில் இது "காட்டுப் புஷ்பங்கள்" என்று சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.) அவர் ஒரு குறிப்பிட்ட வகையான மலரைப் பற்றிப் பேசினார் என்றால், அது என்னவாக இருந்தது என்று நம்மால் நிச்சயமாகக் கூற இயலாது. இவைகள், அவரது உரையைக் கேட்டவர்களுக்கு, சாலொமொனின் இராஜரீக உடைகளை நினைவூட்டக் கூடிய, இரத்தச் சிவப்பான அனிமோன் மலர்களை அவர் குறிப்பிட்டார் என்று சிலர் கருத்தைத் தெரிவித்துள்ளனர். இது மிகச்சரியாக எந்த வகை மலர் என்பது முக்கியமற்றதாக உள்ளது. நீங்கள் அனேகமாக, நிலங்களில் காட்டு மலர்கள் மூடியிருப்பதைக் கண்டிருக்கலாம்.*

இயேசு, இந்த மலர்களைக் கவனமாகப் பார்த்து, அவற்றில் இருந்து கற்றுக்கொள்ளும்படி கூறினார்: "காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை." மீண்டும் ஒருமுறை நாம், வேலை செய்தலை ஊக்கம் குலைக்கும் செயலை இயேசு நோக்கங் கொண்டிருக்கவில்லை என்று வலியுறுத்துகிறோம். காட்டு மலர்கள், தாங்கள் செய்யும்படி தேவன் ஆயத்தமாக்கியுள்ளவற்றைச் செய்கின்றன. அவைகள் மண்ணில் இருந்து ஊட்டச் சத்துக்களையும் ஈரத்தையும் உறிஞ்சி அவற்றை இலைகளுக்கும் மற்ற மலர் மொட்டுகளுக்கும் விநியோகிக்கின்றன. அவைகள் மலையோரங்களில் சும்மா உட்கார்ந்து கொண்டு, ஊட்டச் சத்துக்களும் ஈரமும் போதுமானவையாக இருக்குமா அல்லது தாங்கள் பறித்து எரிபொருளாகப் பயன்படுத்தப்பட்டுவிடுவோமா என்று கவலைப்பட்டுக் கொண்டிருப்பதில்லை.

தொடர்ந்து இயேசு, "என்றாலும், சாலொமோன் முதலாய்த் தன் சர்வ

மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார் (வசனம் 29). ஒரு யூதனுக்கு, சாலொமோனின் மகிமையைக் காட்டிலும் பூமியின் வேறு எந்த மகிமையும் பெரிதாக இருந்ததில்லை.[16] இருந்தபோதிலும் இயேசு, "என்றாலும், சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை" என்று கூறினார். அந்தக் கூற்றை நான் வாசிக்கையில், டெக்ஸாஸின் நெடுஞ்சாலையின் ஓரங்களில் வளர்ந்துள்ள "நீலநிற போனட் மலர்கள்" மற்றும் ஆக்லஹாமாவின் வயல்களில் நிறைந்துள்ள "இந்திய வண்ணத்தூரிகை மலர்கள்" ஆகியவை உட்பட, காட்டு மலர்களின் பல காட்சிகள் எனது சிந்தைக்கு வருகின்றன. அழகுமிக்க மலர்களால் போர்த்தப்பட்ட நிலப்பரப்பை நீங்கள் சற்றே பார்த்தீர்கள் என்றால், இயேசு எதைப் பற்றிப் பேசினார் என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.

இயேசு தமது கருத்தை எடுத்துரைக்கத் தயாராக இருந்தார்: "இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?" (வசனம் 30ஆ). "எருசலேமைச் சுற்றிலும் இருந்த நாட்டுப்புறப் பகுதியானது நீண்ட காலத்திற்கு முன்பே அதன் மரங்கள் உரிந்துபோடப்பட்டதாக இருந்தது,"[17] எனவே அங்கிருந்த மக்கள், உலர்ந்த புற்களையும் மற்ற செடிகளையும் விறகாகப் பயன்படுத்த வேண்டி இருந்தது.

நான் ஒரு சிறுபிள்ளையாக இருந்தபோது, எரிபொருளை ஏன் (வேதாகமத்தின் சொற்றொடராக்கத்தைப் பயன்படுத்துவதென்றால்) "அடுப்பிலே" போட்டனர் என்பதை நான் புரிந்துகொள்ளாதிருந்தேன். நான் வளர்ந்து வருகையில், அடுப்புகளைச் சூடுபடுத்த மரவிறகுகளைப் பயன்படுத்திய சமையலறை கொண்ட பல இல்லங்களில் நான் இருந்தேன், ஆனால் எவரொருவரும் எரிபொருளை அடுப்பிற்குள் வீசியெறிவதை நான் ஒருக்காலும் கண்டதில்லை. நான் வளர்ந்த பின்பு, ஆக்லஹாமாவின் தாலேக்குவா என்ற இடத்திற்கு அருகில் உள்ள இந்திய கிராமத்திற்குச் சென்றேன் - அது செர்ரோக்கீ இந்தியர்கள் அமெரிக்காவின் கிழக்குப் பகுதிகளில் ஒரு காலத்தில் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதைச் சித்தரிப்பதற்காக மறுகட்டுமானம் செய்யப்பட்ட கிராமமாக இருந்தது. எங்களுக்கு, வீட்டிற்கு வெளியே சில பெரிய, களிமண்ணினால் ஆன அடுப்புகள் காட்டப்பட்டன. எரியும் பொருளானது அடுப்புக்குள் ஏறியப்படும்போது அது சுவாலையை ஏற்படுத்தியது என்று அங்கு விளக்கப்பட்டது. அந்தப் பொருள் எரிந்தபின்பு, சாம்பல் விரைவாக வெளியே வாரி எடுக்கப்பட்டது மற்றும் சமைக்கப்பட வேண்டிய உணவுப்பொருள் அடுப்பின்மீது வைக்கப்பட்டது. உணவானது அடுப்பின் தரைப்பகுதி மற்றும் சுவர்ப்பகுதியில் இருந்த வெப்பத்தினால் சமைக்கப்பட்டது. அது போன்ற அடுப்புகள் பாலஸ்தீனத்தில் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று அன்று நான் கற்றுக்கொண்டேன்.

மீண்டும் ஒருமுறை இயேசுவின் விவாதம், சிறியதிலிருந்து பெரியதற்குச் செல்வதாக இருந்தது: அடுப்பில் எரியப்படும் காட்டுப் புல்லுக்கு [சிறியது] தேவன் இவ்வாறு உடுத்துவிப்பார் என்றால், உங்களை [பெரியது] இன்னும் அதிகமாய் உடுத்துவிப்பார் அல்லவா? தேவனுடைய பிள்ளையாக இருந்து கொண்டு கவலைப்படுதல் என்பது சீர்பொருத்தமற்றதாக உள்ளது என்ற

சத்தியத்தைக் கர்த்தர் வலியுறுத்தினார்.

கவலைப்படுதல் செயல்விளைவற்றது! (6:27)

ஆக்க வளம் அற்றது

இப்போது நாம், கவலைப்படாது இருப்பதற்கான நமது மூன்றாவது காரணத்திற்காக 27ம் வசனத்திற்குப் பின்னோக்கிச் செல்வோமாக: ஏனென்றால் கவலைப்படுதல் என்பது செயல்விளைவற்றதாக உள்ளது. 27ம் வசனம் இயேசுவினால் கேட்கப்பட்ட இன்னொரு கேள்வியாக உள்ளது: "கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?" KJV வேதாகமத்தில் "Which of you by taking thought [by worrying] can add one cubit unto his stature?" என்றுள்ளது. KJV வேதாகமம் ஏறக்குறைய, கிரேக்க வசனத்தின் நேரடித் தரவமைப்பாக உள்ளது, ஆனால் இவ்வசனத்தில் உள்ள வார்த்தைகள் ஒரு உருவகக் கருத்தில் பயன்படுத்தப்பட முடியும். ஆகவே அதிகாரத்துவம் உள்ள ஒருவர், 27ம் வசனம் "உடலின் அளவை அல்ல ... ஆனால், வாழ்வின் காலத்தின் அளவைக் குறிப்பதாக இருக்க வேண்டும்" என்று கருத்துத் தெரிவிக்கிறார்.[18] இயேசுவினால் ஏற்படுத்தப்பட்ட கருத்தைப் பற்றி இது நீங்கள் உடலில் உயரம்பற்றி நினைக்கிறீர்களா அல்லது வாழ்வின் காலம் பற்றி நினைக்கிறீர்களா என்பது சிறிதளவே வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. எவ்வகையிலும், கவலைப்படுதல் உதவப்போவதில்லை. அது உங்களை உயரமும் ஆக்காது மற்றும் அது உங்களை நீண்ட காலம் வாழவும் வைக்காது.

சிலர், "ஆனால் ஒருவர் தமது உடல் நலம் பற்றிக் கவலைப்பட்டால், அவர் ஆரோக்கியமான உணவை உண்ணவும் உடற்பயிற்சி மேற்கொள்ளவும் தொடங்குவார் மற்றும் அவர் தமக்குத் தேவையான ஓய்வையும் எடுத்துக்கொள்வார் என்று விவாதிக்கக் கூடும்.[19] இந்தச் செயல்கள் யாவும் நிச்சயமாக அவர் நீண்ட நாள் வாழ உதவி செய்யுமே" என்றும் விவாதிக்கலாம். ஆரோக்கியமான வாழ்வுநடை என்பது வாழ்நாளை நீட்டிக்கலாம், ஆனால் (இப்போது இதைப்பற்றிச் சிந்தியுங்கள்) *கவலைப்படுதல்* என்பது ஒரு தனிநபரை நீண்ட நாள் வாழச் செய்யாது. கவலைப்படுதல் என்பது செயல்விளைவற்றதாக உள்ளது.

எதிர் - ஆக்கவளம் உள்ளது

நாம் இன்னும் ஓரடி முன்னே செல்லலாம். கவலைப்படுதல் என்பது ஆக்கவளம் அற்றதாக இருப்பதுடன் கூட, அது எதிர் ஆக்கவளம் கொண்டுள்ளது. அது செயல்விளைவற்றதாக இருப்பது மாத்திரமல்ல, அது *தீங்கிழைப்பதாகவும்* உள்ளது. புகழ்பெற்ற மேயோ மருத்துவமனையின்[20] மருத்துவர் சார்லஸ் மேயோ என்பவர், "கவலைப்படுதல் என்பது குருதியோட்டத்தை, இருதயத்தை, சுரப்பிகளை மற்றும் நரம்புமண்டலம் முழுவதையும் பாதிக்கிறது, மேலும் இது உடல்நலத்தை மிகவும் ஆழமாகப் பாதிக்கிறது. ஒரு மனிதர், அதிக வேலை செய்ததால் இறந்துபோனதாக நான் ஒருக்காலும் கேள்விப்பட்டதில்லை, ஆனால் சந்தேகத்தினால் பலர் இறந்துபோகின்றனர்" என்று கூறினார்.[21] ஒரு முதிர்வயதான மனிதரிடத்தில், அவரது நீண்ட வாழ்நாளின் இரகசியம் என்ன என்று கேட்கப்பட்டது. அவர் "நான் வேலை செய்யும்போது நான் கடினமாக

வேலைசெய்கிறேன். நான் அமரும்போது. நான் ஓய்வாக அமருகிறேன். நான் கவலைப்படும்போது, நான் தூங்கச் செல்கிறேன்" என்று கூறினார். தூங்கச் செல்லுதல் என்பது நீங்கள் நீண்டகாலம் வாழ்வதற்கு உதவலாம், ஆனால் கவலைப்படுதல் அதற்கு நிச்சயமாக உதவாது.

முடிவுரை

மத்தேயு 6:25-34 பற்றிய நமது படிப்பை நாம், அடுத்த பாடத்தில் முடிப்போம். கவலைப்படுதல் பற்றிய பாடத்தை இந்த இடத்தில் முடித்தல் பற்றி நான் சில அவநம்பிக்கைகளைக் கொண்டுள்ளேன். (நான் உட்பட) நம்மில் சிலர், இவ்வேதபாட வசனப்பபகுதியினால் குற்றம்சாட்டப்பட்டவர்களாக நம்மையே கண்டு, நாம் மிக அதிகமாகக் கவலைப்படும்போது மோசமாக உணரலாம். நமது அடுத்த பாடத்தில் நாம், கவலைப்படுதலை வெற்றிகொள்ளுதல் எவ்வாறு என்பது பற்றி அதிகமாகக் கூறுவோம். இப்போதைக்கு நான், கவலைப்படுதலைத் தோல்வி அடையச் செய்வதற்கான வழியானது, உங்களுக்கு நீங்களே "கவலைப்படாதிருங்கள்! கவலைப்படாதிருங்கள்!" என்று கூறிக்கொள்வது அல்ல என்று மட்டும் கூற அனுமதியுங்கள். பல ஆண்டுகளுக்கு முன்னர், கவலைப்படுதல் மீதான டேல் கார்னிஜீ என்பவரின் புத்தகம், மிக அதிக விற்பனையாகும் புத்தகங்களின் பட்டியலில் இருந்தபோது, பின்வரும் வாசகத் துணுக்கு மிகப்பரவலாகச் சுற்றுக்கு விடப்பட்டது:

> நான் கவலைப்படாதீர்கள் என்ற புதிய சங்கத்தில் சேர்ந்தேன்;
> இப்போது நான் எனது மூச்சைப் பிடித்துக் கொண்டிருக்கிறேன்,
> நான் கவலைப்பட்டு விடுவேனோ என்ற பயத்தினால் மிகவும் அஞ்சியிருக்கிறேன்,
> அதாவது நான் இறப்பிற்கு மிக அதிகமாகக் கவலைப்படுகிறேன்.[22]

அடுத்த முறை நாம் காணுகையில், நாம் *நமது விசுவாசத்தை அதிகப்படுத்திக் கொள்வதினால்* கவலைப்படுதலைத் தோல்வியடையச் செய்ய முடியும். மத்தேயு 6:25-34ல் இயேசு, சுய உதவித் திட்டம் ஒன்றை முன்மொழியவில்லை: "நேர்மறைச் சிந்தனைகளை மாத்திரம் எண்ணிக்கொண்டிருங்கள், நீங்கள் மறுபடியும் ஒருக்காலும் கவலைப்பட மாட்டீர்கள்." மாறாக அவர், "தேவனுடைய - உதவி" என்ற ஒரு திட்டத்தை முன்மொழிந்தார். நமது உதவிக்காவும் நமது நம்பிக்கைக்காகவும் நாம் தேவன் மீது சார்ந்திருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.[23] தேவன் உங்கள் மீது அன்புகூருகிற, உங்களைப் பெலப்படுத்துகிற பரலோகபிதாவாக இருக்கிறார் என்று உங்களால் உறுதியாகக் கூற இயலாததென்றால், நீங்கள் அவரிடத்தில் இன்றே வரும்படி நான் உங்களை ஊக்குவிக்கிறேன் (காண்க மத்தேயு 11:28-30; எபிரெயர் 10:19, 20; 11:6; மாற்கு 16:16).

குறிப்புகள்

[1]D. Martyn Lloyd-Jones, *Studies in the Sermon on the Mount,* vol. 2 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 146. [2]Archibald Thomas Robertson, *Word Pictures in the New Testament,* vol. 1 (Nashville: Broadman Press, 1930), 57. [3]2 கொரிந்தியர் 12:14ல் பவுல்,

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டியது பொறுப்பாக உள்ளது என்று குறிப்பிட்டார். [4]William Barclay, *The Gospel of Matthew,* vol. 1, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 258. [5]Robertson, 58. [6]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 89. [7]*இதனுடன் தொடர்புடைய psyche என்ற ஆங்கில வார்த்தை, "ஆத்துமா" என்பது உட்படப் பல் வேறு அர்த்தங்களைக் கொண்டிருக்க முடிகிறது, ஆனால் இங்கு இது உடல்ரீதியான வாழ்வைக் குறிக்கிறது.* [8]*இது* en *என்ற முன்னிடைச் சொல்லால் வலுவாக்கப்பட்ட blepo ("கவனியுங்கள்") என்ற வார்த்தையாக உள்ளது.* [9]Adapted from Vine, 59. [10]Adapted from R. T. France, *The Gospel According to Matthew,* Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Inter-Varsity Press, 1985), 140.

[11]*ஒரு பறவையைப் பொறுத்த மட்டில்* "molt" *என்பது அதன் இறகுகள் சிலவற்றை அது இழந்து போகுதல் என்று அர்த்தப்படுகிறது.* [12]Burton Coffman, *Commentary on the Gospel of Matthew* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1968), 86-87. [13]Elizabeth Cheney, "Overheard in an Orchard"; quoted in John R. W. Stott, *The Message of the Sermon on the Mount,* The Bible Speakes Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1978), 165. [14]*இது kata என்ற முன்னிடைச் சொல்லைக் கொண்டு வலுப்படுத்தப்பட்ட (manthano, "கற்றுக்கொள்ள" என்ற) வார்த்தையாக உள்ளது.* [15]Vine, 123. [16]*சாலொமோனின் மகிமை பற்றிய ஒரு பொதுவான விவரிப்பிற்கு 1 இராஜாக்கள் 10:1-29ஐக் காணவும்.* [17]J. W. McGarvey, *The New Testament Commentary,* vol. 1, *Matthew and Mark* (N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., 2006), 68. [18]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 4th ed., rev. and aug. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago Press, 1957), 345. [19]*இந்த வாக்கியத்தை, நீங்கள் வாழும் சூழ்நிலைக்கு ஏற்பத் தழுவியமைத்துக் கொள்ளுங்கள். உங்கள் சமூகத்தில் ஆரோக்கியமான வாழ்வுநடையை வாழத் தீர்மானம் செய்துள்ள ஒரு தனிநபரைச் சித்தரியுங்கள்.* [20]*மேயோ கிளினிக் என்பது, மின்னிசோட்டாவின் ரோச்செஸ்டர்; ஃபுளோரிடாவின் ஜேக்ஸன்வில்; மற்றும் அரிசோனாவின் ஃபோனிக்ஸ் ஆகிய இடங்களில் சிகிச்சை மையங்களுடன் கூடிய பெரிய மருத்துவ நிலையமாகும்.*

[21]Eleanor L. Doan, comp., *The Speaker's Sourcebook* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1960), 292. [22]Wayland F. Vaughan (http://cimmerii.org/thoughts to live by/index.html; Internet; accessed 15 July 2008). [23]Adapted from Coy Roper, "How to Overcome Anxiety," unpublished outline of sermon preached at Trent church of Christ, Trent, Texas, 22 January 2006.

14

கவலைப்படாதிருக்க மேலும் நான்கு காரணங்கள்

(மத்தேயு 6:30-34)

கவலைப்படுதல் என்பது உலகளாவிய துன்புறுதலாக உள்ளது. நீங்கள் எப்போதாவது கவலைப் பட்டிருக்கிறீர்களா என்று நமது வாசகர்களிடம் நான் கேட்டால், உலகம் முழுவதிலும் கைகள் மேலே தூக்கப்படும்.[1] ஹெரால்டு ஹேசலிப் அவர்கள் பின்வரும் விவரிப்பைக் கொடுத்தார்:

> *... ஜெர்த்துருத் என்ற பெயர்கொண்ட அழகிய இளம்பெண் ... பிறப்பிலிருந்தே பார்வையற்றவளாக இருந்தாள் ... ஒரு அறுவைச் சிகிச்சையின் மூலம் அவளுக்குப் பார்வை தரப்பட்டபோது, உடனடி இரு விஷயங்கள் அவளுடைய மனதைக் கவர்ந்தன: இயற்கையானது அவள் கற்பனை செய்திருந்ததைக் காட்டிலும் அதிகம் அழகுநிறைந்ததாகவும் வண்ணம் நிறைந்ததாகவும் இருந்தது, மற்றும் மக்களின் முகங்கள் அவள் எதிர்பார்த்திருந்ததைக் காட்டிலும் அதிகம் கவலை மிகுந்தவையாக இருந்தன.[2]*

நாம் யாவரும் கவலைப்படுதலினால் குற்றப்பட்டவர்களாக இருந்திருக்கிறோம், ஆனால் அதைப் பற்றி நாம் என்ன செய்ய முடியும்? முந்திய பாடத்தின் அறிமுகத்தில் நான், மத்தேயு 6:25-34 வசனப் பகுதியானது, நாம் கவலைப்படக் கூடாது என்பதற்குக் குறைந்த பட்சம் ஏழுகாரணங்களைக் கொடுக்கிறது என்று கருத்துத் தெரிவித்தேன். இவற்றில் மூன்றை நாம் கண்ணோக்கியுள்ளோம். நாம் கவலைப்படக் கூடாது, ஏனென்றால் ...

> கவலைப்படுதல் என்பது கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு *ஏற்புடையதல்ல.*
>
> கவலைப்படுதல் என்பது தேவனுடைய பிள்ளையாக இருப்பவருக்குச் *சீர்பொருத்தமற்றது.*
>
> கவலைப்படுதல் என்பது *செயல்விளைவற்றது.* இது நன்மையை உண்டாக்குவதில் திறனற்று இருப்பது மட்டுமின்றி, இது உண்மையில் நமது உடல்நலத்திற்குத் தீங்கானதாக இருக்கக் கூடும்: உடல்ரீதியாக, மனரீதியாக மற்றும் ஆவிக்குரிய வகையில்.

நாம் கடந்த பாடத்தில் விட்ட இடத்தில் இருந்து இதைத் தொடர்ந்து, நாம் கவலைப்படாதிருக்க இன்னும் நான்கு காரணங்களைக் குறிப்பிடுவோம்.

கவலைப்படுதல் அவமானப்படுத்துதலாக உள்ளது! (6:31, 32)

பரலோக பிதா இல்லையா?

முந்தியபாடமானது நம்மை 30ம் வசனத்தின் முதல் பாகம் வரையில் எடுத்துச் சென்றது. இப்போதைக்கு நாம், கவலைப்படுதல் என்பது அவமானப்படுத்துதலாக உள்ளது - அதாவது, இது தேவனை அவமானப்படுத்துதலாக உள்ளது - என்பதைக் குறிப்பிடுகையில், அவ்வசனத்தின் முடிவுப்பகுதியை விட்டு, அடுத்த வசனங்களுக்குச் கடந்து செல்வோம். கவலைப்படுதல் என்பது, நாம் பரலோகபிதாவைக் கொண்டிருப்பதில்லை என்று மறைமுகமாக உணர்த்துகிறது. 31மற்றும் 32ம் வசனங்களில் இயேசு பின்வருமாறு கூறினார்:

> ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்;[3] இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.

"அஞ்ஞானிகள்" (இது ஆங்கில வேதாகமத்தில் ["Gentiles"] அதாவது, "புறஜாதிகள்" என்றுள்ளது) என்று நீங்கள் வாசிக்கும்போது, இந்தப் பிரசங்கத்தை இயேசு பிரசங்கித்த போது, நீங்கள் அங்கிருந்த ஒரு யூதர் என்பதாக நினைக்க முயற்சி செய்யுங்கள். "அஞ்ஞானிகள்" என்பது இனவேறுபாடு என்பதைக் காட்டிலும் அதிகமாக, தேவபக்தியில் வேறுபாடு என்பதாக இருந்தது.[4] பெரும்பான்மையான புறஜாதிகள், உண்மையான தேவனில் விசுவாசம் கொண்டிருக்கவில்லை.[5] யூதர் அல்லாதவர்களான இவர்கள், அன்பான பரலோக பிதாவைப் பற்றிய அறிவைக் கொண்டிராமல், அவருடன் உறவு எதுவும் இல்லாதவர்களாக, உணவு, பானம் மற்றும் உடை ஆகியவற்றைத் தேடுவதிலேயே தங்கள் காலத்தையும் சக்தியையும் செலவிட்டனர். அவர்கள் இப்படிப்பட்ட விஷயங்களில் கவலைப்பட்டவர்களாக, அதிருப்தி கொண்டவர்களாக மற்றும் தூக்கத்தைத் தொலைத்தவர்களாக இருந்தனர்; அவர்கள் பூமிக்குரிய விஷயங்களை நாடும் தங்கள் செயலில் தங்கள் சக்தியைத் தாங்களே தொலைத்தனர்.

பரலோகத்தில் இருக்கிற அன்பான பிதா!

நீங்களும் நானும் அவ்வாறு இருக்கக் கூடாது என்று கூறினார். அவர், "இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்" என்று கூறினாரே (வசனங்கள் 7, 8ஐ ஒப்பிடவும்). கடந்தகாலத்தில் ஒரு சில சபைக் கட்டிடங்களில், எல்லாவற்றையும் காணுகிற தேவனுடைய (காண்க யோபு 34:21) கண்ணைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒரு சுவற்றில் மிகப்பெரிய கண் ஒன்று வரையப்பட்டிருந்தது.[6] வளர்ந்த மனிதர்கள், தாங்கள் பிள்ளைகளாக இருந்த போது, வரையப்பட்ட அந்தப் பெரிய கண், தங்களை எவ்வாறு அச்சுறுத்திற்று என்பதைப் பற்றிக் கூறக் கேள்விப்பட்டிருக்கிறேன். இருப்பினும் கர்த்தரை அன்பு செய்து அவரது சித்தத்தைச் செய்யப் பிரயாசப்படுகிற ஒருவருக்கு, தேவன் எல்லாவற்றையும்

காணுகிறார் மற்றும் எல்லாவற்றையும் அறிகிறார் என்ற கருத்து, அச்சுறுத்துவதாக இராமல் ஆறுதல்படுத்துவதாக உள்ளது. நமது தேவைகளைக் கண்ணோக்குகிற மற்றும் அந்தத் தேவைகளை நிறைவேற்றுகிற அன்பான பிதா ஒருவரை நாம் கொண்டிருக்கிறோம். பேதுரு, "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். *அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்*" என்று எழுதினார் (1 பேதுரு 5:6, 7; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

கவலைப்படுதல் சரியற்றதாக உள்ளது! (6:33)

கட்டளை

கவலைப்படுதல் என்பது *சரியற்றதாக* உள்ளது என்பது நாம் கவலைப்படாதிருக்க வேண்டும் என்பதற்கு இன்னொரு காரணமாக இருக்கிறது. இது (நாம் கவலைப்படுதல் என்பது), நாம் நமது வாழ்வில் தவறான வலியுறுத்தத்தைக் கொண்டுள்ளோம் என்று சுட்டிக்காண்பிக்கிறது. நாம் பின்வருமாறு செய்யக் கூடாது என்று இயேசு கூறியிருந்தார்: நாம் உணவையும் உடையையும் வெறியுடன் தேடக்கூடாது. 33ம் வசனத்தில் அவர், நாம் எதை தேட *வேண்டும்* என்பதைப் பற்றி நமக்குக் கூறினார்: "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்."

"இராஜ்யம்" மற்றும் "நீதி" என்ற வார்த்தைகள் இரண்டும் இந்தப் பிரசங்கத்தில் இதற்கு முன்னர் பல முறைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.[7] "இராஜ்யம்" என்ற சொற்றொடர் குறித்து, இயேசு கூறியதைக் கேள்விப்பட்ட யூதர்கள் அனேகமாக, பழைய ஏற்பாட்டில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டு, பல நூற்றாண்டுகளாகத் தங்களால் எதிர்பார்க்கப்பட்டிருந்த இராஜ்யமான, மேசியாத்துவ ராஜ்யத்தைப் பற்றி நினைத்திருக்கலாம், இயேசு கூறிய இராஜ்யமானது கடைசியில், "சமீபமாயிருந்தது" (4:17). இந்த இராஜ்யம், கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பின்வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் நிலைநாட்டப்பட்டது. அந்த வேளை தொடங்கி, இது வழக்கமாக "சபை" என்ற சொற்றொடரால் குறிப்பிடப்பட்டது.[8] ஆண்டுகளினூடே, கிறிஸ்தவர்கள் தங்கள் சிந்தித்தல் மற்றும் திட்டங்களில் கர்த்தருடைய சபைக்கு முதலிடம் கொடுக்கும்படி அவர்களை ஊக்குவிப்பதற்குப் பிரசங்கியார்கள் மத்தேயு 6:33ஐச் சரியாகப் பயன்படுத்தியுள்ளனர்.

இருப்பினும், "இராஜ்யம்" என்ற வார்த்தையின் பின்வரும் அடிப்படை அர்த்தத்தை மறந்து விடாதீர்கள்: மனிதர்களின் இருதயங்களில் தேவனுடைய ஆளுகை. நமது வேதபாட வசனப்பகுதியில் இது, "நீதி" என்பதுடன் இணைக்கப்பட்டுள்ளது. மலைப்பிரசங்கத்தில் "நீதி" என்பது நீதியாக வாழ்வதை அதாவது, நாம் எவ்வாறு வாழவேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ அவ்வாறே வாழ்வதைக் - குறிக்கிறது. இவ்விரு சொற்றொடர்களையும் ஒன்றாக வைக்கும்போது நாம், மனிதர்களின் இருதயங்களிலும் தேவன் தமது வழியைக் கொண்டிருக்க அனுமதித்தல் மீது இரட்டை வலியுறுத்தம் கொண்டிருக்கிறோம். 6:33ன் செய்தியை நாம் பின்வருமாறு விளக்கப்படுத்தலாம்: "கர்த்தருடன் தொடர்புடைய ஒவ்வொரு விஷயமும்[9] நமது சிந்தனைகள் மற்றும் பிரியங்கள்

ஆகியவற்றில் முதலிடத்தைப் பெறத் தகுதியுடையவையாக இருக்கின்றன."

ஆக்லஹாமாவின் மஸ்கோஜீ என்ற இடத்தின் மேற்பகுதியில் உள்ள கிறிஸ்துவின் சபையில் நான் பிரசங்கித்தபோது, ஃப்ளாயிட் ஸ்கூபெர்ட் அவர்கள் அந்த சபைக்குழுமத்தின் மூப்பர்களில் ஒருவராக இருந்தார். சகோதரர் ஸ்கூபெர்ட் அவர்கள், பள்ளிக்குத் தேவையான பொருட்களை விற்பனை செய்யும் மிகவெற்றிகரமான வியாபாரம் ஒன்றைக் கொண்டிருந்தார், ஆனால் அவர் தமது சிந்தனையில் அந்த வியாபாரம் முதலிடத்தைப் பெற அனுமதிக்காதிருந்தார். அவர் தமது எழுதுமேஜையின் மீது, "முதலாவது தேவன், இரண்டாவது பென்சில்கள்" என்று எழுதப்பட்ட சிறு பலகை ஒன்றை வைத்திருந்தார்.

நாம் "உடைகளையும் மளிகைப் பொருட்களையும்"[10] அல்ல, ஆனால் தேவனையும் நற்தன்மையையும் நாட வேண்டியவர்களாக இருக்கிறோம். கிரேக்க வசனத்தில் "தேடுங்கள்" (*zeteo*) என்ற கட்டளை நிகழ்காலத்தில் உள்ளது, இது தொடர்ந்து நடைபெறும் செயலைக் குறிக்கிறது. தேவனுடைய இராஜ்யம் மற்றும் அவருடைய நீதி ஆகியவற்றை நாம் தேடுதல் என்பது இடைவிடாத செயலாக இருக்க வேண்டும்.

வாக்குத்தத்தம்

நாம் தேவனையும் தேவனுடைய விஷயங்களையும் நமது வாழ்வில் முதல் இடத்தில் வைத்தால், நமக்கு ஆச்சரியம் நிறைந்த ஒரு வாக்குத்தத்தம் தரப்படுகிறது. "அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" என்று இயேசு கூறினார் (வசனம் 33ஆ). சந்தர்ப்பப் பொருளில் "இவைகளெல்லாம்" என்பது - வாழ்வின் அத்தியாவசியத் தேவைகளாக - உணவு, பானம் மற்றும் உடை ஆகியவற்றைக் குறிக்கிறது.[11] "இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்" என்பதை நினைவில் வையுங்கள் (வசனம் 32). *எல்லாம் அறிந்த தேவன்* என்ற வகையில் அவர், நமது தேவைகள் உட்பட எல்லா விஷயங்களையும் அறிந்திருக்கிறார். *நம்மை அன்புகூரும் பிதா* என்ற வகையில் அவர் நமக்காகப் பரிவிரக்கம் கொள்கிறார். *நம்மைப் பராமரிக்கும் பிதா* என்ற வகையில் அவர் நமது தேவைகளை நிறைவேற்றுகிறார். பிலிப்பியில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல், "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" என்று கூறினார் (பிலிப்பியர் 4:19). பழைய ஏற்பாட்டின் தாவீதைப் போல நாம், "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்" என்று கூற முடியும் (சங்கீதம் 23:1).

கவலைப்படுதல் என்பது நடைமுறைச் சாத்தியமற்றதாக உள்ளது! (6:34)

நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்

கவலைப்படுதல் பற்றிய பாடக்கருத்தை முடித்து வைக்கும் வகையில் 33ம் வசனம் ஒரு நேர்மறைக் குறிப்பாக இருப்பதாகக் காணப்படுகிறது, ஆனால்

இந்தத் தலைப்பின்மீது இயேசு இன்னும் ஒரு விஷயத்தைக் கூறஇருந்தார்: "ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம்[12] தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின்பாடு போதும்[13]" (வசனம் 34). நாம் ஏன் கவலைப்படலாகாது என்பதற்கு இயேசு போதிய அளவிற்கும் அதிகமாகவே காரணங்களைக் கொடுத்திருந்தார், ஆனால் அவர் மக்களை அறிந்திருந்தார். யாரேனும் ஒருவர், "எல்லாம் சரி, நான் இன்றைய தினத்தைப் பற்றிக் கவலைப்பட மாட்டேன் - ஆனால் நாளைய தினத்தைக் குறித்த விஷயம் என்ன?" நாளைக்கு நடக்க இருக்கும் "மோசமான விஷயங்கள் என்ன என்பதை யார் அறிவார்?" என்று கூறலாம். A. T. ராபர்ட்ஸன் அவர்கள், நாளையதினம் என்பது "மற்ற எல்லாப் பயங்களும் [அமர்த்தப்பட்ட] போது, நாளைய தினம் என்பது ஏங்கும் ஆத்துமாவின் கடைசிப் புகலிடமாக உள்ளது" என்று கூறினார்.[14]

ஆக்லஹாமாவின் மஸ்கோஜி நகரின் மேற்குப் பகுதி சபைக்குழுமத்தில் நான் ஊழியம் செய்து கொண்டிருந்தபோது, ஜோ மெலோன் அவர்கள், சுவிசேஷச் செய்திகளின் தொடர்வரிசை ஒன்றைப் பிரசங்கித்தார். சகோதரர் மெலோன் அவர்கள் தமது மனமாற்றத்திற்கு முன்னர், தொழில் முறையில் கேலிச் சித்திரம் வரைபவராயிருந்தார், அவர் ஒவ்வொரு பிரசங்கத்தையும் பேசுகையில் அப்பிரசங்கத்தை சுண்ணக்கட்டி கொண்டு வரைந்த சித்திரங்களால் விவரித்தார். வாரநாள் ஊழியத்தின்போது ஒரு நாள் அவர், "இரு கள்வர்களுக்கு மத்தியில் சிலுவையில் அறையப்பட்டார்" என்ற தலைப்பில் தாம் பேசுவிருப்பதாக அறிவித்தார். இரு கள்வர்களுக்கு மத்தியில் இயேசு சிலுவையில் அறையப்பட்டதைப் பற்றி அவர் பேசுகையில், கல்வாரியின் மூன்று சிலுவைகளைச் சித்தரிக்கும் வகையில் அவர் ஒரு காட்சியை வரைந்தார். பின்பு அவர், "கிறிஸ்து இரு கள்வர்களுக்கு மத்தியில் சிலுவையில் அறையப்பட்டது போன்றே, நாமும் அறையப்படுகிறோம்" என்று கூறினார். அவர் ஒருபுறத்தில் இருந்த சிலுவைக்கு "நேற்றையதினம்" என்றும் மறுபுறத்தில் இருந்த சிலுவைக்கு "நாளையதினம்" என்றும் பெயரிட்டார். "பலருக்கு, நேற்றைய தினமும் நாளைய தினமும், காலம், சிந்தனை மற்றும் சக்தி ஆகியவற்றைக் களவு செய்யும் கள்வர்களாக உள்ளன" என்று அவர் கூறினார்.

நாம் கவலைப்படுபவற்றில் பெரும்பான்மையான விஷயங்கள், நாம் கடந்த காலத்தில் செய்திருந்த மதியீனமாக செயல்கள் அல்லது எதிர்காலத்தில் நாம் முன்னெதிர்நோக்கும் தீவிரமான பிரச்சனைகள் மீது மையங்கொண்டுள்ளன. கடந்த காலத்தைப் பற்றிக் கவலைப்படுதல் குறித்துப் பவுல் ஒரு நேர்மறை உதாரணத்தைக் கொடுத்தார்: "... ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, ... இலக்கை நோக்கித் தொடருகிறேன்" (பிலிப்பியர் 3:13, 14). மத்தேயு 6:34ல் இயேசு, எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படுதலை ஊக்கம் இழக்கச் செய்தார்.

இயேசுவின் வார்த்தைகள், எதிர்காலத்திற்குத் திட்டமிடுதலைத் தவிர்ப்பதில்லை என்பதை வலியுறுத்த, என்னை மீண்டும் அனுமதியுங்கள்: உங்கள் வயதான காலத்திற்குத் தேவையானவற்றை அளிப்பதற்காக அல்லது உங்களுக்கு ஏதேனும் நடந்து விட்டால் உங்கள் குடும்பம் எவ்வாறு பராமரிக்கப்பட வேண்டும் என்பதற்காகத் திட்டமிடுதல் போன்ற விஷயங்கள். இருப்பினும் நீங்கள், எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கக் கூடும்படிக்கு ஒவ்வொரு

விஷயத்தையும் செய்திருக்கும்போது, அதைத் தேவனுடைய கரங்களில் விட்டுவிட்டு அதைப்பற்றிக் கவலைப்படாதிருக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் நான் கேள்விப்பட்ட கதையொன்று இன்னும் என் சிந்தைக்குள் நிலைத்திருக்கிறது. வயது முதிர்ந்த ஒரு மனிதர், இடர்ப்பாடு மிகுந்து காணப்பட்ட இளைஞன் ஒருவனைச் சந்தித்தார். "என்ன ஆயிற்று?" என்று அந்த முதிய மனிதர் கேட்டார். அதற்கு அந்த இளைஞன் தனது பிரச்சனையைப் பற்றிக் கூறினான். "இதைப் பற்றி உன்னால் செய்ய முடிந்ததை நீ செய்திருக்கிறாயா?" என்று அந்த முதிய மனிதர் கேட்டார். அதற்கு அந்த இளைஞன் "ஆம்" என்று கூறி, தான் செய்துள்ள யாவற்றையும் பட்டியலிட்டான். "உன்னால் செய்ய முடிந்த யாவற்றையும் நீ செய்துள்ளதாக நிச்சயமாகக் கூறுகிறாயா?" என்று அந்த முதிய மனிதர் கேட்டார். "ஆம் நான் அதை நிச்சயமாகக் கூறுகிறேன்" என்று கூறினான். "அப்படியென்றால், உன்னால் இனி எதுவும் செய்ய இயலாது. இப்போது நீ இந்த விஷயத்தைத் தேவனுடைய கரங்களில் ஒப்புக்கொடுக்க வேண்டும்" என்று அந்த முதிய மனிதர் கூறினார். அவ்வப்போது ஏதாவது சூழ்நிலையினால் நான் கவலைப்படுவதாகக் காணும்போது, நான் சற்றே நிதானித்து, "இந்தப் பிரச்சனைக்குப் பரிகாரமாக என்னால் செய்ய முடிந்த எல்லாவற்றையும் நான் செய்திருக்கிறேனா? என்று என்னையே கேட்டுக்கொள்வது உண்டு. செய்ய வேண்டிய விஷயங்கள் பற்றிய மனரீதியான பட்டியல் ஒன்றை நான் தயார் செய்கிறேன். நான் என்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்திருப்பதாக என்னை நானே திருப்தி செய்து கொண்ட பின்பு, "இப்போது இதை நான் தேவனுடைய கரங்களில் விட்டுவிட வேண்டும்" என்று எனக்கு நானே கூறிக்கொள்வதுண்டு.

கவலைப்படுதல் என்பது நடைமுறைச் சாத்தியம் அற்றதாக உள்ளது என்பது, நாம் கவலைப்படாதிருப்பதற்கு ஆறாவது காரணமாக உள்ளது. நம்மைக் கவலைப்படுத்துவது ஒருக்காலும் நடக்காமற்போகலாம் என்பதால், அது நடைமுறைச் சாத்தியம் அற்றதாக உள்ளது. "கவலைப்படுதலை இயல்பாகவே கொண்டு பிறந்தவன்" என்ற வகையில் நான், அதுவே விஷயமாக உள்ளது என்று சாட்சியம் அளிக்க முடியும். யூதர்கள் பின்வரும் கூற்று ஒன்றைக் கொண்டிருந்தனர்: "நாளைய தினத்தின் தீமைகள் பற்றிக் கவலைப்படாதிருங்கள், ஏனெனில் இன்றைய தினம் எதைக் கொண்டுவரும் என்று நீங்கள் அறியாது இருக்கிறீர்கள். ஒருவேளை நீங்கள் நாளையதினம் உயிரோடு இல்லாது போகலாம், மற்றும் உங்களுடையதாக இராத ஒரு உலகம் பற்றி நீங்கள் கவலைப்படுவதாக அது இருக்கலாம்."[15] நீங்கள் அஞ்சியது நடந்தாலும், கவலைப்படுதல் என்பது அந்தப் பிரச்சனையைச் சந்திக்க உங்களுக்கு உதவப் போவதில்லை. இயான் மெக்கிளாரென் அவர்கள், "ஏக்கம்/கவலைப்படுதல் என்பது, வருத்தத்தின் நாளையதினத்தை வெறுமையாக்குவதில்லை, ஆனால் அது இன்றைய நாளின் பலத்தை வெறுமையாக்குகிறது. அது நீங்கள் தீமையிலிருந்து தப்பிக்க உதவுவதில்லை - அது வருகிறபோது நீங்கள் அதை சமாளிக்கத் தகுதியற்றவர்கள் ஆக்குகிறது" என்று எழுதினார்.[16]

இன்றைய தினம் பற்றி அக்கறை கொள்ளுங்கள்

நாம் நாளைய தினத்தைப் பற்றிக் கவலைப்படாது இருக்க வேண்டும் என்றால், நாம் என்ன செய்ய வேண்டும்? நாம், தேவனுடைய உதவியுடன்

இன்றைய தினத்தைப் பற்றி அக்கறை கொள்ள வேண்டும். இயேசுவின் வார்த்தைகளைத் திரும்பவும் கவனியுங்கள்: "ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்." இந்த வேதவசனப்பகுதியின் மீது, டோயிஸ் மாஸ்டரஸ் அவர்கள், "ஒரு வேளையில் ஒரு நாள்" என்ற தலைப்பில் பிரசங்கம் ஒன்றைப் பிரசங்கித்தார். அவரது பிரசங்கம் மூன்று கருத்துக்களைக் கொண்டிருந்தது:

1. இன்றைய தினம் மட்டுமே நீங்கள் கொண்டுள்ள யாவுமாக உள்ளது.
2. இன்றைய தினம் மட்டுமே உங்களுக்குத் தேவையான யாவுமாக உள்ளது.
3. இன்றைய தினம் மட்டுமே உங்களால் கையாள முடிந்த யாவுமாக உள்ளது.[17]

மத்தேயு 6:34ல் இயேசு, "இன்றைய தினத்தின் அறைகூவல்களைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளுங்கள், அப்போது நீங்கள் நாளையதினத்தின் அறைகூவல்கள் எவையாக இருந்தாலும் அவைகளைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளத் தயாராக இருப்பீர்கள். ஒரு வேளையில் ஒரு நாளை வாழுங்கள்" என்றே செயல்விளைவில் கூறினார்.[18] டேல் கார்னிஜீ எழுதிய, *கவலைப்படுவதை நிறுத்தி விட்டு வாழதொடங்குவது எப்படி* என்ற புத்தகத்தில் அவர், நீர்புகா அறைகளைக் கொண்ட நீர்மூழ்கிக் கப்பல்களைப் பற்றி விவரித்தார். அந்தக் கப்பல் முழுவதும் மூழ்காது இருக்கும்படிக்கு, அதன் ஒரு அறையானது தண்ணீரால் நிரப்பப்பட முடியும். பின்பு அவர் பின்வரும் நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்தினார்: நாம் "நாள் - புகா அறைகளில்" வாழ்வது அவசியமாக உள்ளது.[19]

ஒரு வேளைக்கு ஒரு நாளை வாழுதல் என்பது, எந்த சூழ்நிலையிலும் நல்லதொரு அறிவுரையாக உள்ளது. அன்றைய தினத்தை அன்று வாழ்வது என்பது மதுபானத்திற்கு அடிமையானவர்களின் அடிப்படைக் கொள்கையாக உள்ளது. மதுபானப் பழக்கத்தில் இருந்து மீண்டவர்களுக்கு, "நீங்கள், 'எனது வாழ்நாளில் எஞ்சியுள்ள காலம் முழுவதிலும், அடுத்த இருபது அல்லது முப்பது ஆண்டுகளுக்கு தெளிவாக இருக்க வேண்டும்' என்று நினைக்க வேண்டாம்" என்று கூறப்படுவது உண்டு. மாறாக, "நான் இன்று தெளிவாக இருக்க வேண்டும், இருபத்து நான்கு மணிநேரமும்" என்று சிந்திக்கும்படி உற்சாகப்படுத்தப்படுகிறார்கள். குறிப்பிட்ட வகையான புற்றுநோயாளி, ஒருவர் தாம் சாவுக்கேதுவாக நோய்வாய்ப் பட்டிருப்பதை அறிகிறார், ஆனால் தம்மைப் பார்க்க வந்து கவலையுடன் இருப்பவரிடத்தில் "உங்களைப் போன்றே எனக்கும் வாழ்வதற்கு இன்று ஒருநாளே உள்ளது" என்று கூறுகிறார்.[20] ஆபிரகாம் லிங்கன், "எதிர்காலம் என்பது ஒரு வேளைக்கு ஒருநாளாக வருகிறது என்பதே அதைப் பற்றிய மிகச்சிறந்த விஷயமாகும்" என்று கூறினார்.[21]

கவலைப்படுதல் என்பது நடைமுறைச் சாத்தியமற்றதாக உள்ளது. அது நம்மை நாளைய தினத்திற்குத் தயார் செய்வதோ அல்லது இன்றைய தினத்தின் அறைகூவல்களைச் சந்திக்கச் செய்வதோ இல்லை. கர்த்தருடைய உதவியுடன் நாம், ஒரு வேளையில் ஒரு நாளை மாத்திரமே வாழ வேண்டியவர்களாக

இருக்கிறோம். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" என்று கூறினார் (எபிரெயர் 13:8). இயேசு நமக்கு நேற்று உதவி செய்தார், அவர் நமக்கு இன்று உதவி செய்கிறார், மற்றும் அவர் நமக்கு நாளைக்கும் உதவிசெய்வார் என்று நாம் நிச்சயமாயிருக்க முடியும். பின்பு ஏன் நாம் கவலைப்பட வேண்டும்?

கவலைப்படுதல் என்பது நம்பிக்கையின்மையாக உள்ளது (6:30)

முன்னதாக நாம், கவலைப்படுதல் பற்றிய இயேசுவின் கலந்துரையாடலில் இருதயம் போன்ற மையப்பகுதியான, 30ம் வசனத்தின் முடிவுப் பகுதியைத் தாண்டி வந்தோம். நமது படிப்பை முடிப்பதற்கு நான் அந்தப் பகுதியைப் பயன்படுத்த விரும்புகிறேன். கவலைப்படுதல் என்பது *நம்பிக்கையின்மையாக* உள்ளது என்பது நாம் கவலைப்படாது இருக்க வேண்டும் என்பதற்கு ஏழாவது காரணமாக இருக்கிறது.[22] ஹோவர்டு ஃபவுலர் அவர்கள், "கவலைப்படுதல் என்பது நம்பிக்கையின்மையின் நடைமுறை வெளிப்பாடாக உள்ளது" ஏனெனில் அது, கவலைப்படுபவர் தேவன் மீது நம்பிக்கையின்றி இருக்கிறார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது என்று எழுதினார்.[23] ராபர்ட் எச் மவுன்ஸ் அவர்கள், "கவலைப்படுதல் என்பது நடைமுறை நாத்திகமாகவும் தேவனை எதிர்த்து நிற்குதலாகவும் உள்ளது" என்று கூறினார். [24] கவலைப்படுதல் என்பது "நடைமுறை நம்பிக்கையின்மையாக" மற்றும் "நடைமுறை நாத்திகமாக" உள்ளது, ஏனெனில் நாம் கவலைப்படும்போது, நாம் தேவன் இருப்பதில்லை *என்பது போன்று* வாழ்கிறோம்.

விசுவாசக் குறைவு

உணவு, உடை மற்றும் நமது வாழ்வில் இடம் பெறும் உலகப்பிரகாரமான பிற விஷயங்கள் யாவற்றையும்பற்றிக் கவலைப்படுபவர்களை இயேசு என்னவென்று அழைத்தார்? "அற்ப விசுவாசிகளே!" (வசனம் 30ஆ). இவ்வார்த்தைகள் இயேசு தமது சீஷர்களுக்கு அளித்த மிகச் சாதாரணமான மற்றும் மிகவும் காயப்படுத்தும் கண்டனமாக இருந்தன (மத்தேயு 14:31; காண்க 8:26; 16:8; 17:20). பிந்திய சந்தர்ப்பங்களில் சில சீஷர்கள், இயேசுவின் வல்லமைமீது நம்பிக்கைக் குறைவு கொண்டிருந்தமைக்காக கடிந்துகொள்ளப் பட்டனர். இந்த சந்தர்ப்பப் பொருளில், கவலைப்படுபவர்கள், தேவனுடைய பராமரிப்பு மற்றும் அளிப்பு ஆகியவற்றில் நம்பிக்கைக் குறைவின் காரணமாகக் கடிந்துகொள்ளப்பட்டனர்.

இயேசு, தமது உரையைக் கேட்டவர்கள் விசுவாசம் கொண்டிருக்கவில்லை. என்றல்ல, ஆனால் அவர்கள் அற்ப விசுவாசம் கொண்டிருந்தனர் என்றே கூறினார். கவலைப்படுபவர்கள், "உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" (எபிரெயர் 13:5ஆ) என்று கூறியிருக்கிற தேவன்மீது அற்பவிசுவாசம் கொண்டுள்ளனர். அவர்கள், "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" (மத்தேயு 28:20ஆ) என்று வாக்குத்தத்தம் செய்த இயேசுவின் மீது அற்பவிசுவாசம் கொண்டுள்ளனர். அவர்கள், "நமது பலவீனங்ககளில் நமக்கு உதவிசெய்கிற" (ரோமர் 8:26) பரிசுத்த ஆவியானவர் மீது அற்பவிசுவாசம் கொண்டுள்ளனர். அவர்கள், தேவனுடைய வசனத்தில் உள்ள பின்பருவனபோன்ற "மகா மேன்மையும் அருமையுமான

வாக்குத்தத்தங்கள்" (2 பேதுரு 1:4) மீது அற்பவிசுவாசம் கொண்டுள்ளனர்:

> *கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ*
> *புதுப்பெலன் அடைந்து,*
> *கழுகுகளைப்போலச்*
> *செட்டைகளை அடித்து எழும்புவார்கள்;*
> *அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள்,*
> *நடந்தாலும் சோர்ந்துபோகார்கள் (ஏசாயா 40:31).*

> *வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன், நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது (மத்தேயு 11:28-30).*

> *இயேசு அவர்களை நோக்கி: ... ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான்; என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான் நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார் (யோவான் 6:35; யோவான் 4:14ஐ ஒப்பிடவும்).*

தேவனுடைய மாபெரும் வாக்குத்தத்தங்களில் ஒன்று நமது வேதபாட வசனப்பகுதியில் காணப்படுகிறது:

> *முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் (வாழ்வின் அத்தியாவசியத் தேவைகளெல்லாம்) உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும் (வசனம் 33).*

கவலைப்படுதலை நாம், "ஆழ்ந்து - உணரப்பட்ட அக்கறை" என்று பெயரிடலாம். அதை நாம் அலங்கரித்து, சாத்தியமான அளவுக்குக் கவர்ச்சியானதாக்கலாம். இருப்பினும் கவலைப்படுதல் என்பது இன்னமும் கவலைப்படுதலாகவே உள்ளது - மற்றும் நாம் விசுவாசத்தில் குறைவுபடுவதால் கவலைப்படுகிறோம். விசுவாசமும் கவலைப்படுதலும் ஒரே இருதயத்தில் (ஒரே வேளையில்) இருக்க முடியாது. ஜார்ஜ் முல்லர் அவர்கள், "பெருங்கவலையின் தொடக்கம் விசுவாசத்தின் முடிவாக உள்ளது: உண்மையான விசுவாசத்தின் தொடக்கம் பெருங்கவலையின் முடிவாக உள்ளது" என்று கூறினார்.[25]

விசுவாசத்தைக் கட்டுதல்

நாம் நமது விசுவாசத்தை இரு முதன்மை வழிகளில் அதிகப்படுத்த முடியும். முதலாவதாக நாம் தேவனுடைய *வசனத்தைக்* கொண்டு, நமது சிந்தைகளையும் இருதயங்களையும் தெவிட்டச் செய்ய வேண்டும். ரோமர் 10:17ல் பவுல், "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய

வசனத்தினாலே வரும்" என்று கூறினார். இரண்டாவதாக நாம், உலகத்தில் தேவனுடைய அருளிரக்கம் கொண்ட பராமரிப்பிற்கு நமது கண்களையும் இருதயங்களையும் திறக்க வேண்டும். இயேசு, "ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்" மற்றும் "காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்" என்று கூறினார் (மத்தேயு 6:26, 28). பூமி முழுவதிலும் தேவனுடைய பராமரிப்பைப் பாருங்கள் (மத்தேயு 5:45). பின்பு உங்களுக்குத் தேவன் பராமரிப்பை எவ்வாறு அருளியிருக்கிறார் என்று பாருங்கள் (காண்க ரோமர் 8:28).

மக்கள் கிறிஸ்தவர்களாவதற்குப் போதிய அளவு விசுவாசம் கொண்டிருக்கிறார்கள், ஆனால் அவர்கள் கவலைப்படுவதில் இருந்து தங்களை (விலக்கி) காத்துக்கொள்வதற்குப் போதிய அளவு விசுவாசம் கொண்டிருப்பதில்லை என்பது கவலைக்குரியதாக உள்ளது என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார். தேவன் நம் யாவருக்கும் உதவுவாராக!

முடிவுரை

நாம் ஏன் கவலைப்படாதிருக்க வேண்டும்? இந்தப் பாடத்திலும் இதற்கு முந்திய பாடத்திலும் நாம், பின்வரும் காரணங்களைப் பற்றியிழுத்தோம். நாம் கவலைப்படாதிருக்க வேண்டும், ஏனென்றால் கவலை என்பது,

தகுதியற்றதாகவும் சாக்குப்போக்குக் கூற இயலாததாகவும் உள்ளது,
சீர்பொருத்தமற்றதாக உள்ளது,
செயல்விளைவற்றதாகவும் தீங்கிழைப்பதாகவும் உள்ளது,
அவமானப்படுத்துதலாக உள்ளது,
சரியற்றதாக உள்ளது,
நடைமுறைச் சாத்தியமற்றதாக உள்ளது,
நம்பிக்கையின்மையாக உள்ளது.

மீண்டும் ஒருமுறை, இயேசுவின் தலைசிறந்த பிரசங்கமானது எனது பலவீனங்களை வெளிப்படுத்தியுள்ளது … நான் "பிறப்பில் இருந்தே கவலைப்படுபவனாக" இருக்கிறேன். நான் எனது நாளை, எனது வாரத்தை, எனது ஆண்டை, எனது வாழ்வைத் திட்டமிடுவதை விரும்புகிறேன். திட்டமிடுதலில் தவறு எதுவும் இல்லை; ஆனால் எனது திட்டங்களை ஏற்படுத்தியுள்ள நிலையில், அவற்றைப்பற்றி நான் கவலைப்படுகிறேன்: "இது நடக்குமா அல்லது அது நடக்குமா? நான் திட்டமிட்டபடி விஷயங்கள் நடக்காவிட்டால் என்ன செய்வது?" தேவனுடைய கரங்களில் விஷயங்களை விட்டுவிடுதலுடன் நான் போராடுகிறேன். நீண்ட காலத்திற்கு முன்னர், மனவேதனை அடைந்த தகப்பன் கதறியதுபோல் "விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்" என்று நான் கதறுகிறேன் (மாற்கு 9:24). எனக்காக ஜெபியுங்கள், மற்றும் நான் உங்களுக்காக ஜெபிப்பேன்.

குறிப்புகள்

[1]இன்றைக்கான சத்தியம் பத்திரிகை, பல்வேறு மொழிகளில், 140க்கும் அதிகமான நாடுகளில் உள்ள அந்தந்த நாட்டின் பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கு இலவசமாக

அனுப்பப்படுகிறது. [2]Harold Hazelip, *Discipleship,* The 20th Century Sermons Series (Abilene, Tex.: Biblical Research Press, 1977), 63. [3]*"நாடித்தேடுகிறார்கள்" (epizeteo) என்பது (epi, "நோக்கி" என்ற) முன்னிடைச் சொல்லினால் வலிவூட்டப்பட்ட, "நாடுகிறார்கள்" (zeteo, "நாடுகிறார்கள்") என்பதன் பலமான வடிவமாக உள்ளது.* [4]Adapted from R. T. France, *The Gospel According to Matthew,* Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Inter-Varsity Press, 1985), 141. [5]AB வேதாகமத்தில் இவ்விடத்தில் "heathen" என்றுள்ளது. [6]*நான் ஒரு சிறுபையனாக இருந்தபோது, "உன்னைக் கவனிக்கிறது" என்ற தலைப்புக் கொண்ட பாடலை நாங்கள் அடிக்கடி பாடுவோம், இதில் "உன்னை ஒரு கண் கவனித்துக் கொண்டுள்ளது" என்பது திரும்பத் திரும்ப வரும் பல்லவியாக இருந்தது.* [7]*"இராஜ்யம்" என்ற சொற்றொடருக்கு, 5:3, 19, 20; 6:10, 13 ஆகிய வசனங்களைக் காணவும். "நீதி" என்ற சொற்றொடருக்கு 5:6, 10, 20; 6:1 ஆகிய வசனங்களைக் காணவும.* [8]*"இவ்வாறு ஜெபியுங்கள்" என்ற பாடத்தில் "மாதிரி ஜெபம்" என்ற பகுதியில் பயன்படுத்தப்பட்டவகையில் "இராஜ்யம்" என்ற வார்த்தையின் மீதான கலந்துரையாடலில் காணுங்கள்.* [9]*இது கர்த்தருடைய சபையை உள்ளடக்குகிறது.* [10]Harold Fowler, *Matthew I,* Bible Study Textbook Series (Joplin, Mo.: College Press, 1968), 388.

[11]*இது நமது பகுதியில் எவ்வித முயற்சியும் இல்லாமலேயே கர்த்தர் நமது உலகப்பிரகாரமான தேவைகளை நிறைவேற்றுகிறார் என்று அர்த்தப்படுவதில்லை.* [12]*முன்னதாக மத்தேயு 6ல், செல்வம்* ("mammon"; KJV) *என்பது நபர்த்துவப்படுத்தப்பட்டது - இது ஒரு நபர் என்பது போன்று நடத்தப்பட்டது (வசனம் 24). 34ம் வசனத்தில் எதிர்காலம் ("நாளையதினம்") என்பது நபர்த்துவப்படுத்தப்பட்டுள்ளது.* [13]*"பாடு" (kakos) என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை "பொல்லாங்கு" என்று அர்த்தப்படுகிறது. 6:34ன் சந்தர்ப்பப் பொருளில் இது, நமக்கு மோசமானதாகக் காணப்படுகிறவற்றைக் குறிக்கிறது.* [14]Archibald Thomas Robertson, *Word Pictures in the New Testament,* vol. 1, (Nashville: Broadman Press, 1930), 59. [15]Quoted in William Barclay, *The Gospel of Matthew,* vol, 1 rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1975), 258. [16]Walter B. Knight, *Knight's Treasury of Illustrations* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans, 1963), 445. [17]Quoted in Maxie D. Dunnam, *The Communicator's Commentary: Galatians, Ephesians, Philippians, Colosssians, Philemon*, ed. Lloyd J. Ogilvie (Waco, Tex.: Word Books, 1982), 322. [18]*"ஒரு வேளையில் ஒருநாள்" என்று தலைப்பிடப்பட்ட பாடல் ஒரு விவரிப்பாகப் பயன்படுத்தப்படலாம்.* [19]Dale Carnegie, *How to Stop Worrying and Start Living* (New York: Simon and Schuster, 1948), 2. [20]Chris Stinnett, lesson presented at the Eastside church of Christ, Midwest City, Oklahoma, August 10, 2005.

[21]http://www.brainyquote.com/quotes/authors/a/abraham lincoln.html. [22]*உலகில் நான் வாழும் பகுதியில், "நம்பிக்கையின்மை"* (infidelity) *என்ற வார்த்தையானது, ஒருவர் அல்லது ஒருத்தி தமது துணைக்குப் பாலுறவு ரீதியில் நம்பிக்கைத் துரோகம் செய்தல் தொடர்பாகப் பிரதானமாய்ப் பயன்படுத்தப்படுகிறது. இவ்வார்த்தை "விசுவாசம் இல்லாமை" என்றே அடிப்படையில் அர்த்தப்படுகிறது.* [23]Fowler, 387. [24]Robert H. Mounce, *Matthew*, New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 61. [25]Knight, 445.

15

"தீர்ப்பிடாதிருங்கள்"

(மத்தேயு 7:1, 2)

மலைப்பிரசங்கம் பற்றிய நமது படிப்பில் நாம், மத்தேயு 7ம் அதிகாரத்திற்கு வந்திருக்கிறோம். இந்த அதிகாரம் பலவகைப் பாடக்கருத்துக்களைத் தொடுகிறது. இதன் விளைவாகச் சிலர், இந்த அதிகாரம் தொடர்பற்ற போதனைகளின் தொகுப்பாக உள்ளது என்று நினைக்கின்றனர். இருப்பினும், நெருங்கிக் கண்ணோக்குதலானது, இந்தக் கூறுகளில் பெரும்பான்மையானவை, இரு முதன்மை ஆய்வுக்கருத்துக்களுடன் தங்களைக் காத்துக்கொண்டிருப்பதைக் காண்பிக்கும். இவற்றில் முதலாவது, நாம் இவ்வுலகத்தில் வாழ்கையில் மற்றவர்களுடன் எவ்வாறு உறவுபடுகிறோம் என்பதைப் பற்றியதாகவும், இரண்டாவது, கர்த்தருக்குக் கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தைப் பற்றியதாகவும் உள்ளது.

மற்ற மக்களுடன் உறவுபடுதல் என்பது, கிறிஸ்தவ வாழ்வை வாழுதலில் நாம் யாவரும் எதிர்கொள்ளும் ஒரு அறைகூவலாக உள்ளது. இந்தப் பாடக்கருத்தைப் பற்றிப் பல புத்திமதிகளை, மலைப்பிரசங்கத்தில் நாம் ஏற்கனவே பெற்றுக்கொண்டுள்ளோம்: மற்றவர்களிடம் இரக்கம் காண்பித்தல் (5:7), சமாதானம் பண்ணுகிறவர்களாயிருத்தல் (5:9), நற்செல்வாக்குடன் இருத்தல் (5:13-16) மற்றும் சகோதரர் ஒருவருடன் கோபமாயிருத்தலுக்கு மாறாக அவரோடு ஒப்புரவாகுதல் (5:21-24). நம்மைத் துன்புறுத்த முயற்சி செய்பவர்களுடன் (அதாவது, நமது விரோதிகளுடன்) உறவுபடுதல் எவ்வாறு என்றுகூடக் கிறிஸ்து போதித்தார் (5:38-48). இப்போது 7:1-12ல் நாம், இந்த முக்கியமான தலைப்பிற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட ஒரு முழுப்பகுதியைக் கொண்டுள்ளோம்.

இவ்வசனங்களில் இருந்து ஆறு கொள்கைகள் - மற்ற மக்களுடன் இணக்கமாயிருப்பதற்கான ஆறு அத்தியாவசியத் தேவைகள் - தரவழைக்கப்படலாம். இவற்றில் முதலாவதை இந்தப் பாடத்தில் இரு வசனங்களில் மாத்திரம் நாம் எடுத்துரைத்து முடிப்போம். முதல் இரு வசனங்கள் தீர்ப்பிடுதல் மீதானதாக இருப்பதால், இந்த எடுத்துரைப்பை, நான், "தீர்ப்பிடாதிருங்கள்" என்று அழைக்கிறேன்.

இயேசு கட்டளையிட்டது என்ன (7:1அ)

நாம் மற்றவர்களுடன் இணக்கமாயிருக்க வேண்டும் என்றால், முதலில் நாம் தீர்ப்பிடுபவர்களாக இருத்தலை நிறுத்த வேண்டும் என்று இயேசு கூறினார். இவ்வசனப்பகுதி, "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" என்று தொடங்குகிறது. மூல வசனத்தில் பயன்படுத்தப்பட்ட வடிவமானது, அவரது உரையைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள், தீர்ப்பிடுபவர்களாக இருத்தலை நிறுத்துதல்

அவசியமாயிருந்தது என்று சுட்டிக்காண்பிக்கிறது.[1] வில்லியம் அவர்களின் மொழிபெயர்ப்பில், "மற்றவர்களை விமர்சித்தலை நிறுத்துங்கள்" என்றுள்ளது.[2]

உலகளாவிய தேவையைச் சந்தித்தல்

இது, மிகவும் நேர்மறையான பொன் விதியுடன் முடிகிற, உறவுமுறைகள் மீதான வசனப்பகுதியைத் தொடங்குவதற்கான எதிர்மறையான வழியாக இருப்பதாகக் காணப்படுகிறது. பல காரணங்களுக்காக இயேசு இதுபோன்று தொடங்கியிருக்கலாம். அவரது உரையைக் கேட்டவர்களுக்கு இந்தப் புத்திமதி தேவைப்பட்டது என்ற காரணத்தால், நியாயந்தீர்த்தல் பற்றிய எச்சரிக்கையுடன் அவர் தொடங்கியிருக்கலாம். இன்றைய நாட்களில் இதே புத்திமதி நமக்குத் தேவைப்படுகிறது. மத்தேயு 7:1ல் இயேசுவின் கட்டளையை மீறாமல் அனேகமாக, நம்மில் ஒவ்வொருவருக்கும் எந்த ஒரு இருபத்தி நான்கு மணி நேர கால வேளையும் கடந்து செல்வதில்லை என்றே கூறலாம். அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படியத் தவறுதல் என்பதைக் காட்டிலும் அதிகமாக, வேறு எதுவும் அவ்வளவு விரைவில் உறவுமுறை ஒன்றை அழிப்பதில்லை.

மோசமான செல்வாக்கை முன் அமைத்தல்

மீண்டுமாக, வேதபாரகர்களும் பரிசேயர்களும் இயேசுவின் சிந்தையில் இருந்து ஒருக்காலும் வெகுதொலைவில் இருந்ததில்லை[3] என்ற காரணத்தினால் இயேசு, நியாயந்தீர்த்தல் பற்றிய பாடத் தலைப்புடன் தொடங்கி இருக்கலாம். லூக்கா சுவிசேஷத்தின்படி, இயேசு எங்கு சென்றாலும் அவரை ஏற்கனவே அவர்கள் பின்தொடர்ந்து, அவரைக் குற்றப்படுத்தப் பயன்படுத்துவதற்காகச் சில தவறுகளைக் கண்டறிய முயற்சி செய்துகொண்டிருந்தனர் (காண்க லுக்கா 6:1-7). யோவான் சுவிசேஷத்தின்படி, (பரிசேயர்கள் உட்பட) அவரது விரோதிகள், அவரைக் கொல்வதற்கு ஏற்கனவே திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருந்தனர் (காண்க யோவான் 5:18).

வேதபாரகர்களும் பரிசேயர்களும், இயேசு பழித்துரைத்த வகையிலான நியாயந்தீர்த்தல் செய்த வகையில் குற்றப்பட்டிருந்தனர். அவர்கள் சமூகத்தின் பெரிய பிரிவுகளைக் கண்டனம் செய்திருந்தனர்: ஆயக்காரர்கள் (லூக்கா 18:9-14), சமாரியர்கள் மற்றும் புறஜாதியார். மற்றும் அவர்கள் மற்ற எல்லாரைக் காட்டிலும் தங்களை உயர்வானவர்களாகக் கண்ணோக்கினர். அவர்கள் மற்றவர்களைத் தாழ்வாகக் கண்ணோக்கி மற்றவர்கள் மீது சிறிதளவே இரக்க உணர்வு காண்பித்தனர். நாம் மற்றவர்களுடன் இணக்கமாக இருக்க விரும்பினால், நமது நீதியானது "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் … அதிகமாக" இருக்க வேண்டும் (மத்தேயு 5:20).

எதிர்மறை அம்சத்தை நீக்கிப்போடுதல்

உறவுமுறைகளில் நேர்மறையான அம்சத்தைப் பெறுவதற்கு முன்னர் அவற்றில் உள்ள எதிர்மறையான அம்சத்தை நீக்கிப்போட இயேசு விரும்பியதாலும்கூட அவர் இவ்வாறு தொடங்கி இருக்கலாம். நாம் மலர்ச்செடிகளை நடுவதற்கு முன்னர், சிலவேளைகளில் களைகளைப் பிடுங்கி எறிய வேண்டியுள்ளது. காரணம் எதுவாக இருந்தாலும், மற்றவர்களுடன் இணக்கமாயிருத்தல் பற்றிய கிறிஸ்துவின் கலந்துரையாடலை அவர் தொடங்கிய

இடம் இதுவாகவே உள்ளது: "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்."

இயேசு அர்த்தப்படுத்தாதது என்ன (7:1அ)

உலகசிந்தை கொண்டவர்களும் வேதாகமத்தை அறியாதவர்களும், வேதவசனங்களில் ஒருசிலவற்றை மாத்திரம் அறிந்துள்ளனர், அவற்றில் இதுவும் ஒன்றாக உள்ளது.[4] தேவபக்தியற்ற மக்கள் இதன் KJV சொற்றொடராக்கத்திற்கு விசேஷமாய்ப் பழக்கமாகியுள்ளனர்: "Judge not, that ye be not judged."

குற்றம் செய்தவர்கள் அல்லது குற்றம் செய்தவர்கள் மீது பரிவிரக்கம் உடையவர்களின் உதடுகளில் இருந்து இந்த வார்த்தைகளை நான் மிகவும் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறேன். "தீர்க்காதிருங்கள்" என்ற வார்த்தையை, எவரொருவரும் தவறானவர் என்று நாம் ஒருக்காலும் கூறக்கூடாது என்று அர்த்தப்படும் வகையில் இந்த மக்கள் விளக்கப்படுத்துவார்கள். மனந்திரும்பவும் தங்கள் வாழ்வை மாற்றிக்கொள்ளவும் மறுக்கிறவருக்கு, பாவிகளுக்காகக் காத்திருக்கிற பயங்கரமான விளைவுகளைப் பற்றிக் கிறிஸ்தவர்கள் எச்சரிக்கை வேண்டும் என்பதை அவர்கள் நம்புவதில்லை. இயேசு போதிக்க நோக்கங் கொண்டிருந்தது இதுதானா? மத்தேயு 7:1ல் "தீர்க்குதல்" என்ற வார்த்தை எதை *அர்த்தப்படுத்துகிறது* என்று குறிப்பிடுவதற்கு முன்னர், அது எதை அர்த்தப்படுத்துவதில்லை என்பதை முதலில் வலியுறுத்த என்னை அனுமதியுங்கள்.

இது குடிமைத் தீர்ப்புக்கு எதிரானதல்ல

வேதாகமம் தனக்குத்தானே முரண்படுவதில்லை என்பதால், இயேசுவின் வார்த்தைகள், நாம் குடிமைத் தீர்ப்புக்கு (அதாவது, நாட்டின் நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு) அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்துவதில்லை. நியாயந்தீர்க்கும் உரிமையை, தேவன் குடிமை அரசுகளுக்குக் கொடுத்தார் (காண்க 1 பேதுரு 2:13, 14, தீத்து 3:1; ரோமர் 13:1).

இது சபை ஒழுங்கு நடவடிக்கையை நீக்கிப்போடுவதில்லை

பின்வரும் பதிலுரையை நான் முன்னெதிர் நோக்குகிறேன்: "இவ்வசனப்பகுதி குடிமை நியாயத் தீர்ப்புகளைப் பற்றிக் குறிப்பிடுவதில்லை என்பது உண்மையே. இது ஒரு சபைக்குழுமமோ அல்லது அதன் மூப்பர்களோ அதன் [சபையின்] உறுப்பினர்களில் எவரையாவது, தவறு செய்திருப்பதாகக் கூறி, அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தலைக் கண்டனம் செய்கிறது!" சபையைச் சாராதவர்கள் மாத்திரமல்ல, ஆனால் சபை உறுப்பினர்களில் சிலருங்கூட இவ்வாறே உணருகின்றனர். ஒரு சபைக் குழுமத்தின் நடத்துனர் ஒருவர் என்னிடத்தில், "நான் ஊழியம் செய்கிற இடத்தில் நாங்கள் எவரொருவரிடம் இருந்தும் ஐக்கியத்தை விலக்கிக் கொள்வதில்லை. இயேசு, 'நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்' என்று கூறியிருக்கிறாரே" என்று கூறினார்.

வேதாகமம் தனக்குத்தானே முரண்படுவதில்லை என்று நான் மறுபடியும் கூறுகிறேன். விஷயம் இப்படி இருக்கையில், மத்தேயு 7:1 வசனமானது, நாம்

சபை ஒழுங்கு நடவடிக்கையை ஒருக்காலும் செயல்படுத்தக் கூடாது என்று போதிப்பதில்லை. "தீர்க்காதிருங்கள்" என்று கூறிய அதே இயேசு, சபை ஒழுங்கு நடவடிக்கையைச் செயல்படுத்தும்படியும் நமக்குப் போதித்தார் (மத்தேயு 18:15-17). அப்போஸ்தலர்களைச் சகலசத்தியத்திலும் வழிநடத்தும்படி பரிசுத்த ஆவியானவரை அவர் [இயேசு] அனுப்பியபோது (யோவான் 16:13), சபை ஒழுங்கு நடவடிக்கையின் அவசியம் பற்றிய வல்லமை நிறைந்த வசனப்பகுதிகளை எழுதும்படி அவர், பவுலையும் மற்றவர்களையும் ஏவினார் (1 கொரிந்தியர் 5:5, 9; 2 தெசலோனிக்கேயர் 3:6, 14, 15; தீத்து 3:9-11).

இது தனிப்பட்ட நியாயந்தீர்க்குதலைக் கண்டனம் செய்வதில்லை

பின்வருவது போன்ற இன்னொரு பதிலுரையையும் நான் முன்னெதிர் நோக்குகிறேன்: "ஒருவேளை இவ்வசனப் பகுதி, சபை ஒழுங்கு நடவடிக்கையைப் பற்றிப் பேசாதிருக்கலாம், ஆனால் இது குறைந்தபட்சமாக, தனிநபரான கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், யாரேனும் ஒருவர் ஒழுக்கரீதியாக அல்லது உபதேசரீதியாகத் தவறானவராக இருக்கிறார் என்று கூறும் உரிமை கொண்டிருப்பதில்லை என்று போதிக்கிறது." மீண்டும் ஒருமுறை நான், வேதாகமம் தனக்குத்தானே முரண்படுவதில்லை என்று வலியுறுத்துகிறேன். இது உண்மையாக இருக்கையில், மத்தேயு 7:1ம் வசனம், மற்ற மக்களைக் குறித்து நாம் ஒருக்காலும் நியாயந்தீர்க்கக்கூடாது என்று போதிப்பதில்லை. மத்தேயு 7:3-12 வசனப்பகுதியின் மீதான பாடத்தில் நாம், "பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துகளைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள்; ..." என்று கூறும் 6ம் வசனத்தைப் பற்றிப் படிப்போம். "நாய்கள்" யார் மற்றும் "பன்றிகள்" யார் என்று நியாயந்தீர்க்காமல் நாம் அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிய இயலாது. பிந்திய ஒரு பாடத்தில் நாம், கள்ளத்தீர்க்கதரிசிகளின் உழைப்பின் "கனிகளினால்" நாம் அவர்களை அறிந்துகொள்ள முடியும் என்று கூறி, கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எதிரான எச்சரிக்கை செய்கிற மத்தேயு 7:15-20 வசனங்களைப் படிப்போம்: "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" (வசனம் 16அ). (கடந்த காலத்தில் பிரசங்கியார்கள், "நாம் நியாயாதிபதிகள் அல்ல; நாம் கனிகளை ஆய்வு செய்பவர்கள்" என்று அடிக்கடி கூறியுள்ளனர்.) மற்றவர்களைப் பற்றி முடிவு செய்யும்படி நாம் அடிக்கடி கேட்டுக்கொள்ளப்படுவதை இன்னும் பல வசனங்கள் சுட்டிக்காண்பிக்கின்றன (ரோமர் 16:17; கலாத்தியர் 1:8, 9; பிலிப்பியர் 3:2; 1 யோவான் 4:1).

இயேசு அர்த்தப்படுத்தியது என்ன (7:1அ)

"நமது வேதவசனப் பகுதியில் 'நியாயந்தீர்த்தல்' என்ற வார்த்தை எதை அர்த்தப்படுத்துகிறது?" என்ற கேள்விக்கு நாம் இன்னமும் பதில் அளித்தல் அவசியமாக உள்ளது. "நியாயந்தீர்த்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*krino* என்ற) கிரேக்க வார்த்தையில் இருந்தே நாம், "criticize" என்ற ஆங்கில வார்த்தையைப் பெறுகிறோம். பொதுவாக நாம், "criticize" என்ற வார்த்தையை - மற்றொருவரிடம் உள்ள பிழைகளைச் சுட்டிக்காண்பித்தல் என்ற - எதிர்மறைக் கருத்திலேயே நினைத்துப் பார்க்கிறோம், ஆனால் "criticize" என்ற வார்த்தை தொடக்கத்தில் "மதிப்பீடு செய்ய" என்று அர்த்தப்பட்டது. அந்த

மதிப்பீடு செய்தல் எதிர்மறையானதாகவோ அல்லது நேர்மறையானதாகவோ இருக்கக்கூடும்; அது மோசமானதாக அல்லது நல்லதாக இருக்கக் கூடும்; அது அழிக்கக்கூடியதாக அல்லது கட்டியெழுப்பக்கூடியதாக இருக்கக் கூடும். இயேசுவேகூட, தமது உரையைக் கேட்ட ஒரு குழுவினரிடம் "நீதியின்படி தீர்ப்புசெய்யுங்கள்" என்று கூறினார் (யோவான் 7:24ஆ).

மத்தேயு 7:1ம் வசனம், மற்றவர்களைப் பற்றி தீர்ப்புக்கூறுதலுக்கு எதிராக, எல்லாவற்றையும் உள்ளடக்கிய கட்டளையாக இருப்பதில்லை. ஆதாரத்தை எடைபோட, மதிப்பீடு செய்ய மற்றும் தீர்ப்பு செய்யத் திறமையைத் தேவன் நமக்குக் கொடுத்துள்ளார். இருப்பினும் இயேசுவின் வார்த்தைகள், நாம் தவிர்க்க வேண்டிய குறிப்பிட்ட வகையிலான *தீர்ப்பிடுதல் உள்ளது என்று போதிக்கின்றன. இயேசு கண்டனம் செய்கிற வகையிலான தீர்ப்பிடுதலின் பல அம்சங்களை நான் ஆலோசனையாகத் தெரிவிக்க என்னை அனுமதியுங்கள்.*

ஒருதலைப் பட்சமான தீர்ப்பு

நமது பின்னணி, தவறான அபிப்பிராயம் மற்றும் முன்னுரிமைகள் ஆகியவற்றை நமது தீர்ப்புகள் மீது செயல்விளைவு ஏற்படுத்த அனுமதித்தல் என்பது பொதுவான குறையாக உள்ளது. இதைத் தவிர்ப்பது கடினமாக இருக்கிறது. சிலவேளைகளில், பழங்காலக் கிரேக்கர்கள், உண்மைகளினால் மட்டுமே சாய்க்கப்படும்படிக்கு, முக்கியமான விசாரணைகளை இருளில் நடத்தினர் என்று நான் வாசித்திருக்கிறேன். தாழ்வான சுய மதிப்பீட்டினால் துன்புறுவதாலேயே பலர் தீர்ப்புச் செய்கிறவர்களாக உள்ளனர் என்று சமூகவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஒருவர் தம்மைக் குறித்துத் தாழ்ந்த கருத்துக் கொண்டிருக்கும்போது, ஒன்று அவர் தம்மை உயர்த்தக்கூடும் அல்லது அவர் மற்றவர்களைக் கீழே தாழ்த்தக்கூடும். மற்றவர்களைக் கீழே இழுத்துப்போடுதல் மிகசுலபமாக இருப்பதாகப் பலர் கண்டறிகின்றனர்.

சீரற்றவகையிலான தீர்ப்பு

நாம் அடிக்கடி, எல்லா உண்மைகளையும் பெற்றுக்கொள்ளாத நிலையில் அல்லது எல்லாச் சூழ்நிலைகளையும் அறிந்திராத சூழ்நிலையில் அவசரமாகத் தீர்ப்பிடுகிறோம். நம்மில் சிலர், அரைகுறையான சூழ்நிலையின் அரை டஜன் செங்கற்களை எடுத்துக்கொண்டு, குற்றச்சாட்டின் உயர்ந்த சுவர் ஒன்றைக் கட்டியெழுப்பக் கூடியவர்களாக இருக்கிறோம். உண்மையில் என்ன நடந்தது என்பதை நாம் அடிக்கடி அறிவதில்லை. குற்றம்சாட்டப்பட்டவரின் பின்னணி அல்லது நோக்கம் பற்றிய உண்மையை நாம் அறிவதில்லை. குற்றம்சாட்டப்பட்டவரின் வாழ்வில் இது விதியாக இருந்ததா அல்லது விதி விலக்காக இருந்ததா என்பதைப் பற்றிய எல்லா உண்மைகளையும் நாம் கொண்டிருப்பது இல்லை. திரளான கூட்டத்தாரிடம் இயேசு, "நீதியின்படி தீர்ப்புசெய்யுங்கள்" என்று கூறினார்; ஆனால் முதலில் அவர், "தோற்றத்தின்படி தீர்ப்புசெய்யாமல்" என்று கூறினார் (யோவான் 7:24).

சாத்தியமற்ற வகையிலான தீர்ப்பு

நாம் மற்றவர்களைத் தீர்ப்பிடுகையில் அடிக்கடி, நோக்கங்கள் பற்றித் தீர்ப்பிடுகிறோம். நாம், "மனுஷருள்ளத்திலிருப்பதை ... அறிந்திருந்த" (யோவான்

2:25) இயேசுவாக இருப்பதில்லை என்பதால், இன்னொரு நபரின் நோக்கங்களைப் பற்றி நாம் உறுதியாக எதையும் கூறுவதற்கு வழியெதுவும் இல்லை. நாம் "அவர் இதைச் செய்தார் அல்லது அதைச் செய்தார்" என்று கூறமுடியும்; ஆனால் நாம், "அவர் இதை அல்லது அதைச் செய்தார், *ஏனென்றால் ...*" என்று உறுதியுடன் கூற முடியாது. பவுல், "மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான் (அறிதல் அல்லது புரிந்துகொள்ளுதல்)?" என்று கேட்டார் (1 கொரிந்தியர் 2:11அ). இருந்தபோதிலும் பின்வருபவை போன்ற வார்த்தைகளை நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம்: "அவள் தன்னை அதிபுத்திசாலி என்று நினைத்துக் கொள்கிறாள்!"; "அவர் உண்மையிலேயே தம்மை ஒரு பெரிய மனிதராக நினைத்துக் கொள்கிறார்!"[5] மற்றவர்களின் நோக்கங்களைப் பற்றி நம்மில் ஒவ்வொருவரும் எவ்வளவு அடிக்கடி தீர்ப்புச் செய்கிறோம்!

பரிவிரக்கமற்ற தீர்ப்பு

மக்கள் என்ன செய்கின்றனர் என்பதன் மீது சாத்தியமான வகையில் மிகமோசமான (வார்த்தை) கட்டமைப்பை இடுதலையும் இயேசு கண்டனம் செய்தார். அதற்குப்பதிலாக நாம், அவற்றை நம்மால் இயன்ற அளவுக்கு மிகச்சிறப்பான வகையில் கண்ணோக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். ஜேம்ஸ் மொஃபாட் அவர்களின் வேதாகம மொழிபெயர்ப்பில், 1 கொரிந்தியர் 13:7ம் வசனமானது, "அன்பு எப்போதுமே மிகச்சிறந்ததை நம்பப் பேரார்வம் உடையதாக உள்ளது" என்று உள்ளது. ஒருநபர் செய்யும் விஷயங்களில் இருந்து நாம், அவரைப்பற்றி அதிகமாக அறிய முடியும் என்பது உண்மையே, ஆனால் சிலவேளைகளில் அவரது செயல்பாடுகள் குறைந்தபட்சம், மாறுபட்ட இரு விளக்கங்களைத் தரக்கூடியவையாக உள்ளன: ஒன்று நல்லது மற்றும் ஒன்று மோசமானது. விஷயம் இவ்வாறு இருக்கும்போது, அவர் செய்துள்ளது பற்றிய எந்த விளக்கத்தை நாம் ஏற்றுக்கொள்கிறோம்?

கடுமையான தீர்ப்பு

மேலே பட்டியலிடப்பட்ட, தீர்ப்பிடுதல் பற்றிய எதிர்மறையான அணுகுமுறைகளின் விளைவாக, சிலவேளைகளில் நாம் நமது தீர்ப்பிடுதலில் கடுமையாக, கசப்பாக மற்றும் மாய்மாலமாக இருக்கிறோம். அதற்குப்பதிலாக நாம் நமது தீர்ப்பிடுதலை, இரக்கத்தினாலும் அன்பினாலும் சரியாக்க வேண்டும். பேதுரு, "எல்லாவற்றிகும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்" (1 பேதுரு 4:8) என்று கூறினார். மற்றவர்களுடன் இணக்கமாக இருத்தல் என்பது பெரிதும் ஆவிக்குரியதாக உள்ளது: ஒரு புறத்தில், (பிறரை) மேலே உயர்த்தவும் உதவிசெய்யவும் மிகச்சிறந்ததை நம்பி முயற்சி செய்கிற பரிவிரக்கமுள்ள அன்புகூருகிற ஆவி உள்ளது. இன்னொரு புறத்தில், யாரேனும் ஒருவர் "தமது செய்கைக்குத் தக்க பலனை அடைதலை" காண்பதில் மகிழ்வடைகிற, கடுமையான, பரிவிரக்கமற்ற, தீர்ப்பிடுகிற ஆவி உள்ளது.

இயேசு வாக்குத்தத்தம் செய்தது என்ன (7:1ஆ, 2)

இரக்கத்திற்கான தேவை

இயேசு, "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு" (வசனம் 1அ) என்று கூறியபின்பு, அவர் "மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" (வசனம் 1ஆ) என்றும் கூடுதலாகக் கூறினார். பின்பு அவர் அந்தச் சிந்தனையை 2ம் வசனத்தில் விரித்துரைத்தார்: "ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்." இது பூமியின்மீதே கூட ஓரளவிற்கு உண்மையானதாகவே உள்ளது. வாழ்வு என்பது கண்ணாடியைப் போன்றது. நாம் மற்றவர்களை எவ்வாறு நடத்துகிறோமோ அவ்வாறே நாமும் அடிக்கடி நடத்தப்படுகிறோம். இது, லூக்கா சுவிசேஷ விபரத்தில் பிரசங்கத்தின் இப்பகுதியின் வலியுறுத்தமாக இருக்கலாம்:

> மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்; அப்பொழுது நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர்கள்; மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாகும்படி தீர்க்காதிருங்கள், அப்பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள்; விடுதலைபண்ணுங்கள், அப்பொழுது நீங்களும் விடுதலைபண்ணப்படுவீர்கள். கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்[6] (லூக்கா 6:37, 38).

லூக்கா 6:37ஆ வசனப் பகுதியில், LB பொழிப்புரை வேதாகமத்தில், "மற்றவர்களை மென்மையாக நடத்துங்கள்; அப்போது அவர்களும் உங்களுக்கு அதையே செய்வார்கள்" என்றுள்ளது.

இருப்பினும் சந்தர்ப்பப்பொருளில் இயேசு, *தேவனுடைய* நியாயத்தீர்ப்பைப் பற்றி விசேஷமாகக் குறிப்பிட்டார். விரைவிலேயோ அல்லது தாமதமாகவோ, நாம் விதைத்ததை அறுக்கிறோம் என்பது இந்த அண்டத்தின் கட்டுமானத்தில் நெய்யப்பட்ட கொள்கையாக உள்ளது (கலாத்தியர் 6:7). ஆமான் மொர்தெகாய்க்குத் தயார்செய்து வைத்திருந்த தூக்குமரத்திலேயே தூக்கில் இடப்பட்டான் (எஸ்தர் 7:10). பிரசங்கி 10:8அ வசனம், "படுகுழியை வெட்டுகிறவன் அதிலே விழுவான்" என்று கூறுகிறது. குறிப்பாக மத்தேயு 7:1, 2ம் வசனங்கள் தேவனுடைய *நித்திய* நியாயத்தீர்ப்புக்கு நடைமுறைப்படுபவையாக உள்ளன (காண்க 7:21-27). ஒரு நாளில் நாம் ஒவ்வொருவரும் கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டு, "தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிக்க" வேண்டும் (ரோமர் 14:12). முடிவில் இந்த நியாயத்தீர்ப்பே பொருட்படுத்தப்பட வேண்டியதாக உள்ளது.

நீங்கள் பெரிய வெள்ளைச் சிங்காசனத்திற்கு முன்பாக நின்று (வெளிப்படுத்தின விசேஷம் 20:11), நீங்கள் பிறரைத் தீர்ப்பிட்டபடியே தீர்ப்பிடப்படுவதாக, நீங்கள் மற்றவர்களை அளந்த அளவையின்படியே நீங்களும் அளக்கப்படுவதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். நீங்கள் இவ்வகையில் நியாயந்தீர்க்கப்பட்டால், நீங்கள் வலதுபுறம் செல்வீர்களா அல்லது

இடதுபுறம் செல்வீர்களா (மத்தேயு 25:31-33)? யாக்கோபு நிருபத்தில் உள்ள இரக்கத்தை உறைய வைக்கும் பின்வரும் வார்த்தைகளை ஆழ்ந்து சிந்தியுங்கள்: "ஏனென்றால், இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்" (யாக்கோபு 2:13அ).

பொது அறிவு உணர்வின் அவசியம்

ஒருவேளை நான், மத்தேயு 7:1-12ல் காணப்படுகிற புத்திகூறுதல்கள் குறித்துச் சற்றே பொது அறிவு உணர்வு பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறுவதற்காகச் சற்றே தாமதிக்க வேண்டியுள்ளது எனலாம். நாம் எந்த அளவிற்குத் தீர்ப்பிடுபவர்களாக இருந்தோம் என்பதே தெய்வீக நியாயத்தீர்ப்பின் ஒரே ஒரு காரணியாக இருக்கும் என்று 1 மற்றும் 2ம் வசனங்களில் இயேசு கூறவில்லை. ஒருவர் எவ்வாறு வாழ்ந்தாலும், ஒவ்வொருவரும் சரியானவர்களாகவே இருக்கிறார் என்று நாம் நினைத்தால், நாம் ஆவிக்குரிய வகையில் சரியானவர்களாகவே இருக்கிறோம் என்று தேவனும் கூறுவார் என்று அவர் [இயேசு] போதிக்கவில்லை. மலைப்பிரசங்கத்தில் எஞ்சியுள்ள பகுதி மாத்திரமே நாம் கொண்டிருக்கும் எல்லாமுமாக இருந்தாலும், 7:1, 2ஐக் குறித்த அப்படிப்பட்டதொரு விளக்கம் உண்மையற்றதாக இருக்கும் என்பதை நாம் உய்த்துணர்வோம். இந்தப் பிரசங்கத்தின் முடிவில் இயேசு, தாம் கூறியவற்றை கேட்டு அவற்றைச் செய்கிறவர், கன்மலையின்மீது தமது வீட்டைக் கட்டிய புத்தியுள்ள மனிதர் போல் இருக்கிறார் என்று கூறினார் (7:24, 25).

தாழ்மையின் அவசியம்

இயேசு எதை வலியுறுத்திக் கொண்டிருந்தார்? மற்ற முக்கியமான கொள்கைகளுக்கு மத்தியில், இது ஒன்றாக உள்ளது: நாம் தொடர்ந்து நியாயத்தீர்ப்புகளைச் செய்ய வேண்டி இருந்தாலும், நாம் தேவனாக இருப்பதில்லை. இதே சத்தியத்தைப் பவுலும் வலியுறுத்தினார்:

> மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்? அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்திரவாதி ... (ரோமர் 14:4).

> ... நான் உங்களாலேயாவது ... தீர்ப்பைப் பெறுவது எனக்கு மிகவும் அற்ப காரியமாயிருக்கிறது; நானும் என்னைக்குறித்துத் தீர்ப்புச் சொல்லுகிறதில்லை. ... என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே. ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்குமுன்னே யாதொன்றைக்குறித்தும் தீர்ப்புச்சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும் (1 கொரிந்தியர் 4:3-5).

இதை, ஜான் R. W. ஸ்டாட் அவர்கள் பின்வருமாறு எழுதினார்: "நாம் (மிருகங்களிடம் இருந்து நம்மைத் தனித்துவப்படுத்திக் காண்பிக்க உதவும் நமது திறனாய்வுச் சக்திகளை நீக்கிப்போடுதவன் மூலம்) மனிதர்களாக இருப்பதை விட்டொழிக்கும்படி இயேசு நமக்குக் கூறவில்லை. ஆனால் (நியாயாதிபதிகளாக நம்மை நாமே அமைத்துக்கொள்வதன் மூலம்) தேவனாக இருத்தலுக்கான

தவறான யூகம் கொண்ட பேராவலைத் துறந்துவிடும்படி அவர் நமக்குக் கூறுகிறார்."[7] நாம் தேவனாக இருப்பதில்லை என்பதால், நமது நியாயத்தீர்ப்புகள் யாவும் தவறானவையாக இருக்கும் என்பது நிச்சயம். மற்றவர்களுடனான நமது உறவுகளில் நாம், நிறைவில் தேவனுக்கு முன்பாக நாமும் அவர்களும் நிற்போம் என்பதையும், தேவனே நிறைவு நியாயத்தீர்ப்பை ஏற்படுத்துவார் என்பதையும் சிந்தையில் கொள்வது அவசியம். ஆகவே மற்றவர்களுடனான நமது உறவுகளில் நாம், இரக்கம் நிறைந்தவர்களாக, தயவுள்ளவர்களாக மற்றும் பொறுமையுள்ளவர்களாக இருப்போமாக.

முடிவுரை

மத்தேயு 7:1-12ல் இயேசு முதலில், மக்களுடன் நாம் இணக்கமாக இருக்க விரும்பினால், தீர்ப்பிடுபவர்களாக இருப்பதை நாம் நிறுத்த வேண்டும் என்று அறிவிக்கிறார். மத்தேயு 7:3-12ன் மீதான பாடத்தில் நாம், நமது வேதபாட வசனப் பகுதியில் இருந்து ஐந்து கூடுதல் ஆலோசனைகளைத் தரவழைப்போம். நாம் மற்றவர்களுடன் இணக்கமாக இருக்க விரும்பினால் ...

- *நமது சொந்த வாழ்வில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்துவதில் நமது முதல் அக்கறை இருக்க வேண்டும் (வசனங்கள் 3-5).*
- *மற்றவர்களுக்கு உதவுவதற்காக நமது முயற்சிகள், தாழ்மை மற்றும் கூருணர்வு ஆகியவற்றினால் பண்புபடுத்தப்பட வேண்டும் (வசனம் 5).*
- *ஒவ்வொருவரும் வேறுபட்டவர்கள் என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும் - மற்றும் நாம் அந்த சிரமத்தைக் கையாள்வது எவ்வாறு என்பதைக் கற்றுக்கொள்ளவும் முயற்சி செய்ய வேண்டும் (வசனம் 6).*
- *நாம் தேவனைச் சார்ந்திருக்க வேண்டும் (வசனங்கள் 7-11).*
- *நாம் பொன்விதியின்படி வாழ வேண்டும் (வசனம் 12).*

மற்றவர்களுடனான நமது உறவைப்பற்றி நாம் கலந்துரையாடியுள்ளோம். தேவனுடனான நமது உறவைப் பற்றிய ஒருசில வார்த்தைகளுடன் இந்தப் பாடத்தை முடிக்க என்னை அனுமதியுங்கள். இயேசுவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுபவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் (மாற்கு 16:16), மரணபரியந்தம் உண்மையாயிருப்பவர்கள் ஜீவகிரீடத்தைப் பெறுவார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 2:10) என்று இயேசு கூறினார். அவரது ஏவுதல் பெற்ற அப்போஸ்தலர் மூலமாக அவர், பாவம் செய்கிற கிறிஸ்தவர்கள் மன்னிக்கப்பட வேண்டும் என்றால், அவர்கள் மனந்திரும்பி ஜெபிக்க வேண்டும் என்று கூறினார் (நடபடிகள் 8:22). இவைகள் எனது தீர்ப்புகள் அல்ல; இது தேவனுடைய வசனத்தின் தெளிவான போதனையாக உள்ளது. இந்த போதனைகளை நீங்கள் ஏற்றுக்கொள்ளுதல் அல்லது புறக்கணித்தல் - என்பது நீங்கள் உங்கள் நித்தியத்தை எங்கு செலவிடுவீர்கள் என்பதைத் தீர்மானிக்கும் (மத்தேயு 7:21-23, 24-27). நீங்கள் ஒரு கிறிஸ்தவராவது தேவையென்றால் அல்லது மீளக்கட்டுவிக்கப்படுதல் தேவையென்றால், தயவு செய்து அதை உடனே செய்யுங்கள்.

குறிப்புகள்

[1]"தீர்ப்பிடுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை நிகழ்காலத்தில் உள்ளது,

இது தொடர்ந்து நடைபெறும் செயலைக் குறிக்கிறது. [2]Charles B, Williams, *The New Testament: A Translation in the Language of the People* (Chicago: Moody Press, 1949), 23. [3]மலைப்பிரசங்கம் மீதான நமது படிப்புகளில் நாம், வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்கள் பற்றிய இயேசுவின் நேரடியான மற்றும் மறைமுகமான குறிப்புகள் சிலவற்றை ஏற்கனவே கண்டுள்ளோம். [4]அமெரிக்காவில் இது உண்மையாக உள்ளது. நீங்கள் வாழும் இடத்திற்கேற்ப இதை மறுபொழிப்புரை செய்துகொள்ளுங்கள். [5]உங்கள் உரையைக் கேட்பவர்கள் அடையாளம் காணக்கூடிய தீர்ப்பிடுதலின் சொல்விளக்கங்களைப் பயன்படுத்துங்கள். [6]லூக்கா 6:38ம் வசனம், கொடுத்தலின் ஆசீர்வாதம் மீதான மாபெரும் வசனப்பகுதியாக உள்ளது. கொடுத்தல் பற்றிப் பொதுவான நடைமுறைப் பயன்பாடு ஏற்படுத்தப்பட முடியும், ஆனால் சந்தர்ப்பப்பொருளில் இது விசேஷமாக, இரக்கம் "கொடுப்பவர்" இரக்கம் "பெறுவார்" என்ற உண்மைக்குக் குறிப்பைக் கொண்டுள்ளது. [7]John R. W. Stott, *The Message of the Sermon on the Mount* (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1978), 177.

16

மற்றவர்களுடன் இணக்கமாக இருத்தல்

(மத்தேயு 7:3-12)

"தீர்ப்பிடாதிருங்கள்" என்ற பாடத்தைக் கொண்டு நாம், (பிற கொள்கைகளுடன் கூட) மற்றவர்களுடன் இணக்கமாயிருப்பது எப்படி என்று போதிக்கும் ஒரு வசனப் பகுதியான மத்தேயு 7:1-12ன் படிப்பு ஒன்றைத் துவங்கினோம். உறவு முறைகளைப் பொறுத்த மட்டில் ஆறு ஆலோசனைகளை நமது வேதபாட வசனப்பகுதியில் இருந்து எடுக்கலாம் என்று நான் வாக்களித்திருந்தேன். அவற்றில் முதலாவது ஆலோசனை பின்வருமாறு இருந்தது: நாம் தீர்ப்பிடுபவர்களாக இருப்பதை நிறுத்த வேண்டும். அந்தக் கொள்கையின் தொடர்பாக இயேசு குறைந்த பட்சம் பின்வரும் ஐந்து நடைமுறைகள் பின்பற்றப் படுவதை ஊக்கம் இழக்கச் செய்தார் என்று நான் முன்மொழிந்தேன்:

- *நமது பின்னணிகள், முன் தப்பெண்ணங்கள் மற்றும் முன்னுரிமைகள் ஆகியவை நமது தீர்ப்பின் மீது செயல்விளைவு ஏற்படுத்த அனுமதித்தல்.*
- *எல்லா உண்மைகளையுமோ அல்லது எல்லா சூழ்நிலைகளையுமோ அறிய முயற்சி செய்யாமல் அவசரமாகத் தீர்ப்பிடுதல்.*
- *இன்னொருவரின் நோக்கங்கள் குறித்துத் தீர்ப்பிடுதல்.*
- *மக்கள் செய்பவற்றின் மீது, மிகச்சிறந்த என்பதற்கு மாறாக மிக மோசமான சாத்தியக்கூறுள்ள கட்டுமானத்தை (விளக்கத்தை) வைத்தல்.*
- *நமது தீர்ப்புகளில் - இரக்கம் மற்றும் அன்பு ஆகியவற்றினால் நமது தீர்ப்பிடுதல்களை இதப்படுத்துவதற்குப் பதிலாக - கடுமையாக, கசப்பாக மற்றும் மாய்மாலாக இருத்தல்.*

இவைகள் உலகளாவிய தவறுகளாக உள்ளன. நீங்கள் அனேகமாக, இவை ஒவ்வொன்றினாலும் குற்றப்பட்டுள்ள யாரையேனும் ஒருவரை சந்தித்திருப்பீர்கள், இல்லையா?

அந்தக் கேள்வியைக் கேட்ட நிலையில், நான் மன்னிப்புக் கோர அனுமதியுங்கள். அது ஒரு சூழ்ச்சியான கேள்வியாக உள்ளது. யாரேனும் ஒருவர் உங்கள் சிந்தைக்கு வந்தார்கள் என்றால், நீங்கள் அந்தத் தனிநபரைத் தீர்ப்பிட்டுள்ளீர்கள் என்று அர்த்தமாகிறது. குறைந்தபட்சமாக நான் அனேகமாக, மத்தேயு 7:1, 2ஐ நடைமுறைப்படுத்தியதால், வேறு யாரையாவது என்பதற்கு மாறாக உங்களைக் குற்றம் உள்ளவர்களாக இருப்பதற்கு வழிநடத்தியுள்ளேன் என்றாகிறது. மற்றவர்களுடன் இணக்கமாயிருத்தல் என்பதன் மீதான

இரண்டாவது கொள்கையை அறிமுகப்படுத்துவதற்காக நான் இதை வேண்டுமென்றே செய்தேன்.

தேவையான மாற்றங்களைச் செய்யுங்கள் (7:3-5)

நாம் மற்றவர்களுடன் இணக்கமாக இருக்க விரும்பினால், முதலில் நாம் நமது சொந்த வாழ்வில் தேவையான மாற்றங்கள் ஏற்படுத்துபவர்களாக இருத்தல் பற்றி நாம் அக்கறை கொண்டிருக்க வேண்டும். மாற்றத்திற்கான தேவை வருகிறபோது நாம் பொதுவாக, நம்மைக் கண்ணோக்குவதற்குப் பதிலாகப் பிறரைக் கண்ணோக்குவதையே விரும்பித் தேர்ந்து கொள்கிறோம். இதை இயேசு புரிந்து கொண்டிருந்தார். அவர் பின்வருமாறு கூறினார்:

> நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை[1] உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப்[2] பார்க்கிறதென்ன? இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல் வதெப்படி? மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு: பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய். (வசனங்கள் 3-5).

இவ்வசனப் பகுதி, நகைச்சுவைத் தொடுகையொன்றைக் கொண்டுள்ளது. தனது கண்ணில் இருந்து ஒரு உத்திரம் நீட்டிக் கொண்டிருப்பதால், இன்னொருவனின் கண்ணில் இருக்கும் துரும்பைக் காணக்கூடியவனாக இருப்பதற்காகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளப் போராடும் ஒரு மனிதனை, கற்பனை செய்து பாருங்கள். (அந்த உத்திரமானது இங்கும் அங்குமாக ஊசலாடுவதையும் அருகில் இருப்பவர்கள் அது தங்கள் தலையில் மோதி விடாதபடிக்குத் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டி இருப்பதையும் உங்களால் சித்தரிக்க முடிகிறதா?) நாம் தீர்ப்பிடுகிறவர்களின் நிலையைக் காட்டிலும் மிக மோசமான நிலையில் நாம் இருக்கும்போது, [அவர்களை விசாரிக்கும்] நீதிபதிகளாக நாம் செயல்படுதல் என்பது கேலிக்கூத்தாக உள்ளது என்பதை நாம் அறிய வேண்டும் என்று இயேசு விரும்பினார்.[3]

வேதபாரகர் மற்றும் பரிசேயர் ஆகியோரின் மாய்மாலத் தன்மையைக் கிறிஸ்து தமது சிந்தையில் கொண்டிருந்து இருக்கலாம், ஆனால் இவ்வசனப் பகுதியின் சத்தியம் நம் எல்லாரையும் குற்றம் உணர்த்துகிறது. நமது சொந்தத் தவறுகளைக் காணாது விட்டு, மற்றவர்களின் தவறுகளைக் காணுதல் என்பது எவ்வளவு சுலபமாக உள்ளது! 2 சாமுவேல் புத்தகத்தில் தாவீது அரசரின் வரலாற்றைப் பற்றி நினைத்துப் பாருங்கள். அவர் பத்சேபாளுடன் விபசாரம் செய்து பின்பு பத்சேபாளின் கணவரைக் கொலை செய்வித்திருந்தார் (11:1-17). நாத்தான் தாவீதினிடம் சென்று, ஏழை மனிதனின் ஆட்டுக்குட்டியைக் கொன்ற பணக்கார மனிதனைப் பற்றிய கதை ஒன்றைக் கூறியபோது, அந்தக் குற்றம் செய்தவனை "தூக்கிலிட"[4] தாவீது விரும்பினார் (12:1-6). இருப்பினும் நாத்தான், "நீயே அந்த மனுஷன்!" என்று கூறியபோது (12:7அ), தூக்கில் தொங்குவதற்குப் பதிலாகத் தாவீது ஒரு ஜெபக் கூட்டத்திற்குத் தயாராக இருந்தார் (12:13; சங்கீதம் 51; 32). மற்றவர்களுடன் இணக்கமான இருத்தலைப் பொறுத்து, நாம் ஏற்படுத்த அவசியமான மாற்றங்கள் என்ன என்பதைக் காண்பதற்கு முதலில் நம்மையே

நாம் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்.

மத்தேயு 7:3ம் வசனம், கிறிஸ்துவினால் கண்டனம் பண்ணப்பட்ட இன்னொரு விஷயத்தையும் தீர்ப்பிடுதலின் பட்டியலில் கூட்ட முடிகிறது. "பார்க்கிறது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*blepo,* என்ற) கிரேக்க வார்த்தையானது, "காணுதல்" என்பதற்கான வழக்கமான வார்த்தையைக் காட்டிலும் அதிக விரிவான அர்த்தத்தைக் கொண்டதாகவும் "அதிக விருப்பநோக்குள்ள, உண்மையான புரிந்து கொள்ளுதலை" விவரிப்பதாகவும் உள்ளது.[5] இது, கூர்ந்தாய்வுசெய்ய, நெருக்கமாகப் பரிசீலனை செய்ய என்று அர்த்தப்படுகிறது. துரும்பு என்பது காண்பதற்கு எளிதானதல்ல. யாரேனும் ஒருவர் உங்களிடத்தில், "என் கண்ணில் ஒரு துரும்பு உள்ளது" என்று கூறும்போது, வெளிச்சம் மிகச்சரியாக இல்லாத நிலையில் மற்றும் நீங்கள் அவருக்கு மிகவும் நெருங்கி இராத வரையில் அனேகமாக அதை உங்களால் காண இயலாது. ஆகவே நாம், இந்த மிகத்தொலைவான மேலாதிக்கம் கொண்ட பண்பை, மோசமான தீர்ப்பிடும் வழக்கத்தின் பட்டியலில் சேர்த்துக் கொள்ள முடிகிறது: *மக்களிடம் உள்ள மிகச்சிறந்தவற்றைப் பார்ப்பதற்குப் பதிலாக, அவர்களிடம் உள்ள மிகமோசமானவற்றைப் பார்த்தல், விமர்சிக்க ஏதேனும் தவறைக் கண்டறியும் முயற்சியில் ஒவ்வொரு வார்த்தை மற்றும் செயலையும் கடினமுயற்சியுடன் கூர்ந்தாய்வு செய்தல்.* அதுவே வேதபாரகரும் இயேசுவை நடத்திய விதமாக இருந்தது.

"துரும்பு" மற்றும் "உத்திரம்" என்பவை ஒரே பகுதிப்பொருள்களைக் கொண்டுள்ளதால் அவற்றை உருவமாக இயேசு பேசினார் என்று பல விளக்கவுரையாளர்களும் சில மொழிபெயர்ப்பாளர்களும் நம்புகின்றனர். ஒன்று மிகவும் சிறிதாகவும் இன்னொன்று மிகவும் பெரிதாகவும் இருந்தது, ஆனால் இவ்விரண்டுமே மரத்தினால் ஆனவையாக இருந்தன. NIV மொழிபெயர்ப்பில் "speck of sawdust" மற்றும் "plank" என்றுள்ளது.

துரும்பும் உத்திரமும் ஒரே வகையான பொருளினால் ஆனவை என்ற சாத்தியக்கூறானது, ஆர்வமிக்க சில சிந்தனைகளைத் தூண்டுகிறது. நமது சொந்த வாழ்வில் நாம் கொண்டுள்ள தவறுகளை மற்றவர்களில் காணும்போது நாம் அடிக்கடி, மிகவும் உணர்ச்சிப் பூர்வமானர்களாகி விடுதல் என்பது மனித இயல்பின் உண்மையாக உள்ளது. இதை மனோதத்துவ அறிஞர்கள், "அகவெளிப்பாடு" என்று அழைக்கின்றனர்: நமது சொந்த வாழ்வில் நாம் காண்பவற்றைப் பிறரின் வாழ்வில் [இருப்பது கண்டு] வெளிப்படுத்துதல் - மற்ற ஒவ்வொருவரும் நம்மைப்போன்றே உள்ளனர், நம்மைப் போன்றே மற்றவர்களும் சிந்திக்கின்றனர் மற்றும் உணருகின்றனர் என்று நாம் யூகித்துக் கொள்கிறோம்.நமது சொந்தப் பாவங்களைப் போன்றவற்றை மற்றவர்களும் செய்வதாகக் காணும்போது, நமது பாவங்கள் மற்றவர்கள் செய்த பாவங்களைப் போன்று அவ்வளவு மோசமானவையாகக் காணப்படுவதில்லை. பெட்ராண்டு ரஸ்ஸல் என்பவர் எழுதிய, நன்கு அறியப்பட்ட "emotive conjugations" என்ற புத்தகம், நாம் சூழ்நிலைகளை அனுமானிக்கும் வழியை விவரிக்கிறது: "நான் உறுதியானவனாக இருக்கிறேன், நீ பிடிவாதமானவனாக இருக்கிறாய், அவன் பன்றித் தலையனாக இருக்கிறான். நான் மறுபடியும் ஆழ்ந்து சிந்தித்திருக்கிறேன்; நீ உன் மனதை மாற்றிக்கொண்டு இருக்கிறாய்; அவன் தன் வார்த்தையில் இருந்து தவறியிருக்கிறான்."[6] இதற்கான வேதாகம உதாரணம் ஒன்றிற்கு, யூதா மற்றும் அவரது மருமகளான தாமார் ஆகியோரின் வரலாற்றை வாசியுங்கள்

(ஆதியாகமம் 38). தாமார் "வேசித்தனம்பண்ணினாள்" மற்றும் அவள் "கர்ப்பவதியுமானாள்" என்று கூறப்பட்டபோது, அவளைக் கொல்ல அவர் தயாரானார் (வசனம் 24); ஆனால் யூதாவே அந்தக் குழந்தைக்கு தகப்பன் என்று தாமார் நிரூபித்தபோது (வசனம் 25), மரண தண்டனை விதிக்க வேண்டும் என்ற கருத்து விரைவிலேயே கைவிடப்பட்டது (காண்க வசனம் 26).

மரத்தினால் செய்யப்பட்ட இரு பொருட்களைக் கொண்டு இயேசு வேண்டுமென்றே தமது கருத்தை விளக்கப்படுத்தினார் என்றால், நாம் உத்திரம் அளவான பாவம் கொண்ட ஒரு மனிதர், அதே பாவத்தின் துரும்பு அளவையே கொண்ட இன்னொருவர் மீது மேலாதிக்கம் செய்யும், பகுத்தறிவுக்கு ஒவ்வாத சூழ்நிலையைக் கொண்டிருக்கிறோம் என்றாகிறது. இவ்வகையான சீர்பொருத்தமற்ற தன்மை பற்றிப் பவுல், ரோமர் 2:1-3ல் பின்வருமாறு எழுதினார்:

> ஆகையால், மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி. போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களுக்குத் தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்தின்படியே இருக்கிறதென்று அறிந்திருக்கிறோம். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களைக் குற்றவாளிகளென்று தீர்த்தும், அவைகளையே செய்கிறவனே, நீ தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக்கொள்ளலாமென்று நினைக்கிறாயோ?

இப்படிப்பட்ட வழிமுறையில் செயல்பட்டவர்களை இயேசு எவ்வாறு பண்புப்படுத்தினார்? இயேசு வார்த்தைகளினால் ருசியூட்டவில்லை; 5ம் வசனத்தின் முதற்பகுதியில் அவர், *"மாயக்காரனே!"* என்று கூறினார். *மாயத்தன்மையுடன் இருத்தல்* நம்மை *மாயக்காரர்கள்* ஆக்குகிறது. நாம் தொடர்ந்து மற்றவர்களை விமர்சித்துக் கொண்டிருந்தால், நமது பதிவேடு தெளிவாக உள்ளது, நமது வாழ்வு சரியாக உள்ளது என்று மறைமுகமாக உணர்த்துகிறோம். இல்லையென்றால் நாம் தீர்ப்பிடத் தகுதியற்றவர்களாக இருப்போம். அதே வேளையில் நாம் இந்தப் பெரிய தொலைபேசிக் கம்பங்கள்[7] நமது கண்குழியில் இருந்து நீட்டிக் கொண்டிருக்க விட்டிருக்கிறோம்.

நியாயத்தீர்ப்பை நாம் சுயத்தைக் கொண்டு தொடங்க வேண்டும் என்று நான் மீண்டும் கூறுகிறேன். இயேசு, "*முன்பு* உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு" என்று கூறினார். மற்றவர்களின் பாவங்களை அறிக்கையிடுதல் சுலபமாக உள்ளது; நமது சொந்தப் பாவங்களை அறிக்கையிடுதல் கடினமாக உள்ளது. சுயபரிசோதனையைப் பல சந்தர்ப்பப் பொருள்களில் பவுல் பரிந்துரைத்தார்: "உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள்" (2 கொரிந்தியர் 13:5); "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, ..."; "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்" (1 கொரிந்தியர் 11:28, 31). ரோமர் 14:13 விசேஷமாக நடைமுறைப்படுவதாக உள்ளது. இவ்வசனத்தை பிலிப்ஸ்ஸின் மொழிபெயர்ப்பு, "ஆகவே நாம் ஒருவர் மற்றவரை விமர்சிக்கக் கண்களைத் திருப்புவதை நிறுத்துவோமாக. நாம் விமர்சிப்பவர்களாக இருக்க வேண்டும் என்றால், *நமது*

சொந்த நடத்தையைக் குறித்து விமர்சிப்பவர்களாக இருப்போமாக மற்றும் ஒரு சகோதரர் இடறும்படியாகவோ அல்லது விழுந்து போகும்படியாகவோ எதையும் செய்யாதிருக்கும்படி கவனிப்போமாக" என்று தரவழைக்கிறது (வலியுறுத்தம் கூட்டப்பட்டது).

சுய பரிசோதனையில் கூட பொது அறிவு தேவையானதாக உள்ளது. நாம், தனிப்பட்ட தோல்விகள் மற்றும் குறைவுகள் கொண்ட சாவுக்கேதுவான அலைக்கழிப்பைப் பற்றி - இதை வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள் "முழுநிறைவான சவ ஆய்வு" என்று அழைத்தார்[8] - பேசவில்லை. இருந்தபோதிலும் மற்றவர்களுடன் நாம் இணக்கமாக இருக்க விரும்பினால், நமது *சொந்த* வாழ்வில் அவசியமான மாற்றங்களை ஏற்படுத்துதல் என்பதே நமது முதல் அக்கறையாக இருக்க வேண்டும். நாம் நம்மைக் கொண்டு இதைத் தொடங்கினால், நாம் தீர்ப்பிடுபவர்களாக இருப்பதற்கு நம்மைக் குறைவாக ஒப்புக் கொடுத்தவர்களாக இருப்போம். நாம் நமது வாழ்வில் உள்ள உத்திரம் போன்ற பாவங்கள் *எல்லாவற்றையும்* நீக்கிப்போடப் பிரயாசப்பட வேண்டும், ஆனால் சந்தர்ப்பப்பொருளில், தீர்ப்பிடுபவர்களாக இருத்தல் என்பதே நீக்கிப்போட வேண்டிய உத்திரம் போன்ற பாவமாக உள்ளது.

இப்போது நாம் 3முதல் 5வரையிலான வசனங்களை விட்டுச் செல்ல முடியும், ஏனெனில் நாம் இவ்வசனங்களின் முதன்மை வலியுறுத்தத்தை எடுத்துரைத்து முடித்துள்ளோம். இருப்பினும் இந்தப் பகுதியின் முடிவில், நான் காணாது விட விரும்பாத ஒரு சத்தியம் உள்ளது.

தாழ்மையுடனும் உணர்வுடனும் மற்றவர்களுக்கு உதவுங்கள் (7:5ஆ)

யாரேனும் ஒருவரை நாம் உண்மையாகவே அன்புகூர்ந்தால் மற்றும் அவரது வாழ்வில் பாவத்தை நாம் கண்டால், அந்தப் பாவத்தை அவர் நீக்கிப்போடுவதில் அவருக்கு உதவ நாம் முயற்சி செய்வோம்.[9] இதுவே 5ம் வனத்தின் பிற்பகுதியில் மறைமுகமாக உணர்த்தப்படுகிறது: ஒவ்வொருவரும் தமது சொந்தக் கண்ணில் இருந்து உத்திரத்தை எடுக்க வேண்டும் என்று இயேசு கட்டளையிட்டபின்பு, அவர் "*பின்பு* உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்" என்று கூறினார் (வலியுறுத்தம் கூட்டப்படுகிறது). நமது சொந்த பாவங்களை நீக்கச் செயல்படுதல் என்பது நமது முதல் முன்னுரிமையாக உள்ளது என்று இயேசு கூறினார், ஆனால் அவர், நமது வாழ்வை முறைப்படுத்திய பின்னர், ஒரு சகோதரனுக்கு அவரது பாவங்களை நீக்க உதவுதலை ஊக்கம் குலையச் செய்ய வில்லை.[10] நமது இருதயங்கள் மற்றும் வாழ்வு ஆகியவற்றில் இருந்து பாவத்தை நீக்கிப் போடுவதற்கு ஒருவர் மற்றவருக்கு உதவ வேண்டியதன் அவசியம் பற்றிப் பல வசனப் பகுதிகள் போதிக்கின்றன:

> சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப் படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் (கலாத்தியர் 6:1, 2).

சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன் (யாக்கோபு 5:19, 20).

மத்தேயு 7:3-5ல், கண்ணிலுள்ள துரும்பைப் பற்றிய இயேசுவின் விவரிப்பு, *உதவுவதன் அவசியத்தை* அடிக்கோடிடுகிறது. விழிக்கோளங்கள் அல்லது கண்ணிமைகள் என்பவை மிகவும் கூருணர்வு கொண்டவையாக உள்ளன. கண்ணில் ஒரு சிறு துரும்பு இருத்தல் என்பதுகூட சிரிப்பிற்குரிய விஷயமாக இருப்பதில்லை. உங்களுக்குக் குழந்தைகள் இருந்தால், அவர்களில் ஒருவனிடத்தில் இருந்து நீங்கள் அனேகமாக "என் கண்ணில் ஏதோ விழுந்துவிட்டது!" என்ற பெருந்துன்பக் குரலைக் கேட்டு இருக்கலாம்.

இந்த விவரிப்பு, உதவி செய்பவராலேயே மேற்கொள்ளப்பட வேண்டிய *அணுகுமுறையையும்* சுட்டிக்காண்பிக்கிறது. எனது கண்ணில் ஏதேனும் துரும்பு உள்ளது என்றால் அதை நீக்கிப்போட நீங்கள் மனமுவந்து முன்வருகிறீர்கள், நீங்கள் மிகவும் கவனம் நிறைந்தவராகவும் பரிவிரக்கம் உள்ளவராகவும் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவ்வாறே நாம், பிறரைக் கையாளுவதிலும் கூருணர்வுடன் இருப்பது அவசியமாகும். பவுல், "... *சாந்தமுள்ள ஆவியோடே* அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்" என்று கூறினார் (கலாத்தியர் 6:1; வலியுறுத்தம் கூட்டப்பட்டுள்ளது).

பரிசுத்தமான தேவன் முன்பாக, நியாயத்தீர்ப்பில் ஒரு நாளிலே நாம் யாவரும் யாருக்குமுன்பாக நின்றாக வேண்டுமோ அந்தத் தேவனுக்கு முன்பாக, நாம் யாவருமே பாவிகளாக இருக்கிறோம். நம் யாவருக்கும் ஆவிக்குரிய வகையில் உதவி தேவைப்படுகிறது, எனவே நாம் மற்றவர்களுக்கு உதவி செய்ய மனவிருப்பமாக இருப்போமாக; ஆனால் நாம் அவ்வாறு செய்கையில், அந்த உதவியை நாம் கவனத்துடனும் பரிவிரக்கத்துடனும் அளிப்போமாக.

ஒவ்வொருவரும் வித்தியாசமானவர்கள் என்பதை உணர்ந்தறிதல் மற்றும் கடினமான சூழ்நிலையைக் கையாளக் கற்றுக்கொள்ளுதல் (7:6)

அடுத்ததாக நாம், "நாய்கள்" மற்றும் "பன்றிகள்" மீதான வசனத்திற்கு வருகிறோம் (வசனம் 6). இங்கு ஒரு புதிர் உள்ளது; இவ்வசனம் இயேசு கூறிய ஆவிக்கு எதிராகச் செல்வதாகக் காணப்படுகிறது. நாம் மற்றவர்களை "நாய்கள்" மற்றும் "பன்றிகள்" என்று கூறிக்கொண்டு திரியவேண்டுமா? இந்த வாக்கியத்தைக் கிறிஸ்து சமானநிலைக்காக இட்டார் என்று நான் நினைக்கிறேன். நாம் மாயக்காரர்களாக, தவறு கண்டுபிடிக்கிறவர்களாக, நம்மைநாமே "கட்டிகளை (தவறுகளை) ஆய்வுசெய்பவர்கள்" என்று நியமித்துக் கொண்டவர்களாக இருக்கக் கூடாது; ஆனால் நாம் வஞ்சிக்கப்படுகிறவர்களாகவும் இருக்கக் கூடாது. தேவன் நமக்குப் பகுத்தறிவைக் கொடுத்தார், மற்றும் இதை நாம் மக்களைக் கையாள்வதில் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் எதிர்பார்க்கிறார். நாம் உணர்வற்றவர்களாகவும் தணிக்கை செய்பவர்களாகவும் இருக்கக் கூடாது,

ஆனால் நாம் கவனம் இல்லாதவர்களாகவும் எளிதில் ஏமாறுபவர்களாகவும் கூட இருக்கக் கூடாது.

1முதல் 5வரையுள்ள வசனங்களை மாத்திரம் இயேசு கொடுத்திருந்தார் என்றால், அவர் நம்மைத் தாக்குதலுக்கு ஆட்படுபவர்களாக, ஒருவரைத் தீர்ப்பிடுதல் குறித்து நாம் ஏதேனும் தவறு செய்துவிடுவோமோ என்ற பயத்தினால் எந்தத் தீர்ப்பையும் வெளியிடப் பயந்தவர்களாக விட்டிருப்பார். இருப்பினும் 6ம் வசனத்தில் அவர், மற்றவர்களைக் குறித்து நாம் *சில* தீர்ப்புகளை ஏற்படுத்த *வேண்டும்* என்று மறைமுகமாக உணர்த்தினார் - மற்றும் அவர் இந்த உண்மையை, நாய்கள் மற்றும் பன்றிகள் என்பவற்றைக் கொண்ட குறிப்புடன் விவரித்தார்: "பரிசுத்தமானதை[11] நாய்களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துகளைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக் கொண்டு உங்களைப் பீறிப்போடும்."

கிறிஸ்துவின் வார்த்தைகளினுடைய அர்த்தத்தை நாம் ஆழ்ந்து சிந்திப்பதற்கு முன்னர், நாய்கள் மற்றும் பன்றிகள் ஆகியவற்றின் இயல்பை, குறிப்பாக அவரது நாட்களில் அவற்றின் இயல்பை, நாம் புரிந்து கொள்வது அவசியமாகிறது. இவையிரண்டுமே மோசேயின் நியாயப்பிரமாணத்தின்கீழ் அசுத்தமான மிருகங்களாக இருந்தன.[12] நீங்கள் நாய்களைப் பற்றி நினைக்கும்போது, சிலரால் சொந்தமாக வளர்க்கப்படுகிற ஆடம்பரமான நாய்களைப் பற்றி நினைக்க வேண்டாம், ஆனால் அதற்கு மாறாக, கூட்டமாக ஓடுகிற, வெறிகொண்ட, காட்டுத்தனமான, அரைப்பட்டினியாக உள்ள, அசுத்தமான தோட்டிகளான நாய்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். "நாய்" என்ற வார்த்தை வேதாகமத்தில் சில வேளைகளில், பாவி ஒருவருக்கு ஒப்புவமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (மத்தேயு 15:26; பிலிப்பியர் 3:2; வெளிப்படுத்தின விசேஷம் 22:15). பன்றி என்பது யூதரின் மனதில் அசுத்தத்தின் நினைவுச் சின்னமாக இருந்தது. விஷயம் இவ்வாறு இருக்குமென்றால், பலஸ்தீனத்தில் இருந்த (எல்லாமும் இல்லை என்றாலும்) பெரும்பான்மையான பன்றிகள் காட்டுத்தனமாக ஓடின எனலாம்.

பிந்திய உண்மையானது பல விளக்கவுரையாளர்களால் தவறவிடப்பட்டுள்ளது. அவர்கள் 6ம் வசனத்துடன் போராடுகையில், "திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்" என்பது பன்றிகளுக்குப் பதிலாக நாய்களையே குறிப்பதாக இருக்க வேண்டும் என்று கூறுகின்றனர். இது உண்மையாக இருக்கலாம்,[13] ஆனால் பன்றிகள் "திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடுதலை" செய்ய இயலாது என்று வலியுறுத்துதல், பன்றிகளைப் பற்றிய அவர்களின் அறியாமையை வெளிப்படுத்துகிறது. ஒரு புதிதாய்ப் பிறந்த தனது குட்டிகளை நீங்கள் நெருங்கிச் செல்வதாக ஒரு தாய்ப்பன்றி நினைத்தால் அது உங்கள் காலை பிய்த்துப் போடும் நிலையில் இருக்கும்போது அவர்கள் ஒருக்காலும் அதன் அருகில் இருந்திருக்க மாட்டார்கள். மேலும் அவர்கள், எல்லா உயிரினங்களிலும் மிகவும் அபாயகரமான, மிதிப்புக்கு மிதிப்பைத் திரும்பத் தருகிற காட்டுப்பன்றியின் கொடூரத் தன்மை பற்றியும் அறியாதிருக்கின்றனர்.[14]

நாய்கள் மற்றும் பன்றிகளின் நிலைப்பாட்டைச் சிந்தையில் கொண்டு, 6ம் வசனத்தைத் திரும்பவும் கண்ணோக்குங்கள். இயேசு மீண்டும் ஒருமுறை, மதியீனத்தைச் சித்தரிக்கும் காட்சிகளை முன் வைக்கிறார். முதலில் அவர் "பரிசுத்தமானதை நாய்களுக்கு" கொடுத்தல் பற்றிப் பேசினார். கலப்பினமான தெரு நாய் ஒன்று ஒருவர் பரிசுத்தமானதை அல்லது தூயதானதை

மதிக்க வழியெதுவும் இருப்பதில்லை. சிலர், இவ்வசனப் பகுதி, பலிபீடத்தில் இருந்து ஒரு இறைச்சித் துண்டை ஆசாரியர் எடுத்து அதைக் காட்டு நாய்களின் கூட்டம் ஒன்றிற்கு வீசி எறிதல் என்ற நினைத்துப் பார்க்க இயலாத சூழ்நிலையைக் குறிப்பிடுவதாக நினைக்கின்றனர். இது ஒருக்காலும் செய்யப்பட்டிராது.

பின்பு இயேசு, "பன்றிகளுக்கு முன் முத்தை" போடுதல் பற்றிய குறிப்பை உரைத்தார். நாய்கள் பரிசுத்தமானதை மதிக்க இயலாதிருப்பதைப் போன்றே, பன்றிகளும் முத்துக்களை ஒருக்காலும் மதிப்பது இல்லை. முத்துக்கள் உணவு அல்ல என்பதை அவைகள் கண்டறிந்த உடனே (மற்றும் ஒருவேளை விலையுயர்ந்த அக்கற்களை உண்ண முயற்சி செய்கையில் ஒரு பல் உடைந்த நிலையில்), அவைகள் "திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போட" சாயக்கூடும். எனது மனமானது, சூரியன் உதயம் ஆவதற்கு முன்னர் பன்றிகளுக்கு உணவு தருவதற்காக நான் விழித்து எழுந்த தொலைதூரக் கடந்த காலத்தை நோக்கிப் பின்செல்கிறது. பன்றிகளுக்கான உணவை நான் ஒரு பழைய உலோக வாளியில் கலக்கும் சத்தம் கேட்ட உடனே பன்றிகள் வெறிபிடித்தவை போன்று ஆகிவிடும். அவற்றை அடைத்து வைத்திருக்கும் இடத்தை நான் அணுகும்போது, அவைகள் கூச்சல் இட்டுக் கொண்டு, ஒன்றின் மீது ஒன்று ஏறித் தாவிக்கொண்டிருக்கும். பசியுடன் இருந்த குறைந்த பட்சம் மூன்று அல்லது நான்கு பன்றிகள் தீவனத் தொட்டியை நெருங்கிக் கவிந்திருக்கையில், உணவை அந்தத் தொட்டிக்குள் ஊற்றுவது எனக்குக் கடினமாக இருக்கும். நான் அந்தத் தொட்டிக்குள், அரைக்கப்பட்ட தானியம் மற்றும் பால் ஆகியவற்றின் கலவைக்குப் பதிலாக முத்துக்களை ஊற்றியிருந்தால், பன்றிகள் அந்த விஷயத்தைக் கண்டறிந்த உடனே, நான் ஒரு பலமான வேலி அவைகளைச் சுற்றி இருக்க வேண்டும் என்று ஜெபிக்க வேண்டி இருந்திருக்கும்!

அடுத்ததாக நாம், "இயேசு குறிப்பிட்ட 'நாய்கள்' மற்றும் 'பன்றிகள்' யார்?" என்று கேட்டாக வேண்டும். இந்தக் கேள்வியானது, " 'பரிசுத்தமானது' என்ற மற்றும் 'முத்துக்கள்' என்பவை யாவை?" என்று முதலில் கேட்பதன் மூலம் மிகச்சிறந்த வகையில் பதில் அளிக்கப்படுகிறது. இயேசு, இராஜ்யத்தை (சபையை) "விலையுயர்ந்த *முத்து*" என்ற வகையில் குறிப்பிட்டார் (மத்தேயு 13:45, 46; வலியுறுத்தம் கூட்டப்படுகிறது). இராஜ்யத்தை (சபையை) பற்றிய செய்தியானது நற்செய்தி (சுவிசேஷம்) என்று அழைக்கப்படுகிறது (காண்க மத்யேு 4:23; 9:35; 24:14). தேவனுடைய வார்த்தை *பரிசுத்தமானதாக* உள்ளது (ரோமர் 1:2; 2 பேதுரு 2:21), மற்றும் பரிசுத்தமான செய்தி "பொக்கிஷம்" என்ற வகையில் பேசப்பட்டுள்ளது (2 கொரிந்தியர் 4:7).

இவை யாவும் உண்மையாக இருப்பதால், பெரும்பான்மையான விளக்கவுரையாளர்கள், பின்வரும் தன்மைகளினால் ஆவிக்குரிய மதிப்பீட்டில் குறைவுபடுகிற தனிநபர்களுக்குத் தேவனுடைய வசனத்தைக் கொடுத்தலுக்கு எதிராகக் கிறிஸ்து எச்சரித்தார் என்று நம்புகின்றனர்:

- சத்தியத்தை தொடர்ந்து புறக்கணிப்பவர்கள்?
- சுவிசேஷத்தை "பைத்தியக்காரத்தனம்" என்று எண்ணுகிறவர்கள் (1 கொரிந்தியர் 1:18, 23; 2:14),
- தீத்து 1:15ல் பேசப்படுகிற, "அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும்" என்ற வகையிலான "புத்தியும்

மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும்" நிலையைக் கொண்டுள்ள மக்கள்.

மீண்டுமாக இயேசு, தமது வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள மறுத்த வேதபாரகர்களையும் பரிசேயர்களையும் தமது சிந்தையில் கொண்டிருக்கலாம்.

6ம் வசனத்திற்கான இந்த விளக்கத்தைச் சில விளக்கவுரையாளர்கள் மறுக்கின்றனர்,[15] ஆனால் இது, இவ்வசனத்தின் மிக எளிய விளக்கம் என்றும் அது வேதாகமத்தின் மற்ற வசனப்பகுதிகளுடன் இசைந்துள்ளது என்றும் நம்புகிறேன். இயேசு, "வரையறைக்குட்பட்ட கட்டளையைக்" கொடுத்தபோது, அவர் தமது சீஷர்களிடத்தில், அவர்கள் புறக்கணிக்கப்படும்போது, தங்கள் மிதியடிகளின் கீழ் உள்ள தூசியை உதறிவிட்டு[16] கடந்து செல்லும்படி கூறினார் (மத்தேயு 10:13, 14).[17] பவுலின் செய்தி யூதர்களால் புறக்கணிக்கப்பட்ட ஒவ்வொரு வேளையிலும், அவர் புறஜாதிகளிடமாகத் திரும்பினார் (நடபடிகள் 13:44-51; 18:5, 6; 19:9; 28:17-28).

இது கடினமான தீர்ப்பிடுதலாக உள்ளது. யாரேனும் ஒருவர் "நாயாக" அல்லது "பன்றியாக" இருக்கிறார் என்பதை முன்னதாகவே முடிவு செய்யும் உரிமையை நாம் கொண்டிருப்பதில்லை. அன்பு எப்போதுமே மிகச்சிறந்தவற்றை நம்புகிறது மற்றும் நாம் ஒவ்வொருவருக்கும் சுவிசேஷத்தைக் கேள்விப்படும் வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் (மத்தேயு 28:18-20; மாற்கு 16:15, 16). இதற்கு மறுபுறத்தில், யாருக்கேனும் நாம் தொடர்ந்து போதிக்க முயற்சி செய்து, அவர் தொடர்ந்து அதைப் புறக்கணித்து இருந்தால், ஒரு வேளையில், பொது அறிவும் நமது காலம் குறித்து நாம் நல்ல உக்கிராணக்காரர்களாக இருக்க வேண்டும் என்ற கொள்கையும் (எபேசியர் 5:16), "உங்கள் முத்துக்களைப் பன்றிகளுக்கு முன்னால் போடுவதை நிறுத்தி வேறு யாருக்கேனும் போதிக்கப் பாருங்கள்" என்று கூறும்.

இருப்பினும் 7:1-12ல், இயேசுவின் விவரிப்புகளில் அவர், நாம் மாறுபட்ட பல வகையான மக்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது மற்றும் ஒவ்வொரு வகையினரையும் எவ்வாறு நடத்துவது என்று நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதைத் தெளிவாக்கினார் என்பதே இவ்வேளையில் நான் ஏற்படுத்த விரும்பும் கருத்தாக உள்ளது. தங்கள் கண்களில் துரும்புகளைக் கொண்டவர்களாகப் புண்படுத்தும் மக்களை, நமது அன்பும் கவனிப்பும் தேவைப்படும் தனிநபர்களை நாம் எதிர்கொள்வோம். நாம் ஒருக்காலும் உதவ இயலாத பன்றிகள் மற்றும் நாய்கள் போன்ற மக்களையும் நாம் சந்திப்போம். அவர்கள் தங்களை நெருங்க நமது பகுதியில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முயற்சியையும் எதிர்த்து நிற்பார்கள். நம்மை எவ்வாறு பீறிப்போடுவது என்பதைத் தீர்மானம் செய்வது என்பதே அவர்கள் நம்மிடம் கொண்டுள்ள ஒரே ஆர்வமாக இருக்கும். இப்படிப் பட்டவர்களை விட்டுவிடுதல் என்பதே நாம் செய்யக்கூடிய மிகச்சிறந்த விஷயமாக இருக்கும்.

இயேசுவின் பாதங்களைக் கண்ணீரால் கழுவிய பெண்ணிடமும் (லூக்கா 7:36-50) விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணிடமும் (யோவான் 8:2-11) இயேசு காண்பித்த மென்மைத் தன்மையைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். இதை, மத்தேயு 23ல் கடின இருதயம் கொண்ட வேதபாரகர் மற்றும் பரிசேயர்களிடத்தில் அவர் சொன்ன புண்படுத்தும் பழிப்புரையுடன் நேரெதிராக ஒப்பிட்டுப் பாருங்கள். அவர் திரும்பத் திரும்ப, "மாயக்காரராகிய

தேவபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ" என்று கூறினார் (வசனங்கள் 13, 14, 15, 23, 25, 27, 29; வலியுறுத்தம் கூட்டப்படுகிறது).

நாய்களையும் பன்றிகளையும் சுட்டுக்கொல்லுமாறு இயேசு கூறவில்லை. அப்படிப்பட்டவர்களைத் தனியே விட்டுவிடும்படி மட்டுமே அவர் கூறினார். பவுலின் புத்திமதி இவ்விடத்தில் ஏற்புடையதாக உள்ளது: "கூடுமானால் *உங்களாலானமட்டும்* எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" (ரோமர் 12:18; வலியுறுத்தம் கூட்டப்படுகிறது).

தேவனைச் சார்ந்திருக்கத் தீர்மானம் செய்யுங்கள் (7:7-11)

இது நம்மை, ஜெபத்தின் வல்லமை மீதான மாபெரும் வசனப் பகுதிக்குக் கொண்டுவருகிறது: 7முதல் 11 வரையிலான வசனங்கள். இவ்வசனங்களை முதலாவதாக நாம் வாசிக்கும்போது, உறவுகள் பற்றிய பாடக்கருத்தை இயேசு முடித்திருந்தார் என்று நினைக்கலாம். இருப்பினும் இவ்வசனப் பகுதிக்குப் பின்னால் உள்ள வசனம் (வசனம் 12) "ஆதலால்" என்ற வார்த்தையைக் கொண்டு கருத்து மாறுதலை ஏற்படுத்தி பின்பு மற்றவர்களுடன் இணக்கமாயிருப்பது எவ்வாறு என்பதற்கு நிறைவான அறிவுறுத்துதலைக் கொடுக்கிறது: இது பொன்விதி என்று அழைக்கப்படுகிறது. "ஆதலால்" என்ற வார்த்தை, இயேசு தமது பாடக்கருத்தை முடித்தார் - அதைக் தொகுத்துரைத்து, ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. 7முதல் 11வரையிலான வசனப் பகுதியானது மற்றவர்களுடன் இணக்கமாயிருத்தல் என்ற முற்றான ஆய்வுக்கருத்துடன் ஏதோ ஒருவகையில் தொடர்புடையதாக உள்ளது. நான் இவ்வசனங்களை "நீங்கள் தேவன் மீது நம்பிக்கை வைக்க முடியும்" என்ற அடுத்த பாடத்தில் விரிவாகக் கையாள்வேன். இப்போது நாம் கலந்துரையாடிக் கொண்டுள்ள பாடக்கருத்தின் சந்தர்ப்பப் பொருளுக்கு இவ்வசனப் பகுதி எவ்வாறு பொருந்துகிறது என்பதைக் காண்பித்தலே இவ்வேளையில் எனது நோக்கமாக உள்ளது.

ஒருபுறத்தில் நாம் தீர்ப்பிடுபவர்களாக இருக்கக் கூடாது; நாம் இரக்கம் நிறைந்தவர்களாகவும் தயவு உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். மறுபுறத்தில் நாம் வஞ்சிக்கப்படுகிறவர்களாக இருக்கக் கூடாது; நமது பாதங்களில் இருந்து தூசியை எப்போது உதற வேண்டும் என்பதை நாம் அறிந்திருப்பது அவசியம். இந்தத் தீர்ப்புகள் ஏற்படுத்தக் கடினமானவையாக உள்ளன. நாம் மென்மையாக இருக்க வேண்டிய வேளைகளில் முரட்டுத்தனமாய் இராதபடிக்கு அல்லது நாம் முரட்டுத்தனமாய் இருக்க வேண்டிய வேளைகளில் மென்மையாய் இராதபடிக்கு நம்மை எவ்வாறு காத்துக்கொள்ள முடியும்? 7முதல் 11வரையிலான வசனங்கள் நமக்குப் பதில் அளிக்கின்றன: நாம் தேவனைச் சார்ந்திருக்க வேண்டும்.

> கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லை கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப்

பாம்பை கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?

இவைகள் எவ்வளவு மாபெரும் கூற்றுக்களாக உள்ளன! தேவன் ஜெபத்திற்குப் பதில் அளிக்கிறார்! ஒரு அன்பான தந்தை தமது பிள்ளைகளின் தேவைகள் மற்றும் வேண்டுகோள்களுக்குப் பதில் செயல் செய்வது போன்றே, தேவனும் நமக்குப் பதில் அளிக்கிறார்.

இவ்வசனப்பகுதி நமது பாடக்கருத்துடன் பல வழிகளில் உறவுபடுகிறது. எடுத்துக்காட்டாக, தேவன் நமக்கு இரக்கம் காண்பிக்கிறார், மற்றும் இது நாம் பிறருக்கு இரக்கம் காண்பிக்க வேண்டும் என்று மறைமுகமாக உணர்த்துகிறது. விசேஷமாக இது, நாம் நமது தேவைகளை - குறிப்பாக மற்றவர்களை கையாளுவது எவ்வாறு என்று அறிதலுக்கான தேவையை - தேவனிடம் எடுத்துச் செல்ல முடியும் என்று வலியுறுத்துகிறது. இந்த விஷயத்தில் இச்செய்தியானது யாக்கோபு 1:5அ வசனப்பகுதியில் உள்ள செய்தியைப் போன்றதாக உள்ளது: "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், ... தேவனிடத்தில் கேட்கக்கடவன்."

தேவன் "தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு *நன்மையானவைகளைக்* கொடுப்பார்" என்று 11ம் வசனம் கூறுகிறது. யாரோ ஒருவர், "ஒரு புதிய வீடு நல்லதாக இருக்கும் ... அல்லது அதிக உடைகள் ... அல்லது இன்னும் உயர்ந்த ஊதியம் தரும் வேலை" என்று சொல்வதைக் கேட்கிறேன் - ஆனால் உண்மையிலேயே "நல்லது" எது? ஆவிக்குரிய வரங்கள் மேன்மையானவைகள் அல்லவா? இவற்றில் ஆவிகளைப் பகுத்தறிதல் உள்ளது: எல்லா வகையான மக்களையும் கையாள்வது எவ்வாறு என்று அறியும் திறன். நீங்கள் உண்மையிலேயே மக்களுடன் இணக்கமாயிருக்க விரும்பினால், உறவுகள் உங்களுக்கு முக்கியமானவையாக இருந்தால், நீங்கள் ஜெபத்தில் அதிக நேரம் செலவிடுவீர்கள்.

பொன்விதியின்படி வாழுங்கள் (7:12)

கடைசியாக நாம் 12ம் வசனத்திற்கு வருகிறோம். இவ்வசனம் மலைப்பிரசங்கத்தின் உயர்ந்த கருத்து என்று அழைக்கப்பட்டுள்ளது. நிச்சயமாகவே இது, மற்றவர்களுடன் இணக்கமாயிருப்பது எவ்வாறு என்ற கலந்துரையாடலை உச்சப்படுத்துகிறது. இவ்வசனப் பகுதி "ஆதலால்" என்ற வார்த்தையுடன் தொடங்குகிறது. ஒரு கருத்தில் இது - சகோதரர் அல்லது விரோதி, நண்பர் அல்லது எதிரி என்று யாராக இருப்பினும் - மனித உறவுகள் பற்றி இந்தப் பிரசங்கத்தில் கூறப்பட்டுள்ள யாவற்றையும் தொகுத்துரைக்கிறது. குறிப்பாக இது, மற்றவர்களுடன் இணக்கமாயிருத்தல் பற்றி 7:1-11ல் நாம் கற்றுக்கொண்டுள்ள யாவற்றையும் தொகுத்துரைக்கிறது: "ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்க தரிசனங்களுமாம்." இதை நாம் பொதுவாகப் பின்வருவது போன்று விளக்கப்படுத்துகிறோம்: "மற்றவர்கள்

உங்களுக்குச் செய்ய விரும்புவதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்." அனேகமாக இயேசுவினால் கூறப்பட்டவற்றில் இது, உலகளாவிய வகையில் நன்கு அறியப்பட்டதாக உள்ளது எனலாம். ஏறக்குறைய ஒவ்வொருவரும் இவ்வார்த்தைகளைப் பாராட்டுகின்றனர். இந்தக் கொள்கையின்படி வாழாதவர்களும்கூட இதைப் பாராட்டுகின்றனர்.

இயேசுவுக்கு முன்னர் வசனப்பகுதியின் 12அ கொள்கையைப் பலர் எதிர்மறையாகக் கூறியிருந்தனர்: "மற்றவர்களால் உங்களுக்குச் செய்யப்பட நீங்கள் விரும்பாதவற்றை மற்றவர்களுக்கு நீங்களும் செய்யாதீர்கள்." இதை விளக்கப்படுத்தியவர்களில், சாக்ரட்டீஸ், அரிஸ்டாட்டில், குறிப்பிடத் தக்க யூதத்துவப் போதகரான ஹில்லல், கன்ப்யூசியஸ் மற்றும் புத்தர் ஆகியோர். இருப்பினும் இதை நேர்மறையாக முதலில் விளக்கப்படுத்தியவர் இயேசுவே ஆவார்: "நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்." எதிர்மறை மற்றும் நேர்மறை அணுகுமுறைகளுக்கு இடையில் உலகப்பெரிய வேறுபாடு உள்ளது: எதிர்மறைக் கூற்று என்பது சுய பாதுகாப்பின் விஷயமாக இருக்கையில், நேர்மறைக் கூற்று சுயத்தை மறக்கும் தன்மையாக உள்ளது. ஒன்றுமே செய்யாமல் எதிர்மறைக் கூற்றை நிறைவேற்றுவது சாத்தியமாக உள்ளது,[18] அதே வேளையில் ஒருவர் நன்மை செய்வதனால் மாத்திரமே நேர்மறைக் கூற்றை நிறைவேற்ற முடியும். எதிர்மறைத் தத்துவத்தைத் தழுவிக்கொள்வதற்கு ஒருவர் தேவபக்தி உடையவராக இருக்க வேண்டும் என்றுகூட அவசியமில்லை; அது வாழ்வைக் கண்ணோக்கும் இயல்பான வழியாக உள்ளது. இருப்பினும், இரண்டாவது விஷயமானது சுத்தமான பக்தியின் அடிப்படையில் அமைந்துள்ளது. இயேசு, "... இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்க தரிசனங்களுமாம்" என்று கூறினார் (வசனம் 12ஆ). NIV வேதாகமத்தில், "... இது நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனத்தையும் தொகுத்துரைக்கிறது" என்றுள்ளது. அதாவது, பொன்விதியானது மனித உறவுகள் மீதான பழைய ஏற்பாட்டுப் போதனையைத் தொகுத்துரைக்கிறது.[19]

இவ்வசனப்பகுதி இதற்கு முன் வந்த விஷயங்களின் தொகுப்புரையைக் கொடுப்பதற்காக, கலந்துரையாடலின் முடிவில் வருகிறது, ஆனால் இது உறவுமுறைகளில் எழக்கூடிய எண்ணற்ற மற்ற சூழ்நிலைகளை எடுத்துரைக்கும் கொள்கையொன்றை விளக்குவதற்காகவும் இங்குள்ளது. உறவுமுறையில் சாத்தியமாகக் கூடிய ஒவ்வொரு பிரச்சனையையும் கையாளும் புத்தகம் ஒன்றை நீங்கள் கொண்டிருப்பதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அப்படிப்பட்ட தொகுப்பு ஒன்று எவ்வளவு பெரியதாக இருக்கும் என்று காட்சியில் காண முயற்சி செய்யுங்கள். பின்பு நீங்கள் யாரோ ஒருவரோடு உரையாடுகிறீர்கள் மற்றும் அங்கு ஒரு இடர்ப்பாடும் எழுகிறது என்று கற்பனை செய்துகொள்ளுங்கள். அதைக் கையாள்வது எவ்வாறு என்று கண்டறிவதற்காக நீங்கள் அப்புத்தகத்தின் பக்கங்களை வேகமாகத் திருப்புகிறீர்கள். ஒரு மணி அல்லது அதற்குச் சற்றேறக்குறையலான நேரத்தில் நீங்கள், உங்களுக்குத் தேவையான பதிலைக் கண்டறிகிறீர்கள் மற்றும் எதிரே கண்ணோக்குகிறீர்கள் - அந்த மற்ற நபர் சென்றுவிட்டார். இப்படிப்பட்ட ஒரு தொகுப்பை உங்களுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக, செயல்விளைவில் இயேசு, "அந்த இடர்ப்பாட்டை அல்லது வேறு எந்த இடர்ப்பாட்டையும் கையாள்வது எவ்வாறு" என்பது இங்குள்ளது. "உங்களை நீங்களே, 'சூழ்நிலையானது மறுதலையாக இருந்தால் விஷயம் எவ்வாறு இருக்கும்? நான் எவ்வாறு நடத்தப்பட விரும்புவேன்?' என்று

கேட்டுக் கொள்ளுங்கள். பின்பு மற்ற நபரையும் அதே போன்று நடத்துங்கள்."

இது எவ்வளவு எளியதாக - இருப்பினும் எவ்வளவு ஆழ்ந்தறிவு உடையதாக - இருக்கிறது! வாழ்வு முழுவதும் இந்த அடிப்படையின் மீது அமைந்திருந்தால் நிலை எவ்வாறு இருக்கும் என்று உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? ஒவ்வொரு தொழிலும் வியாபாரமும் இவ்வகையில் செயல்பட்டால் எப்படி இருக்கும்? ஒவ்வொரு இல்லமும், ஒவ்வொரு பள்ளியும், ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு சபைக்குழுமமும் இந்தக் கொள்கையைக் கனப்படுத்தினால் எப்படி இருக்கும்?

நாம் பொது அறிவைப் பயன்படுத்தும்படிக் கர்த்தர் எதிர்பார்க்கிறார் என்பதைக் கூறச் சற்றே தாமதிக்கும்படி என்னை அனுமதியுங்கள். நம்மை நாம் மற்றவரின் இடத்தில் வைத்துப் பார்க்கும்போது மோசமானவற்றைச் செய்ய விரும்பாதிருக்கப் *போதிய அளவுக்கு, நாம் நல்லவர்களாக* இருப்போம் என்றும் மதியீனமானவற்றைச் செய்ய விரும்பாதிருக்கப் *போதிய அளவுக்கு நாம் ஞானமுள்ளவர்களாக இருப்போம்* என்றும் மத்தேயு 7:12 யூகிக்கிறது.[20] இல்லையென்றால், மதுபானம் அருந்துபவர்கள், "மக்கள் எனக்கு மதுபானம் தர வேண்டும் என்றே நாம் விரும்புகிறேன், எனவே மற்றவர்கள் எனக்கு எவைகளைச் செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேனோ, அவற்றையே அவர்களுக்குச் செய்வேன் - மதுபானப் புட்டிகள் ஒவ்வொன்றயும் தருவேன் என்று நியாயப்படுத்தலாம்." எனக்கே உரிய ஒரு விவரிப்பைப் பயன்படுத்துவதென்றால், "நான் ஈரல் மற்றும் வெங்காயம் கலந்த உணவை[21] உண்ண விரும்புகிறேன், எனவே அடுத்த முறை நான் ஒரு உணவை ஏற்பாடு செய்கையில், எனது மனைவிக்காக - அவர் ஈரல் மற்றும் வெங்காயம் கலந்த உணவை *வெறுக்கிறார்* என்பது உண்மையாக இருந்த போதிலும் - ஈரல் மற்றும் வெங்காயம் கலந்த உணவைச் சமைப்பேன்" என்று நான் நியாயப்படுத்தலாம்.

இருப்பினும் நம்மில் பெரும்பான்மையானவர்கள், பொன்விதி எதைப்பற்றிப் பேசுகிறது என்பதைப் புரிந்துகொள்கிறோம் என்று நான் நினைக்கிறேன். இவ்வசனப் பகுதி, பொதுவான சத்தியங்களை, எல்லா மக்களுக்கும் உண்மையாக உள்ளவற்றைப் பற்றிக் குறிப்பிடுகிறது. நாம் யாவரும் பரிவிரக்கத்துடன் நடத்தப்பட விரும்புகிறோம், எனவே நாம் மற்றவர்களை அவ்வாறே நடத்த வேண்டும் - நாம் யாவரும் மதிக்கப்பட விரும்புகிறோம், எனவே நாம் மற்றவர்களை மதிப்பதை வெளிப்படுத்த வேண்டும். மற்றவர்கள் நம்மைப் பற்றிப் மிகச்சிறப்பான விஷயங்களை நம்ப வேண்டும் - நாம் செய்கிறவை பற்றிய மிகச்சிறப்பான கட்டி எழுப்புதலை இட வேண்டும் - என்று நாம் விரும்புவோம், எனவே மற்றவர்களுக்கு நாம் அதையே செய்ய வேண்டும். இந்தப் பட்டியல் விரிவாக்கப் படமுடியும். மற்றவர்கள் நம்மைப் புரிந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும், நமது அறிவுக்குறைவின் குறைபாட்டை இரக்கம் என்ற மூடலினால் மூடி நம்மை மன்னிக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம் - எனவே மக்கள் நம்மை எவ்வாறு நடத்த வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ, அவ்வாறே நாமும் அவர்களை நடத்துவோமாக.

ஒவ்வொருவரும் அவ்வாறு ஒவ்வொருவரையும் நடத்தும் ஒரு உலகத்தில் நாம் வாழ்ந்தால், அது சந்தோஷம் நிறைந்ததாக இராதா? ஒவ்வொருவரையும் *நாம்* அவ்வாறு நடத்தினால் அது சந்தோஷம் நிறைந்ததாக இராதா?

முடிவுரை

மகாத்மா காந்தி[22] தொடக்கத்தில் கிறிஸ்தவத்தினால் - குறிப்பாக மலைப்பிரசங்கத்தில் காணப்படும் பொன்விதி உள்ளிட்ட, மாபெரும் போதனைகளால் - மனம் ஈர்க்கப்பட்டார் என்று நான் வாசித்திருக்கிறேன். அவர் ஏன் ஒரு கிறிஸ்தவராகவில்லை என்று கேட்கப்பட்டபோது அவர், அந்தக் கொள்கைகளின்படி வாழும் எந்தக் கிறிஸ்தவரையும் தாம் கண்டிருக்கவில்லை என்று கவலையுடன் பதில் அளித்தார். நாம் படித்துள்ள இந்தக் கொள்கைகளின்படி நான் வாழ்கிறேனா? நீங்கள் வாழ்கிறீர்களா?

மத்தேயு 7:1-12ம் வசனப் பகுதியைத் தொடர்ந்து புகழ்பெற்ற பின்வரும் வார்த்தைகள் உள்ளன:

> இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர் (வசனங்கள் 13, 14).

இந்த வாசல் பின்வரும் பண்புகளைக் கொண்டவர்களை மாத்திரமே அனுமதிக்கக் கூடிய அளவிற்கு மிகவும் இடுக்கமானதாக உள்ளது என்று கருத்துக் தெரிவித்தல் நியாயமானதாக இருக்குமா?

- தீர்ப்பிடாது இருக்கிறவர்கள்?
- தங்கள் வாழ்வில் அவசியமான மாறுதல்களை ஏற்படுத்துவதை முதல் அக்கறையாகக் கொண்டவர்கள்?
- மற்றவர்களுக்கு உதவும் முயற்சிகள் தாழ்மை மற்றும் உணர்வுடைமை ஆகியவற்றினால் பண்புப்படுத்தப் பட்டவர்கள்?
- ஒவ்வொருவரும் வேறுபட்டவர்கள் என்று உணர்ந்து அறிந்தவர்கள் - மற்றும் சிரமத்தைக் கையாள்வது எவ்வாறு என்று கற்றிருந்தவர்கள்?
- தேவனைச் சார்ந்திருக்கத் தீர்மானித்தவர்கள்?
- பொன்விதியின்படி வாழ்பவர்கள்?

ஆம், மத்தேயு 7:13, 14ம் வசனங்கள், மனித உறவுகளுக்கும் மேலானவற்றில் கூட நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று நான் அறிகிறேன், ஆனால் இவ்வசனப்பகுதி இதை (மனித உறவுகளை) உள்ளடக்குகிறது என்பது நிச்சயம். மற்ற மக்களுடன் இசைவிணக்கமாக இருத்தலைக் கற்றுக் கொள்வது எவ்வளவு முக்கியமானதாக உள்ளது!

மற்றவர்கள் உங்களை நடத்த வேண்டிய விதத்தில் நீங்கள் அவர்களை நடத்தத் தவறியிருக்கிறீர்களா? நானும் கூடத் தவறியிருக்கிறேன். நாம் மனந்திரும்பி எதிர்காலத்தில் சிறப்பாகச் செயல்படத் தீர்மானித்தால், நமது குறைவுகளைத் தேவன் தமது கிருபைத்தன்மையின் மூலமாக மன்னிப்பார் என்பதை உணர்ந்தறிதல் ஆச்சரியம் நிறைந்ததாக இருப்பதில்லையா?[23] நமது பாடமானது, நமது சொந்த வாழ்வில் அவசியமான மாற்றங்கள் பற்றி நாம் *முதலில்* அக்கறை கொள்ள வேண்டும் என்ற கருத்துடன் தொடங்கிற்று. இது சுய- பரிசோதனைக்கான வேளையாக உள்ளது. உங்கள் வாழ்வானது,

முக்கியமான மாற்றங்களுக்காகக் கதறிக்கொண்டுள்ளது என்றால், நாங்கள் அதில் உங்களுக்கு உதவ முடியும், தயவுசெய்து எங்களுக்கு அதைத் தெரியப்படுத்துங்கள்.

குறிப்புகள்

[1]இது ஒரு வீட்டைத் தாங்கி நிற்கும் செதுக்கிய மரத்தூண் அல்லது கூரையைத் தாங்க உதவும் விட்டம் என்று சிலர் நினைத்தனர். எவ்வகையிலும் இது ஒரு பெரிய மரத்துண்டாக இருக்கிறது. [2]KJV வேதாகமத்தில் "mote" என்றுள்ளது, இது "ஒரு சிறிய துகள்" என்று அர்த்தப்பட்ட மத்திய காலத்து ஆங்கில வார்த்தையாக உள்ளது (*The American Heritage Dictionary,* 4th ed. [2006], s.v. "mote"). [3]உத்திரத்தைக் கண்ணில் கொண்ட ஒரு மனிதர், துரும்பைக் கண்ணில் கொண்ட ஒரு மனிதருக்கு உதவி செய்வதாகக் கூறுதல் என்பது, நான் யாருக்கேனும் முடி வளர உதவி செய்வதாக முன்வருதலுக்குத் தோராயமாகச் சமமானதாக உள்ளது. (நான் "அரைமொட்டையன்" என்ற நிலையில் இருக்கிறேன் [லேவியராகமம் 13:41].) [4]அவர் அவனைக் கொலை செய்விக்க தயாராக இருந்தார். [5]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 59. [6]Bertrand Russell, "Brains Trust," BBC radio broadcast, 26 April 1948 (www.stoneforest.org/critical.html.; Internet; accessed 6 May 2008). [7]தொலைபேசிக் கம்பம் என்பது எனது உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமான "விட்டமாக" அல்லது "உத்திரமாக" உள்ளது. உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமான ஒரு சொற்றொடரைப் பயன்படுத்துங்கள். [8]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 29. [9]இது அன்பின் தரம் வாய்ந்த விளக்கங்களில் ஒன்றை மறைமுகமாக உணர்த்துவதாக உள்ளது: "அன்பு என்பது அன்புகூரப்படுபவர்களுக்கு மிகச்சிறந்தவற்றை நாடுகிறது." உண்மையான அன்பு என்பது அன்புகூரப்பட்டவரின் வாழ்வில் பாவத்தை, அவரது ஆத்துமாவைப் பேரழிவுக்கு உட்படுத்தும் பாவத்தைக் காணாது விட முடியாது. மேலும் மத்தேயு 18:15ஐயும் காணவும். [10]இதற்கு மத்தேயு 5:23, 24ஐக் கொண்டு ஒரு இணைகருத்தைத் தரவழைக்க முடியும். அதில் இயேசு, "முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து" என்று கூறினார். பலி செலுத்துதலை ஊக்கம் குன்றச் செய்தல் என்பது கிறிஸ்துவின் விருப்பநோக்கமாக இருக்கவில்லை; மாறாக, பலிசெலுத்தப்படுவதற்கு முன்னர் செய்யப்பட வேண்டியவற்றை அவர் வலியுறுத்தினார்.

[11]சிலர், "பரிசுத்தமானதை" என்பதற்குப் பதிலாக, இவ்வேத வசனத்தில் உள்ள வார்த்தை "காதணி" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்துள்ளனர்; ஆனால் "வேதவசனம் தான் நிற்கிறபடியே ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக [மற்றும் புரிந்துகொள்ளப்படக் கூடியதாக] உள்ளது." (Robert H. Mounce, *Matthew*, New International Biblical Commentary [Peabody, Mass.: Hendrickson Publishers, 1991], 65.) [12]பன்றி என்பது குறிப்பாக "அசுத்தமானது" என்று வகைப்படுத்தப்பட்டிருந்தது (லேவியராகமம் 11:7); நாய் என்பது விரிகுளம்பு உள்ளதாகவும் அசைபோடாததாகவும் இருந்ததால் "அசுத்தமானதாக" இருந்தது (வசனங்கள் 3, 4). [13]மத்தேயு 7:6ம் வசனம், கடைசிப்பகுதி ("திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்") முதல் பகுதியை ("நாய்கள்") குறிக்கிறதான திருப்பப் பட்ட இணைகருத்திற்கு ஒரு உதாரணமாக உள்ளது என்று பல கல்வியாளர்கள் நம்பியிணங்கியுள்ளனர். [14]உலகில் நான் வாழும் பகுதியில், கடந்தகால ஆண்டுகளின் புகழ்பெற்ற "razorback" [பன்றியின் ஒருவகை] பற்றி நாங்கள்

பேச முடியும். உலகத்தின் பிற பாகங்களில் உள்ள பிரசங்கியார்கள், காட்டுப்பன்றி, பெருந்தலைப் பன்றி அல்லது அமெரிக்கக் காட்டுப்பன்றி போன்ற மிருகம் பற்றிக் குறிப்பிடலாம். [15]Didache என்ற ஏவுதல் பெற்றிராத தொடக்க காலக் கிறிஸ்தவப் பதிவேடு, ஞானஸ்நானம் பெற்றிராதவர்களுக்குக் கர்த்தருடைய பந்தி ஒருக்காலும் தரப்படக்கூடாது என்று போதிப்பதற்கு மத்தேயு 7:6ஐப் பயன்படுத்தியது. [16]இது "உங்களிடத்தில் இனி அதிகமாய்ச் செய்ய என்னிடத்தில் ஒன்றும் இருப்பதில்லை" என்று சுட்டிக்காட்டும் அடையாளத்துவ வழியாக இருந்தது. [17]இயேசு தாமே தமது முத்துக்களை பன்றிகளுக்கு முன்னால் போடுவதில் இருந்து விலகியிருந்தார். அவ்வப்போது அவர், பரிசேயர்களுக்கு பதில் அளிக்காதிருந்தார் (மத்தேயு 15:2, 3; 21:23-27). அவர் ஏரோதினிடத்தில் பேசாதிருந்தார் (லூக்கா 23:9). [18]மத்தேயு 25ல் உள்ள "வெள்ளாடுகள்" எனப்படுபவர்கள் இந்த விதியின் எதிர்மறை விளக்கத்தின் அடிப்படையின் மீது இரட்சிக்கப்பட்டிருக்கலாம் (வசனங்கள் 31, 32, 41, 42). [19]வேறொரு இடத்தில் இயேசு, ஒருவர் தமது அயலாரை அன்புகூருதல் என்பது நியாயப்பிமாணம் மற்றும் தீர்க்கதரிசனங்களின் தொகுப்புரையாக உள்ளது என்று செயல்விளைவில் கூறினார் (காண்க மத்தேயு 22:37-40). பொன்விதியானது நமக்கு நமது அயலகத்தவர்களை அன்புகூருவதில் பயன்படுத்த வழிகாட்டுதலைத் தருகிறது. [20]Adapted from J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 265.

[21](கன்றுக்குட்டியின் அல்லது பன்றியின்) ஈரலை வெங்காயத்துடன் கலந்து சமைத்த உணவு, அமெரிக்க நாட்டில் மிகவும் பொதுவான உணவாக உள்ளது. மணம் வீசும் இந்த கலப்புணவு, சிலரால் மகிழ்வுடன் அனுபவிக்கப்படுகிறது ஆனால் மற்றவர்களால் வெறுக்கப்படுகிறது. [22]இந்தியாவில் அஹிம்சைக்கான தேசீய இயக்கத்தின் தலைவரான மகாத்மா காந்தி (1869-1948), இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாபெரும் தேசத்தலைவர்களில் ஒருவராக இருந்தார். [23]எதிர்காலத்தில் சிறப்பாகச் செயல்படத் தீர்மானித்தல் என்பது உண்மையான மனந்திரும்புதலின் பகுதியாக உள்ளது.

17

நீங்கள் தேவன் மீது நம்பிக்கை வைக்க முடியும்

(மத்தேயு 7:7-11)

ஜெபம் - இதைக் காட்டிலும் அதிகம் மதிப்புடைய அல்லது அதிகம் தேவையான பாடக்கருத்து வேறு எதுவும் இல்லை. ஜான் வாலஸ் (1802-1870) என்ற ஸ்காட்லாந்து நாட்டுத் துறவி ஒருவர், "(ஜெபம்) உலகத்தை அசைக்கும் கரத்தை அசைக்கிறது" என்று எழுதினார்.[1] பிரிட்டிஷ் நாட்டுக் கவிஞர் ஆல்ஃபிரெட் டென்னிஸன் (1809-1892), "இந்த உலகம் கனவு காணுபவற்றிற்கும் அதிகமான விஷயங்கள் ஜெபத்தினால் நிறைவேற்றப்படுகின்றன" என்று கூறினார்.[2] அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் அவர்கள் (1809-1865), அமெரிக்க உள்நாட்டு யுத்தத்தின் இருளான நாட்களைக் குறிப்பிட்டு, "நான் என்னை மூழ்கடிக்கும் உறுதிப்பாட்டுடன், வேறு எங்கும் செல்லப் புகலற்ற நிலையில் பலமுறை முழங்காலில் இருக்கும்படி இயக்கப்பட்டு இருக்கிறேன்" என்று கூறினார்.[3]

மலைப்பிரசங்கத்தின் மீதான முந்திய பாடத்தில், நாம் ஜெபம் பற்றிய அறிவுறுத்துதலையும் ஊக்குவிப்பையும் பெற்றுக் கொண்டுள்ளோம். மத்தேயு 6:5-8ல் நாம், எவ்வாறு ஜெபிக்கக் *கூடாது* என்று கற்றுக்கொண்டோம்: நாம் "மனுஷர் காணும்படியாக" ஜெபிக்கக் கூடாது. 6:9-15ல் நாம், "மாதிரி ஜெபம்" பற்றிப் படிக்கையில், எவ்வாறு ஜெபிக்க *வேண்டும்* என்று கற்றுக்கொண்டோம். இப்போது 7:7-11ல், நாம் ஜெபிக்கும்போது *எதை எதிர்பார்க்க வேண்டும்* என்று நமக்குக் கூறப்படும்.

இதற்கு முந்திய பாடத்தில், மத்தேயு 7:7-11 வசனப் பகுதியானது "மற்றவர்களுடன் இணைக்கமாயிருத்தல்" என்பதுடன் தொடர்புடைய வகையில் இருத்தல் பற்றிச் சுருக்கமாகக் கண்ணோக்கினோம்.[4] இந்தப் பாடத்தில் நாம், வலிவார்ந்த இவ்வசனப் பகுதியை அதிக நெருக்கமாகப் பரிசீலனை செய்ய விரும்புகிறோம். ஜெபத்தின் வல்லமை என்ற பாடக்கருத்தின் மீது, இது எனக்கு மிகவும் பிரியமான வசனப் பகுதியாக உள்ளது. ஸ்டேன்லி ஜோன்ஸ் அவர்கள் இதை, "மனிதக் காதுகளில் விழுந்தவற்றிலேயே மிகவும் அந்நியோந்நியமான, மிகவும் கிருபையுள்ள மற்றும் மிகவும் போதுமான (தெய்வீக உதவியின்) அளிப்பு" என்று அழைத்தார்.[5] நான் இந்தப் பாடத்திற்கு "நீங்கள் தேவன் மீது நம்பிக்கை வைக்க முடியும்" என்று தலைப்பிட்டுள்ளேன்.

உங்கள் ஜெபங்கள் பதில் அளிக்கப்படுவதற்கு (7:7, 8)

முதலாவதாக இவ்வசனப்பகுதி, *உங்கள் ஜெபங்கள் பதில் அளிக்கப்படுவதற்கு* நீங்கள் தேவன் மீது நம்பிக்கை வைக்க முடியும் என்று போதிக்கிறது. இயேசு,

“கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்” என்று கூறினார் (வசனங்கள் 7, 8).

விடாமுயற்சியுள்ள வேண்டுதல்கள்

“கேளுங்கள்,” “தேடுங்கள்” மற்றும் “தட்டுங்கள்” என்பவை 7 மற்றும் 8ம் வசனங்களில் உள்ள திறவுகோல் வார்த்தைகளாக உள்ளன. “கேளுங்கள்” என்ற வார்த்தை, *விருப்பத்தை* விளக்கப்படுத்துகிறது. பிலிப் புரூக்ஸ் அவர்கள், ஜெபத்தை “தேவனை நோக்கித் திரும்பிய விருப்பம்” என்று விளக்கப்படுத்தினார்.[6] “கேளுங்கள்” என்ற வார்த்தை தேவனைச் சார்ந்திருத்தலையும் சுட்டிக்காண்பிக்கிறது.[7] “தேடுங்கள்” என்ற வார்த்தை *அவசரத்தின் கருத்துணர்வு* என்ற பொருளைக் கொண்டுவருகிறது. எரேமியா 29:13ல் கர்த்தர், “உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்” என்று கூறினார். “தட்டுங்கள்” என்ற சொற்றொடர் *விடாமுயற்சி* என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. லூக்கா சுவிசேஷத்தில் உள்ள இதன் இணை வசனப் பகுதியானது (11:9-13), எதிர்பாராத வகையில் தமது வீட்டிற்கு வந்த விருந்தாளிக்கு உணவைப் பெற முயற்சிக்கையில் “இல்லை” என்பதைப் பதிலாக எடுத்துக்கொள்ளாத மனிதரின் உவமையைத் (வசனங்கள் 5-8) தொடர்ந்து வருகிறது.

“கேளுங்கள்” என்பதிலிருந்து “தேடுங்கள்” மற்றும் “தட்டுங்கள்” என்பவற்றிற்கான வளர்நிலையில், வலிவார்ந்த தன்மையின் அதிகரிப்பு உள்ளது என்று பெரும்பான்மையானவர்கள் ஒப்புக்கொள்கின்றனர். இந்த வளர்நிலையை, தனது முழங்காலை இடித்துக் கொண்டு, தனது தாயின் கவனிப்பை விரும்புகிற ஒரு பிள்ளை பற்றிய விபரத்துடன் ஒரு எழுத்தாளர் விவரித்தார்.[8] அந்தப் பிள்ளை அவளை அழைக்கிறான், அவள் வருமாறு கேட்டுக்கொள்கிறான். பதில் இல்லையென்றால், அவன் அவளைத் தேடுகிறான். அவள் தனது அறையில் இருக்கிறாள் என்பதை அவன் கண்டறிந்தால், அவள் பதில் அளிக்கும் வரையில் அந்த அறைக்கதவின் மீது அவன் பலமாகத் தட்டுகிறான். வேறொரு எழுத்தாளர், பழைய நண்பர் ஒருவரைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யும் மனிதரைப் பற்றிய விவரிப்பை பயன்படுத்தினார்.[9] அவர் நண்பர் இருக்குமிடம் பற்றிக் கேட்கிறார். அவர் வாழும் இடத்தை அவர் தேடுகிறார். பின்பு அவரது வீட்டின் கதவைத் தட்டுகிறார்.

யாக்கோபு, “நீங்கள் விண்ணப்பம்பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை” என்று எழுதினார் (4:2). இருப்பினும் இயேசு, நாம் ஒருமுறை கேட்டுவிட்டுப் பின்பு அமைதியாக இருந்துவிட வேண்டும் என்று விரும்பவில்லை. நாம் தொடர்ந்து கேட்க வேண்டும் மற்றும் கேட்பதை நாம் ஒழித்துவிடக் கூடாது என்று அவர் நம்மிடத்தில் விரும்புகிறார். “கேளுங்கள்,” “தேடுங்கள்” மற்றும் “தட்டுங்கள்” என்பவை யாவும் கிரேக்க மொழியில் நிகழ்கால வினைச் சொல்லில் உள்ளன, இது தொடர்ந்து நடைபெறும் செயலைச் சுட்டிக்காண்பிக்கிறது. AB வேதாகமத்தில் “தொடர்ந்து கேளுங்கள்,” “தொடர்ந்து தேடுங்கள்” மற்றும் “தொடர்ந்து தட்டுங்கள்” என்றுள்ளது. இயேசு தமது

சீஷர்களுக்கு, "சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும்" என்று போதித்தார் (லூக்கா 18:1).

வல்லமை நிறைந்த வாக்குத்தத்தம்

நாம் ஜெபத்தில் விடாமுயற்சியுடன் இருந்தால் பின்வரும் ஆச்சரியம் நிறைந்த வாக்குத்தத்தம் (நமக்கு) உள்ளது: "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்" (வசனம் 7). செய்தியை நாம் தவற விடாது இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்காக, இந்த வாக்குத்தத்தத்தைக் கர்த்தர் திரும்பவும் கூறினார், மற்றும் சாத்தியமானால் அதை இன்னும் அதிக உறுதியாக்கினார்: "ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்" (வசனம் 8).

இயேசுவின் வார்த்தைகள் வாழ்வின் எல்லா வட்டாரங்களிலும் - நாம் ஒரு திறனைத் தேடிப் பெறுதல், பணம் ஈட்டுதல், நமது உடல்நலத்தை மேம்படுத்துதல் அல்லது விரும்பப்படுகிற மற்ற சில இலக்குகளை அடைதல் போன்ற எதுவாக இருப்பினும் அவை எல்லாவற்றிலும் - ஓரளவிற்கு உண்மையாக உள்ளன. நாம் சிலவற்றை விரும்பினால், பொதுவாக நாம் அதைப் பெற நாடுவதில் விடாமுயற்சியுடன் இருக்க வேண்டியுள்ளது. ஒருசில இலக்குகள் உண்மையான தேடுதல் இன்றி அடையப்படுகின்றன. பொருளாதாய உலகத்தில் பொதுவாக உண்மையாயிருக்கும் விஷயமானது ஆவிக்குரிய வட்டாரத்தில் இன்னும் அதிக உண்மையாக உள்ளது. நாம் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்று விரும்பினால், நாம் அதைக் கேட்க வேண்டும், உண்மையாக நாடவேண்டும் மற்றும் நாம் தட்டுவதில் விடாமுயற்சியுடன் இருக்க வேண்டும். இவை எல்லாவற்றையும் நாம் செய்வோம் என்றால், நாம் பெறுவோம், நாம் கண்டடைவோம் மற்றும் ஆசீர்வாதங்களின் கதவு விரியத் திறக்கப்படும்.

வேதாகமத்தில் எந்த விஷயமாவது தெளிவாகப் போதிக்கப்பட்டுள்ளது என்றால், அது தேவன் ஜெபத்திற்குப் பதில் அளிக்கிறார் என்பதே ஆகும். "... வேதாகமத்தில் குறிப்பிட்ட விஷயங்களுக்கான 667 ஜெபங்களில், கண்டுபிடிக்கப்படக் கூடிய வகையில் 454 பதில்கள் உள்ளன."[10] நான் போதிக்கும் வேதாகம வகுப்புகளில், தேவன் ஜெபத்திற்குப் பதில் அளித்தல் மீதான, அவர்களுக்குப் பிரியமான வசனப் பகுதிகளை நான் கேட்டேன், அதற்கு அவர்கள் பகிர்ந்துகொண்ட சில வசனப்பகுதிகள் பின் வருமாறு:[11]

> நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார் (சங்கீதம் 34:4).
>
> ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன் (மாற்கு 11:24).
>
> நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது (யாக்கோபு 5:16ஆ).

நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம் (1 யோவான் 3:22அ).

தேவன் ஜெபத்திற்குப் பதில் அளிக்கிறார் என்பதைக் காண்பிக்க, மற்ற பல வசனப்பகுதிகள் பட்டியலிடப்பட முடியும், ஆனால் இந்த சத்தியத்தை நமது வேத வசனப் பகுதியைக் காட்டிலும் அதிகம் தெளிவாகவோ அல்லது மாபெரும் வல்லமையுடனோ, வேறு எந்த ஒரு வசனமும் போதிப்பதில்லை: "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் *கொடுக்கப்படும்*; தேடுங்கள், அப்பொழுது *கண்டடைவீர்கள்*; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் *திறக்கப்படும்*." டி. மார்ட்டின் லாயிட் ஜோன்ஸ் அவர்கள், "நமது வாழ்வின் எல்லா நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் பேரழிவுகள் ஆகியவற்றை எதிர்கொள்ளக் கூடுவதற்கு இதைக் காட்டிலும் மேன்மையான, அதிகம் மகிழ்வூட்டுகிற அல்லது அதிகம் ஆறுதல் தருகிற கூற்று ஒன்றை என்னால் கற்பனை செய்து பார்க்க இயலவில்லை. ... இது வேதாகமத்தில் மாத்திரமே கண்டறியப்படுவதாக உள்ள, மாபெரும் (பல கருத்துக்கள்) உள்ளடக்கமான மற்றும் கிருபையுள்ள வாக்குத்தத்தங்களில் ஒன்றாக உள்ளது" என்று எழுதினார்.[12]

மக்களில் சிலர் பின்வருமாறு மறுப்புரை தெரிவிக்கிறார்கள்: "ஒரு நிமிடம் பொறுங்கள்! தேவன் எனது ஜெபத்திற்குப் பதில் அளித்திருக்கவில்லை! நான் கேட்பதினால் குரல் கம்மிப்போயிருக்கிறேன், நான் தேடுவதினால் இளைப்படைந்திருக்கிறேன், மற்றும் தட்டுதலினால் எனது கைமுட்டிகள் காயப்பட்டுப் போயிருக்கின்றன. ஆனால் நான் பெற்றுக்கொள்ளவோ அல்லது கண்டடையவோ இல்லை மற்றும் கதவு இன்னமும் இறுக்கமாக மூடப்பட்டே இருக்கிறது!" மத்தேயு 7:7-11 போன்ற வசனப் பகுதிகள், தேவன் ஜெபத்திற்குப் பதில் அளிக்கிறார் என்று போதிக்கின்றன, ஆனால் அவைகள், ஜெபம் என்பது, நமது ஒவ்வொரு விருப்பத்திற்கும் "ஆம்/சரி" என்று கூறும்படி தேவனைக் கட்டாயப்படுத்துகிற மந்திர உச்சரிப்பாக உள்ளது என்று போதிப்பதில்லை. மற்ற வசனப்பகுதிகள், ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஜெபத்திற்கு நிபந்தனைகள் உள்ளன என்று போதிக்கின்றன.

நாம் தேவனுடைய சித்தத்தின்படி கேட்க வேண்டும். "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்" (1 யோவான் 5:14).

நாம் விசுவாசத்துடன் கேட்க வேண்டும். "ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக" (யாக்கோபு 1:6, 7).

நாம் சுயநலமற்ற வகையில் ஜெபிக்க வேண்டும். "நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிற படியினால், பெற்றுக்கொள்ளமாமலிருக்கிறீர்கள்" (யாக்கோபு 4:3).

மறுப்புரையாளர்கள் மீண்டும் பின்வருமாறு பேசுகின்றனர்: "ஜெபத்திற்கு நிபந்தனைகளா? ஆக, ஜெபங்கள் என்பவை எல்லா

நிபந்தனைகளையும் நிறைவேற்றினால் மாத்திரமே அவற்றிற்குத் தேவன் பதில் அளிக்கிறார் என்றாகிறது. அங்கு ஒரு கண்ணி இருந்திருக்க வேண்டும் என்று நாம் அறிந்தேன்!'' இந்த விஷயத்தைத் தீவிரமாகச் சிந்தித்துப் பாருங்கள், மற்றும் நிபந்தனைகள் உள்ளன என்பதற்காக நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள் என்று நான் நம்புகிறேன். ஒவ்வொரு வேண்டுகோளையும் உடனடியாக தேவன் நிறைவேற்றுகிறார் என்ற கருத்தானது, ஒரு கனவு நனவாகிறது போன்றதாக ஒலிக்கிறது, ஆனால் அப்படிப்பட்ட ஒரு விவாதம் விரைவிலேயே பயங்கரக் கனவாகிவிடும். அப்பத்தையும் மீன்களையும் நாம் கேட்பதாக நினைத்துக்கொண்டு, அடிக்கடி நாம் கற்களையும் பாம்புகளையுமே கேட்கிறோம். அலெக் மோட்யர் பின்வருமாறு எழுதினார்:

> நாம் கேட்பது எதுவாக இருப்பினும் அதைக் தருவதாகத் தேவன் உறுதிப்படுத்தினார் என்பது விஷயமாக இருந்தால், பின்பு ஒரு விஷயத்திற்காக நான் திரும்பவும் ஒருக்காலும் ஜெபிக்காதிருப்பேன், ஏனென்றால் தேவனிடத்தில் எதையாவது கேட்பதற்கு எனது சொந்த ஞானத்தில் நான் போதுமான தைரியம் கொண்டிருக்கமாட்டேன், மற்றும் இதை நீங்கள் ஆழ்ந்து சிந்தித்தால் நீங்கள் இதை ஒப்புக்கொள்வீர்கள் என்று நான் நினைக்கிறேன். தேவன் ஜெபங்கள் பற்றிய தமது வாக்குத்தத்தங்களினால், நாம் கேட்கிற யாவற்றையும் நாம் கேட்கும் போதெல்லாம், நம் நிபந்தனைகளின்படியே மிகச்சரியாகக் கொடுப்பதாக உறுதி அளித்திருந்தால், அது மனித ஞானத்தின் பலவீனத்தின் மீது சகிக்க இயலாத சுமையைச் சுமத்துவதாக இருக்கும். அந்த சுமையை நம்மால் எவ்வாறு சுமக்க இயலும்?[13]

இருப்பினும் நமது வேதபாட வசனத்தின் அற்புதமான வாக்குத்தத்தத்தில் இருந்து நாம் வழி விலகாது இருப்போமாக: தேவன் தமது பிள்ளைகளின் ஜெபங்களுக்குப் பதில் அளிக்கிறார். அவர் எப்போதும் ''ஆம்/சரி'' என்று கூறாதிருக்கலாம், ஆனால் அவர் எப்போதும் பதில் அளிக்கிறார். சாத்தியமான தெய்வீக பதில்களை விளக்கியுரைக்க ஒரு பிரசங்கியார் பின்வரும் எளிய புறக்குறிப்பைப் பயன்படுத்தினார்:

- வேண்டுகோள் தவறாக இருந்தால், தேவன் *''இல்லை''* என்று கூறுகிறார்.
- காலம் தவறாக இருந்தால், தேவன் ''*தாமதமாக* (தருவேன்)'' என்று கூறுகிறார்.
- நீங்கள் தவறானவர்களாக இருந்தால், தேவன் *''வளருங்கள்''* என்று கூறுகிறார்.
- ஆனால் வேண்டுகோள் சரியாக இருந்து, நேரம் சரியாக இருந்து மற்றும் நீங்களும் சரியாக இருந்தால், தேவன் *''செல்லுக!''* என்று கூறுகிறார்.[14]

வாழ்வு என்பது ஒரு பயணமாக உள்ளது, இது குழப்பங்களும் நிச்சயமற்ற தன்மைகளும் நிறைந்த ஒரு பயணமாக உள்ளது என்பதே வாழ்வைப் பற்றிய வேதாகமத்தின் கண்ணோட்டமாக உள்ளது.[15] இந்த உலகத்தில் ஏராளமான பிரச்சனைகளை நாம் சந்திக்கிறோம் என்பது அவற்றைச் சந்திக்க நாம் தயாராக இருக்கிறோமா இல்லையா என்பதைக் காட்டிலும் அதிகம் பொருட்படுத்தக்

கூடியதாக இருப்பதில்லை. தேவன் நமது ஜெபங்களுக்குப் பதில் அளிக்கிறார் என்ற உறுதிப்பாடு நமக்கு உதவுவதாக இருக்கும்.

உங்களுக்கு நன்மையானவைகளை மாத்திரம் கொடுப்பதற்கு (7:9-11)

உங்கள் ஜெபங்கள் பதில் அளிக்கப்படுவதற்கு நீங்கள் தேவன்மீது நம்பிக்கையாக இருக்க முடியும். நீங்கள் *உங்களுக்கு நன்மையானவற்றை மாத்திரமே கொடுப்பாரென்றும்* தேவன்மீது நம்பிக்கை வைக்க முடியும்.

உலகப்பிரகாரமான பிதாக்கள் (வசனங்கள் 9, 10).

நமது வேதபாட வசனத்தின் அடுத்த பகுதியில் இயேசு, பூமிக்குரிய தகப்பன்களைப் பற்றிப் பேசினார்: "உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா?" (வசனங்கள் 9, 10).[16] மலைப்பிரசங்கம் கலிலேயாவில் பிரசங்கிக்கப்பட்டது. அப்பமும் மீன்களும் கலிலேயாக் கடலைச் சுற்றிலும் இருந்த பகுதிகளில் மிகவும் பொதுவான உணவுகளாக இருந்தன. (யோவான் 6:9ல் காணப்படும் சிறுவனின் மதிய உணவு நினைவிருக்கிறதா?) மேலும் கடற்கரை ஓரத்தில் தண்ணீரால் மென்மையாக ஆக்கப்பட்டிருந்த சுண்ணாம்புக்கல் பாறைகள் ஏராளமாக இருந்தன மற்றும் அந்தப் பாறைகளின் ஊடே பலவகையான பாம்புகள் ஒளிந்திருந்தன.

இயேசுவின் முதல் விவரிப்பு, ஒரு மகன் தனது தந்தையிடம் அப்பம் கேட்டல் என்பதைப் பற்றியதாக இருந்தது. செயல்விளைவில் இயேசு, "அன்பான தந்தை ஒருவர் அந்த வேண்டுகோளுக்கு, தமது மகன் மீது கொடூரமான நகைச்சுவை ஒன்றை விளையாடுவதன் மூலம் பதில் அளிப்பாரா? அவர் தமது மகனின் கையில் உருண்டை வடிவமான, மரநிறக் கல்[17] ஒன்றை வைப்பாரா?" என்றே கேட்டார். "வைக்கமாட்டாரே!"[18] என்பதே ஏவுதல் பெற்ற பதிலாக உள்ளது. இரண்டாவது விவரிப்பில் மீனுக்குப் பதிலாகப் பாம்பைப் பயன்படுத்துகையில், நகைச்சுவையானது மிகவும் தீவிரமானதாகத் திரும்புகிறது. சட்டப்படி, பாம்பு என்பது மீனைப் போன்றிராதபடியால், "பாம்பு" என்பது "செதில்கள் இல்லாத, ஈல் போன்ற மீனை" குறிப்பிடலாம் என்று சில எழுத்தாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.[19] யூதர்கள், செதில்கள் இல்லாத மீன்களை உண்ணத் தடை செய்யப்பட்டிருந்தனர் (காண்க லேவியராகமம் 11:12). ஒரு தந்தை தமது மகனுக்கு, செதில்கள் இல்லாத மீனைக் கொடுத்தார் என்றால், அவர் அவனைச் சடங்காச்சார ரீதியாக அசுத்தமானவன் ஆக்குவார். ஒரு பாம்போ அல்லது ஈல் போன்ற மீனோ, எதுவாக இருந்தாலும் அது ஒரு இடர்நிறைந்த நகைச்சுவையாக உள்ளது - இது உலகப்பிரகாரமாகவோ அல்லது ஆவிக்குரிய வகையிலோ, எப்படிப் பார்த்தாலும் இடர்நிறைந்ததாக உள்ளது. பொறுப்புள்ள ஒரு தந்தை தமது மகனுக்கு ஒருக்காலும் ஒருக்காலும் அவ்வாறு செய்ய மாட்டார் என்று இயேசு கூறினார்.

பரலோகத்தில் உள்ள நமது தந்தை நம்மை அவ்வாறு நடத்துவதில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்று இயேசு விரும்பினார். இயேசுவின் நாட்களில் இருந்த புறதெய்வ வணக்கத்தார்கள், வேதனைநிறைந்த மற்றும்

துன்புறுத்துதல் நிறைந்த தந்திரமான சூழ்ச்சிகளை விளையாண்ட தெய்வங்களில் நம்பிக்கை வைத்திருந்தனர். அழிந்து போகும் மனிதன் மீது காதலில் விழுந்த ஒரு பெண்தெய்வத்தைப் பற்றிக் கிரேக்கப் புராணம் கதை சொன்னது.[20] அவள் தனது காதலனுக்குத் தரவிரும்பும் எந்தப் பரிசையும் தருவதாகத் தேவர்களின் அரசன் அறிவித்தான். அவள் தனது காதலன் என்றென்றைக்கும் உயிருடன் இருக்க வேண்டும் என்று கேட்டாள் - ஆனால் அவன் இளைஞனாகவே நிலைத்திருக்க வேண்டும் என்று கேட்கத் தவறிவிட்டாள். அவன் முதியவனாக முதியவனாக வளர்ந்தான், ஆனால் அவனால் இறக்க இயலாதிருந்தது. அந்த வரமே சாபமாகி விட்டது. உண்மையான தேவன் அவ்வாறு *செய்வதில்லை.*

பரலோகத்திலிருக்கிற பிதா (வசனம் 11)

இயேசு தமது நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்தத் தயாரானார். மனிதப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் வேண்டுகோள்களுக்கு எவ்வாறு பதில்செயல் செய்வார்கள் என்பதைப் பற்றிப் பேசியபின்பு அவர், "ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" என்று கூறினார் (வசனம் 11).

''தேவனோடு ஒப்பிடும்போது, எல்லா மனிதர்களும், இரக்கமான பெற்றோர்களும்கூட, பொல்லாதவர்களாக உள்ளனர்.''[21] நாம் யாவருமே குறைவுள்ளவர்களாக இருக்கிறோம். எனது மகள்கள் வளர்ந்துகொண்டிருந்தபோது நான் ஒரு நல்ல தந்தையாக இருக்க என்னால் இயன்ற அளவு மிகப் சிறப்பாக முயற்சிசெய்தேன். தரப்பட்ட எந்த வேளையிலும் அவர்களுக்கு மிகச்சிறந்தது என்று நான் நினைத்ததைச் செய்தேன். இப்போது நான் திரும்பிக் காணுகையில், நான் செய்த பல தவறுகளை நான் காணுகிறேன், மற்றும் நான் இன்னும் அறியாதிருக்கிற மற்ற தவறுகளையும் நான் செய்திருப்பேன் என்பது உறுதி. மனிதப் பெற்றோர்கள் கொண்டுள்ள குறைபாடுகளை நமது பரலோக பிதா கொண்டிருப்பதில்லை என்பதற்காக நாம் எவ்வளவு நன்றி நிறைந்தவர்களாக இருக்க வேண்டும்! நம்மைப் போல் இன்றி ...[22]

(1) *தேவன் தமது பிள்ளைகளுக்கு மிகச்சிறந்தது என்ன என்பதை அறிகிறார்.* எனது மகள்களுக்கு மிகச்சிறந்தது என்ன என்பதை அறிதல் எனக்கு எப்போதுமே சுலபமாக இருந்ததில்லை, ஆனால் எது மிகச்சிறந்தது என்பதைத் தேவன் எப்போதுமே அறிகிறார். ஆர். டபில்யு. ஜான் ஸ்டாட் அவர்கள், "... நாம் (தேவனிடத்தில்) நல்ல விஷயங்களைக் கேட்டால், அவர் அவற்றைத் தருகிறார்; நல்லவையாக இராதவற்றை (ஒன்று தங்களில் நல்லவையாக இராதவை அல்லது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, உடனடியாகவோ அல்லது நித்தியத்திற்கோ, நமக்கோ பிறருக்கோ நல்லவையாக இராதவற்றை) கேட்டால், அவற்றைத் தர அவர் மறுக்கிறார்." என்று எழுதினார். ஸ்டாட் அவர்கள், தமது சிந்தனையைப் பின்வரும் வார்த்தைகளுடன் முடித்தார்: "இவற்றிற்கிடையிலான வேறுபாட்டைத் தேவன் மாத்திரமே அறிகிறார்.''[23]

(2) *தேவன் தமது பிள்ளைகளுக்கு எப்போதுமே நல்லவற்றைத் தரக்கூடியவராக இருக்கிறார்.* எனது பிள்ளைகளுக்கு நான் செய்ய

முடிந்தவற்றைப் பற்றிய விஷயத்தில், நேரம், சக்தி மற்றும் நிதிநிலை ஆகியவற்றில் நான் மட்டுப்பட்டவனாக இருந்தேன். தேவன் அந்த வரையறைகளைக் கொண்டிருப்பதில்லை. பவுல் ''மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாவும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்'' என்று எழுதினார் (2 கொரிந்தியர் 9:8).

(3) *தேவன் தமது பிள்ளைகளிடத்தில் எப்போதுமே இரக்கம் கொண்டிருக்கிறார்.* நீங்கள் எப்போதாவது உங்கள் பிள்ளைகளிடத்தில் பொறுமை இழந்துபோய், (கூறியதற்காக) நீங்கள் வருத்தமுற்ற சிலவற்றைக் கூறி அல்லது செய்து இருக்கிறீர்களா? அப்படிப்பட்ட தருணங்களை திரும்ப நினைவுகூர நான் விரும்புவதில்லை, ஆனால் அவ்வப்போது, குறிப்பாக நான் இளைப்படைந்து அல்லது சலிப்படைந்து இருக்கையில், நான் எனது பிள்ளைகளிடத்தில் பொறுமை இழந்து போயிருக்கிறேன். மனிதப் பெற்றோர்களின் இந்தக் குறைபாடுகளைத் தேவன் கொண்டிருப்பதில்லை (காண்க ஏசாயா 49:15).

(4) *தேவனுடைய பிள்ளைகளுக்குத் தேவன் தேவைப்படுகையில் அவர் எப்போதுமே அவர்களுக்கு அருகாமையில் இருக்கிறார்.* எனது மகள்களில் ஒருத்திக்கு எனது நேரடி இருப்புத் தேவைப்படுகையில், நான் அவளிடத்தில் உடனே செல்ல இயலாத வேளைகள் எனது வாழ்வில் இருந்துள்ளன. இருப்பினும் தேவன் தமது பிள்ளைகளுக்கு எப்போதுமே அருகில் இருக்கிறார், அவர்களுக்கு "நன்மையானது எதுவோ அதை" கொடுக்க அவர் எப்போதுமே தயாராக இருக்கிறார். கர்த்தர், "சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன்" என்ற நிலையில் இருக்கிறார் (எரேமியா 23:23).

தேவன் ''தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக்" கொடுக்கிறார் என்று இயேசு கூறியபோது, அவர் தமது சிந்தையில் கொண்டிருந்த நன்மையானவைகள் யாவை? லூக்கா சுவிசேஷத்தில் உள்ள இணைவசனப் பகுதியில் "நன்மையானவைகளை" என்பதற்குப்பதிலாக, "பரிசுத்த ஆவியை" என்ற வார்த்தை உள்ளது (11:13). லூக்கா 11ல் இவ்வசனப் பகுதியில், தேவன் தமது பிள்ளைகளுக்குத் தருகிற ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் மீது வலியுறுத்தம் உள்ளது.[24] முன்பே குறிப்பிடப் பட்டபடி, இவைகள் அவர் நமக்குத் தருகிற மிகவும் முக்கியமான "நன்மையானவைகளாக" உள்ளன. இருப்பினும் மத்தேயு 7ம் அதிகாரத்தில் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் நிச்சயமாகவே உள்ளடக்கப் பட்டுள்ளன. 6ம் அதிகாரத்தில், தேவனுடைய இராஜ்யத்தையும் நீதியையும் முதலாவதாக தேடுகிறவர்களுக்கு, வாழ்வின் சரீரப்பிரகாரமான தேவைகளை அவர் தருகிறார் என்ற வாக்குத்தத்தம் ஏற்படுத்தப்பட்டது (6:33). நாம் சரீரப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய என்ற இரண்டு ஆசீர்வாதங்களுக்காவும் ஜெபிக்க வேண்டும் என்று இயேசு தமது மாதிரி ஜெபத்தில் குறிப்பிட்டார் (6:11, 12). ஆகையால், "நன்மையானவைகள்" என்ற சொற்றொடரானது, நமது பரலோக பிதாவினிடம் இருந்து நாம்பெறுகிற நன்மையான கொடைகள் எல்லாவற்றையும் குறிப்பிடுகிறது என்பது உறுதி. யாக்கோபு எழுதியது போன்று, "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து

இறங்கிவருகிறது ...” (யாக்கோபு 1:17).

சிலவேளைகளில் கிறிஸ்தவர்கள், “ஆனால் நான் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறேன், மற்றும் அவர் எனக்கு நன்மையானவைகளைக் கொடுத்திருக்கவில்லை! உண்மையைக் கூறுவதென்றால், சமீபத்தில் உண்மையிலேயே மிகவும் மோசமான சில விஷயங்கள் எனக்கு நடந்துள்ளன!” என்று மறுப்புரை தெரிவிக்கின்றனர். “மோசமான விஷயங்கள்” ஏன் நடக்கின்றன என்பதைத் திருப்திகரமாக விளக்கக்கூடிய திறமையும் உட்கண்ணோக்கும் எனக்கு இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், ஆனால் நான் அதைக் கொண்டிருப்பதில்லை. சிந்தையில் காத்துக்கொள்ளப் பல சத்தியங்களை ஆலோசனையாகக் கூறுவதையே என்னால் செய்ய முடியும்.

முதலாவது, நமக்கு மிகச்சிறந்தது என்ன என்பதை நாம் எல்லா வேளைகளிலும் அறிவதில்லை. நாம் அறிந்திருப்பதாக நாம் நினைக்கலாம். நமது இருப்பின் ஒவ்வொரு இழையிலும் நாம் அறிந்திருப்பதாக நிச்சயித்திருக்கலாம் - ஆனால் நாம் அறிந்திருப்பதில்லை. எனது நான்கு வயதுப் பேரன், பிஸ்கட்டுகளை மாத்திரம் உண்ணுதல் நல்ல விஷயமாக இருக்கிறது என்று நினைக்கிறான், ஆனால் அவன் அதில் தவறான மனப்போக்கைக் கொண்டிருக்கிறான். சத்துணவு பற்றி எனது பேரன் அறிந்துள்ளது (குறைவான விஷயம்) போலவே, மனிதர்கள் என்ற வகையில் நாம் உண்மையிலேயே நமக்கு “நல்லது” எது என்பது பற்றிச் சிறிதளவே அறிந்திருக்கிறோம்.

இரண்டாவது, மோசமானது என்று நினைக்கும் விஷயம் ஒரு ஆசீர்வாதமாக மாறலாம். சங்கீதக்காரர், “நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன்” என்று எழுதினார் (சங்கீதம் 119:71). ஒருவேளை நீங்கள், அமெரிக்க உள்நாட்டுப் போரின்போது, அறியப்படாத படைவீரர் ஒருவர் கூறியதாகக் கருதப்படும் பின்வரும் வார்த்தைகளைக் கேள்விப்பட்டு இருக்கலாம்:[25]

> அவர் தாம் சாதிக்கும் பலத்தைக் கேட்டார்; அவர் கீழ்ப்படியும் வண்ணம் பலவீனமாக்கப்பட்டார்.
> அவர் பெரிய விஷயங்களைச் செய்யும்படி உடல்நலத்தைக் கேட்டார்; அவர் சிறந்த விஷயங்களைச் செய்யும் வண்ணம் நோய்த்தன்மை தரப்பட்டது.
> அவர் மகிழ்ச்சியாக இருக்கும்படி செல்வம் கேட்டார்; அவர் ஞானியாகும் வண்ணம் தரித்திரம் தரப்பட்டது.
> அவர் மனிதரின் புகழ்ச்சியைக் கொண்டிருக்கும்படி அதிகாரம் கேட்டார்; அவர் தேவன் தமக்குத் தேவை என்று உணரும் வண்ணம் பலவீனம் தரப்பட்டது.
> அவர் வாழ்வை மகிழ்வுடன் அனுபவிக்கும்படி எல்லா விஷயங்களையும் கேட்டார்; அவர் எல்லா விஷயங்களையும் மகிழ்வுடன் அனுபவிக்கும்படி வாழ்வு தரப்பட்டது.
> அவர் தாம் கேட்ட எதையும் பெற்றிருக்கவில்லை; ஆனால் தாம் நம்பிக்கையாயிருந்த எல்லாம் பெற்றுக்கொண்டார்.
> அவரது ஜெபம் பதில் அளிக்கப்பட்டது.
> அவர் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தார்.

மூன்றாவது, நமக்கு நிறைவாக மிகச்சிறந்தது எது என்பதைத் தேவன் மாத்திரமே அறிகிறார். ஆகவே நாம் எல்லா விஷயங்களையும் அவரது கரங்களில் விட்டுவிட வேண்டும். நாம் இயேசுவைப் போன்றே, "என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று ஜெபிப்பது அவசியமாக உள்ளது (லூக்கா 22:42ஆ).

முடிவுரை

நாம் கேட்க வேண்டும் மற்றும் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். நாம் தேட வேண்டும் மற்றும் தொடர்ந்து தேடிக்கொண்டிருக்க வேண்டும். நாம் தட்ட வேண்டும் மற்றும் தொடர்ந்து தட்டிக்கொண்டிருக்க வேண்டும். தேவன் ஒரு கஞ்சத்தனமான கருமியைப் போல இருக்கிறார் என்பதால், நமக்கு நன்மையான விஷயங்ளைக் கொடுக்கும்படி தேவனை இணங்கச் செய்வதற்கு நாம் இதைச் செய்ய வேண்டியுள்ளதா? இல்லை, நமது வேதபாட வசனப்பகுதியை முழுமையாகப் பார்க்கும்போது நாம், தேவன் பெருந்தன்மையுள்ளவராகவும் திறந்த மனம் கொண்டவராகவும் இருக்கிறார் என்பதில் நாம் தைரியமான நம்பிக்கை உள்ளவர்களாக இருப்பதால், நாம் ஜெபத்தில் விடாமுயற்சியுடன் இருக்க வேண்டும் என்று இயேசு போதித்ததைக் காணுகிறோம். நாம் தொடர்ந்து கேட்டுக்கொண்டு தேடிக்கொண்டு, தட்டிக்கொண்டு இருந்தால் நாம் *பெறுவோம்*, நாம் கண்ட*டைவோம்* மற்றும் நமக்குத் திற*க்கப்படும்*.

இது, நாம் கேட்கிற எந்த விஷயத்தையும், மற்றும் எல்லா விஷயங்தையும், நாம் கேட்டபடியே மிகச் சரியாகவும், நாம் கேட்ட அந்த வேளையிலேயும் தேவன் தருவார் என்று அர்த்தப்படுத்துகிறதா? இல்லை, தேவன் நமது ஒவ்வொரு பிடிவாதமான விருப்பத்தையும் கொடுத்து நம்மைச் செல்லம் கொஞ்சும் தாத்தாவாக இருப்பதில்லை. அவர் நாம் கொண்டிருக்க நல்லவற்றை மாத்திரமே நமக்குத் தருகிறார். அதே வேளையில் தேவன் தமது பிள்ளைகளிடத்தில் சூழ்ச்சியாக விளையாடுகிற அல்லது ஆசை காட்டி மோசம் செய்கிற அற்ப ஆவியுள்ள நடைமுறை நகைச்சுவையாளராக இருப்பதும் இல்லை. நீங்கள் தேவன் மீது *நம்பிக்கை வைக்க* முடியும். நீங்கள் உங்கள் ஜெபங்களுக்குப் பதில் அளிக்க அவர் மீது நம்பிக்கை வைக்க முடியும். அவர் உங்களுக்கு நன்மையான விஷயங்களை மாத்திரம் தருவார் என்று அவர் மீது நீங்கள் நம்பிக்கை வைக்க முடியும்.

இருப்பினும், மத்தேயு 7:7-11ன் வாக்குத்தத்தங்கள் ஒரு தகப்பன்/பிள்ளை உறவுமுறையின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். அவற்றை உங்களுக்கு ஏற்புடையவைகள் ஆக்கிக் கொள்வதற்கு, நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இருக்க வேண்டும். நீங்கள் அவருடைய பிள்ளையாக இருக்கிறீர்களா? நீங்கள் விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் அவரிடத்திற்கு வந்திருக்கிறீர்களா? பவுல், "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" என்று எழுதினார் (கலாத்தியர் 3:26, 27). நீங்கள் (தேவனுடைய) பிள்ளையாக இருந்தால், நீங்கள்

விசுவாசம் நிறைந்த பிள்ளையாக இருக்கிறீர்களா? நீண்ட நாட்களுக்கு முன்னர் தேவன் தம்மீது விசுவாசம் கொண்டிராத தமது பிள்ளைகளுக்கு, "சீர்கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள்; உங்கள் சீர்கேடுகளைக் குணமாக்குவேன்" என்று கூறினார் (எரேமியா 3:22அ). நீங்கள் தேவனுடைய பிள்ளையாக வேண்டியுள்ளதென்றால், அல்லது நீங்கள் தேவனிடத்திற்குத் திரும்ப வேண்டிய அவிசுவாசம் நிறைந்த பிள்ளையாக இருந்தால், இதுவே வேளையாக உள்ளது (2 கொரிந்தியர் 6:2).

குறிப்புகள்

[1]John A. Wallace (http://www.fullbooks.com/The-World-s-Best--Poetry-Volume-108.html. Internet; accessed 26 July 2008). [2]Alfred Tennyson, *Morte d'Arthur*, line 247; quoted in Frank S. Mead, comp. and ed., *The Encyclopedia of Religious Quotations* (Westwood, N.J.: Fleming H. Revell Co., 1965), 348. [3]Abraham Lincoln; quoted in Frank S. Mead, comp. and ed., *The Encyclopedia of Religious Quotations* (Westwood, N.J.: Fleming H. Revell Co., 1965), 342. [4]*"மற்றவர்களுடன் இணக்கமாக இருத்தல்" என்ற பாடத்தில் உள்ள, மத்தேயு 7:7-11ன் கலந்துரையாடலை மறுகண்ணோட்டமிட நீங்கள் விரும்பலாம்.* [5]E. Stanley Jones, *The Christ of the Mount* (New York: Abingdon Press, 1931), 256. [6]Mead, 337. [7]*"ஆவியில் எளிமையுள்ளவர்களாக" இருத்தலின் அவசியம் பற்றி மறுகண்ணோட்டமிட நீங்கள் விரும்பலாம் (மத்தேயு 5:3).* [8]Richard Glover; alluded to in John R. W. Stott, *The Message of the Sermon on the Mount,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1978), 184. [9]Jones, 278. [10]Eleanor L. Doan, comp., *The Speaker's Sourcebook* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1960), 193.

[11]*கொடுக்கப்பட்ட மற்ற வேதவசனப் பகுதிகளில், சங்கீதம் 32:5; எபிரெயர் 5:7; யாக்கோபு 1:5; 5:14, 15 ஆகியவை அடங்கியுள்ளன.* [12]D. Martyn Lloyd-Jones, *Studies in the Sermon on the Mount,* vol. 2 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 195. [13]Alec Motyer, *Studies in the Epistle of James* (London: New Mildmay Press, 1968), 88. [14]Bill Hybels, *Too Busy Not to Pray,* rev. ed. (Downers Grove, Ill.: Intervarsity Press, 1998), 88. Emphasis added. [15]*இந்த வாக்கியமும் இதற்கு அடுத்த வாக்கியமும்* Lloyd-Jones, 195 *ல் இருந்து தழுவப்பட்டுள்ளன.* [16]*லூக்கா 11ல் உள்ள இணைக் குறிப்பு மூன்றாவது விவரிப்பு ஒன்றைக் கொண்டுள்ளது: முட்டை எதிர். தேள் (வசனம் 12). ஒரு பெரிய மங்கிய நிறமுள்ள தேளானது ஒரு பந்து வடிவத்தில் சுருங்கி இருக்கையில் அது ஒரு முட்டை போன்ற தோற்றம் கொண்டிருக்கும்.* [17]*நீங்கள் "அப்பம்"* (loaf) *என்பதை வாசிக்கும்போது, பெரிய முழுரொட்டி ஒன்றைப் பற்றி நினைக்காதீர்கள். ஒரு சிறிய தனி ரொட்டியைப் பற்றி நினையுங்கள். உலகில் நான் வாழும் பகுதியில், எங்களில் சிலர் இப்படிப்பட்ட ரொட்டியை* "a dinner roll" *என்று அழைப்போம். ஒரு வட்டவடிவமான மரநிறக் கல்லானது இந்த ரொட்டியைப் போன்றதாக இருக்கும்.* [18]*இயேசு கேட்ட இரு கேள்விகளுமே, எதிர்மறைப் பதிலைத் தரவழைக்கும் வகையில் எதிர்மறையை கொண்டுள்ளன: "இல்லை, ஒரு தந்தை அதைச் செய்ய மாட்டார்."* [19]Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 66. *ஒரு எழுத்தாளர், "கிளேரியஸ் லேசெரா என்ற பெயர்கொண்ட, கலிலேயாவின் ஈல் போன்ற கேட் மீனை" குறிப்பிட்டார்* (R. T. France, *The Gospel According to Matthew,* Tyndale New Testament Commentaries [Grand Rapids, Mich.: Inter-Varsity Press, 1985], 144). [20]Adapted from William Barclay, *The Gospel of Matthew,* vol. 1, rev. ed., The Daily Study Bible

Series (Philadelphia: Westminster Press, 1975), 275.

[21]David Hill, *The Gospel of Matthew,* New Century Bible Commentary series (London: Butler & Tanner Ltd., 1978), 149. *வம்சாவழியாக முற்றிலும் அழிவுக்கு உட்படுத்தப்படுதலின் உபதேசத்தைப் போதிக்க இயேசு, "பொல்லாத" என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை.* [22]*பின்வரும் பட்டியல்* W. *ராபர்ட்ஸன் நிக்கொல் என்பவர் பதிப்பிட்ட The Sermon Outline Bible: Matthew 1-21* (Grand Rapids, Mich.: Baker Book House, 1958), 182 *என்ற புத்தகத்தில் கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.* [23]Stott, 189. [24]*ரோமர் 8ன் படி, நாம் மகிழ்வுடன் அனுபவிக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களில் பல, நேரடியாகவோ அல்லது மறைமுகவாகவோ பரிசுத்த ஆவியானவருடன் தொடர்புடையவையாக உள்ளன.* [25]Quoted in Ralph Sweet, *Moments on the Mount,* Living Word series (Austin, Tex.: R. B. Sweet Co., 1963), 65.

"உலகளாவிய இரட்சிப்பு"?

மத்தேயு 7:7-11ல் தேவனுடைய பிள்ளைகளுடனான அவரது உறவு, மனிதத் தந்தை ஒருவர் தமது மகனிடம் கொண்டுள்ள உறவுடன் ஒப்பிடப்பட்டுள்ளது. மனிதர்களுடன் தேவனை ஒப்பிடும் எந்த ஒரு ஒப்பீடும், வேதபாட வசனப் பகுதியின் குறிப்பிட்ட செய்தியுடன் மட்டுப்படுத்தப்பட வேண்டும். சிலர் மத்தேயு 7:7-11ன் ஒப்பீட்டை வெகுதூரம் எடுத்துச் சென்றுள்ளனர்; இதை அவர்கள், உலகளாவிய இரட்சிப்பு என்ற கற்பனை விஷயத்தைப் போதிக்கப் பயன்படுத்துகின்றனர். அவர்கள், "அன்பான ஒரு தந்தை ஒருபோதும் தமது மகனை நித்தியத்திற்கும் தண்டிக்க மாட்டார். ஆகவே தேவன் எவரையும் நித்திய தண்டனைக்கு அனுப்பமாட்டார்" என்று வாதிடுகின்றனர். அந்த வாதத்தில் பல தவறுகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, இவ்வசனப் பகுதி, பொதுவில் மனிதகுலத்தை அல்ல, ஆனால் தேவன் தமது பிள்ளைகள் என்று யாரை உணர்ந்தறிகிறாரோ அவர்களை மாத்திரமே குறிப்பிடுகிறது.

இருப்பினும் (மோசே கூறியபடி), "தேவன் ஒரு மனிதன் அல்ல" (எண்ணாகமம் 23:19அ; வலியுறுத்தம் கூட்டப்பட்டுள்ளது) என்பதே இப்படிப்பட்ட விவாதத்தில் உள்ள முதன்மைப் பிரச்சனையாக உள்ளது, "நாம் இதைச் செய்வோம், எனவே தேவன் இதைச் செய்வார்" என்று நாம் வாதிட முடியாது. அவிசுவாசிகளும் கீழ்ப்படியாதவர்களும் தண்டிக்கப்படுவார்கள் (காண்க 2 தெசலோனிக்கேயர் 1:7-9) என்று தேவன் தாமே வெளிப்படுத்துகின்றார். இந்த சத்தியத்தை அறிவதற்கு மலைப்பிரசங்கத்தை விட்டுவிடுதல் கூட அவசியமாக இருப்பதில்லை (காண்க மத்தேயு 7:13, 14, 21-23). ஹரோல்டு ஃபவ்லர் அவர்கள், "மன்னிக்கப்படாத பாவம் யாரிடத்தில் காணப்பட்டாலும் அவர்களுக்கு நித்திய தண்டனை உண்டு என்ற கருத்தானது தேவனுடைய கருத்தாக உள்ளது, அதைப்பற்றி அவரிடத்தில் விவாதம் செய்யும் மனிதன் மதியீனனாக இருக்கிறான்" என்று எழுதினார்.[1]

குறிப்பு

[1]Harold Fowler, *Matthew I,* Bible Study Textbook Series (Joplin, Mo.: College Press, 1968), 413.

18

நீங்கள் பயணம் செய்யும் வழி எது?

(மத்தேயு 7:13-20)

வேதாகமத்தின் போதனையின்படி நாம் வாழ்வினூடே குடியிருப்பவர்கள் என்பதற்கு மாறாகப் பயணிகளாகச் சென்றுகொண்டிருக்கிறோம். "நாம் பயணம் செய்யும் வழி எது?" என்பது கேள்வியாக உள்ளது. வேகம் என்பதல்ல ஆனால் அடைவிடம் என்பதே ஒரு பயணியின் முதல் அக்கறைக்குரிய விஷயமாக உள்ளது. "சரியான திசையை நோக்கி இருந்தால் ஒழிய விரைவான வளர்நிலை என்பது மிகவும் மோசமானதாக உள்ளது."[1] நான் உலகம் முழுவதிலும் காணாமல் போயிருக்கிறேன். சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு உச்சகட்ட வேகத்தில் ஒரு முதன்மைச் சாலையில் நான் சென்று, நேரத்தை நன்கு அனுபவித்து, பின்பு நான் தவறான சாலையில் சென்றிருப்பதைக் கண்டிருக்கிறேன். நாம், மலைப்பிரசங்கத்தின் முடிவுக்கு நெருங்கி வருகையில், ஆவிக்குரிய வகையில் நாம் எந்த வழியில் பயணம் சென்றுகொண்டிருக்கிறோம் என்று நம்மையே கேட்டுக் கொள்ளும்படியான இயேசுவின் அறைகூவலைக் கண்டறிகிறோம். அந்தக் கேள்வியானது வேறு இரண்டு கேள்விகளுக்குப் பதில் செயல் செய்வதன் மூலம் பதில் அளிக்கப்படக் கூடும்.

நீங்கள் பயணம் மேற்கொண்டுள்ள சாலை எது? (7:13, 14)

நீங்கள் பயணம் மேற்கொண்டுள்ள சாலை எது என்பது, அக்கறைக்குரிய முதல் விஷயமாக உள்ளது. மத்தேயு 7:13, 14ல் இயேசு இரு வழிகளைப் பற்றி, இரு சாலைகளைப் பற்றிப் பேசினார்:

> *இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.*

இவ்வசனங்களில் நாம், நான்கு மாறுபாடுகளைக் காணுகிறோம்.

இரு வழிகள்

பயணிக்கு இரு வழிகள் உள்ளன. ஒன்று விரிவான வழியாக உள்ளது. "விரிவும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (euruchoros என்ற) வார்த்தை "இடவசதியான, கொள்ளக்கூடிய" என்று அர்த்தப்படுகிறது.[2] கருத்துக்களின்

பரவலான விலக்கங்களுக்கு இந்தச் சாலையில் இடமுண்டு. இது பல சந்துகளைக் கொண்டுள்ளது:

- வெற்றியிலேயே நோக்கமாயிருக்கும் கடினமாக உழைக்கும் மக்களுக்காக சந்து ஒன்றுள்ளது, மற்றும் சோம்பேறிகள் சந்தோஷத்தில் ஆட்டம்போடும் சந்து ஒன்றும் உள்ளது.
- இரட்சிப்பிற்குத் தங்கள் சொந்த நற்பண்புகளைச் சார்ந்துள்ளவர்களான ஒழுக்கரீதியான நல்லவர்களாக இருப்பவர்களுக்கு சந்து ஒன்றுள்ளது, மற்றும் ஒழுக்கவீனமான, தேவபக்தியற்ற வாழ்வை வாழ்பவர்களுக்கும் சந்து ஒன்றுள்ளது.
- மனிதரால் ஏற்படுத்தப்பட்ட தங்களின் சடங்காச்சாரங்களினால் தாங்கள் இரட்சிக்கப்படுவோம் என்று நினைக்கின்ற, மனச்சாட்சிப்படி தேவபக்தியுள்ள மக்களுக்கான சந்து ஒன்றுள்ளது, மற்றும் அவிசுவாசிகள், தேவநம்பிக்கையற்றவர்கள், லோகாதயவாதி மற்றும் நாத்திகர்கள் ஆகியோருக்கும் சந்து ஒன்றுள்ளது.

இந்தச் சாலையில் தடைகளோ, எல்லைகளோ இருப்பதில்லை. நீங்கள் விரும்பியவாறு நீங்கள் இருக்க முடியும், நீங்கள் விரும்பியவற்றை நீங்கள் செய்ய முடியும். RSV வேதாகமத்தில் "வழி சுலபமானதாக உள்ளது, இது அழிவுக்கு வழிநடத்துகிறது" என்றுள்ளது.

பின்பு இடுக்கமான வழி உள்ளது. ''இடுக்கம்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*thlibo* என்பதன் ஒரு வடிவமான) வார்த்தை "அழுத்த"[3]: ஒன்றாக அழுத்தப்பட்டிருக்க, "நெருக்கி அழுத்தப்பட்டு" இருக்க என்று அர்த்தப்படுகிறது.[4] முந்திய சாலையைப் போலின்றி, இது இடவசதி மிகுந்ததாகவோ அல்லது கொள்ளக்கூடியதாகவோ இருப்பதில்லை. ஜீவனுக்குப் போகிற சாலையை சுலபமான பாதைவழியாக இயேசு ஒருக்காலும் சித்தரித்ததில்லை.[5]

ஜீவனுக்குப் போகிற வழி இடுக்கமாக உள்ளது, ஆனால் இயேசு அவ்வாறு கூறியதால் மாத்திரம் அது அவ்வாறு இருப்பதில்லை. சத்தியத்தின் இயல்பினால் அது இடுக்கமானதாக உள்ளது. சத்தியம் எப்போதுமே இடுக்கமானதாக உள்ளது. இரண்டும் இரண்டும் எப்போதுமே நான்கையே உண்டாக்குகின்றன. அவைகள் ஐந்தையோ அல்லது ஏழையோ உண்டாக்குவதில்லை; அவைகள் எப்போதுமே நான்கையே உண்டாக்குகின்றன. அதுவே சத்தியத்தின் இடுக்கமான தன்மையாக உள்ளது. சூரியன் எப்போதுமே கிழக்கிலேயே உதிக்கிறது. அது மேற்கிலோ, வடக்கிலோ அல்லது தெற்கிலோ உதிப்பதில்லை. அது எப்போதுமே கிழக்கிலேயே உதிக்கிறது. அதுவே சத்தியத்தின் இடுக்கமான தன்மையாக உள்ளது.

சட்டபடி நாம், "இடுக்கம்'' என்ற வார்த்தையை விரும்புவதில்லை. "குறுகிய மனம் உடையவர்" என்று அழைக்கப்பட்டிருத்தல் அவமானமானதாக உள்ளது. ஒரு ஆண்டில், கிறிஸ்தவக்கல்லூரியின் பிரசங்கமுகாம் ஒன்றில், காட்சிப்படுத்துனர் ஒருவர் ஆறு அங்குலங்கள் நீளமும் ஆனால் ஒரே ஒரு அங்குல அகலமும் கொண்ட குறிப்பேடுகளைக் கையளித்தார். அந்தக் குறிப்பேடுகளின் உச்சியில் "குறுகிய மனம் கொண்ட மக்களுக்கான குறிப்பேடு'' என்ற வார்த்தைகள் இருந்தன. அந்த முகாமில் இருந்த எங்களில் பலர், அது "குறுகிய மனம் கொண்டவர்கள்" என்று பெயரிடப்படுவதைப் போன்று இருந்தபடியால்,

அது வேடிக்கையானதாக இருந்தது என்று நினைத்தோம்.

இன்றைய நாட்களின், கூக்குரல் சகிப்புத் தன்மைக்கானதாக இருக்கிறது. சகிப்புத்தன்மையுடன் இருக்கக் காலம் ஒன்றுள்ளது, ஆனால் சகிக்காதிருக்கவும் காலம் ஒன்றுள்ளது. ஜார்ஜ் W. பெய்லீ அவர்கள் பின்வருமாறு எழுதினார்,

> நாம், ஒருவர் பிறர் மீது அதிகம் சகிப்புத்தன்மை உடையவர்களாக இருப்பது அவசியமாக உள்ளது. கருத்துக்கள் பற்றி நாம் அதிகம் சகிப்புத்தன்மை கொண்டிருத்தல் அவசியமானதாக உள்ளது. ஆனால் ஒரு கருத்தில், சகியாதிருத்தல் என்பது மிகவும் நேர்த்தியானதும் கண்ணியமானதும் ஆகும். தேவன் தூஷிக்கப்படும்போது, நாம் சகியாது இருக்க வேண்டும். தேவனுடைய வசனம் கேள்விக்குள்ளாகும்போது நாம் சகியாது இருக்க வேண்டும். விசுவாசம் தாக்கப்படும்போது, சொந்த கருத்தானது சத்தியத்திற்குப் பதிலியாக்கப்படும்போது, தெய்வீக சத்தியங்கள் ஏளனம் செய்யப்படும்போது, நாம் சகியாதிருக்க வேண்டும்.[6]

ஜீவனுக்குப் போகிற வழி இடுக்கமானதாக இருக்கலாம், ஆனால் அது போதிய அளவுக்கு விசாலமானதாக உள்ளது. அது - இயேசுவைப் பின்பற்ற விரும்புகிற அனைத்து மக்களையும் (காண்க 1 யோவான் 1:7) - "எல்லாத் தலைமுறைகள், எல்லாக் காலங்கள், எல்லா மொழிகள் மற்றும் பிறப்பிட மொழிகள், எல்லா மக்களினங்கள் மற்றும் நாடுகள் ஆகியவற்றின் எல்லா மக்களையும்"[7] உள்ளடக்கப் போதிய அளவுக்கு விசாலமானதாக உள்ளது (காண்க கொலோசெயர் 2:6). அது அவரது வழியாக உள்ளது (காண்க யோவான் 14:6).

விரிவான வழி மற்றும் இடுக்கமான வழி - இவைகள் மாத்திரமே நமது விருப்பத் தேர்வுக்கு உரியவைகளாக உள்ளது. அந்தத் தேர்வை உலகம் விரும்புவதில்லை. சிலர் "பல பாதைகள் ஜீவனுக்கு வழிநடத்துகின்றன" என்று கூறுகின்றனர். மற்றவர்கள், மனிதத்துவம் எல்லாவற்றையும் ஒன்றாக்கி, உண்மையில் ஒரே ஒரு சாலையே உள்ளது - அதாவது எல்லாருமே நித்திய இரட்சிப்பின் சாலையில் இருக்கிறோம் - என்று கூறுகின்றனர். இருப்பினும் இயேசு, மனிதர்கள் மிகவும் விரும்புகிற அந்த விருப்பத் தேர்வுகளை அளிக்கவில்லை, அவர் - விரிவான ஒன்றும் இடுக்கமான ஒன்றுமாக - இரு வழிகள் உள்ளன என்றார் மற்றும் ஒவ்வொரு தனிநபரும் ஒன்று அல்லது மற்ற வழியில் இருக்கிறார் என்று அவர் கூறினார்.

இரு வாசல்கள்

அடுத்ததாக இயேசு, இரண்டு வாசல்கள் உள்ளன என்று கூறினார். *விரிவான வாசல்* உள்ளது. நமது வேதபாட வசனப்பகுதியின்படி, இரு வாசல்களுமே "பிரவேசிக்கப்பட" வேண்டியவைகளாக உள்ளன, ஆனால் இந்த வாசலானது, பெரும்பான்மையானவர்கள் இதின் வழியாகப் பிரவேசிக்கும்போது வாசல் இருப்பதை அறியாதிருக்கும் அளவுக்கு மிக விரிவானதாக உள்ளது. நீங்கள் இந்த நுழைவாயிலில் நிற்க முடிந்தால், இடது மற்றும் வலது புறங்களில் நீங்கள் வெகு தொலைவிற்குக் கண்ணோக்க முடியும், மற்றும் ஒருக்காலும் நீங்கள் வாசல்கால்களைக் காண மாட்டீகள்.

இந்த வாசலில் நுழைதல் என்பது கடினமாக இருப்பதில்லை, மற்றும் நீங்கள் இதின்வழியாக நுழையும்போது நீங்கள் எடுத்துச் செல்லக் கூடிய "சுமைகளின்" அளவுக்கு வரையறை எதுவும் இருப்பதில்லை. நீங்கள் எதையும் பின்வைத்து விட்டுச் செல்ல வேண்டியதில்லை. நீங்கள் உங்கள் பாவத்துடனும் சுயநலத்துடனும், உங்கள் சுயநீதியுடனும், உங்கள் மேட்டிமையுடனும் முன் அனுமானங்களுடனும் இதற்குள் வர முடியும்.

பின்பு சிறிய, இடுக்கமான வாசல் உள்ளது. இதை KJV வேதாகமம், "the strait gate" என்று அழைக்கிறது. நம்மில் பலர், நித்திய ஜீவனுக்குச் செல்லும் வழியானது "நேரான [strait] மற்றும் குறுகலான" வழி என்று குறிப்பிடப்பட்டுள்ளதைக் கேள்விப்பட்டு இருக்கிறோம். இருப்பினும் KJV வேதாகமத்தில் "s-t-r-a-i-g-h-t" என்பதல்ல, ஆனால் "s-t-r-a-i-t" என்பதே பயன்படுத்தப்பட்டுள்ளது. "Strait" என்பது "குறுகலான" என்று அர்த்தப்படும் இலத்தீன் வார்த்தையில் இருந்து வந்துள்ளது. இன்றைய நாட்களில் இவ்வார்த்தை, இரு பெரிய கடல்களை இணைக்கும் - மத்தியதரைக் கடலை அட்லாண்டிக் இணைக்கும், ஜிப்ரால்டர் ஜலசந்தி போன்ற - ஒரு குறுகிய ஜலசந்தியைக் குறிப்பதில் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது.

13ம் வசனத்தில் உள்ள *stenos* என்ற கிரேக்க வார்த்தை, "குறுகிய" என்று அர்த்தப்படுகிறது.[8] இவ்வார்த்தை, 14ம் வசனத்தில் "இடுக்கம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த வாசல் சிறியதாக இருப்பதால், இதன் வழியே நீங்கள் தற்செயலாகச் சாவகாசமாக நடந்து செல்ல முடியாது. இது தவறவிடப்பட சுலபமானதாக உள்ளது; நீங்கள் இதற்காகக் கண்ணோக்க வேண்டும். இது தற்செயல் நிகழ்வினால் அல்ல, ஆனால் தெரிவினால் பிரவேசிக்கப்படுகிறது. இந்த வாசல் குறுகியதாக இருப்பதால், ஒரு வேளையில் ஒரு நபர் மாத்திரமே பிரவேசிக்க முடியும். விரிவான வாசல் வழியாக, கும்பலில் ஒருவராகப் பிரவேசித்து விட முடியும், ஆனால் குறுகிய வாசலில் ஒருவர் பின் ஒருவராக மாத்திரமே பிரவேசிக்க முடியும். மேலும் இது குறுகியதாக இருப்பதால், நீங்கள் இதற்குள் பிரவேசிக்க வேண்டுமென்றால், உங்கள் தனிப்பட்ட "சுமைகள்" பலவற்றை இறக்கி வைத்துவிட்டுச் செல்ல வேண்டி இருக்கும்.[9] இயேசு தமது சீஷர்களிடத்தில் "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், *அவன் தன்னைத் தான் வெறுத்து,* தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்று கூறினார் (மத்தேயு 16:24; வலியுறுத்தம் கூட்டப்படுகிறது).

வேறொரு இடத்தில் இயேசு, ஜீவனுக்குப் போகிற வாசலில் பிரவேசிப்பது எப்படி, கிறிஸ்தவராவது எப்படி என்று வெளிப்படுத்தினார். இரட்சிப்பின் நிபந்தனை ஒவ்வொன்றிலும், கடந்த காலத்தில் இருந்தவற்றில் சிலவற்றை விட்டுவிடுதல் உள்ளடங்கி இருக்கிறது.

நாம் இயேசுவில் *விசுவாசம் கொள்ள வேண்டும்* (யோவான் 8:24). மற்ற ஏதேனும் இரட்சகரில் விசுவாசம் கொள்ள விரும்புகிறவர்களுக்கு இந்த வாசல் மிகவும் குறுகியதாக உள்ளது.

நாம் நமது பாவங்களில் இருந்து *மனந்திரும்ப வேண்டும்* (லூக்கா 13:3). தங்கள் பழைய வாழ்வு நடையைக் காத்துக் கொள்ளத் தீர்மானித்து இருப்பவர்களுக்கு இந்த வாசல் மிகவும் குறுகியதாக உள்ளது.

மனிதர்களுக்கு முன்பாக அவருடைய நாமத்தை நாம் *அறிக்கையிட*

வேண்டும் (மத்தேயு 10:32). இயேசுவிற்காக வெளிப்படையாக நிலைப்பாட்டை மேற்கொள்ளத் தயங்குகிறவர்களுக்கு இந்த வாசல் மிகவும் குறுகியதாக உள்ளது.

இரட்சிக்கப்படுவதற்கு நாம் ஞானஸ்நானம் பெற (தண்ணீருக்குள் முழுக்காட்டப்படுதல்) வேண்டும் (மாற்கு 16:16). அவருக்குக் கீழ்ப்படிய மனமில்லாதவர்களுக்கு இந்த வாசல் மிகவும் குறுகியதாக உள்ளது. இயேசு, "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" என்று கூறினார் (யோவான் 14:15).

இது கிறிஸ்துவின் வழியாக உள்ளது என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். அவர், "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான்" என்று கூறினார் (யோவான் 10:9அ). இதில் பிரவேசியாது இருக்கிற யாவருக்கும் அவர், வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! "நீங்கள் எல்லாரும் *என்னிடத்தில்* வாருங்கள்; *நான்* உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று கூறுகிறார் (மத்தேயு 11:28; வலியுறுத்தம் கூட்டப்படுகிறது). இந்த வாசல் சிறியதாகவும் குறுகியதாகவும் உள்ளது, ஆனால் கர்த்தரிடத்தில் வர மனவிருப்பமாக உள்ள எவருக்கும் இது போதிய அளவு பெரியதாகவும் போதிய அளவு விசாலமாகவும் உள்ளது.

இரு கூட்டங்கள்

நமது வேதபாட வசனப்பகுதி இரு கூட்டங்களை, மக்களின் இரு குழுவைப் பற்றியும் பேசுகிறது. ஒன்று *"அநேகர்"* என்று அழைக்கப்படுகிற குழுவாக உள்ளது: "விரிவான வாசல் வழியாய்ப்" "பிரவேசிக்கிறவர்கள் அநேகர்," "அநேகர்" விசாலமான வழியில் உள்ளனர். விசாலமான வழி என்பது திரளான மக்கள் கூட்டத்தின் வழியாக உள்ளது, இது மக்கள் திறளின் வழியாக உள்ளது. "இதை ஒவ்வொருவரும் செய்கின்றனர்" என்பது இந்தக் சாலையின் நோக்கமாக உள்ளது. மோசே இஸ்ரவேல் மக்களுக்கு அறிவுறுத்தியபோது அவர், "தீமைசெய்ய திரளானபேர்களைப் பின்பற்றாதிருப்பாயாக" என்று கூறினார் (யாத்திராகமம் 23:2அ). அவர் அந்தக் கட்டளையைக் கொடுக்க வேண்டியிருந்தது ஏன்? ஏனென்றால் மக்கள் கூட்டத்தைப் பின்பற்றுதல் என்பது செய்வதற்கு "இயல்பான" விஷயமாக உள்ளது.

"அநேகர்" என்று அழைக்கப்படுகிற குழுவிற்கு நேரெதிரான வகையில் *"சிலர்"* என்று அழைக்கப்படுகிற குழு உள்ளது. இயேசு, "ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" என்று கூறினார். "அநேகமாக இதுவே (இயேசுவின்) கூற்றுக்களில் மிகவும் புறக்கணிக்கப்பட்டதாக உள்ளது" என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.[10]

"சிலர்" என்ற சொற்றொடர் ஒரு ஒப்பீட்டுச் சொற்றொடராக உள்ளது. நீண்ட நாட்களுக்கு முன்னர் நான், இரட்சிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையைக் குறுக்கிக் கணக்கிட்ட ஒரு மனிதரைப் பற்றிய பாடல் ஒன்றைப் பற்றி நான் கேள்விப்பட்டேன். அதன் முடிவு வரிகள் பின்வருவன போலச் சென்றன: "அது என்னையும் உங்களையும் விட்டுவைக்கிறது. சில வேளைகளில் நான் உங்களைப் பற்றி நிச்சயமாகக் கூறுவதற்கில்லை." "சிலர்" என்பது "ஏறக்குறைய எவருமில்லை" என்று அர்த்தப்படுவதாக நாம் நினைத்துவிடக் கூடாது. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில், இரட்சிக்கப்படுகிறவர்கள்

"ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள்" என்று சித்தரிக்கப்பட்டுள்ளனர் (7:9). இருந்தபோதிலும் இந்த விசேஷித்த குழுவானது, விரிவான வாசல் வழியே செல்லுகிற பலருடன் ஒப்பிடப்படுகையில் இன்னமும் *சார்பளவில்* சிலர் என்பதாகவே உள்ளது.

விசுவாசம் நிறைந்தவர்களாக இருப்பவர்கள் எப்போதுமே சிறுபான்மையினராகவே இருந்துள்ளனர். நோவாவின் நாட்களில், "சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம்" காக்கப்பட்டார்கள் (1 பேதுரு 3:20). யுத்தம் செய்யத் தக்கவர்களான "ஆறுலட்சம் புருஷர்கள்" எகிப்தில் இருந்து புறப்பட்டனர் (காண்க யாத்திராகமம் 12:37); இந்த எண்ணிக்கையில் இருவர் மாத்திரமே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்குள் பிரவேசித்தனர்: யோசுவா மற்றும் காலேப். பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டிலுமே, "மீதியாயிருப்பவர்கள்" மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள் என்று முன்னுரைக்கப்பட்டுள்ளது (காண்க ஏசாயா 10:21, 22; ரோமர் 11:5). இயேசு ஒரு உவமையைப் பின்வரும் வார்த்தைகளுடன் முடித்தார்: "அந்தப்படியே, அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப் பட்டவர்களோ சிலர்" (மத்தேயு 22:14). இன்றைய நாட்களில், தேவனுடைய மக்கள் இன்னமும் சிறுபான்மை மக்களாகவே உள்ளனர்.

"ஒவ்வொருவரும் தேவனைப் பிரியப்படுத்த மாட்டார்கள்" என்பதே மத்தேயு 7ம் அதிகாரத்தின் செய்தியாக உள்ளது என்று என் சகோதரர் காய் அவர்கள் கூறியிருக்கிறார்.[11] உலகமானது இதை விசுவாசிக்க விரும்புவதில்லை. யாரேனும் ஒருவர் - நல்லவரோ அல்லது கெட்டவரோ, யாரேனும் ஒருவர் - எந்த வேளையில் இறந்தாலும் அவர் அன்பான மக்கள் தம்மை வாழ்த்தக் காத்திருக்கும் "வெளிச்சத்தினுள் செல்கிறார்" என்பது உலகில் நான் வாழும் பகுதியில் இன்றைய நாட்களில் பிரபலமாக உள்ள ஒரு நம்பிக்கையாக இருக்கிறது. விஷயம் அப்படி இருப்பதில்லை என்று இயேசு கூறினார். அவரைப் பொறுத்த மட்டில், வெளிச்சத்தின் வட்டாரத்திற்குள் முன்னோக்கிச் செல்பவர்களைக் (வெளிப்படுத்தின விசேஷம் 22:5) காட்டிலும் அதிகமானவர்கள் "புறம்பான இருளின்" வட்டாரத்திற்குள் தள்ளப்பட முன்னோக்கிச் செல்கின்றனர் (மத்தேயு 8:12; 22:13; 25:30).

"சிலரில்" ஒருவராக இருத்தல் என்பது தைரியம் இழக்கச் செய்வதாக இருக்கலாம். சபையின் உறுப்பினர்கள், "ஆனால் இந்தக் கருத்தின் மீது வேதாகமம் தெளிவாக உள்ளதே. *ஒவ்வொருவரும்* இதைக் காண இயலாதது ஏன்?" என்று கேட்பதைக் கேள்விப் பட்டிருக்கிறேன். அந்தக் கேள்விக்கு என்னால் பதில் கூற இயலாது, ஆனால் அவ்வாறே இருக்கும் - அதாவது ஒவ்வொருவரும் சத்தியத்தைக் காணவோ அல்லது புரிந்துகொள்ளவோ அல்லது அதற்குக் கீழ்ப்படியவோ *மாட்டார்கள்* - என்று கர்த்தர் கூறினார். அது அவ்வாறே உள்ளது. இடுக்கமான வழி என்பது கட்டுப்படுத்தப்பட்ட வழியாக உள்ளது, மற்றும் இது அடிக்கடி ஒரு சிரமமான வழியாக உள்ளது. இது தனிமையான வழியாகவும் இருக்கக் கூடும். யாரேனும் ஒருவர், "ஒரு நிமிடம் பொறுங்கள், அந்த வழியில் உள்ள ஒருசிலரில் ஒருவனாக/ஒருத்தியாக இருக்க நான் விரும்புகிறேனா என்பதை நிச்சயமாகக் கூற இயலவில்லை!" என்று யாரேனும் ஒருவர் கூறலாம். அந்த முடிவை மேற்கொள்வதற்கு முன்னர், நான்காவது வேறுபாட்டை ஆழ்ந்து சிந்தியுங்கள்.

இரு அடைவிடங்கள்

விசாலமான வழியானது "கேட்டுக்குப் போகிறதாக" உள்ளது. "கேடு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*apollumi* என்பதில் இருந்து வருகிற) வார்த்தை, "முற்றிலுமாக அழிக்க" என்று அர்த்தப்படுகிறது; ஆனால் "... நிர்மூலமாகுதல் என்பதல்ல ஆனால் அழிதல், இழத்தல், இராதிருத்தல் அல்ல ஆனால் நன்றாக இராதிருத்தல் என்பதே கருத்தாக உள்ளது."[12] இந்த வாழ்க்கையில் ஒருவர் பண்பின் இழப்பை அனுபவிக்கலாம். இந்த வாழ்விற்குப் பின்னர் அது ஆத்துமாவின் இழப்பாக உள்ளது. சாலொமோன், "மனுஷனுக்கு செம்மையாய்த் தோன்றுகிறவழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" என்று எழுதினார் (நீதிமொழிகள் 14:12; காண்க 16:25). "மரணம்" என்ற வார்த்தை "பிரிதல்" என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. ஆவிக்குரிய மரணம் என்பது தேவனை விட்டுப் பிரிதலாக உள்ளது (காண்க ஏசாயா 59:2). "இரண்டாம் மரணம்" (வெளிப்படுத்தின விசேஷம் 20:14; 21:8) என்பது தேவனுடைய பிரசன்னத்தில் இருந்து நித்தியத்திற்கும் பிரிந்திருத்தலாக உள்ளது (2 தெசலோனிக்கேயர் 1:8, 9). நெருக்கமான வழியில் செல்லத் தொடங்குகையில் செலுத்தப்பட வேண்டிய விலையினிமித்தம் அது கடினமாக இருப்பதாகப் பலர் நினைக்கின்றனர், ஆனால் இது, விசாலமான வழியில் பிரவேசிப்பவர்களால் முடிவில் செலுத்தப்படும் விலையுடன் ஒப்பிடுகையில் ஒன்றுமில்லை என்பதாகவே உள்ளது.

விசாலமான வழி அழிவுக்கு இட்டுச் செல்கிறது, ஆனால் நெருக்கமான வழி "ஜீவனுக்கு இட்டுச் செல்கிறது." இயேசு, "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" என்று கூறினார் (யோவான் 10:10ஆ). தேவனிடத்தில் இருந்து பிரிதல் என்பது ஆவிக்குரிய மரணமாக இருக்கிறது என்றால், தேவனுடன் இணைதல், அவருடன் ஐக்கியம் கொண்டிருத்தல் என்பது ஆவிக்குரிய ஜீவனாக உள்ளது. யோவான் 17ல் இயேசு தமது மாபெரும் ஜெபத்தில், "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" என்று கூறினார் (வசனம் 3). நெருக்கமான வழியில், தேவனுடனும் கிறிஸ்துவுடனும் ஐக்கியம் தொடங்குகிறது. இது பரலோகத்தில் பூரணமாகிறது.

கர்த்தருக்குக் கீழ்ப்படியும்படி மக்களை அசைப்பதற்கு நாம், எதிர்மறை ஊக்குவிப்பையா அல்லது நேர்மறை ஊக்குவிப்பையா, எதைப் பயன்படுத்த வேண்டும் என்பது பற்றிய கலந்துரையாடலைச் சிலவேளைகளில் நாம் கேள்விப்படுகிறோம். இயேசு இவ்விரண்டையுமே பயன்படுத்தினார். அழிவுக்கு இட்டுச் செல்லும் வழியைச் சுட்டிக்காட்டிச் செயல்விளைவில் அவர், "நீங்கள் அந்த வழியில் இருக்க *விரும்புவதில்லை*" என்று கூறினார். பின்பு ஜீவனுக்கு இட்டுச் செல்கிற வழியைச் சுட்டிக்காட்டி, "நீங்கள் அந்த வழியில் இருக்க *விரும்புகிறீர்கள்*" என்று குறிப்பிட்டார்.

நாம் நான்கு வேறுபாடுகளை, ஆனால் இரண்டு தெரிவுகளை மாத்திரம் கொண்டிருக்கிறோம்: ஒன்று ஜீவனுக்கு இட்டுச் செல்கிற நெருக்கமான வழி அல்லது அழிவுக்கு இட்டுச் செல்கிற விசாலமான வழி. ஜான் R. W. ஸ்டாட் அவர்கள் பின்வருமாறு எழுதினார்,

> ... இயேசுவைப் பொறுத்த மட்டில் இரு வழிகள் மாத்திரமே உள்ளன, கடினமானது மற்றும் சுலபமானது (இடைவழி என்று எதுவும்

இருப்பதில்லை), இவைகள் விரிவான மற்றும் நெருக்கமான இரு வாசல்களின் மூலம் பிரவேசிக்கப்படுகின்றன (வேறு வாசல் இல்லை), இவைகள் பெரிய மற்றும் சிறிய என்று இரு கூட்டத்தினரால் மிதித்து நடக்கப்படுகின்றன (நடுநிலைக் குழு என்று எதுவும் இருப்பதில்லை), இவைகள் அழிவு மற்றும் ஜீவன் என்ற இரு அடைவிடங்களில் முடிகின்றன (மூன்றாவது மாற்று இடம் என்று எதுவும் இருப்பதில்லை).[13]

நீங்கள் யாருடைய வழிகாட்டுதல்களைப் பின்பற்றுகிறீர்கள்? (7:15-20)

"நீங்கள் பயணம் மேற்கொண்டுள்ள வழி எது?" என்ற கேள்விக்குப் பதில் அளிக்க, நீங்கள் எந்தச் சாலையில் பயணம் செய்கிறீர்கள் என்று நீங்கள் முதலில் அறிந்திருத்தல் அவசியமாக உள்ளது. இருப்பினும், இரண்டாவது ஆழ்ந்த சிந்தனை ஒன்றுள்ளது: நீங்கள் யாருடைய வழிகாட்டுதல்களைப் பின்பற்றுகிறீர்கள்? வழிகாட்டுபவராக இயேசு ஒருவர் மாத்திரம் இருப்பதில்லை. "இங்கு செல்லுங்கள் மற்றும் அங்கு செல்லுங்கள். இதைச் செய்யுங்கள் மற்றும் அதைச் செய்யுங்கள்" என்று எண்ணற்ற குரல்கள் உரத்து சத்தமிடுகின்றன. ஆகவே இயேசு, இரு வழிகளைப் பற்றிய தமது போதனையைத் தொடர்ந்து, மற்றவர்களை கேட்டுக்கு இட்டுச் செல்பவர்களைப் பற்றிய எச்சரிக்கையைக் கொடுத்தார்.

வழிகாட்டுபவர்களின் இரு வகைகள்

இரு வழிகள் இருப்பது போன்றே, வழிகாட்டுபவர்களில் இரு வகையினர் உள்ளனர். [நமது] வேதபாட வசனப்பகுதி மோசமான வழிகாட்டுபவர்களை மாத்திரம் குறிப்பிடுகிறது, ஆனால் நல்ல வழிகாட்டுபவர்களும் உள்ளனர் என்று அதன்மூலம் மறைமுகமாய் உணர்த்துகிறது.

வழிகாட்டுபவர்கள் "தீர்க்கதரிசிகள்" என்று அழைக்கப்படுகின்றனர். "தீர்க்கதரிசி" என்று பொருள்படுகிற "prophet" என்ற ஆங்கில வார்த்தை (*prophetes* என்ற) கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது, "இது [ஒருவரின்] சார்பாகப் பேசுகிறவர்" என்று அர்த்தப்படுகிறது.[14] பொதுவாக இது தேவனுக்காக "பேசுகிற" ஒருவரை, தேவனுடைய பேச்சாளரைக் குறிக்கிறது. இவர்கள் முதல் நூற்றாண்டில், தேவனிடத்தில் இருந்து நேரடியாகத் தங்கள் செய்திகளைப் பெற்றுக்கொண்ட பேச்சாளர்களாக இருந்தனர்; ஆனால் [பிற்பாடு] இவர்கள், தேவனுடைய எழுதப்பட்ட வசனத்தில் இருந்து தங்கள் செய்தியைப் பெற்றுக்கொள்கிற போதகர்களைக் கொண்டு இடம் மாற்றப்பட்டனர்.[15] தீமோத்தேயுவுக்குப் பவுல் கூறிய பின்வரும் அறிவுரையைப் பின்பற்றுகிற போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்காகத் தேவனுக்கு நன்றி: "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்தி சொல்லு" (2 தீமோத்தேயு 4:2)!

"கள்ளப் போதகர்கள்" என்று இயேசு அழைத்தவர்களான, *மோசமான வழிகாட்டுபவர்களும்* உள்ளனர் என்பது கவலைக்குரியது. இவர்கள்

தேவனுக்காகப் பேசுவதாக, ஒருவேளை தேவனால் ஏவப்பட்டு இருப்பதாகக் கூட உரிமை கோரினர். இவர்களைப் பற்றி இயேசு பின்வருமாறு கூறினார்,

> கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள் (மத்தேயு 7:15).

"கள்ள" என்ற வார்த்தை, "பொய்பேசுதல்" என்பதற்கான (*pseudes* என்ற) கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது.[16] நம்மை வஞ்சிக்கும் பொய்யுரைக்கிற தீர்க்கதரிசிகளைக் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று இயேசு கூறினார்.

உங்கள் வீட்டில் நட்புறவான பூனை ஒன்றை மாத்திரமே நீங்கள் கொண்டிருக்கையில், "நாய்கள் ஜாக்கிரதை!" என்ற விளம்பரப் பலகையை உங்கள் வாசல்கதவில் வைத்தலில் அர்த்தம் எதுவும் இருப்பதில்லை.[17] கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று இயேசு கூறினார் என்ற உண்மையானது, அவரது நாட்களில் அவர்கள் இருந்தனர் என்று சுட்டிக்காண்பிக்கிறது - மற்றும் அவர்கள் எப்போதுமே இருப்பார்கள் என்றும் மறைமுகமாக உணர்த்துகிறது. மலைப்பிரசங்கத்தை இயேசு பிரசங்கித்தபோது, அவர் வேதபாரகர்களையும் பரிசேயர்களையும் தமது சிந்தையில் கொண்டு இருந்திருக்கலாம்; ஆனால் கள்ளப் போதகர்கள் என்போர் அந்தக் குழுக்களுடன் தொடங்கவோ அல்லது முடியவோ இல்லை. பிற்பாடு இயேசு, எருசலேமின் அழிவுக்கு முன்னர் நடப்பது என்ன என்பதைப் பற்றிப் பேசியபோது அவர், "அநேகங்கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்" என்று கூறினார் (மத்தேயு 24:11; காண்க வசனங்கள் 5, 24). "ஒரு வித்தியாசமான சுவிசேஷத்தைக்" கொண்டுவந்த கள்ளப் போதகர்களைப் பற்றிப் பவுல் எழுதினார் (கலாத்தியர் 1:6-9). அவர் 2 தீமோத்தேயு நிருபத்தில் இரு கள்ளப் போதகர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்கள் "சத்தியத்தை விட்டு விலகி" சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போட்டார்கள் என்று கூறினார் (2:17, 18). கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு, "கள்ளத்தீர்க்கதரிசிகளும் [யூத] ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள். அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, ..." என்று கூறினார் (2 பேதுரு 2:1அ).

பல கள்ளப் போதகர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்பவர்களாக இருக்கின்றனர் (காண்க 7:21-23), ஆனால் சிலர் அவ்வாறு இருப்பதில்லை. எவரொருவரும் வேண்டுமென்றே கள்ளப் போதகராக இருப்பது ஏன்? என்னால் மனங்களை வாசிக்கவோ அல்லது நோக்கங்களைக் கண்டறியவோ இயலாது, ஆனால் பல சாத்தியக்கூறுகள் மனதிற்கு வருகின்றன.

ஊதியம்/கூலி. (Pay.) சில போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் KJV வேதாகமத்தில் உள்ள சொற்றொடரைப் பயன்படுத்துவதென்றால், வெறும் "கூலியாள்" ஆக இருக்கின்றனர் (காண்க யோவான் 10:12, 13): கூலிக்காக ஒரு வேலையைச் செய்கிற தனிநபர்கள். KJV வேதாகமத்தில் உள்ள சாதகமற்ற இன்னொரு விவரிப்பு மனதிற்கு வருகிறது: "அவர்களுடைய தேவன் வயிறு" (பிலிப்பியர் 3:19).

கௌரவம். (Prestige.) தொடக்க கால சபையில் சிலர், போதகர்களாக

இருத்தல் கனத்தையும் கௌரவத்தையும் கொண்டுவரும் என்று நினைத்த காரணத்தினால், அவ்வாறு அறியப்பட விரும்பினர். யாக்கோபு பின்வரும் எச்சரிக்கையைக் கொடுத்தார்: "என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" (யாக்கோபு 3:1).

அதிகாரம். (Power.) தியோத்திரேப்பு போன்ற சிலர் சபைக்குழுமத்தில் "முதன்மையாயிருக்க" விரும்புகின்றனர் (3 யோவான் 9). அவர்கள் தங்களின் மனவிருப்பத்தை மற்றவர்களிடம் திணிக்க விரும்புகின்றனர்.

சுயவஞ்சனையோ அல்லது வேண்டுமென்றே செய்தலோ, நோக்கம் எதுவாக இருப்பினும், கள்ளப் போதகர்களைப் பற்றிய இரு விஷயங்களை நமது வேதபாட வசனப்பகுதி நமக்குக் கூறுகிறது. முதலாவது அவர்கள் *அபாயகரமானவர்களாக* இருக்கின்றனர். அவர்களை இயேசு, "ஓநாய்கள்" என்று அழைத்தார். சபையானது தேவனுடைய மந்தையாக உள்ளது (நடபடிகள் 20:28), மற்றும் ஓநாய்கள் ஆடுகளின் இயற்கையான விரோதிகளாக உள்ளன (யோவான் 10:12, 13). இரத்ததாகம் கொண்ட இந்த ஊண் உண்ணிகளுக்கு எதிராக ஆடுகள் பலமற்றவையாக உள்ளன. எபேசுவில் இருந்த மூப்பர்களைப் பவுல், "நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்" என்று எச்சரித்தார் (நடபடிகள் 20:29). இவர்களை இயேசு, "பட்சிக்கிற ஓநாய்கள்" என்று அழைத்தார்: பைத்தியம் பிடிக்கும் அளவுக்குப் பசியாக இருக்கும் ஓநாய்கள். அவற்றை உங்கள் மனதில் உங்களால் சித்தரிக்க முடிகிறதா: ஊளையிடுகிற, கண்குறுக்கிய, பற்களை வெளியே நீட்டிய, எச்சில் ஒழுகுகிற, தாக்குவதற்குத் தயாராக உள்ள ஓநாய்களின் கூட்டம்?

கள்ளப் போதகர்கள் அபாயமானவர்களாக இருப்பது மாத்திரமின்றி, அவர்கள் *வஞ்சிப்பவர்களாகவும்* இருக்கின்றனர். அவர்கள் அடிக்கடி, "ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு" வருகின்றனர். ஆட்டுத்தோல் என்பது தீர்க்கதரிசியின் போர்வைக்கான/சால்வைக்கான குறிப்பாக இருந்தது என்று சிலர் யூகித்துள்ளனர் (1 இராஜாக்கள் 19:19). இருப்பினும் இயேசு அனேகமாக, பட்சிக்கிற ஓநாய்கள் எப்போதுமே பட்சிக்கிற ஓநாய்களைப் போன்று காணப்படுவதில்லை என்று அர்த்தப்படும் பழமொழிச் சொல்விளக்கத்தை மாத்திரம் பயன்படுத்தி இருக்கலாம். அடிக்கடி அவைகள் ஆடுகளைப் போலக் காணப்படுகின்றன: தீங்கற்ற மற்றும் அச்சுறுத்தலற்ற உயிரினங்கள். கள்ளப் போதகர்கள் தங்களை "கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தை" மற்றும் "நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தை" கொண்டு தங்களை மறைத்துக் கொள்ளக் கூடியவர்களாக உள்ளனர் என்று பவுல் கூறினார் (2 கொரிந்தியர் 11:13, 15).

கள்ளப் போதகர்கள் தங்கள் வருகையை, "இங்கே ஒரு கள்ளப் போதகர் வருகிறார்!" என்ற வார்த்தைகளைக் கொண்டு அறிவிப்பதில்லை. அவர்கள் தங்கள் கழுத்துகளைச் சுற்றி அடையாளங்களையோ அல்லது தங்கள் மார்பில் "கள்ளப் போதகர்" என்று அறிவிக்கும் பட்டிகளையோ அணிந்து கொள்வதில்லை. அவர்கள் பொதுவாகச் சரியான உடைகளையே அணிகின்றனர். அவர்கள் மதரீதியான வார்த்தை வளம் கொண்டுள்ளனர். அவர்களால் வேதவசனங்களை மேற்கோள் காண்பிக்க முடியும்.[18] அவர்கள் சரியான வார்த்தைகளைப் பேசுவதாகக் காணப்படலாம்.[19] இவையாவும் அவர்களை

இன்னும் அதிக அபாயமுள்ளவர்கள் ஆக்குகின்றன. மக்களில் மிகச்சிறந்தவர்கள் மீது நம்பிக்கை கொள்ளும்படி கிறிஸ்தவர்கள் போதிக்கப்பட்டுள்ளனர், மற்றும் இது அவர்களைக் கள்ளப் போதகர்களின் தாக்குதலுக்கு உட்படுபவர்களாக விட்டுவிட முடியும். யூதா, குறிப்பிட்ட சில கள்ளப்போதகர்களைப் பற்றி எழுதியபோது, அவர்கள் "பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள்" என்று அவர் எழுதினார் (யூதா 4). "பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள்" என்பது "பக்க வழியாய் நுழைதல்" என்று அர்த்தப்படுகிற *pareisduno* என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[20] யாரோ ஒருவர், அவர்கள் "ஓரத்துக் கதவின் மூலம்" இரகசியமாய் வந்துள்ளனர் என்று கூறினார்.[21]

கள்ளப்போதகர்களை அடையாளம்
காண்பது எப்படி

கள்ளப் போதகர்கள் இவ்வளவாக வஞ்சனை உடையவர்களாக இருந்தால், நாம் அவர்களைச் சாத்தியக்கூறான வகையில் அடையாளம் காண்பது எப்படி?[22] எப்படி என்பதை இயேசு அடுத்த பகுதியில் நமக்குக் கூறினார். மேய்ச்சல் நிலம் என்பதில் இருந்து கனித்தோட்டம் என்பதற்குத் தமது ஒப்புவமையை மாற்றிக் கொண்டு, "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" என்று அவர் கூறினார் (வசனம் 16அ; காண்க வசனம் 20). "அறிவீர்கள்," *epiginosko*, என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, *epi* என்ற முன்னிடைச் சொல்லினால் வலிவூட்டப்பட்ட "அறிதல்," *ginosko* என்ற வார்த்தையாக உள்ளது. இது "முழுமையாக அறிதல்" என்று அர்த்தப்படுகிறது.[23] வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், கள்ளத்தீர்க்கதரிசிகளின் கனிகளை உற்றுநோக்குதலே அவர்களை உண்மையில் அடையாளம் காண்பதற்கான வழியாக உள்ளது.

இயற்கையில் கனி சோதனையை மக்கள் எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்று இயேசு குறிப்பிட்டார்: "முட்செடிகளில் திராட்சைப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா?" (வசனம் 16ஆ). "புல்வெளிக்குச் சென்று திராட்சைப் பழங்களைப் பறிக்கும் மக்கள் அல்லது முட்புதரில் அத்திப்பழங்கள் பறிப்பதற்காகத் தங்கள் கூடையை எடுத்துச் செல்லும் மக்கள் பற்றி உங்களால் கற்பனை செய்ய முடியுமா?"[24]

தொடர்ந்து அவர் பின்வருமாறு கூறினார்,

> அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது; கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது (வசனங்கள் 17, 18).

"நல்ல மரம்" என்பது ஒரு கனிமரம் செய்ய வேண்டிய பணியைச் செய்யும் மரமாக உள்ளது: உண்ணத் தக்க கனியை உண்டாக்குதல். "கெட்ட மரம்" உண்ணத்தக்க கனியை உண்டாக்குவதில்லை.[25] இது, ஒரு நல்ல மரம் உண்ணத்தகாத கனியை *ஒருக்காலும்* உண்டாக்குவதில்லை என்று அர்த்தப்படுவதில்லை. ஒரு நல்ல ஆப்பிள் மரத்தில், புழுக்கள் கொண்ட ஒரு சில ஆப்பிள் பழங்கள் இருக்கக்கூடும். அதைப்போன்றே, ஒரு கெட்ட மரம் அவ்வப்போது தனது கிளைகளில் இருந்து தொங்குகிற நல்ல பழங்கள் சிலவற்றைக் கொண்டிருக்கவும் கூடும். ஒவ்வொரு

மரத்தினாலும் உண்டாக்கப்படும் கனியின் பொதுவான பண்பை இயேசு தமது சிந்தையில் கொண்டிருந்தார்.

கனிச்சோதனையை நமக்குப் போதிப்பவர்களுக்கு நாம் எவ்வாறு நடைமுறைப்படுத்த இயலும்? அவ்வாறு செய்வதற்கு நாம், "கனியின்" பல் வேறு வகைகள் உள்ளன மற்றும் "கனிச்சோதனையின்" பல்வேறு வகைகள் உள்ளன என்பதைப் புரிந்து கொள்வது அவசியமாகிறது. எடுத்துக்காட்டாக, *உபதேச* சோதனை உள்ளது: ஒருவர் எதைப் *போதிக்கிறார்*. எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் இருந்து ஒரு சொற்றொடரைக் கடனாகப் பெறுவது என்றால், நாம் அவரது உதடுகளின் கனியை ஆய்வு செய்வது அவசியமாக உள்ளது (காண்க எபிரெயர் 13:15). யோவான், தமது வாசகர்களை வஞ்சிக்க முயற்சி செய்யும் சிலரைப் பற்றி எழுதினார் (காண்க 1 யோவான் 2:26) மற்றும் பின்பு அவர், "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" என்று கூறினார் (1 யோவான் 4:1).[26] அவர்களை எவ்வாறு சோதித்தறிவது? அவர்கள் போதிப்பவற்றைத் தேவனுடைய ஏவுதல் பெற்ற சத்தியத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தலினால் (நடபடிகள் 17:11) சோதிக்க முடியும்.

இன்றைய நாட்களில் உலகமானது கள்ளப் போதனைகளின் பெருக்கத்தில் மூழ்கியுள்ளது. ஒவ்வொரு நாளும் ஒரு புதிய கள்ளப் போதனையைக் கொண்டுவருவதாகச் சிலவேளைகளில் காணப்படுகிறது. என்னிடத்தில் அவ்வப்போது, "இந்தத் தவறுகள் எல்லாவற்றையும் சாத்தியமான வகையில் நாம் எவ்வாறு கையாள முடியும்?" என்று கேட்கப்பட்டது. எனது பதில் பின்வருமாறு உள்ளது: தேவனுடைய வசனத்தைத் தொடர்ந்து வாசித்து, படித்து, சிந்திப்பதால்தான். தேவனுடைய வசனத்தின் சத்தியம் உங்களுக்குள் ஆழப்பதியப்பட்டு இருந்தால், நீங்கள் தவறான உபதேசத்தைக் கேட்ட மாத்திரத்தில் அதை அடையாளம் காணக்கூடியவர்களாக இருப்பீர்கள். உபதேச சோதனையைக் காட்டிலும் அதிக முக்கியமான சோதனை வேறு எதுவும் இருப்பதில்லை. ஒரு நபர், வசனத்தைப் போதிக்கவில்லை என்றால், அவர் கள்ளப் போதகராக இருக்கிறார்.

இருப்பினும் நாம், கள்ளப்போதகர் ஒருவரை அவரது போதனையைக் கொண்டே எல்லா வேளைகளிலும் அடையாளம் காண இயலாது. பிசாசும்கூட வேதவசனங்களை மேற்கோள் காண்பிக்க முடியும் (மத்தேயு 4:6). சிலவேளைகளில், ஒரு கள்ளப் போதகர் போதிக்கத் *தவறுவது* என்ன என்பதைக் காட்டிலும் அவர் போதிக்கிறது என்ன என்பது அதிகம் பிரச்சனையாக இருப்பதில்லை.[27] ஆகவே நாம் சோதித்துப் பார்க்க வேண்டிய கூடுதல் கனியுள்ளது.

அடுத்ததாக நான் ஒழுக்கம் பற்றிய சோதனையைப் பட்டியலிடுவேன்: போதகர் ஒருவரின் வாழ்வின் கனியை பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. அவர் செய்கிறவற்றில் "ஆவியின் கனி" (கலாத்தியர் 5:22, 23) தெளிவாக உள்ளதா இல்லையா என்று நாம் கேட்க வேண்டும். வரலாற்றுப்பதிவேடுகளின்படி, சபையின் தொடக்க நூற்றாண்டுகளில், கள்ளத் தீர்க்கதரிசிகள்/போதகர்கள் முதன்மைப் பிரச்சனையாக இருந்தனர். இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் Didache[28] என்ற ஏவுதல் பெற்றிராத புத்தகம்,

கள்ளப் போதகர்களை அடையாளம் கண்டுகொள்ளுதல் மீதான பகுதி ஒன்றைக் கொண்டுள்ளது.[29] பயணம் செய்யும் பிரசங்கியார்களுக்குத் தங்கும் வீடு அளிக்கும்படி கிறிஸ்தவர்கள் எதிர்பார்க்கப் பட்டனர்; ஆனால் இந்தப் பதிவேடு, "அவர் ஒரு நாள் தங்கியிருப்பார், அவசியமென்றால் இன்னொரு நாளும் தங்கியிருப்பார்; ஆனால் அவர் மூன்று நாட்களுக்குத் தங்கியிருப்பார் என்றால், அவர் ஒரு கள்ளத் தீர்க்கதரிசி என்கிறது." பயணம் செய்யும் பிரசங்கியார்கள் உணவு கேட்கக் கூடும், ஆனால் Didache என்ற புத்தகம், "அவர் பணம் கேட்டார் என்றால், அவர் ஒரு கள்ளத் தீர்த்ததரிசி என்றாகிறது" என்று எச்சரித்தது.[30] இன்றைய நாட்களில், ஒரு போதகர் எவ்வாறு வாழ்கிறார் மற்றும் அவர் என்ன செய்கிறார் என்பவற்றை நாம் இன்னமும் பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது.

இருப்பினும், ஒரு கள்ளப் போதகர் எப்போதுமே அவரது வாழ்வினால் அடையாளம் கண்டுணரப் படுபவராக இருப்பதில்லை. சில கள்ளப் போதகர்கள் நல்ல, ஒழுக்கமான வாழ்வை வாழ்கின்றனர். அப்படிப்பட்டவர்களை நாம் எவ்வாறு அடையாளம் காண முடியும்? *விளைவுகளின்* சோதனை என்பது கடைசி சோதனையாக உள்ளது: அவரது போதனை எவ்வகையான கனியை *உண்டாக்குகிறது?* "நீதியாகிய சமாதான பலன்" என்பதே தேவன் விரும்புகிற விஷயமாக உள்ளது (எபிரெயர் 12:11). யாக்கோபு "நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது" என்று எழுதினார் (3:18). எல்லா விதையும் (போதனையும்) சமாதானத்தை உண்டாக்குவதில்லை அல்லது சமாதானத்தில் விதைக்கப்படுவதில்லை என்பது கவலைக்குரியதாக உள்ளது. தவறான வகையிலான போதனையினால் விளையும் பல எதிர்மறை விளைவுகள் 2 தீமோத்தேயு 2ம் அதிகாரத்தில் காணப்படுகின்றன:

தேவபக்தியின்மை மேம்படுத்தப்படுதல்: சீர்கேடான பேச்சுக்கள் "அதிக அவபக்திக்கு வழிநடத்த" க்கூடும் (வசனம் 16).

விசுவாசம் கவிழ்த்துப் போடப்படுதல்: உபதேசம் "அரிபிளவையைப்போலப் படர்ந்து" "சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடக்" கூடும் (வசனங்கள் 17, 18).

சண்டைகள் ஊக்குவிக்கப்படுதல்: "புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்கும்" (வசனம் 23).

பின்வருவன போன்ற கேள்விகளை நாம் கேட்பது அவசியமாகிறது: இந்தத் தனிநபருடைய போதனையின் விளைவாக, மக்கள் கர்த்தருக்கு அதிகம் நெருக்கமாகி இருக்கின்றனரா? அவர்கள் ஒழுக்கரீதியாக நல்ல வாழ்க்கையை வாழ்கின்றனரா? அவர்கள் தேவனுடைய வசனத்திற்கு இன்னும் அதிகம் உண்மையுள்ளவர்களாக இருக்கின்றனரா? அவர்கள் ஒருவர் பிறரின் மீது அதிக அன்பைக் காண்பிக்கின்றனரா?

இதில் கனியானது படிப்படியாக வளருகிறது என்பதால், இந்த மூன்றாவது சோதனை சற்றுக் காலம் எடுத்துக்கொள்கிறது. விஷயம் இப்படி இருப்பதால், யாரேனும் ஒருவரைக் கள்ளப் போதகர் என்று பெயரிட நாம் மிகவும் துரிதமாயிருக்கக் கூடாது. J. W. மெக்கார்வீ அவர்கள், "நல்ல மரங்களின் மீது [வளருகிற] சில கெட்ட கனி மாதிரிகள் என்ற இலேசான மற்றும் அற்பமான செயல்களைக் கொண்டு நாம் துரிதமாகத் தீர்ப்பிட்டு விடக்கூடாது" என்று

எழுதினார்.[31] முன்பே குறிப்பிட்டபடி, நல்ல ஆப்பிள் மரத்தில்கூட புழுக்கள் உள்ள ஒரு ஆப்பிள் பழம் இருக்கக் கூடும். எனவே இந்த சோதனையை நடைமுறைப் படுத்துவதற்குப் பொறுமை தேவைப்படுகிறது, ஆனால் நாம் ஒழுக்கத்தின் சோதனையைப் புறக்கணித்துவிடக் கூடாது. இது மிகவும் முக்கியமானதாக உள்ளது.

இது என்ன வேறுபாட்டை ஏற்படுத்துகிறது?

நமது மத வழிகாட்டிகள் உண்மையானவர்களாக உள்ளனரா அல்லது தவறானவர்களாக உள்ளனரா என்பது என்ன வேறுபாட்டை ஏற்படுத்துகிறது? கள்ளப் போதகர்கள், அழிவுக்கு இட்டுச் செல்லும் விசாலமான வழியில் உள்ளனர் (காண்க வசனம் 13). இயேசு பின்வருமாறு கூறினார்,

> நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும் (வசனம் 19; 3:10 உடன் ஒப்பிடவும்).

மரங்களின் வரிசையைக் கொண்ட தெருக்களுடன் கூடிய அன்பான பழைய அயலகத்தைக் கொண்ட இடத்தில் நான் வசிக்கிறேன். இந்த மரங்கள் முதன்மையாக அலங்கார வகையாக உள்ளன. இருப்பினும் பலஸ்தீன நாட்டில் மரங்கள் வழக்கமாக அலங்காரத்திற்காக வளர்க்கப்படவில்லை. அவைகள் விறகுக்காகவோ அல்லது கட்டுமானப் பொருள்களுக்கு மரங்கள் அளிக்கவோ வளர்க்கப் பட்டு இருக்கலாம், ஆனால் அவைகள் கனிகளுக்காகவே பிரதானமாக வளர்க்கப்பட்டன. ஒரு மரமானது உண்ணத்தக்க கனியை உண்டாக்காவிட்டால், அது நல்ல மரங்களுக்குத் தேவையான ஊட்டச் சத்துக்களை மண்ணில் இருந்து உறிஞ்சிக் கொண்டிருந்ததாகக் கருதப்பட்டது. ஆகவே நல்ல கனியை உற்பத்தி செய்யாத மரம் வெட்டப்பட்டு விறகாகப் பயன்படுத்தப்பட்டது. "கெட்ட மரம்" என்பது கள்ளத் தீர்க்கதரிசிகளைப் பிரதிநிதித்துவப்படுத்திற்று என்பது உண்மையே. கள்ளப் போதகர்கள் நரகத்தின் அக்கினியில் தண்டிக்கப்படுவார்கள் என்று இயேசு தெளிவாகப் போதித்தார். "கள்ளப் போதகர்களின்" வருகையைப் பற்றிப் பேதுரு எழுதியபோது, அப்படிப்பட்டவர்கள் "தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளுவார்கள்" என்று அவர் எழுதினார் (2 பேதுரு 2:1).

கள்ளப் போதகர்களைப் பின்பற்றுபவர்களின் விஷயம் என்ன? அவர்களும் அதே அழிவுக்கு இட்டுச் செல்லும் அதே சாலையில் உள்ளனர். இயேசு, "குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே" என்று கூறினார் (மத்தேயு 15:14). அவரது கூற்றை நாம் பின்வருவது போன்று தழுவிக்கொள்ளலாம்: ஒரு கள்ளத் தீர்க்கதரிசி வஞ்சகமாக வழிநடத்தினால், அவரும் அவரால் வழிநடத்தப்படுகிறவரும் ஆகிய இருவருமே நித்திய அழிவை நோக்கிச் செல்கின்றனர். இதனால்தான் அது, நாம் சரியான ஆவிக்குரிய வழிகாட்டிகள் கூறுவதைக் கவனிக்கும்படி ஒரு வேறுபாட்டை - நித்தியமான ஒரு வேறுபாட்டை - ஏற்படுத்துகிறது.

நம்மில் ஒவ்வொருவரும், எந்த ஒரு அல்லது எல்லா போதகர்களையும் அவர்களின் போதனைகளையும் சோதனைக்கு உட்படுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ளோம். நாம் அலகுகளைத் திறந்து வைத்துக் கொண்டு தாய்ப்பறவை அவற்றிற்குள் இடும் எதையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக

உள்ள குஞ்சுப்பறவைகளைப் போல் இருக்கக் கூடாது. பெரோயா நகரில் இருந்தவர்கள் "மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால்" அவர்களை லூக்கா பாராட்டினார் (நடபடிகள் 17:11). "காரியங்கள்" என்பவை பவுலின் போதனைகளாக இருந்தன. பவுல் போதித்தவை வேதவசனத்தின்படி இருந்தனவா இல்லையா என்பதைக் காண்பதற்கு அவர்கள் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தனர்! நமக்குப் போதிப்பவர்களைக் குறித்து நீங்களும் நானும் அவ்வாறே செயல்பட வேண்டும். யோவான், "உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று *சோதித்தறியுங்கள்*" என்று கூறியதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் (1 யோவான் 4:1; வலியுறுத்தம் கூட்டப்படுகிறது).

முடிவுரை

நாம் இந்தப் பாடத்தை முடிக்கையில், "நீங்கள் பயணம் செய்யும் வழி எது?" என்று கேட்க மீண்டும் என்னை அனுமதியுங்கள். இரு சாலைகள் உள்ளன: அழிவுக்கு இட்டுச் செல்லும் விசாலமான வழி மற்றும் ஜீவனுக்கு இட்டுச் செல்லும் நெருக்கமான வழி. நீங்கள் எந்த எந்த வழியில் பயணம் செய்கிறீர்கள்? இரு வகையான வழிகாட்டிகள் உள்ளனர்: ஒருவர் பொய்யானவராகவும் இன்னொருவர் உண்மையானவராகவும் இருக்கிறார். நீங்கள் எவ்வகையான வழிகாட்டியைப் பின்பற்றுகிறீர்கள்? நாம் எந்த வழியில் இருக்க வேண்டும் என்று இயேசு விரும்புவதைப் பற்றியோ அல்லது நாம் எவ்வகையான ஆவிக்குரிய வழிகாட்டி கூறுவதைக் கேட்டுப் பின்பற்ற வேண்டும் என்று அவர் விரும்புவதைப் பற்றியோ சந்தேகம் எதுவும் இருப்பதில்லை.

மத்தேயு 7:13ல் உள்ள "வழியாய் உட்பிரவேசியுங்கள்" என்ற வார்த்தை, வெறும் புத்திமதியாக மாத்திரம் இருப்பதில்லை; அவைகள் ஒரு அழைப்பாகவும் உள்ளன. நமது வேதபாட வசனப் பகுதியில், இயேசு வெறுமனே நம்மை எச்சரிப்பது மாத்திரமல்ல; அவர் நம்மை வரவேற்கவும் செய்கிறார்.[32] கேட்க விருப்பமுள்ள யாவரிடத்திலும் இன்னமும் அவர், "இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்" என்று வேண்டிக் கேட்டுக்கொண்டுள்ளார்.

குறிப்புகள்:

[1]Clovis G. Chappell, *The Sermon on the Mount* (Nashville: Abingdon-Cokesbury Press, 1930), 207. [2]William F. Arndt and F. Wilbur Gingrich, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 4th ed., rev. and aug. (Chicago: University of Chicago Press, 1957), 326. [3]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 426. [4]Archibald Thomas Robertson, *Word Pictures in the New Testament,* vol. 1 (Nashville: Broadman Press, 1930), 61. *Thlipsis* என்ற வார்த்தைக்கு உறவு வார்த்தையான *thlibo* என்பது ஏறக்குறைய எப்போதுமே உபத்திரவத்தைக் குறிக்கிறது. [5]உங்கள் உரையைக் கேட்பவர்கள் "சுலபமானது" என்று கருதும் பாதைவழி ஒன்றை விவரியுங்கள். நான், நிழலான, மென்மையான வெளிச்சத்தால் ஒளியூட்டப்பட்ட, காற்றில் இனிய இசை

ஒலிக்கும், மலையிலிருந்து இறங்கும் பாதையொன்றைக் கற்பனை செய்வேன். [6]George W. Bailey, "The Narrow Gate and the Straitened Way," *The Preacher's Periodical* (now *Truth for Today*) (July 1982): 22. [7]Ibid., 36. [8]Arndt and Gingrich, 773. [9]*இயேசுவைப் பின்பற்றக்கூடும்படிக்குத் தமது "சுமையை" இறக்கி வைத்துவிட மனமின்றி இருந்த ஒருவருக்கு, செல்வந்தரான இளம் அதிகாரி உதாரணமாக இருக்கிறார் (லூக்கா 18:18-25). ஒரு கருத்தில் நாம் யாவரும், கிறிஸ்தவர்கள் ஆகும்போது ஏராளமான "சுமைகளை" நம்முடன் கொண்டு வருகிறோம், பின்பு அதை இறக்கிப் போடுவதற்கு வாழ்நாள் முழுவதிலும் வேலை செய்ய வேண்டியுள்ளது; ஆனால் மனந்திரும்புதல் என்பது, நாம் கிறிஸ்தவ வாழ்வைப் பாவம் குறித்தப் புதிய எண்ணப்போக்குடன் தொடங்கி அன்றாடம் இயேசுவைப் போல் இன்னும் அதிகமாக ஆக வேண்டும் என்று வற்புறுத்துகிறது.* [10]Manford George Gutzke, *Plain Talk on Matthew* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1966), 63.

[11]Coy Roper, "How to Please God," sermon preached at Trent church of Christ, Trent, Texas, 5 February 2006. [12]Vine, 164. [13]John R. W. Stott, *The Message of the Sermon on the Mount,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1978), 196. [14]Vine, 493. [15]*கள்ளத் தீர்க்கதரிசிகளைக் கள்ளப்போதகர்களுக்குச் சமானமாக்கும் 2 பேதுரு 2:1ம் வசனத்தைக் கவனியுங்கள்.* [16]Vine, 367. *"கள்ளத் தீர்க்கதரிசிகள்" என்பது "கள்ள" என்பதற்கான வார்த்தையை "தீர்க்கதரிசி" என்பதற்கான வார்த்தையுடன் இணைத்துப் பெறப்பட்ட pseudoprophetes என்ற கிரேக்கக் கூட்டு வார்த்தையில் இருந்து வருகிறது* (Vine, 493). [17] Adapted from Stott, 197. [18]*பிசாசும்கூட வேதவசனங்களில் இருந்து மேற்கோள் காண்பிக்க முடியும் (மத்தேயு 4:6).* [19]*அவர்கள் அடிக்கடி, வேதவசனத்தில் இருந்து மாறுபட்ட வகையில் வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றனர், ஆனால் பேசுவதற்குச் சரியான வார்த்தைகளை அவர்கள் அறிந்துள்ளனர்.* [20]Vine, 138.

[21]Alan Highers, "Beware of False Teachers," *Spiritual Sword* (April 2007): 1. [22]*"ஆட்டுத் தோலைப் போர்த்துக் கொண்டுள்ள இந்த ஓநாய்கள் நம்மை ஏமாற்றி வஞ்சிக்காமல் நம்மைக் காத்துக் கொள்வது எப்படி?" என்ற கேள்வியில் உள்ள சொற்றொடராக்கம் உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமானது என்றால் நீங்கள் அவர்களிடத்தில் இந்தக் கேள்வியைக் கேட்கலாம்.* [23]Adapted from Vine, 347; Robertson, 62. [24]Harold Fowler, *Matthew I,* Bible Study Textbook Series (Joplin, Mo.: College Press, 1968), 426. [25]*"கெட்ட" என்பதற்குப் பதிலாக* KJV *வேதாகமத்தில் "மோசம்போக்குகிற" மற்றும் "பொல்லாத" என்றுள்ளது. இவைகள் மிகச்சரியற்ற மொழிபெயர்ப்புகளாக இருப்பது இல்லை, ஆனால் இவ்வேத வசனம் தாவர வாழ்வைப் பற்றியதாக இருப்பதால், "கெட்ட" என்பது இந்தச் சிந்தனையின் மிகச்சிறந்த சொல்விளக்கமாக இருக்கலாம்.* [26]*யோவான் ஒரு குறிப்பிட்ட கள்ளப் போதனையைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார், ஆனால் நாம் அவரது வார்த்தைகளில் இருந்து பொதுவான நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த முடியும்.* [27]*வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், ஒரு கள்ளப் போதகர், அன்பு தயவு மற்றும் இரக்கம் போன்ற தலைப்புகள் - எல்லா முக்கியமான தலைப்புகள் - பற்றிப் பேசலாம், ஆனால் அவர் "நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும்" போன்ற (காண்க நடபடிகள் 24:25) குறைவான புகழ்பெற்ற தலைப்புகளை ஒருக்காலும் தொடமாட்டார்.* [28]*Didache என்பது "போதனை" அல்லது "உபதேசம்" என்று அர்த்தப்படுகிற கிரேக்க வார்த்தையாகும்.* Didache *என்பது "புறஜாதியாருக்குப் பன்னிரு அப்போஸ்தலர்கள் மூலமாகக் கர்த்தரின் போதனை [உபதேசம்]" என்று தன்னை உரிமை கோருகிறது. இது நடைமுறை விஷயங்கள் மீது தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் கைப்புத்தகம் என்ற வகையைச் சேர்ந்ததாக இருந்தது.* (J. R. Michaels, "Apostolic Fathers,"

The International Standard Bible Encyclopedia, rev., ed. Geoffrey W. Bromiley [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1979], 1:207.) [29]Didache 11.1-12.5. [30]Didache 11.9.

[31]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 267. [32]Bailey, 21.

19

கீழ்ப்படிதலுக்குப் பதிலி இல்லை

[மத்தேயு 7:21-8:1]

நாம் கிருபையினாலே இரட்சிக்கப்படுகிறோம், நமது இரட்சிப்பை நாமே ஈட்டிக்கொள்ள இயலாது என்று வேதாகமம் போதிக்கிறது (காண்க எபேசியர் 2:8, 9). அதே வேளையில், தேவனுக்குக் கீழ்ப்படிந்து இருப்பவர்களுக்கு மாத்திரமே அவருடைய கிருபை அளிக்கப்படுகிறது என்றும் வேதாகமம் போதிக்கிறது. இயேசு, "தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி" என்று எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபத்தின் ஆசிரியர் எழுதினார் (எபிரெயர் 5:9). இயேசு, "குமாரனுக்குக் கீழ்ப்படியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" என்று கூறினார் (யோவான் 3:36ஆ; NASB). நமது விசுவாசத்தை கீழ்ப்படிதலினால் நாம் வெளிப்படுத்துகிறோம் (காண்க யாக்கோபு 2:14-26). மற்றும் கீழ்ப்படிதலினால் நமது அன்பை நாம் வெளிப்படுத்துகிறோம் (காண்க யோவான் 14:15). கீழ்ப்படிதலினால் நமது உண்மையான ஞானத்தையும் நாம் வெளிப்படுத்துகிறோம் என்று நமது வேதபாட வசனப்பகுதி அறிவிக்கிறது. இயேசு கூறுவதைக் கேட்டு அதன்படி செய்கிறவரே ஞானமுள்ள தனிநபராக இருக்கிறார் (மத்தேயு 7:24). கீழ்ப்படிதலுக்குப் பதிலி ஒன்றும் இல்லை.

வார்த்தைகள் பதிலி இல்லை (7:21-23)

கொள்கை (வசனம் 21)

21 முதல் 23வரையிலான வசனங்களில், கீழ்ப்படிதலுக்கு *வார்த்தைகள்* பதிலியாக இருப்பதில்லை என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம். நமது வேதபாட வசனப்பகுதி, "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (வசனம் 21) என்ற இயேசுவின் கூற்றுடன் தொடங்குகிறது. ஒருசில வசனங்களுக்கு முன்னர் இயேசு, இடுக்கமான வாசல் வழியாக உட்பிரவேசித்தல் பற்றிக் குறிப்பிட்டார். இங்கு அவர், இராஜ்யத்திற்குள் பிரவேசித்தல் பற்றிப் பேசினார். நாம் இடுக்கமான வாசல் வழியாக இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கிறோம். நாம் எவ்வாறு அந்த வாசல் வழியாகச் சென்று இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கிறோம்? நாம் *பரலோகத்தில்* இருக்கிற தேவனுடைய சித்தத்தின்படி செய்வதினால் பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கிறோம்.

இயேசுவின் பிரசங்கத்தில் இதுவரையிலும், "இராஜ்யம்" என்ற சொற்றொடர், யூதர்கள் முன்னெதிர் நோக்கிக் கொண்டிருந்த மேசியாத்துவ இராஜ்யத்தையே முதன்மையாகக் குறிப்பிட்டது. இந்த இராஜ்யத்தின் வாக்குத்தத்தம் சபை

நிலைநாட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.[1] பிதாவினுடைய சித்தத்தின்படி செய்யாமல் எவரொருவரும் சபையின் உறுப்பினராக இயலாது என்பது நமது வேதபாட வசனப்பகுதியில் இருந்து ஏற்படுத்தப் படக்கூடிய மதிப்புள்ள ஒரு கருத்தாக உள்ளது.[2] இருப்பினும், பிரசங்கம் முடிவுக்கு வருகையில் இயேசு, நியாயத்தீர்ப்பின் நாளை நோக்கித் தமது கவனத்தைத் திருப்பினார் (காண்க வசனங்கள் 22, 23). ஆகவே 21ம் வசனத்தில் இயேசு அனேகமாக, பரலோக இராஜ்யத்தைத் தமது சிந்தையில் கொண்டிருந்து இருக்கலாம். தேவனுடைய சித்தத்தின்படி செய்யாமல் எவரொருவரும் பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது.

இயேசு ஏற்படுத்திய கருத்திற்கு நாம் திரும்பவும் செல்வோமாக: வார்த்தைகள் கீழ்ப்படிதலுக்குப் பதிலியாக இருப்பதில்லை. அவரைச் சிலர், "கர்த்தாவே" என்று அழைத்தனர். "கர்த்தாவே" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (kurios என்ற) வார்த்தை இவ்விடத்தில் தெய்வீகக் குறிப்புப் பெயராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.[3] தொடக்கால விசுவாச அறிக்கையொன்று "இயேசுவைக் கர்த்தரென்று சொல்லுதல்" என்பதாக இருந்தது (காண்க 1 கொரிந்தியர் 12:3). நமது வேதபாட வசனப் பகுதியில் இயேசுவினால் குறிப்பிடப்பட்டவர்கள் அவரை "கர்த்தாவே!" என்று மாத்திரம் அழைப்பவர்களாக இருக்கவில்லை, ஆனால் அந்த இயற்பெயரை - "கர்த்தாவே!" "கர்த்தாவே!" என்று - திரும்பத் திரும்பக் கூறுபவர்களாக இருந்தனர், இது வைராக்கியத்தையும் ஊக்கத்தையும் சுட்டிக்காண்பிக்கிறது. இவை யாவையும் பாராட்டப்படத் தக்கதாகவே உள்ளது, ஆனால் இயேசுவை "கர்த்தாவே!" என்று அழைத்தல் என்பது கர்த்தர் என்ற வகையில் இயேசுவுக்கு முழு இருதயத்தோடும் கீழ்ப்படிதலுக்குப் பதிலியாக ஒருக்காலும் இருக்க இயலாது. அசுத்த ஆவிகள் இயேசுவை "தேவனுடைய பரிசுத்தர்" என்று ஒப்புக்கொண்டன (மாற்கு 1:24; காண்க யாக்கோபு 2:19); ஆனால் அந்த அறிக்கையை ஏற்படுத்திய பின்னரும் அவைகள் இன்னமும் அசுத்த ஆவிகளாகவே இருந்தன.

இயேசுவை கர்த்தர் என்று அறிக்கையிடுகிறவர்கள், தேவனுடைய கட்டளைகள் யாவற்றையும் கடைப்பிடிக்கத் தங்களை ஒப்புக்கொடுத்தல் அவசியமாக உள்ளது. அடுத்த பகுதியில் (வசனங்கள் 24-27), இயேசுவினால் பேசப்பட்ட வார்த்தைகள், தேவனுடைய சித்தம் என்ற வகையில் அடையாளப்படுத்தப் பட்டுள்ளது (காண்க யோவான் 8:28; 12:49, 50). நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவனும் இயேசுவும் விரும்புகிறார்களோ, அதைச் செய்வதற்கு நாம் நமது வாழ்வை அர்ப்பணிக்க வேண்டும். லூக்கா சுவிசேஷத்தில் உள்ள இணைவசனப் பகுதியில் இயேசு, "என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?" என்று கேட்டார் (லூக்கா 6:46).

நாம் தேவனுடைய சித்தத்தைச் செய்வதைப் பற்றிப் பேசும்போது, பூரணமான கீழ்ப்படிதலைப் பற்றி நாம் பேசுவதில்லை. எந்தத் தனிநபரும் அதைச் செய்யக்கூடியவராக இருப்பதில்லை (காண்க 1 யோவான் 1:8). இந்தப் படிப்புகள் முழுவதிலும் நான், மலைப்பிரசங்கத்தின் உயரிய கொள்கைகளில் எனது சொந்தக் குறைவுகள் பற்றி அறிக்கையிட்டுள்ளேன். எனவே தேவனுடைய சித்தத்தைச் செய்வதைப் பற்றி நாம் பேசுகையில் நமது சிந்தையில் கொண்டுள்ளது என்ன? செயல்படுதலின் விஷயத்தில் போலவே கீழ்ப்படிதலின் விஷயத்திலும்

எண்ணப்போக்கே அதிகம் பொருட்படுத்தப் படக்கூடிய விஷயமாக உள்ளது. நாம், "ஒரு விஷயத்தைத் தேவன் செய்யும்படி கூறுகிறார் என்றால், அதுவே நான் செய்ய விரும்பும் விஷயமாக உள்ளது!" என்று கூறக்கூடிய எண்ணப்போக்கு தேவைப்படுபவர்களாக இருக்கிறோம். நமது மிகச்சிறந்த திறனைக் கொண்டு தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு நம்மை ஒப்புக்கொடுப்பவர்களாக நாம் இருத்தல் அவசியமாகிறது. J. W. மெர்கார்வீ அவர்கள், "நமது அன்றாட பாவத்திற்கான மன்னிப்பின் நிபந்தனைகளுடன் அன்றாடம் உடன்படுதலுடன் இணைந்த [காண்க மத்தேயு 6:12; நடபடிகள் 8:22; 1 யோவான் 1:9], மாம்சத்தின் பலவீனத்தின் மத்தியில் நமக்குச் சாத்தியமான அளவுக்குக் கீழ்ப்படிதல் என்பது எப்போதுமே தேவனுடைய தயவைப் பெற்றுக்கொண்டுள்ளது" என்று எழுதினார்.[4]

நியாயத்தீர்ப்பின் காட்சி (வசனங்கள் 22, 23)

இந்த வகையான ஒப்புக்கொடுத்தலில் குறைவுபடுகிறவர்கள் பற்றிய விஷயம் என்ன? D. மார்ட்டின் லாயிட் - ஜோன்ஸ் அவர்கள், "இந்த உலகத்தில் உரைக்கப்பட்டவற்றிலேயே ... மிகவும் புனிதமான வார்த்தைகள்"[5] என்று அழைத்த வார்த்தைகளிடத்திற்கு நாம் வருகிறோம்: 22 மற்றும் 23ம் வசனங்களில் உள்ள வார்த்தைகள். எனக்கு அவைகள், பேசப்பட்டவற்றிலேயே மிகவும் கவலையான வார்த்தைகளாக உள்ளன.

இந்தப் பகுதி, "அந்நாளில் அநேகர் என்னை நோக்கி" என்று தொடங்குகிறது (வசனம் 22அ). "அந்நாளில்" என்பது கிறிஸ்து திரும்பவந்து எல்லாரும் நியாயந்தீர்க்கப்பட இருக்கும் நாளைக் குறிக்கிறது (காண்க 2 தெசலோனிக்கேயர் 1:7-10; 2 தீமோத்தேயு 1:12; 4:8). இயேசு, "அந்நாளில் *அநேகர்* என்னை நோக்கி" என்று கூறினார் என்பதைக் கவனியுங்கள் (வலியுறுத்தம் கூட்டப்படுகிறது). "அநேகர்" கேட்டுக்குச் செல்லும் விசாலமான வழியில் இருக்கின்றனர் (மத்தேயு 7:13); ஏறக்குறைய எல்லாரும் இப்படி இருக்கிறார்கள் என்பதை அறியாதிருக்கிறார்கள் என்பது பரிதாபத்திற்குரியது. இதன் விளைவாக, நியாயத்தீர்ப்பின் நாளில், கர்த்தர் அவர்களை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று "அநேகர்" வலியுறுத்துவார்கள்.

இயேசுவின் வார்த்தைகளை மீண்டும் கவனியுங்கள்: "அந்நாளில் அநேகர் *என்னை* நோக்கி ... என்பார்கள்" (வலியுறுத்தம் கூட்டப்படுகிறது). நியாயத்தீர்ப்புக்காக நாம் அரியணை முன் நிற்கும்போது, அங்கு இயேசு அமர்ந்திருப்பார், இயேசுவே நமது முடிவைத் தீர்மானம் செய்பவராக இருப்பார். பிற்பாடு அவர் பின்வருமாறு கூறினார்:

> அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடதுபக்கத்திலும் நிறுத்துவார் (மத்தேயு 25:31-33).

அந்த வேளையில் இயேசு, மலைப்பகுதியில் அமர்ந்திருந்தார்; ஆனால் ஒருநாளிலே அவர் தமது அரியணையில் வீற்றிருப்பார். நமது வேதபாட வசனப்பகுதியில், அவரது உரையைக் கேட்டுக் கொண்டு இருந்தவர்கள், அவரையும் அவரது போதனையையும் ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பதை முடிவு செய்து கொண்டிருந்தனர், ஆனால் "அந்நாளில்" அவர்களை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பதை அவர் முடிவு செய்வார்.

தொடர்ந்து இயேசு, "அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்" என்று கூறினார் (வசனம் 22). இது, இயேசுவின் ஊழியத்துடன் தொடங்கி அப்போஸ்தலர்கள் மற்றும் அவர்கள் கைகளை வைத்தவர்கள் ஆகியோரின் வாழ்வுக்காலங்கள் முழுவதிலும் நீடித்திருந்த, அற்புதங்களின் காலத்தின்போது பேசப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் மக்கள் தீர்க்கதரிசனம் உரைத்தனர் (தேவனுக்காகப் பேசினர்), மக்களிடமிருந்து அசுத்த ஆவிகளைத் தூரத்தினர் மற்றும் பிற அற்புத வரங்களையும் செயல்விளக்கப்படுத்தினர் (காண்க மாற்கு 16:17, 18; நடபடிகள் 2:43; 13:1).

இயேசுவினால் சித்தரிக்கப்பட்ட தனிநபர்கள் உண்மையாகவே இந்தச் செயல்களைச் செய்தனரா? அவர்கள் இயேசுவின் காலத்திலும் அப்போஸ்தலர்களின் காலத்திலும் வாழ்ந்திருந்தனர் என்றால், அவர்கள் அவற்றைச் செய்திருக்கச் சாத்தியம் உள்ளது. எடுத்துக்காட்டாக, யூதாஸ் என்பவர் மலைப்பகுதியில் இயேசு கூறியவற்றைக் கவனித்தவர்களில் ஒருவனாக இருந்தான். மற்ற அப்போஸ்தலர்களுக்கு அருளப்பட்டது போலவே யூதாஸுக்கும் அற்புதங்களை நிகழ்த்தும் திறன் அருளப்பட்டிருந்தது (காண்க மத்தேயு 10:1-4). மேலும், அப்போஸ்தலர்கள் அற்புத வரங்களைக் கொடுக்கும்படி யாரேனும் ஒருவர் மீது தங்கள் கைகளை வைத்ததையும் (காண்க நடபடிகள் 8:18) அந்த தனிநபர் பிற்பாடு கர்த்தருக்கு உண்மையற்றுப் போனதையும் என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. தீர்க்கதரிசன வரத்தை உடையவர்களாக இருந்தும் அன்பில் குறைவுபடச் சாத்தியம் இருந்தது என்று பவுல் 1 கொரிந்தியர் 13ல் சுட்டிக்காண்பித்தார் (வசனம் 2).

அற்புதங்களைச் செய்யும் வரம் என்பது தன்னில் தானே, ஒருவர் தேவனைப் பிரியப்படுத்துகிறார் என்பதற்கு வழக்கிட இயலாத நிருபணமாக ஒருக்காலும் இருந்ததில்லை. பழைய ஏற்பாட்டில் தேவன், பாலாமிடத்தில் பேசி அவரது வாயில் வார்த்தைகளை இட்டார் (காண்க எண்ணாகமம் 22:9, 35, 38), ஆனால் பாலாம் "அவன் அநீதத்தின் கூலியை விரும்பினவன்" என்று கண்டனம் பண்ணப்பட்டார் (2 பேதுரு 2:15). புதிய ஏற்பாட்டில் பவுல், கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் எந்த அற்புத வரத்திலும் குறைவுபட்டிருக்கவில்லை (காண்க 1 கொரிந்தியர் 1:7; 12:1, 4-11), இருப்பினும் அந்த நகரத்தில் இருந்த சபைக்குழுமம் ஆவிக்குரிய பிரச்சனைகளின் பரவலான அளவினால் நோய் கொண்டிருந்தது என்று கூறினார்.

மத்தேயு 7:22ன் தனிநபர்கள், தாங்கள் அற்புதங்களை நிகழ்த்தி இருந்ததாக நினைக்கும்படி சாத்தானால் வஞ்சிக்கப்பட்டிருக்கவும் சாத்தியம் உண்டு. முன்னரே நாம் குறிப்பிட்டபடி, "அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி ..."

என்று இயேசு கூறினார் (மத்தேயு 24:11). பவுல், "அக்கிரமக்காரன்" பற்றிப் பவுல் பேசியபோது, அவனது வருகை "சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமை யோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்" இருக்கும் என்று அவர் கூறினார் (2 தெசலோனிக்கேயர் 2:9). சிலர் அற்புத வரங்களைக் கொண்டிருப்பதாக வஞ்சிக்கப்படலாம் என்பது பற்றி லியோ போல்ஸ் அவர்கள் "மக்கள் வஞ்சிக்கப்பட்டவர்களாக வாழ்ந்து, வஞ்சிக்கப்பட்டவர்களாக மரித்து, வஞ்சிக்கப்பட்டவர்களாகத் தேவனுக்கு முன்பாக நியாயந்தீர்க்கப்படுவதற்கு வருவார்கள்" என்று எழுதினார்.[6]

நமது வேதபாட வசனப் பகுதியில் குறிப்பிடப்பட்டு உள்ளவர்கள் ஒருவேளை, தாங்கள் அதைச் செய்துள்ளதாக உரிமைகோரியுள்ளதைச் செய்திருக்கலாம் அல்லது ஒருவேளை அவர்கள் அதை செய்யாது இருக்கலாம். எந்த வகையிலும் அவர்கள், இயேசுவின் நாமத்தினால் பல அற்புதமான செயல்களைச் செய்திருந்ததாகவும் இது அவர்கள் விசேஷமாக நடத்தப்படத் தகுதியாக்கிற்று என்றும் நினைத்தனர் என்பது தெளிவு. தான் எவ்வளவு பெரியவன் என்று தேவனிடம் கூறிய பரிசேயனின் பின்வரும் வார்த்தைகள், அவர்கள் (பரிசேயர்கள்) எவ்வளவு அகந்தை கொண்டிருந்தனர் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது: "தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டு தரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்தி வருகிறேன்" (லூக்கா 18:11, 12).

நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்துவதற்கு நாம், நியாயத்தீர்ப்பின் நாளில் கர்த்தரிடத்தில், "கர்த்தாவே, நான் சபை ஆராதனை ஊழியங்கள் யாவற்றிலும் கலந்து கொள்ளவில்லையா? நல்ல ஒழுக்கமான வாழ்க்கை வாழவில்லையா? உமது நாமத்திலே மக்கள் பலருக்கு உதவிசெய்யவில்லையா?" என்று கூறும் யாரையேனும் கற்பனை செய்து கொள்வோம். இதைப்பற்றி நினைத்தல் என்னைப் பதட்டம் அடையச் செய்கிறது, ஆனால் ஒரு சுவிசேஷ ஊழியர் "கர்த்தாவே, இந்த ஆண்டுகள் எல்லாவற்றிலும் நான் உமக்காக உண்மையுடன் பிரசங்கிக்கவில்லையா? எண்ணற்ற வேதாகம வகுப்புகளை நடத்தவில்லையா? மதரீதியான பாடங்கள் பலவற்றை எழுதவில்லையா? இடர்ப்பாட்டில் இருந்த பல ஆத்துமாக்களுக்கு உமது நாமத்திலே ஆலோசனை கூறவில்லையா?" என்று கூறுவதைக் கூட என்னால் கற்பனை செய்ய முடிகிறது.[7] இந்த நடவடிக்கைகள் யாவையும் பாராட்டப்படத் தக்கவைகளே, ஆனால் இவைகளில் எதுவும், கர்த்தருடன் சரியான உறவுமுறையைக் கொண்டிருப்பதின் இடத்தை எடுத்துக்கொள்ள இயலாது.

காட்சியானது இந்தக் கவலையான, கவலையான, கவலையான, வசனத்திற்காக அமைக்கப்பட்டுள்ளது: "அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்" (வசனம் 23). "சொல்லுவேன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*homolegeo* என்ற) கிரேக்க வார்த்தை (மத்தேயு 10:32ல் உள்ளது போன்று) "அறிக்கைபண்ணுதல்" என்று அடிக்கடி மொழிபெயர்க்கப்படுகிற வார்த்தையாக உள்ளது.[8] "இந்த சந்தர்ப்பப் பொருளில் (இது) சட்டப்பூர்வமான அறிவித்தல் என்ற ஏற்படுத்துதலை அர்த்தப்படுத்துகிறது."[9] இது நியாயத்தீர்ப்பின் அரியணையில் அமர்ந்திருக்கும்

ஒருவரின் உன்னதமான தீர்ப்பாக உள்ளது.

தீர்ப்பு என்னவாக இருந்தது? முதலாவது, "நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை." இது கர்த்தர், அவர்களின் இருப்பைப் பற்றி அறியவில்லை என்றோ அல்லது அவர்கள் என்ன செய்திருந்தனர் என்று அவர் அறியாதிருந்தார் என்றோ அர்த்தப்படுவதில்லை. வேதாகமத்தில் "அறிதல்" என்ற வார்த்தையானது அடிக்கடி ஒரு உறவைக் குறிப்பிடப் பயன்படுத்தப் பட்டுள்ளது.[10] பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் மக்களினத்திடம் தேவன், "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்து கொண்டேன்" என்று கூறினார் (ஆமோஸ் 3:2அ). புதிய ஏற்பாட்டில் பவுல், "தேவனில் அன்புகூருகிறவனெவனோ, அவன் தேவனால் அறியப்பட்டிருக்கிறான்" (1 கொரிந்தியர் 8:3); "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்" (2 தீமோத்தேயு 2:19) என்று கூறினார். நியாயந்தீர்க்கப்படுபவர்கள் இயேசுவுக்கு உரியவர்கள் அல்ல, அவருடன் இரட்சிக்கும் உறவு கொண்டிருந்தவர்கள் அல்ல என்று இயேசு கூறினார். "நான் *ஒருக்காலும்* உங்களை அறியவில்லை" என்ற அவரது கூற்றானது, இவர்கள், தேவனுடைய பிள்ளைகளாக இருப்பதாக ஏறக்குறைய நிச்சயமாக நினைத்திருந்தாலும், இவர்கள் வசனத்தின் வேதாகமக் கருத்தில் ஒருக்காலும் கிறிஸ்தவர்கள் ஆகியிருந்ததில்லை என்பதைச் சுட்டிக் காண்பிக்கலாம்.

அடுத்ததாக இயேசு இருதயத்தைப் பிளக்கும் பின்வரும் வார்த்தைகளைப் பேசினார்: "அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள்."[11] நியாயத்தீர்ப்பின் நாளில் இயேசு தமது இடது புறத்தில் இருப்பவர்களைப் பார்த்து, "சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" என்று கூறுவார் (மத்தேயு 25:41). பின்பு, "இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும்," "கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி" செல்வார்கள் (மத்தேயு 25:46அ; 2 தெசலோனிக்கேயர் 1:9).

இந்தத் தனிநபர்களை "அக்கிரமச் செய்கைக்காரர்கள்" என்று இயேசு குறிப்பிட்டார்.[12] பிலிப்ஸ் அவர்களின் மொழிபெயர்ப்பில் "பிசாசின் பக்கமாகச் செயல்பட்டவர்களே!" என்றுள்ளது. இவர்கள் நாம் "கெட்டவர்கள்" என்று அழைக்கும் நபர்களாக இருக்கவில்லை. இவர்கள் தேவபக்தி உள்ளவர்களாக இருந்தனர். இவர்கள் தங்கள் மதரீதியான நடவடிக்கையில் உண்மையாகவும் மனச்சான்றின்படி செயல்படுபவர்களாகவும் இருந்தனர் என்பது தெளிவு. இவர்கள், தாங்கள் தேவனைச் சேவித்ததாக நினைத்தனர். பின்பு ஏன் இவர்கள் "அக்கிரமச் செய்கைக்காரரே" என்று குறிப்பிடப்பட்டனர்? ஒருவேளை அவர்கள், ஒருசில நல்ல செயல்களைச் செய்தலே தேவன் கேட்டுக் கொண்ட யாவுமாக இருந்தது என்று நினைத்த காரணத்தினால் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கலாம். ஒருவேளை அவர்கள், செயல்களை "கர்த்தருடைய நாமத்திலே" செய்தல் அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக அறியப்பட்டிருக்க அவர்களைத் தகுதிப்படுத்தியது என்று நினைத்த காரணத்தினால் இவ்வாறு குறிப்பிடப் பட்டிருக்கலாம். ஒருவேளை அவர்கள் நல்ல செயல்களைச் செய்தலானது பரலோகத்தில் தங்களுக்கு ஒரு இடத்தை ஏதோ ஒரு வகையில் ஈட்டியது என்று நினைத்த காரணத்தினால் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கலாம். இருப்பினும் அவர்கள் பரலோகத்தில் இருக்கிற தேவனுடைய சித்தத்தின்படி

செய்திருந்தது இல்லை என்று இயேசு தெளிவாக்கினார். ஏதோ ஒரு வகையில் அவர்கள், தேவனுடைய பிரமாணங்களுக்குப் பதிலாகத் தங்கள் சொந்த இருதயங்களின் கட்டளைகளைப் பின்பற்றி இருந்தனர். ஆகவே தேவனுடைய கண்களில் அவர்கள் "அக்கிரமக்கார" தனிநபர்களாக - அவரது பிரமாணத்தை எதிர்த்து நிற்கிற மக்களாக - இருந்தனர். கீழ்ப்படிதலுக்கு வார்த்தைகள் பதிலியாக இருப்பதில்லை என்று நான் மீண்டும் கூறுகிறேன்.

என்னைத் தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம். இயேசுவை கர்த்தரென்று அறிக்கையிடுதல் முக்கியமானதாக உள்ளது, அத்தியாவசியமானதாகக் கூட உள்ளது. பவுல், "... கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" என்று எழுதினார் (ரோமர் 10:9). இயேசு, "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன்" என்று கூறினார் (மத்தேயு 10:32). இருந்தபோதிலும், அறிக்கையிடுதலானது அவரது சித்தத்தைச் செய்ய ஒப்புக்கொடுத்தலினால் பலப்படுத்தப்படாதபோது, இயேசுவை "கர்த்தர்" என்று அழைத்தல் பயனற்றதாக உள்ளது. *உதடுகள்* மற்றும் *வாழ்க்கை* ஆகிய இரண்டுமே அவருக்கு அர்ப்பணிக்கப் பட்டிருக்க வேண்டும்.

கேள்விப்படுதல் பதிலியல்ல (7:24-27)

கொள்கை

அடுத்ததாக இயேசு, வெறுமனே கேள்விப்படுதல் என்பது கீழ்ப்படிதலுக்குப் பதிலியாக இருப்பதில்லை என்று அறிவித்தார். மலைப்பிரசங்கத்தின் நிறைவுப் பகுதியில் இயேசு, தமது வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிபவர்கள் மற்றும் அவற்றிற்குக் கீழ்ப்படியாதவர்கள் ஆகியோரைக் குறிப்பிட்டார். காலத்தின் புயல்களும் நித்தியத்துவமும் தாக்கும்போது, முதலாம் வகையினர் நிலைநிற்பார்கள் என்றும் இரண்டாம் வகையினர் அழிக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

தேவனுடைய வார்த்தையைக் கேள்விப்படுதல் முக்கியமானதாக உள்ளது. பழைய ஏற்பாட்டில் மோசே மக்களிடத்தில், "இஸ்ரவேலே, கேள்!" என்று புத்தி கூறினார் (உபாகமம் 6:4). புதிய ஏற்பாட்டில் பின்வரும் புத்திமதி அடிக்கடி காணப்படுகிறது: "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" (மத்தேயு 11:15; காண்க 13:9, 43; மாற்கு 4:9, 43; 7:16; லூக்கா 8:8; 14:35). பவுல், "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்று கூறினார் (ரோமர் 10:17). இருப்பினும் தேவனுடைய வார்த்தையைக் கேள்விப்படுதல் மாத்திரமோ அல்லது அதைப் புரிந்து கொள்ளுதல் மாத்திரமோகூட போதுமானதாக இருப்பதில்லை. "விதைக்கிறவன் உவமையில்" (லூக்கா 8:4-15) கூறப்பட்ட நான்கு வகையான மக்களும் வசனத்தைக் கேள்விப்பட்டனர் (வசனங்கள் 12-15) - ஆனால் அந்த நான்கில் ஒரு வகையினர் மாத்திரமே தேவனுக்கென்று கனிகொடுத்தனர் (வசனங்கள் 8, 15).

நாம் கேள்விப்படுவதன்படி செயல்படாமல் கேள்விப்படுதல் என்பது பலன் தராததாக உள்ளது: அது எதையும் சாதிப்பதில்லை. அதைக் காட்டிலும் மிகமோசமாக, ஆவிக்குரிய விஷயங்களில் இது எதிர்விளைவை ஏற்படுத்தக்

கூடியதாக உள்ளது: இது ஆத்துமாவை அழிவுக்கு உட்படுத்தக் கூடும். ஜான் R. W. ஸ்டாட் அவர்கள், “வேதாகமம் வாசிக்க அபாயமான புத்தகமாக உள்ளது” என்று எழுதினார்;[13] மற்றும் A. T. ராபர்ட்ஸன் அவர்கள், “பிரசங்கங்களைக் கேட்டல் என்பது அபாயமான வேலையாக உள்ளது”[14] என்று கூறினார் - அதாவது நாம் வாசிக்கிற அல்லது கேட்கிற விஷயத்தைப் பற்றி ஒன்றும் செய்யாதிருக்கும்போது, அது அபாயமானதாக உள்ளது. நாம் கற்றுக்கொள்ளவும் அதன்படி செய்யவும் வேண்டும்.

புத்தியாய் வீட்டைக் கட்டுபவர் (வசனங்கள் 24, 25)

வீடு கட்டும் இருவர் பற்றிய நன்கு அறியப்பட்ட உவமையைக் கொண்டு இயேசு தமது கருத்தை வலியுறுத்தினார். உலகமுழுவதிலும் பிள்ளைகள், “கற்பாறை மீது கட்டினவன் புத்தியுள்ளவன் ...” என்ற பாடலைப் பாடுகின்றனர். முதலாவதாக இயேசு புத்தியாய் வீட்டைக் கட்டுபவர் பற்றிப் பேசினார்: “ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு. இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்” (மத்தேயு 7:24). “புத்தி” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (phronimos என்ற) வார்த்தை “மதிநுட்பம், கூருணர்வு” என்று அர்த்தப்படுகிறது.[15]

“நான் சொல்லிய இந்த வார்த்தைகள்” என்பது மலைப்பிரசங்கத்தில் இயேசுவின் வார்த்தைகளைத் திட்டவட்டமாகக் குறிக்கிறது, ஆனால் அவர் பேசிய எல்லா வார்த்தைகளுக்கும் இதன் நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த முடியும். யூத அதிகாரிகளிடத்தில் அவர், “என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்” என்று கூறினார் (யோவான் 12:48). அவரது ஏவுதல் பெற்ற அப்போஸ்தலர்கள் பின்னாளில் பேசிய வார்த்தைகளுக்கும் நடைமுறைப் பயன்பாடு ஏற்படுத்தப்படமுடியும். இயேசுவின் மரணத்திற்கு முன்பாக அவர் தமது அப்போஸ்தலர்களிடம், தாம் பரிசுத்த ஆவியை அனுப்புவதாகக் கூறினார் (யோவான் 14:16, 17), அவர் (பரிசுத்த ஆவியானவர்) தாம் அவர்களுக்குப் போதித்திருந்த யாவற்றையும் நினைவூட்டுவார் (வசனம் 26) என்றும் அவர் கூறினார். புதிய ஏற்பாடு முழுவதும் “இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு” என்று அறியப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டு உள்ளவற்றின்படி செயல்படுதலானது கிறிஸ்துவின் வார்த்தைகளின்படி செயல்படுவதாக உள்ளது. அதைச் செய்பவர்கள் தமது வீட்டைக் கன்மலையின் மேல் கட்டிய புத்தியுள்ள மனிதருக்கு ஒப்பிடப்பட முடியும்.

அதன் அஸ்திபாரத்தைக் காட்டிலும் அதிக பலமான கட்டுமானம் வேறு எதுவும் இருப்பதில்லை. பலஸ்தீனத்தின் கரடு முரடான எல்லைப்பகுதியில் கனத்த பாறை அமைப்புகள் பல உள்ளன, எனவே கட்டிடம் கட்டுவதற்கு ஒரு பாறையைக் கண்டறிதல் என்பது கடினமாக இருந்திருக்காது. தகுதியான பாறை அஸ்திபாரம் மேற்பரப்பில் தயாராகக் காணப்படவில்லை என்றால், தோண்டும்போது ஒருவர் அதைக் கண்டறிய முடியும். சமனான வெளியில் செய்த பிரசங்கத்தில் இயேசு, தமது வார்த்தைகளின்படி செயல்படுகிற மனிதர் “ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின்மேல் அஸ்திபாரம்போட்டு, வீடுகட்டுகிற

மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்" (லூக்கா 6:48அ) என்று கூறினார்.

தொடர்ந்து இயேசு, "பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை" (மத்தேயு 7:25அ) என்று கூறினார். அந்த வீடானது, மேலிருந்து பொழிந்த மழையினாலும், கீழிருந்து புறப்பட்ட வெள்ளத்தினாலும் பக்கங்களில் இருந்து வீசிய காற்றினாலும் தாக்கப்பட்டது. பலஸ்தீனத்தின் எல்லைப் பகுதியைப் பற்றிச் சிலவற்றை அறிதல் என்பது, இந்த உருவகத்தைப் புரிந்துகொள்ள உதவியாயிருக்கும். அந்த நாடானது ஆண்டின் பெரும்பான்மையான காலத்தில் வறட்சியாக இருந்தது மற்றும் ஆழ்ந்து குறுகிய பள்ளத்தாக்குகள் பலவற்றைக் கொண்டிருந்தது, அவற்றில் சில மணற்பாங்கான அடிப்பகுதியைக் கொண்டிருந்தன. மழைக் காலங்களில், தண்ணீர் வெள்ளமானது தனது பாதையில் உள்ள இந்தப் பள்ளத்தாக்குகளில் இருக்கும் எல்லாவற்றையும் அடித்துச் சென்றுவிடும்.[16] இயேசுவின் செய்தியை மதித்து உணருவதற்குக் காட்சியின் கொந்தளிப்பைத் தரிசிக்க முயற்சி செய்யுங்கள்: மழை கீழிறங்கி வருகிறது, காற்று பெருங்கூச்சலிட்டு அடிக்கிறது மற்றும் நீரலைகள் அந்த வீட்டிற்கு எதிராக மோதியடிக்கிறது![17]

"ஒரு நிமிடம் பொறுங்கள்!" என்று யாரேனும் ஒருவர் மறுப்புரை தெரிவிக்கலாம். "இவர் புத்தியுள்ள கட்டும் மனிதராக உள்ளார். இவர் கேட்டு கீழ்ப்படிகிறவராக இருக்கிறார். நிச்சயமாகவே, ஞானமும் கீழ்ப்படிதலும் உள்ளவர்கள் மதியீனமும் கீழ்ப்படியாமையும் உள்ளவர்களைப் போன்று புயலுக்கு ஆளாவதில்லை!" என்று அவர்கள் கூறலாம். ஆம், இயேசுவைப் பின்பற்றுகிறவர்களும் அவரைப் பின்பற்ற மறுக்கிறவர்கள் போன்றே புயல் நிறைந்த சூழ்நிலையைக் கொண்டுள்ளனர்.

இந்த உலகத்தின் புயல்கள் உள்ளன. நமது வாழ்வானது சுகவீனம், ஏமாற்றங்கள், துக்கம், காட்டிக்கொடுக்கப்படுதல் மற்றும் துன்புறுத்தப்படுதல் போன்றவற்றினால் மோதியடிக்கப்படக்கூடும். முதிர் வயது மற்றும் மரணம் அணுகுதல் ஆகியவை நம்மை மூழ்கடிப்பதாக அறைகூவல் விடக்கூடும். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த உலகத்திற்கு அப்பால் நியாயத்தீர்ப்பின் நாளில் சோதனை வேளையின் மாபெரும் விளைவு உள்ளது. உடனடியாகத் தொடர்ந்து வரும் (வசனங்கள் 22, 23) வசனங்களின் வெளிச்சத்தில், இதுவே அனேகமாக இயேசுவின் சிந்தையில் மிகமேலாக இருந்திருக்க வேண்டும். வேதாகமம் பின்வருமாறு போதிக்கிறது ...

> ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான் (ரோமர் 14:12).

> ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும் (2 கொரிந்தியர் 5:10).

> அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே (எபிரெயர் 9:27).

புத்தியுள்ள மனிதரின் வீடு மழை, வெள்ளங்கள் மற்றும் காற்று ஆகியவற்றினால் தாக்கப்பட்ட போது அதற்கு என்ன நேர்ந்தது? "... அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம்

போடப்பட்டிருந்தது" (மத்தேயு 7:25ஆ). அது திடமான அஸ்திபாரத்தின்மீது கட்டப்பட்டு இருந்த காரணத்தினால் நிலைநின்றது. நமது வாழ்வும்கூட திடமான பாறையின்மீது கட்டப்பட்டிருக்க வேண்டும் (காண்க 1 யோவான் 2:17).

புத்தியுள்ள மனிதர் "a rock*" மீதல்ல ஆனால் "the* rock*" மீது கட்டினார் என்று இயேசு கூறினார் என்பது கவனிக்கப் பட்டுள்ளது*[18] *(வலியுறுத்தம் கூட்டப்பட்டுள்ளது). ஒருவேளை அவர் தம்மைக் குறித்த "பாறை" என்ற மறைமுகமான குறிப்புரையை ஏற்படுத்தி இருக்கலாம் (காண்க 1 கொரிந்தியர் 3:11). விஷயம் அப்படி இருந்தாலும்கூட,*[19] *அவரது வலியுறுத்தம் பாறை என்பதன் மீதானதல்ல, ஆனால் பாறையின் மீது ஒருவர் - இயேசு கூறுவதைக் கவனித்தலினாலும் பின்பு அவர் கூறுகிறபடி செய்கிறதினாலும் - எவ்வாறு கட்டுகிறார் என்பதன் மீதே இருந்தது. இயேசு தமது வசனத்தில் என்ன கூறுகிறார் என்பதை அறிந்தால் மாத்திரம் போதாது; அவர் கூறுகிறபடி நாம் செய்ய வேண்டும். அவரது போதனையைப் பாராட்டினால் மாத்திரம் போதாது; அதன்மீது நாம் செயல்பட வேண்டும். இயேசு கூறினவற்றை போதிப்பது மற்றும் பிரசங்கிப்பது கூட போதாது. பிரசங்கித்தல் எவ்வளவு முக்கியமானதாக இருந்தாலும், அது நடைமுறையின் இடத்தை ஒருக்காலும் எடுத்துக்கொள்ள முடியாது. நாம் இயேசுவுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அவ்வாறுதான் நாம் அவரது வார்த்தைகளை ஆழமாகப் புரிந்துகொள்ளவும் அவற்றை மதித்துணரவும் முடியும், மற்றும் அவ்வாறுதான் நாம் அவரைப் பிரியப்படுத்த முடியும்.*

வீடுகட்டும் இவ்விருவர் பற்றி குழந்தைகளின் பாடல் ஒன்றில் முடிவு சரணம் பின்வருமாறு உள்ளது:

ஆகவே
ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மீது
உங்கள் வீட்டைக் கட்டுங்கள் ...
ஆசீர்வாதங்கள் கீழிறங்கி வருமே.
ஜெபங்கள் மேலே எழும்புவதைப் போன்றே
ஆசீர்வாதங்கள் கீழிறிங்கி வருமே ...[20]

பிள்ளைகளுடன் நான் இதைப் பாடுகையில், வீடுகட்டும் இருவரைப்பற்றி இயேசு என்ன கூறினார் என்பதை நான் விளக்கப்படுத்தி பின்பு பின்வரும் புதிய வார்த்தைகளைப் பாடும்படி பிள்ளைகளுக்கு ஆலோசனை கூறுவேன்:

ஆகவே
ஆண்டவருடைய வார்த்தை மீது
உங்கள் வாழ்வைக் கட்டுங்கள் ...
ஆசீர்வாதங்கள் கீழிறங்கி வருமே
அவரது சித்தத்தின்படி நாம் செய்கிறபோது
ஆசீர்வாதங்கள் கீழிறிங்கி வருமே ...[21]

புத்தியில்லாமல் வீட்டைக் கட்டுபவர் (வசனங்கள் 26, 27)

26ம் வசனத்தில் இயேசு தமது கவனத்தை, புத்தியில்லாமல் வீட்டைக் கட்டுபவர் மீது திரும்பினார்: "நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு,

இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான்" (வசனம் 26). "புத்தியில்லாத" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள (*moros* என்ற) வார்த்தையில் இருந்தே நாம் "moron" ["வயதிற்குத் தக்க அறிவில்லாதவர்"] என்ற வார்த்தையைப் பெறுகிறோம். இது, "மந்தமான, சோம்பலான ... மதியீனமான, அறிவற்ற" என்று அர்த்தப்படுகிறது.[22]

வீடுகட்டுதல் பற்றிய ஒப்புவமையை நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது, கட்டிடத்தின் வகை அல்லது கட்டுதலில் பயன்படும் பொருள் பற்றிப் பேச நாம் சோதிக்கப்படலாம் (காண்க 1 கொரிந்தியர் 3:12, 13). இருப்பினும் இயேசுவின் விவரிப்பில், அஸ்திபாரம் மாத்திரமே இரு வீடுகளுக்கும் இடையிலான ஒரே வேறுபாடாக உள்ளது. இரு வீடுகளும் ஒரே விதமான தரைத் திட்ட அமைப்பைக் கொண்டிருக்க முடியும். அவற்றின் கட்டுமானத்தில் ஒரே விதமான பொருட்கள் பயன்படுத்தப்பட்டு இருக்கலாம். காண்போருக்கு அவை ஒரே விதமாகவே காட்சியளித்திருக்கும். அவைகள் ஒரே இட அமைப்பில் இருந்தன என்பதும் தெளிவு, ஏனெனில் ஒரு வீட்டைத் தாக்கிய அதே புயல் இன்னொன்றையும் தாக்கியது. அஸ்திபாரம் மாத்திரமே ஒரே வேறுபாடாக இருந்தது. புத்தியுள்ள மனிதர் பாறையின் மீது கட்டிய வேளையில் புத்தியில்லாத மனிதர் மணலின் மீது கட்டினார்.

மதநம்பிக்கையற்றவர்கள், "ஆனால் ஒரு வீட்டை மணலின் மீது கட்டுமளவுக்கு எவரொருவரும் புத்தியில்லாதவராக இருக்கமாட்டார்" என்று வலியுறுத்தலாம். உண்மையில் பல வீட்டு அமைப்புகள் திடமற்ற அடிப்படையின்மீது கட்டப்பட்டுள்ளன. தரையின்மீது கட்டப்பட்டு கரளைக் கற்களால் நிரப்பப்பட்ட பீசா நகரத்துச் சாய்ந்த கோபுரம் குறிப்பிடத்தக்க உதாரணமாக உள்ளது.[23] விரைவிலேயே அந்தக் கோபுரம் சாயத் தொடங்கிற்று. இன்றைய நாட்களில் அந்தக் கோபுரம் வீழ்ந்து விடாதிருக்கப் பெருந்தொகையான பணம் செலவிடப்பட்டுக் கொண்டிருக்கிறது. உண்மையில் வீடு கட்டுபவர்களை இயேசு தமது சிந்தையில் கொண்டிருக்கவில்லை. அவர் வீடுகளைத் கட்டுதல் பற்றியல்ல ஆனால் வாழ்வைக் கட்டுதல் பற்றி அக்கறை உடையவராக இருந்தார். ஒவ்வொருநாளும் திரளான ஜனக்கூட்டங்கள் தங்கள் எண்ணப்போக்கு மற்றும் செயல் ஆகியவற்றில் புத்தியில்லாத வகையில் வீடுகட்டுபவர்களாக முயற்சி மேற்கொள்கின்றனர். மக்கள் தக்கவகையிலான தயாரித்தல் இன்றி அவசரமாகத் திருமணம் செய்கின்றனர். மக்கள் கவனமாக கூர்ந்தாய்வு செய்யாமலேயே நிதிநிலை ஏற்பாடுகளில் துரிசமாய்ச் செயல்படுகின்றனர். துரதிர்ஷ்டவசமாக, மத விஷயத்தைப் பொறுத்தமட்டிலும்கூட இது உண்மையாக உள்ளது. பலர் தங்கள் வாழ்வைக் காலங்கள் தோறும் நிலைத்து நிற்கும் பாறையின்மீது உறுதியாய் நிலைநாட்ட நேரத்தையும் முயற்சியையும் எடுத்துக் கொள்ளாமல் உடனடியாக ஆவிக்குரிய நிறைவை விரும்புகின்றனர்.

புத்தியில்லாத மனிதர் உறுதியான அஸ்திபாரத்தைப் பற்றிக் கவலைப்படாது இருந்ததால், அவரது வீடானது அனேகமாக புத்தியுள்ள மனிதரின் வீட்டைவிட அதிக விரைவாகக் கட்டப்பட்டு இருக்கும். அவர் தமது புதிய வீட்டினுள் தமது குடும்பத்துடன் குடியேறுகையில், பின்வருமாறு பெருமிதம் கொள்வதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது: வீடு கட்டும் மற்றவரிடத்தில் அவர், "ஆ, ஆ, நான் எனது வீட்டை பாதிக்காலத்திலேயே கட்டிவிட்டேன்!"

இருப்பினும் பின்பு, "பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது" (மத்தேயு 7:27).[24] ஆவிக்குரிய வகையில் பேசுவதென்றால், இந்த இடிதலானது அடிக்கடி, வாழ்வின் புயல்கள் தாக்கும்போது தொடங்குகிறது; ஆனால் முற்றிலுமான இடிதலானது நியாயத்தீர்ப்பின் நாளில் காணப்படும். சிலர் தங்களை இந்த வாழ்வின் இயற்பியல்ரீதியான புயல்களில் இருந்து பாதுகாப்பதற்கு விரிவான பாதுகாப்பு இல்லங்களைக் கட்டி எழுப்பியுள்ளனர்; ஆனால் கடைசிநாளில், மனிதரால் உண்டாக்கப்பட்ட ஒவ்வொரு பாதுகாப்பும் புறம்பே உரியப்படும். தேவனுடைய வல்லமையுள்ள அரியணைக்கு முன்பாக, யாவரும் புகலற்ற நிலையில் நிற்போம். பின்பு ஆயத்தமாயிராதவர்கள் விழுந்து போவார்கள், அவர்களின் வீழ்ச்சி பெரிதாக இருக்கும். இவ்விடத்தில் இயேசு தமது எஜமானத்துவம் நிறைந்த பிரசங்கத்தை - வெற்றுரையுடன் அல்ல, ஆனால் எதிரொலிக்கும் வீழ்ச்சியுடன் - முடித்தார்!

இயேசுவின் செய்தியில் தவறான புரிந்துகொள்ளுதல் எதுவும் இருப்பதில்லை: அவரது சித்தத்தைக் கேள்விப்பட்டு கற்றுக்கொள்ளுதல் மாத்திரம் போதுமானதல்ல; நாம் செய்யும்படி அவர் கூறியுள்ளது எதுவோ அதை நாம் *செய்ய வேண்டும்*. போல்ஸ் அவர்கள், "*கேள்விப்பட்டு* அதன்படி *செய்யாதிருத்தல்* என்பது பயனற்றதைவிட மிகமோசமானதாக உள்ளது; அப்படிப்பட்ட கேள்விப்படுதல் குற்ற உணர்வை மோசமான வகையில் அதிகப்படுத்துவதை மாத்திரமே செய்யும்; தமது கடமையைப் பற்றி ஒருவர் எவ்வளவு அதிகம் கேள்விப்படுகிறாரோ, அவர் அதற்குக் கீழ்ப்படியாதிருந்தால், அவ்வளவுக்கு அதிகம் குற்ற உணர்வுகொள்கிறார்" என்று எழுதினார்[25] (காண்க யாக்கோபு 4:17). இது, நாம் பூரணமாகக் கீழ்ப்படியக் கூடியவர்களாக இருக்கிறோம் என்று அர்த்தப்படுத்துவதில்லை என்று நான் மீண்டும் கூறுகிறேன், ஆனால் நம்மால் இயன்ற அளவு மிகச் சிறப்பாகத் தேவனுடைய சித்தத்தைச் *செய்தல்* என்பது நமது இருதயங்களின் நோக்கமாகவும் விருப்பமாகவும் இருக்க வேண்டும். கேள்விப்படுதல் என்பது கீழ்ப்படிதலுக்குப் பதிலியாக இருப்பதில்லை.

முடிவுரை

மலைப்பிரசங்கத்தின் மீதான நமது படிப்பின் முடிவிற்கு நாம் வந்திருக்கிறோம். இந்தப் பிரசங்கத்தைப் பற்றி ஆல்பர்ட் பேர்னெஸ் அவர்கள், "தூய்மை, சத்தியம் மற்றும் வனப்பு மற்றும் மேன்மை ஆகியவற்றில் [மலைப்பிரசங்கத்துடன்] ஒப்பீடு செய்வதற்கு எல்லா மொழிகளிலும் ஒரு உரையும் காணப்படுவதில்லை" என்று எழுதினார்.[26] நாம் ஒன்றுகூடிச் செலவிட்ட நேரம், உங்களை அந்த மதிப்பீட்டை இன்னும் அதிகமாக ஒப்புக்கொள்ளச் சாயும்படி செய்திருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இந்தப் பிரசங்கத்தை முதன் முதலாகக் கேட்டவர்கள் மீது இது கொண்டிருந்த செயல்விளைவு என்ன? மத்தேயு, இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது,[27] "... ஜனங்கள் அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்" என்று எழுதினார் (மத்தேயு 7:28). இயேசு தம் வார்த்தைகளை, தம் சீஷர்களை நோக்கி குறிப்பிட்டுச் சொன்னார் (காண்க 5:1, 2), இவர்கள் ஏற்கெனவே அவரைப் பின்பற்ற ஒப்புக்கொடுத்திருந்தனர்;

ஆனால் அவரை சூழ்ந்து கொண்ட "கூட்டத்தாரும்" (காண்க 4:25; 5:1; 7:28) அவருடைய வார்த்தைகளைக் கேட்டனர் என்பது தெளிவு. இவர்கள் அவரது போதகத்தைக் குறித்து "ஆச்சரியப்பட்டனர்." "ஆச்சரியப்பட்டார்கள்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள (*ekplesso* என்ற) கிரேக்க வார்த்தை ஒரு பலமான வார்த்தையாக உள்ளது. இது, "ஒருவர் தமது உணர்வுகள் அற்றுப்போகும்படி தாக்கப்படுதல்,"[28] "பேச்சற்றுப் போகுதல்,"[29] "திகைத்துப் போயிருத்தல்" என்று அர்த்தப்படுகிறது.

ஜனங்கள் இயேசுவின் போதகத்தைக் குறித்து இவ்வளவாக ஆச்சரியப்பட்டது ஏன்? "அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய்[30] அவர்களுக்குப் போதித்தபடியால்" (7:29) அவர்கள் ஆச்சரியப்பட்டனர். "வேதபாரகர்கள் நியாயப்பிரமாணத்தையும் பாரம்பரியத்தையும் பாதுகாத்து, பிரதியெடுத்து விளக்கியுரைத்த கற்றறிந்த மனிதர்களாக இருந்தனர்."[31] அவர்களின் போதகத்தில் முடிவற்ற அதிகாரத்துவங்களை அவர்கள் மேற்கோள் காண்பித்தனர்: "அ என்ற ரபீ, ஆ என்ற ரபீயின் அதிகாரத்துவம் பற்றிக் கூறுகிறார், ஆ என்ற ரபீ, இ என்ற ரபீயின் அதிகாரத்துவம் பற்றிக் கூறுகிறார், இ என்ற ரபீ, ஈ என்ற ரபீயின் அதிகாரத்துவம் பற்றிக் கூறுகிறார்" மற்றும் இது மென்மேலும் தொடரப்பட்டது.[32] இந்த உரையாடல்களின் மாதிரிகள் யூதர்களின் தல்மூத் என்ற புத்தகத்தில் பாதுகாக்கப் பட்டுள்ளன. இவற்றை "மனிதகுலத்தின் வரலாற்றில் கற்பனை செய்யக்கூடிய ஒவ்வொரு பிரச்சனையின் மீதான, தொடர்பற்ற விளக்கங்களின் மிக உலர்ந்த, மிக சலிப்பான தொகுப்பு" என்று ராபர்ட்ஸன் அவர்கள் அழைத்தார்.[33]

வேதபாரகர்களுக்கு நேர்மாறாக, இயேசு "அதிகாரமுடையவராய்" பேசினார் (காண்க மத்தேயு 28:18). வேதபாரகர்கள் "அதிகாரத்தின் *மூலம்*" பேசிய வேளையில் இயேசு "அதி*காரத்துடன்*" பேசினார்.[34] வேதபாரகர்கள், "இந்த ரபீ இவ்வாறு சொன்னார்" என்று கூறிய வேளையில், இயேசு "*நான்* உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார் (மத்தேயு 5:18, 20, 22). "இயேசு தமது வார்த்தைகளுக்குச் சுயமாக அதிகாரத்துவப்படுத்தும் தொனியைக் கொண்டிருந்தார்."[35]

சிலர், மலைப்பிரசங்கத்தின் மாபெரும் தன்மையை ஒப்புக்கொள்கின்றனர், ஆனால் மலையில் பேசியவரது மாபெரும் தன்மையை ஒப்புக்கொள்ளத் தவறுகின்றனர். பிரசங்கத்தின் மாபெரும் தன்மை என்பது அந்தப் பிரசங்கத்தை உரைப்பவரின் மாபெரும் தன்மையின் மீது அமைந்துள்ளது. மீண்டும் சிலர், "... மலையின் மீதிருந்த இரட்சகரைப் பிரிந்து மலைப்பிரசங்கம் தனியே ஜீவிக்க இயலாது"[36] என்பதை உணர்ந்து அறியாமலேயே, மலைப்பிரசங்கத்தின் உயர்ந்த தரநிலையைப் பாராட்டுகின்றனர். இயேசுவின் மூலமாக நாம் உள்ளான பலத்தைப் பெறுகிறோம் (காண்க யோவான் 16:33; 1 யோவான் 5:4). நாம் குறைவுபடும்போது இயேசுவின் மூலமாக நாம் மன்னிக்கப்படுகிறோம் (காண்க எபேசியர் 1:7).

ஆகவே நாம் நமது பாடத்தை முடிக்கும் இவ்வேளையில், மலையின் மீது பிரசங்கித்தவரை நோக்கி நான் உங்கள் கவனத்தை ஈர்க்க விழைகிறேன். ஜனக்கூட்டம் அவரது போதனையைப் பார்த்து வியந்து திகைத்தது. நீங்கள் வியந்து திகைத்திருக்கிறீர்களா? அவர் போதித்ததை ஜனக்கூட்டம் கேட்ட போது அவர்கள் அவரைப் பின்பற்றினர். உங்களைப் பற்றிய விஷயம் என்ன? அவரது

மாபெரும் பிரசங்கத்தைப் படித்துள்ள நிலையில், நீங்கள் அவரைப் பின்பற்ற விரும்புகிறீர்களா? அவரது சித்தத்தின்படி செய்ய உங்களையே ஒப்புக்கொடுக்க நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? அவருக்குக் கீழ்ப்படிபவர்கள் மாத்திரமே ஆசீர்வதிக்கப் படுவார்கள். அவரது வார்த்தையைக் கேட்டு அவற்றின்படி செய்கிறவர்கள் மாத்திரமே இந்த வாழ்விலும் இதற்குப்பின்வரும் வாழ்விலும் ஏற்படும் புயல்களில் நிலைத்து நிற்பார்கள்.

நிறைவாக ஒரு வார்த்தை: மலையின் மீது பேசியவர்

இந்தப் பாடத்தில் நான், மலைப்பிரசங்கத்தின் மாபெரும் தன்மையை ஒப்புக்கொண்டு, ஆனால் மலையின் மீது பேசியவரின் மாபெரும் தன்மையை ஒப்புக்கொள்ளாதவர்களைப் பற்றிக் குறிப்பிட்டேன். இயேசு யாராக இருந்தார் என்பதற்கான உள்மறைக் குறிப்புகளைக் காண்பதற்குப் பிரசங்கம் முழுவதையும் பார்வையிடுங்கள். பாக்கியங்களில் இயேசு, "<u>என்னிமித்தம்</u> உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்" என்று கூறினார் (மத்தேயு 5:11, 12அ; வலியுறுத்தம் கூட்டப்படுகிறது). <u>இயேசுவின் நாமத்தினிமித்தம்</u> துன்புறுத்தப்படுபவர்கள் பரலோகம் செல்வார்கள் என்பது வாக்குத்தத்தமாக உள்ளது! மேலும் 5ம் அதிகாரத்தில், நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும் "நிறைவேற்றவே" இயேசு வந்தார் என்ற அவரது கூற்று உள்ளது (வசனம் 17). மேசியா மாத்திரமே அதைச் செய்ய முடியும். எனவே அவர், "... என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். <u>நான்</u> உங்களுக்குச் சொல்லுகிறேன் ..." (வசனங்கள் 27, 28அ; வலியுறுத்தம் கூட்டப்பட்டுள்ளது; காண்க வசனங்கள் 21, 22, 31-34, 38-44) என்று கூறுகையில் அவரது அதிகாரத்துவமான குரலைக் கவனியுங்கள்.

இயேசுவின் மேசியாத்துவம் மற்றும் தெய்வீகத்துவம் ஆகியவற்றிற்கு உள்மறைந்துள்ள உரிமைகோருதல்கள் பற்றி நாம், இந்தப் பாடத்திற்கான வசனம் தவிர வேறு எங்கும் தேட வேண்டியதில்லை. 7:22, 23ல் இயேசு, கடைசிநாளில் <u>தாம்</u> நியாயாசனத்தில் அமரப்போவதாகச் சுட்டிக்காண்பித்தார். மீண்டுமாக 24 மற்றும் 26ம் வசனங்களில் இயேசு தேவனுடைய சித்தத்தைத் தமது சொந்த வார்த்தைகளுடன் சமப்படுத்தினார். இயேசு தெய்வீகத்துவத்தை உரிமைகோரினார்.

மதநம்பிக்கை அற்ற ஒருவர், "ஒருவேளை இயேசு தாம் தெய்வீகமானவர் என்று, தேவனுடைய தனித்துவமான குமாரன் என்று நம்பியிருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு செய்தார் என்றால், அது அவர் எவ்வளவு ஏமாற்றுபவராகவும் பைத்தியக்காரராகவும் இருந்தார் என்பதையே காண்பிக்கிறது" என்று பதில் அளிப்பதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. அவ்வகையான சிந்தித்தலுக்கு ஜான் ஸ்டாட் அவர்கள் எவ்வாறு பதில் அளித்தார் என்பது இங்கு தரப்படுகிறது: "மலைப்பிரசங்கத்தின் மிக உயர்வான ஒழுக்கநெறிகள், பைத்தியக்கார மனதின் உற்பத்தியாக உள்ளன என்ற கருத்தை உண்மையிலேயே தீவிரமாகப் பராமரிக்க முடியுமா? அந்த முடிவை அடைவதற்கு பாவ இயல்பின் மிக உயர்வான அளவு தேவைப்படுகிறது."[37]

நீங்கள் மலைப்பிரசங்கத்தை, அதைப் பிரசங்கித்தவருக்கு உங்களை ஒப்புக்கொடுக்காமல் படித்தீர்கள் என்றால், நீங்கள் அந்த உரையின் மிகமுக்கியமான அம்சத்தைத் தவறவிட்டிருக்கிறீர்கள் என்றாகிறது. அந்த பிரசங்கத்திற்கு அர்த்தம் கொடுப்பவர் இயேசுவே. அந்தப் பிரசங்கத்திற்கு அதிகாரத்துவம் கொடுப்பவர் இயேசுவே. "தேவன் அருளிய (இயேசு என்ற) சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்" (2 கொரிந்தியர் 9:15)!

குறிப்புகள்

[1]*இந்தப் புத்தகத்தில் முன்னதாக உள்ள "இவ்வாறு ஜெபியுங்கள்" என்ற பாடத்தில் இந்தக் கருத்தின் மீதான கலந்துரையாடலைக் காணவும்.* [2]*இந்த இடத்தில் நீங்கள், ஒரு தனிநபர் கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படுவதற்கு அவர் செய்ய வேண்டியவை யாவை என்பதைக் குறிப்பிட முடியும் (காண்க நடபடிகள் 2:36-38, 41, 47).* [3]*Kurios என்பது பலவகை அர்த்தங்களைக் கொண்டிருக்க முடியும்; ஆனால் 21 மற்றும் 22ம் வசனங்களில் சந்தர்ப்பப் பொருளானது, இது தெய்வீக இயற்பெயரை நோக்கங் கொண்டுள்ளது என்று சுட்டிக்காண்பிக்கிறது.* [4]J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 268. [5]D. Martyn Lloyd-Jones, *Studies in the Sermon on the Mount,* vol. 2 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 261. [6]H. Leo Boles, *A Commentary on the Gospel According to Matthew* (Nashville: Gospel Advocate Co., 1976), 181. [7]*நியாயத்தீர்ப்பின் நாளானது பெருமை பாராட்டும் நாளாக இருக்கப் போவதில்லை, ஆனால் அது நம்மைத் தேவனுடைய இரக்கத்தை நோக்கி வீசும் நாளாகவும் தேவனுடைய அன்பின் கொடைக்காக அவரைத் துதிக்கும் நாளாகவும் இருக்கும்.* [8]*Homolegeo என்பது "ஒரே விஷயத்தைப் பேச" என்ற நேரடி அர்த்தம் கொண்ட கூட்டுவார்த்தையாகும் (lego* ["*பேச*"] *மற்றும் homos* ["*ஒரே*"]*)* (W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* [Nashville: Thomas Nelson Publishers, 1985], 120). [9]Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 71. [10]Vine, 346.

[11]*சங்கீதம் 6:8ஐ ஒப்பிட்டுப் பார்க்கவும்.* [12]*"அக்கிரமச்செய்கை" என்பது* (*anomia*) *nomos* [*"பிரமாணம்"*] *என்பதை* a *என்ற முன்னிடைச் சொல் கொண்டு எதிர்ப்பதமாக்கிய வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது.* KJV *வேதாகமத்தில்* "iniquity" *என்றுள்ளது.* [13]John R. W. Stott, *The Message of the Sermon on the Mount,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1978), 210. [14]Archibald Thomas Robertson, *Word Pictures in the New Testament,* vol. 1 (Nashville: Broadman Press, 1930), 63. [15]Vine, 679. [16]*பலஸ்தீனத்தின் இந்த அமைப்பைப் பற்றி நான் வாசிக்கையில், டென்னிஸ் சிம்மன்ஸ் அவர்கள் ஆஸ்திரேலியாவில் எங்களை அழைத்துச் சென்ற ஒரு முகாம் சிற்றுலா என் நினைவுக்கு வருகிறது. நாங்கள் மலைக்கணவாயின் அடிப்பகுதியில் இருந்த ஒரு செங்குத்தான கரைப்பகுதிக்குக் கீழிறங்கிச் சென்று ஒரு சிறிய நீரோடையின் அருகில் முகாமிட்டோம். அங்கு மலைக்கணவாயில் வளர்ந்திருந்த மரங்களின் மேலிருந்த குப்பைகளைக் கவனித்த நான், அதைப்பற்றி டென்னிஸிடம் கேட்டேன். "அது மழை பெய்யும்போது தண்ணீர் எவ்வளவு உயரத்திற்கு வருகிறது என்பதைக் காட்டுகிறது" என்று அவர் கூறினார். அன்றைய இரவு வேளையின் பெரும்பான்மையான பகுதியில் நான் இடிமுழக்கத்தின் சத்தத்திற்காக விழித்திருந்தேன்.* [17]*"புத்தியுடன் வீட்டைக் கட்டுபவர் வெள்ளத்தினால் இவ்வளவு பாதிக்கப்படக்கூடிய இடத்தைத் தெரிவு*

செய்யக் குறைவான தொலைநோக்குடையவராக இருந்தாரா என்பது இவ்விடத்தில் வருவதில்லை, ஏனென்றால் இயேசுவின் உவமையின் உண்மை வாழ்விற்கான நடைமுறைப் பயன்பாட்டில், நாம் நமது பண்பை எவ்விடத்தில் மேம்படுத்தலாம் என்பதற்கும், சோதனை மற்றும் இடர்ப்பாடுகள் என்ற நித்தியத்திற்கும் நம்மை அச்சுறுத்தும் விஷயங்களில் இருந்து பாதுகாக்கப் பட்டுள்ளது என்பதற்கும் இடமில்லை" (Harold Fowler, *Matthew I,* Bible Study Textbook Series [Joplin, Mo.: College Press, 1968], 437). [18]KJV வேதாகமத்தில் "a rock" என்றுள்ளது, ஆனால் கிரேக்க வசனத்தில் "rock" என்ற வார்த்தைக்கு முன்னால் ("the" என்ற) திட்டவட்டச் சுட்டுச்சொல் உள்ளது. [19]விஷயம் அப்படி இருக்காது. 26ம் வசனத்தின் "மணல்" என்பதற்கு முன்பாகவும் திட்டவட்டச் சுட்டுச்சொல் காணப்படுகிறது, மற்றும் அந்தக் குறிப்பில் திட்டவட்டச் சுட்டுச்சொல்லுக்கு விசேஷித்த தனிச்சிறப்பு எதுவும் இருப்பதாகக் காணப்படவில்லை. [20]Unknown, "The Wise Man Built His House upon the Rock"; http//www.ebibleteacher. com/ children/songs.htm#Wise%20Man; Internet; accessed 10 July 2008.

[21]இந்தப் புதிய வார்த்தைகளுடன் புதிய கை அசைவுகளையும் நான் கற்றுக்கொடுக்கிறேன். "ஆண்டவருடைய வார்த்தை" என்பதைப் பாடும்போது நாங்கள் எங்கள் கைகளைத் திறந்து வைக்கப்பட்ட வேதாகமம் போன்று பிடித்துக்கொள்வோம். "அவரது சித்தத்தின்படி நாம் செய்கிறபோது" என்பதைப் பாடும்போது நாங்கள் ஒரு விரலினால் மேல்நோக்கிச் சுட்டிக்காண்பிப்போம். [22]Vine, 246. [23]Dick Marcear, "What Are You Building On?" *Stafford Standard,* weekly bulletin of Stafford church of Christ, Stafford, Texas (29 January 1985). [24]நீதிமொழிகள் 10:25ஐ ஒப்பிடவும். [25]Boles, 184. [26]Albert Barnes, *Notes on the New Testament: Matthew and Mark,* ed. Robert Frew (Grand Rapids, Mich.: Baker Book House, 1970), 82. [27]"இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது" என்பது, இந்தப் பிரசங்கம் இயேசுவின் போதனைகளின் தொகுப்பாக இருந்தது என்பதற்கு மாறாக ஒரே தனி எடுத்துரைப்பாக இருந்தது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. [28]Mounce, 71. *Ekplesso* is a compound word: *ek* ("out of") plus *plesso* ("to strike") (Vine, 25). [29]Lenski has "dumbfounded" (R. C. H. Lenski, *The Interpretation of St. Matthew's Gospel* [Minneapolis, Minn.: Augsburg Publishing House, 1943], 314). [30]"அதிகாரம்" என்பது *exousia* என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

[31]McGarvey, 166. [32]McGarvey, 167 ல் இதற்கு ஒரு உதாரணம் உள்ளது. [33]Robertson, 63. [34]A. B. Bruce, "Commentary on the Synoptic Gospels," *The Expositor's Greek Testament,* ed. W. Robertson Nicoll (London: Hodder, 1897), 136. [35]Mounce, 70. [36]E. Stanley Jones, *The Christ of the Mount* (New York: Abingdon Press, 1931), 296. [37]Stott, 222.